
தமிழரசு
மே 2004





# 3 ஆண்டுகளில் ஒரு சாதனைச் சகாப்தம்



ஐ.நா.வுடன் இயற்கை இடர்ப்பாடு தடுப்பு ஒப்பந்தம்



ஸ்ரீபெரும்புதூரில் கண்ணாடி தொழிற்சாலைக்கான ஒப்பந்தம்




டைசல் – உயிர் தொழில்நுட்ப பூங்கா




சென்னையில் இங்கிலாந்து நாட்டின் 'சான்சா' தொழில்நுட்பமையம்



சிறுசேரியில் ஒருங்கிணைந்த நகரியம் அமைக்க ஒப்பந்தம்



# தமிழ்நாட்டில் சமூக–பொருளாதார மாற்றங்கள்

"தமிழகத்தை அறிவுவளம் செறிந்த, தகவல் தொழில்நுட்பத் துறையில் தேர்ச்சி பெற்றவர்கள் நிறைந்த மாநிலமாக உருவாக்க வேண்டுமென்பதே என்னுடைய இலட்சியமாகும். தகவல் தொழில் நுட்பத்தால் இணைக்கப்பட்டவர்களுக்கும், அவ்வாறு இணைக்கப்படாதவர்களுக்கும் இடையிலான இடைவெளி மேலும் அகன்றுவிடாமல், தொடர்புகளை மேலும் பரவலாக்குவதற்கான ஒரு சாதனமே தகவல் தொழில்நுட்பம் என்பது என்னுடைய தனிப்பட்ட கருத்தாகும். வேலைவாய்ப்பு, சேவைப் பணிகளுக்கான செலவைக் குறைத்தல், பழைய பொருளாதாரத் தொழில்களின் போட்டித் திறனை வளர்த்தல், நிர்வாகத்தில் திறமை, ஒளிவு மறைவற்ற தன்மை, பொறுப்பு அறிந்து செயலாற்றுகின்ற நிர்வாகம், கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களுக்கிடையேயான மின்னணு சார் தகவல் தொடர்பு ஆகியவற்றின் வாயிலாக தமிழ்நாட்டில், சமூக–பொருளாதார மாற்றங்களைத் தோற்றுவிப்பதற்கான அரிய வாய்ப்பினைத் தகவல் தொழில்நுட்பம் நமக்கு அளித்துள்ளது.

கணினி மென்பொருள் மற்றும் வன்பொருள் வளர்ச்சியின் ஒரு முக்கியக் கேந்திரமாக தமிழ்நாடு உருவெடுத்து வருகிறது என்று கூறிக்கொள்வதில் நான் மிகுந்த பெருமைப்படுகிறேன்.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக பின்வரும் இலக்குகளை நிர்ணயிக்க வேண்டுமென்பது என்னுடைய விருப்பமாகும்.

முதலாவதாக, 2010ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் இரு மடங்காக உயர வேண்டும்.

இரண்டாவதாக, 2005ஆம் ஆண்டுக்குள்ளாக, ஐந்தாம் வகுப்புவரை அனைவருக்கும் கல்வி அளிக்கப்படும். இதில் பெண் குழந்தைகளுக்கும் நலிந்த பிரிவினருக்கும் சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

மூன்றாவதாக, 2006ஆம் ஆண்டுக்குள்ளாக, தமிழ்நாடு, தகவல் தொழில்நுட்பத்தில் இந்தியாவிலேயே முதலிடத்தை வகிப்பதோடு நில்லாமல், உலகமக்கள் தொகையில் சரி பாதியின் இருப்பிடமாகத் திகழும் ஆசியக் கண்டத்தினுடைய ஒரு நுழைவு வாயிலாகவும் தமிழ்நாடு விளங்கும்.

நான்காவதாக 2008ஆம் ஆண்டுக்குள்ளாக, தமிழ்நாடு, இந்தியாவிலேயே, முதல் தரமான தயாரிப்புப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் மாநிலமாக விளங்கும். ஏற்றுமதி வாயிலாக கிடைக்கும் வருவாய் இருமடங்காகப் பெருகும்.

2010ஆம் ஆண்டுக்குள்ளாக, தமிழ்நாட்டின் அனைத்துக் கிராமங்களிலும், தடையற்ற மின்சார வசதி, இணைப்புச்சாலை, தொலைபேசி வசதி, இணையதள வசதி, நல்ல பள்ளி, சுத்தமான குடிநீர், துப்புரவு வசதி, ஒரு கிராமச் சுகாதாரப் பணியாளர், உள்ளாட்சி மன்றம் ஆகியவற்றைப் பெற்றுவிடும்''.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
இந்திய வர்த்தக தொழில் கழகக் கூட்டமைப்பின்
செயற்குழுக் கூட்டத்தில் 5-7-2002 அன்று
ஆற்றிய உரை.



## தமிழக மக்களின் நலன் காக்க

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## முக்கிய அறிவிப்புகள்

★ 'எச்' கார்டு முறை ரத்து

★ கூப்பன் இல்லாமல் அரிசி பெற ஏற்பாடு

★ ரேஷன் கார்டு இல்லாதவர்களுக்கு புதிய ரேஷன் கார்டுகள்

★ விவசாயிகளுக்கும், குடிசைவாசிகளுக்கும் இலவச மின்சாரம்

★ அனைத்து விவசாய பம்பு செட்டுகளுக்கும், குடிசைகளுக்கும் மின்சார மீட்டர் இல்லை

★ சத்துணவுத் திட்டத்தில் கூடுதலாக முட்டை

★ அரசு, தனியார் பள்ளி மாணவர்களுக்கு அனைத்து நாட்களிலும் இலவச பஸ் பாஸ்

★ அரசு, தனியார் கல்லூரி மாணவர்களுக்கு அனைத்து நாட்களிலும் 50 சதவிகித சலுகையில் பஸ் பாஸ்

★ வேலை நிறுத்தத்தில் பங்கேற்ற அரசு ஊழியர், ஆசிரியர் மீதான அனைத்து தண்டனைகளும் ரத்து

★ அரசியல் கட்சித் தலைவர்கள் மீதான 'டெஸ்மா' வழக்குகள் வாபஸ்

★ பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் மீதான அவதூறு வழக்குகள் வாபஸ்

★ இந்து உள்ளிட்ட பத்திரிகைகள் மீதான சட்டசபை நடவடிக்கை வாபஸ் பெறத் தீர்மானம்

★ கட்டாய மத மாற்றத் தடைச் சட்டம் ரத்து

# வேளாண்மைத்துறையில் வியத்தகு பணிகள்




கிராமங்களில் தான் இந்தியாவே உள்ளது என்பதை அடிப்படையாகக் கொண்டு, வேளாண் வளர்ச்சியின் மூலமாக கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், தமிழகத்தை இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக மாற்றவும் உறுதிபூண்டு செயல்பட்டு வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு, 2001–2002 மற்றும் 2003–2004 ஆம் ஆண்டு வரை வேளாண் துறையில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி சாதனைகளை நிகழ்த்தியுள்ளது.

வேளாண்மையில் மாற்றுப் பயிர்த் திட்டம்

- மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிவிப்பின்படி, வேளாண்மையில் மாற்றுப் பயிர் சாகுபடி மேற்கொள்ளப்பட்டதால் மூன்றாண்டுகளாக ஏற்பட்ட வறட்சி நிலையிலும் 2003–2004இல் உணவுப் பயிர் சாகுபடி பரப்பு 33.85 இலட்சம் எக்டர் அடையப்பட்டது.
- 2003–2004இல் உணவுப் பயிர் உற்பத்தி 65.38 இலட்சம் மெ.டன்
- சிறு தானியங்களில் மொத்த சாகுபடி பரப்பு 11.91 இலட்சம் எக்டர். கூடுதல் பரப்பு 2.45 இலட்சம் எக்டர்
- உற்பத்தி 14.60 இலட்சம் மெ.டன்
- பயிறு வகைகளில் சாகுபடி பரப்பு 7.93 இலட்சம் எக்டர். கூடுதல் பரப்பு 1.72 இலட்சம் எக்டர்.
- உற்பத்தி 3.4 இலட்சம் மெ.டன்
- எண்ணெய்வித்து சாகுபடி பரப்பு 8.01 இலட்சம் எக்டர். கூடுதல் சாகுபடி பரப்பு 1.73 இலட்சம் எக்டர்
- உற்பத்தி 12.53 இலட்சம் மெ.டன்
- பருத்தி உற்பத்தி 1.77 இலட்சம் பொதிகள்
- கரும்பு உற்பத்தி 20.92 இலட்சம் மெ.டன் (வெல்லம்)

நிவாரணம்

- 2002–2003ஆம் ஆண்டு ஏற்பட்ட கடும் வறட்சியின் காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இறவை பயிர்களுக்கு ஒரு எக்டருக்கு ரூ.2,500/–, மானாவாரி பயிருக்கு ஒரு எக்டருக்கு ரூ.1,000/–, பல்லாண்டு பயிர்களுக்கு ஒரு எக்டருக்கு ரூ.4,000/– வீதமும் நிவாரணம் வழங்கப்பட்டது.
- பருவமல்லாத காலத்தில் காவிரி ஆற்றுப் படுகை மாவட்டங்களில் பிப்ரவரி 2002இல் பெய்த பெருமழையால் பெருத்த சேதத்திற்கு உள்ளான நெல் மற்றும் பிற பயிர்களுக்கு ஏற்பட்ட சேதத்திற்கு நிவாரணத் தொகையாக ரூ. 48.10 கோடி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- சிறு மற்றும் குறு விவசாயிகள் காலத்தில் பண்ணை வேலைகளை ஆற்றிட உதவும் நோக்குடன் மூன்று 30 குதிரைத்திறன் கொண்ட டிராக்டர்கள், 567 பவர் டில்லர்கள், 4 கதிரடிக்கும் இயந்திரங்கள் மற்றும் 1 நெல் நாற்றுநடும் கருவி போன்ற இயந்திரங்கள் ரூ.191.867 இலட்சம் மானிய செலவில் வழங்கப்பட்டன.



❖ பேரியல் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் 2001–2002, 2002–2003, 2003–2004ஆம் ஆண்டுகளில் தானிய உற்பத்தித் திட்டம் ரூ.1,131.238 இலட்சத்திலும், கரும்பு அபிவிருத்தித் திட்டம் ரூ.71.861 இலட்சத்திலும், மானாவரி நீர்வடிப்பகுதி மேம்பாடு திட்டம் ரூ.4,632.826 இலட்சத்திலும், ஒருங்கிணைந்த உரபயன்பாடு நிருவாகம் ரூ.110.50 இலட்சத்திலும் மேற்கொள்ளப்பட்டது.

❖ எண்ணெய்வித்துக்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்க புதிய தொழில் நுட்பங்களை விவசாயிகள் கடைபிடிக்க எண்ணெய்வித்து உற்பத்தித் திட்டம் ரூ.597.98 இலட்சம் செலவில் 2001–2002ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்டது. 2002–2003–ஆம் ஆண்டு இத்திட்டம் ரூ.623.885 இலட்சம் செலவிலும், 2003–2004 ஆம் ஆண்டில் ரூ.466.164 இலட்சம் செலவிலும் மேற்கொள்ளப்பட்டது.

❖ தமிழ்நாடு பண்ணை மகளிர் திட்டத்தின்கீழ் ரூ.512.737 இலட்சம் செலவில் 8,475 பண்ணை மகளிருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

❖ பருத்தித் தொழில்நுட்பக் குழு திட்டம் 2001–2002–ஆம் ஆண்டு ரூ. 300.066 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது. 2002–2003ஆம் ஆண்டு இத்திட்டம் ரூ. 177.697 இலட்சம் ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. 2003–2004ஆம் ஆண்டு ரூ.295.214 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது.

❖ 2001–2002–ஆம் ஆண்டு ரூ.13.739 இலட்சம் செலவிலும், 2002–2003–ஆம் ஆண்டு ரூ.15.21 இலட்சம் செலவிலும், 2003–2004 ஆம் ஆண்டு ரூ.20.47 இலட்சம் செலவிலும் தீவிர மக்காச்சோள அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

❖ ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்புத் திட்டத்தினை வலுப்படுத்தும் நோக்குடன் 8 உயிரியல் கட்டுப் பாட்டுக் காரணிகள் உற்பத்தி மையங்களும், 49 ஒட்டுண்ணி கட்டுப்பாட்டு மையங்களும், 2 மாநில ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு மையங்களும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளை கரும்பு, நெல், தென்னை, பருத்தி, மணிலா, பயறுவகைப் பயிர்களுக்கு உற்பத்தி செய்து வழங்கப்பட்டு வருகிறது.

❖ பயறு உற்பத்தித் திறனை மேம்படுத்த விதைகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பங்களுடன் மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் மூலம் உயர்த்த ரூ.106.25 இலட்சம் செலவில் 17 மாவட்டங்களில் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

❖ தாவர எண்ணெய் மேம்பாட்டிற்காக சைமரூபா மரக்கன்றுகள் உற்பத்திக்கு தேசிய எண்ணெய் மற்றும் தாவர எண்ணெய் மேம்பாட்டுக் கழகம் உதவியுடன் ரூ.3 இலட்சம் ஒதுக்கீட்டில் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுவரை 4,600 மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டதோடு, மேலும் 1,000 மரக்கன்றுகள் பெறப்பட்டு அரசு பண்ணை களில் நடவு செய்யப்படுகிறது.

அரசால் செயல்படுத்தப்படும்
பிற வேளாண் திட்டங்கள்

❖ 2002ஆம் ஆண்டு ஏற்பட்ட கடும் வறட்சியின் காரணமாக முழுமையாக மற்றும் பகுதி பாதிப்புக்கு உள்ளான தென்னை மர சாகுபடியாளர்களுக்கு முறையே ரூ. 150 மற்றும் ரூ. 50 வீதம் நிவாரணம் ரூ.21.60 கோடி அளவில் வழங்கப்பட்டது.

❖ பசுந்தாள் உர விதைகள் 25 சதவிகித மானியத்தில் 2001–2002ஆம் ஆண்டு ரூ.9 இலட்சம் செலவிலும், 2002–2003ஆம் ஆண்டு ரூ.24.998 இலட்சம் செலவிலும் 2003–2004ஆம் ஆண்டு ரூ.24.997 இலட்சம் செலவிலும் வழங்கப்பட்டது.

❖ **புதிய வேளாண் கொள்கையை உருவாக்கவும் அதன் செயல்பாட்டினை கண்காணிக்கவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை தலைவராகக் கொண்ட உயர்நிலைக் குழு ஒன்று மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.**

❖ விதைத்தரத்தை மேம்படுத்தவும் விவசாயிகளுக்கு தரமான விதை வழங்கவும் ரூ. 20.869 இலட்சம் செலவில் 9 விதை சுத்திகரிப்பு நிலையம் மேம்படுத்தப் பட்டது.

❖ 10 மாவட்டங்களில் மாவட்ட வேளாண் தகவல் மையங்கள் ரூ.20.20 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டது.

❖ இடுபொருட்கள் துல்லிய அளவில் இடுவதற்கு ஏதுவாக, கதிரியக்க உட்புகு வெப்ப ஒளியியல் மானி (Atomic Absorption Spectro Photo Meter) மூலம் மலர் பரிசோதனை செய்யப்பட்டு, மண்வளம் குறிக்கும் அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

## வேளாண்மைப் பொறியியல்

- ❖ ஜூலை 2003 முதல் மார்ச் 2004 வரை 8,833 பண்ணைக் குட்டைகள் ரூ.2,564.29 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டன.

- ❖ தமிழ்நாட்டிலுள்ள வறண்ட மற்றும் உபயோகப்படுத்தாத கிணறுகளை, வேலைக்கு உணவு திட்டத்தின் கீழ் சீரமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மார்ச் 2004 வரை 2,093 கிணறுகளில் ரூ.264.37 இலட்சம் செலவில் பணிகள் செயல்படுத்தப்பட்டன.

- ❖ சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப் பாசனங்களுக்கு 2001–2002ஆம் ஆண்டில் ரூ.1,393.53 இலட்சம் செலவில் 18,570 எக்டர் நிலத்திலும், 2002–2003ஆம் ஆண்டில் ரூ.1,177.04 இலட்சம் செலவில், 13,016 எக்டர் நிலத்திலும், 2003–2004ஆம் ஆண்டில் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.1,210.63 இலட்சம் செலவில் 21,237 எக்டர் நிலத்திலும் பணிகள் செயல்படுத்தப் பட்டன.

- ❖ 2002–2003ஆம் ஆண்டில் 561 பவர் டில்லர்கள், 43 டிராக்டர்கள், மற்றும் 10 தானியங்கி கதிரறுப்பான்கள் ரூ.183.15 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன. 2003–2004ஆம் ஆண்டில் 507 பவர் டில்லர்கள், 93 டிராக்டர்கள், 2 தானியங்கி நாற்று நடும் கருவிகள் மற்றும் 1 தானியங்கி கதிரறுப்பான் ரூ.160.50 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

- ❖ 2001–2002இல் 5,697 குழாய்க்கிணறுகள், 2002–2003இல் 5,606 குழாய்க் கிணறுகள், 2003–2004இல் 4,976 குழாய்க்கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

- ❖ தீவிர நெல் சாகுபடித் திட்டத்தின்கீழ், இது வரை காவிரி ஆற்றுப்பாசனப் பகுதியில் 95 அணுசரணை ஆராய்ச்சி திடல்களும் தாமிரபரணி ஆற்றுப்பாசனப் பகுதியில் 86 அணுசரணை ஆராய்ச்சித் திடல்களும் நிறுவி உழவர்களுக்கு நேரடியாக இத்திட்டத்தினை விளக்கி வருகின்றது.

- ❖ ஒரு தனியான இணையதளம் ஏற்படுத்தி நவீன கணினி தொழில்நுட்பத்தின் மூலம் உழவர்களுக்கான வேளாண்மைச் செய்திகள் வானிலை மற்றும் வேளாண் சந்தை தொடர்பான தகவல்களைத் தெரிவித்து வருகின்றது.

- ❖ **மாநில திட்டத்தின்கீழ் தாமிரபரணி மற்றும் காவிரி பாசனப் பகுதிகளில் திருந்திய நெல் சாகுபடி முறையில் உள்ள அடிப்படை தொழில்நுட்பங்களை தாலடி 2002 குறுவை 2003 ஆகிய பருவங்களில் நெல் சாகுபடிக்கு பல்வேறு முறைகளில் பரிசோதித்து பாரம்பரிய நெல் சாகுபடியுடன் ஒப்பிட்டு பார்த்ததில் நெல் விளைச்சல் 48.81 முதல் 52.51 சதவிகிதம் அதிகம் திருந்திய சாகுபடி முறையில் கிடைத்தது.**

### தமிழ்நாடு துல்லிய தோட்டக்கலைப் பண்ணை அமைத்தல்

உயர் தொழில்நுட்ப முறைகள் மற்றும் நுண்ணீர் பாசன முறைகளை கடைபிடித்து தோட்டக்கலைப் பயிர்களில் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை பெருக்க தமிழ்நாடு துல்லிய பண்ணையியல் திட்டம் ரூ.720.60 இலட்சம் செலவில் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் சுமார் 1,000 எக்டர் பரப்பளவில் செயல்படுத்திட அரசு ஆணை வழங்கியுள்ளது. தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் இயக்குநர் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் ஆகியோரிடையே 11.2.2004 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் ஒரு புரிந்துணர் ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டு பரிமாற்றம் செய்து கொள்ளப் பட்டது. முதலாண்டு தேவையில் 50 சதவிகிதத் தொகையான ரூ.66.80 இலட்சம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்



பட்டுள்ளது. பையூரில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் திட்ட அலுவலகம் ஆரம்பிக்கப் பட்டு பணிகள் தொடங்கப்பட்டு விட்டன.

### நீலகிரி மாவட்டத்தில் மாற்றுப்பயிர் மேம்பாட்டுத் திட்டம்

நீலகிரி மாவட்டத்தில் மாற்றுப் பயிர் சாகுபடியை மேம்படுத்த ரூ.50 இலட்சம் செலவிடப்பட்டது. இத்திட்டத்தில் சுயஉதவிக் குழுக்களுக்கு 3 மாதிரி மலர் மையங்கள் அமைக்கப்பட்டது.

நீலகிரியில் தேயிலை தர மேம்பாடு திட்டத்திற்காக இதுவரையில் ரூ.63 இலட்சம் செலவிடப்பட்டு 56,608 சிறு மற்றும் குறு விவசாயிகள் இதன் மூலம் பயனடைந் துள்ளனர். 1,730 விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டன. இதன் மூலம் 26,033 எக்டர் பரப்பளவில் தேயிலையின் தரம் உயர்த்தப்பட்டது.

ஹனுமா நதி திட்டம்

திருநெல்வேலி மாவட்டத்தில் 2003–04 ஆம் ஆண்டில் ஹனுமா நதி துணை நீர் வடிப்பகுதியில் பல்வேறு தோட்டக்கலைத் திட்டங்கள் செயல்படுத்துவதற்காக ரூ.45 இலட்சம் அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதுவரை ரூ.5 இலட்சம் செலவில் திசு வாழை சாகுபடி மற்றும் வீரிய விளைச்சல் காய்கறி சாகுபடி ஆகியவை மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் 50 விவசாயிகளுக்கு பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

கொய்மலர் ஏற்றுமதி மண்டலம்

**தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தை உள்ளடக்கி ஒசூரில் கொய்மலர்களுக்கான ஏற்றுமதி மண்டலம் ரூ.24.85 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. இதுவரை ரூ.600 இலட்சம் மதிப்புள்ள 170 மெட்ரிக் டன் (55 இலட்சம் குச்சிகள்) கொய்மலர்கள் ஐரோப்பா, மத்திய மற்றும் தூர கிழக்கு நாடுகள், ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.**

நீலகிரி மாவட்டத்தில் மலர்களுக்கான ஏற்றுமதி மண்டலம்

நீலகிரி மாவட்டத்தில் மலர்களுக்கென வேளாண் ஏற்றுமதி மண்டலம் ரூ.15.89 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஏற்றுமதி மண்டலத்திலிருந்து இதுவரை ரூ. 5 இலட்சம் மதிப்புள்ள 0.45 இலட்சம் காரனேஷன் குச்சிகள் **(Carnation stems)** மற்றும் 0.05 இலட்சம் லில்லியம்ஸ் குச்சிகள் **(Lilium stems)** ஜப்பான், சிங்கப்பூர், துபாய், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.



மாம்பழத்திற்கான ஏற்றுமதி மண்டலம்

**தேனி மாவட்டத்தில், மாம்பழத்திற்கென தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களை உள்ளடக்கி வேளாண் ஏற்றுமதி மண்டலம் ரூ.24.60 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது.**

முந்திரிக்கான ஏற்றுமதி மண்டலம்

முந்திரிக்கென கடலூர் மாவட்டத்தில் ரூ.10.36 கோடி மதிப்பீட்டில் தனியார் பங்கேற்பில் வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்படவுள்ளது.

வாழைக்கான ஏற்றுமதி மண்டலம்

வாழைக்கென திருச்சி மாவட்டத்தில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் தனியார் பங்கேற்பில் வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்படவுள்ளது.

**அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய உணவுப் பூங்கா ஒன்று திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையில் ரூ.13 கோடி மதிப்பீட்டில் 100 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்படவுள்ளது.**

ஆண்டிப்பட்டி, எழுமாத்தூர் மற்றும் தாத்தையங்கார் பேட்டை ஆகிய 3 ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் ரூ.2.25 கோடி செலவில் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் பணியும், செம்பனார்கோவில், கம்பம், கொடுமுடி மற்றும் சேவூர் ஆகிய 4 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ரூ.0.77 கோடி செலவில் ஊரகக் கிடங்குகள் கட்டும் பணியும் நடைபெற்று வருகிறது. 14 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ரூ.45.45 இலட்சம் மதிப்பீட்டில் வேளாண் விளைபொருள் உற்பத்தி மற்றும் விற்பனை தகவல் மையம் அமைக்கப்பட்டுள்ளது. அறுவடைக்குப்பின் ஏற்படும் தானிய இழப்பினை குறைக்கும் பொருட்டு, ரூ.5 கோடி செலவில் 2002–03 ஆம் நிதியாண்டில் 100 உலர்களங்களும், 2003–04 ஆம் நிதியாண்டில் 150 உலர்களங்களும் அமைக்கப்பட்டுள்ளது. தேனி, திண்டுக்கல், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் 4 விற்பனைக் குழுக்கள் புதியதாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, சாத்தான்குளத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் 30.08.2003 அன்று திருநெல்வேலி விற்பனைக்குழுவின் கட்டுப்பாட்டில் தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தில் புதிய ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் திறக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் மஞ்சள் பயிருக்காக ஈரோட்டிற்கு அருகில் நசியனூர் மற்றும் வில்லரசம்பட்டி ஆகிய கிராமங்களில் ரூ.36.32 கோடி செலவில் மஞ்சள் வணிக வளாகம் அமைக்கப்படவுள்ளது.

**விரிவான தரிசு நில திட்டம் 2003–2004இல் வேலூர், திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், திண்டுக்கல், தேனி, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் 33,229 எக்டேரில் 22,14,476 செடிகள் நடப்பட்டு 70.79 சதவிகிதம் சாதனை இலக்கு எய்தப்பட்டுள்ளது.**

❖ ❖ ❖

# பள்ளிக்கல்வி



கல்வி என்னும் வற்றாத செல்வம் தனி மனிதனின் வாழ்க்கையை வளம் பெறச் செய்யவும், அறிவுத் திறனுள்ள சமுதாயத்தை உருவாக்கவும் அடித்தளமாக அமைகின்றது.

★ **தமிழ்நாட்டில் 6 முதல் 14 வயது வரை உள்ள குழந்தைகள் அனைவருக்கும் அடிப்படைக் கல்வி வழங்கிட "அனைவருக்கும் கல்வித் திட்டம்'' 2001–2002ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இத்திட்டம் 2010 வரை செயல்படுத்தப்படும். முதற்கட்டமாக, பத்தாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் இத்திட்டத்திற்காக ரூ.1,649 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்திய அளவில் திட்ட அறிக்கை முடிவு செய்த முதல் மாநிலமாக தமிழகம் திகழ்கிறது.**

★ அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் 2001–2003ஆம் ஆண்டுகளில் ரூ.104.20 கோடி செலவிடப்பட்டு, புதிய பள்ளிகள் தொடங்குதல், பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல், வட்டார கள ஆய்வு மையங்கள் கட்டுதல், ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்குதல், பள்ளிகளுக்கு குடிநீர், கழிப்பிட மற்றும் பராமரிப்புப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 2003–2004இல் இத்திட்டத்தின் கீழ் ரூ.401.84 கோடி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

★ 2001–2004இல் 1,112 தொடக்கப் பள்ளிகள், 1,075 நடுநிலைப் பள்ளிகள், 260 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 300 மேல்நிலைப்பள்ளிகள் தொடங்கப்பட்டன. இதனால் குழந்தைகள் 5 ஆண்டு கல்வியை முடிக்க ஏதுவாக 100 சதவிகிதம் தொடக்கப் பள்ளி வசதி செய்து கொடுத்தல் என்ற இலக்கு நிறைவேற்றப் பட்டுள்ளது. 8 ஆண்டு கல்வியை அடைய ஏதுவாக நடுநிலைப் பள்ளிகள் வசதியானது 2004–2005இல் அடையப்படும். அதற்கென 364 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்த கருதப்பட்டுள்ளது. மேலும், 2004–2005இல் 30 உயர் நிலைப்பள்ளிகள் மற்றும் 30 மேல்நிலைப் பள்ளிகள் தொடங்கப்படும்.

★ முதல் முறையாக கல்வித் துறைக்காக 'நபார்டு' வங்கியிடம் கடன் பெற்று இரண்டு கட்டமாக 346 உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிகளில் வகுப்பறைகள், ஆய்வகக் கட்டடங்கள் போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்த ரூ.99 கோடி செலவில் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

★ தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ரூ.96.06 கோடி செலவில், அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

★ ஆசிரியர் பயிற்சி சேர்க்கையில் ஒற்றைச் சாளர முறை கொண்டுவரப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆண்டு தோறும் ஏறத்தாழ 4,661 தரம் வாய்ந்த மாணவர்கள் குறைந்த செலவில் ஆசிரியர் பயிற்சி பெறவும்1,560 நபர்கள் கூடுதலாகப் பயிற்சி பெற வாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

★ பள்ளிகளில் 2001–2003இல் 10,178 ஆசிரியர் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. 2003–2004இல் 12,000 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

★ பள்ளிகளில் பி.டி. ஆசிரியர் மற்றும் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் நியமனத்தில் வயது வரம்பு நிர்ணயம் செய்யாமல் வெளிப்படையான போட்டித் தேர்வு மூலம் திறமை வாய்ந்த ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

★ மெட்ரிகுலேஷன் பள்ளிகளை மேற்பார்வையிட தனி இயக்ககம் அமைக்கப்பட்டுள்ளது.

★ 867 கிராமப்புற நூலகங்கள் அமைக்கப்பட்டு மாவட்டந்தோறும் புத்தகக் கண்காட்சி நடத்த ஆணையிடப்பட்டுள்ளது. அதேபோன்று சென்னையில் நிரந்தரப் புத்தகக் கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது.

★ 1,197 மேல்நிலைப்பள்ளிகளில் +1, +2 மாணவர் களுக்கு கணினிக் கல்வி கற்றுத்தரப்பட்டு வருகிறது. அதன் மூலம் 9 மற்றும் 10ஆம் வகுப்பு மாணவர்களும் கணினிக் கல்வியின் பயனைப் பெற்று வருகின்றனர். அனைவருக்கும் கல்வி இயக்க திட்டத்தின் கீழ் 6ஆம் வகுப்பிலிருந்து கணினிக் கல்வி கற்றுத்தரப்படுகிறது.

★ 2003–2004ஆம் ஆண்டு அறிவியல் தமிழ் என்ற பாடத்தை மாநிலத்தில் உள்ள அனைத்து வகை பள்ளிகளிலும் எல்.கே.ஜி. முதல் 12ஆம் வகுப்பு வரை அறிமுகம் செய்து அதற்கென அப்புத்தகங்களை இலவசமாக வழங்க ரூ.5.42 கோடி செலவு செய்யப் பட்டுள்ளது.

★ கணினியைப் பயன்படுத்தி வேலைவாய்ப்பு அதிக அளவில் பெறுவதற்காக அனைத்துப் பள்ளிகளிலும் ஒன்றாம் வகுப்பிலிருந்தே ஆங்கில மொழியை கற்பிக்க ஆணையிடப்பட்டுள்ளது.

★ பள்ளிகளில் பெரும்பாலான மாணவர்கள் ஆங்கிலப் பாடத்தில் தோல்வியுறுவதை அறிந்து அதனைக் களைய 2003–2004ஆம் ஆண்டு முதல் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கில மொழி பயிற்சி ஆய்வுக் கூடங்கள் நிறுவ ஆணையிடப் பட்டுள்ளது.

★ +2 தேர்வில் அறிவியல் பாடச் செய்முறை தேர்வானது ஒரே நேரத்தில் நடத்துவதுதான் சரியானதொன்றாக இருக்கும் என கருதப்பட்டு செய்முறை தேர்வில் உள் தேர்வர் முறை நீக்கப்பட்டுள்ளது. புறத் தேர்வர்களே செய்முறைத் தேர்வினை நடத்த அறிவுறுத்தப் பட்டுள்ளது.

★ **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, குழந்தைகளைப் பள்ளியில் முதல் வகுப்பில் சேர்க்கும்போது பெற்றோர்களது விருப்பப்படி தாயின் பெயரில் உள்ள முதல் எழுத்தையும் அதனையடுத்து தந்தையின் பெயரில் உள்ள முதல் எழுத்தையும் தலைப்பெழுத்தாக பயன்படுத்தலாம் எனவும், அல்லது தாயின் பெயரில் உள்ள முதல் எழுத்தை மட்டும் தலைப்பெழுத்தாக பயன்படுத்தலாம். அல்லது, தந்தையின் பெயரில் உள்ள முதலெழுத்தை மட்டும் தலைப்பெழுத்தாக பயன்படுத்தலாம் என அரசு ஆணையிட்டுள்ளது.**

## உயர்கல்வித்துறை

❖ தற்பொழுது உறுப்புக் கல்லூரிகளில் 41 புதிய இளங்கலை / அறிவியல் பாடப்பிரிவுகள் மற்றும் 68 முதுகலை / அறிவியல் பாடப்பிரிவுகள் சுயநிதி அடிப்படையில் தொடங்கப்பட்டுள்ளது.

❖ 2003–2004ஆம் கல்வியாண்டில் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்ட புதிய உறுப்புக் கல்லூரிகள் முறையே சாத்தான்குளம் மற்றும் கூடலூர் ஆகிய இடங்களில் வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய இளம் வணிகவியல் மற்றும் கணினி பயன்பாடு, இளங்கலை வணிக மேலாண்மை, இளங்கலை புவி அமைப்பியல் மற்றும் இளங்கலை வணிக மேலாண்மை ஆகிய புதிய பாடப் பிரிவுகளுடன் தொடங்கப்பட்டுள்ளது.

❖ நாட்டிலேயே தரநிர்ணயம் செய்யப்பட்ட அதிக கல்லூரிகளைக் கொண்ட மாநிலம் என்ற பெருமையை தமிழ்நாடு பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் 68 கல்லூரிகள் தேசிய தகுதி மற்றும் தரநிர்ணயக் குழுவால் தரநிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. இதில் 26 உறுப்புக் கல்லூரிகளும், 42 அரசு உதவி பெறும் கல்லூரிகளும் அடங்கும். தற்சமயம் தமிழ்நாட்டில் 8 அரசுக் கல்லூரிகளுக்கும் 36 அரசு உதவிபெறும் கல்லூரிகளுக்கும் தன்னாட்சி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.


❖ ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்களின் பொது மாறுதல் 2002–2003 மற்றும் 2003–2004ஆம் ஆண்டிலும் கலந்தாலோசித்தல் திட்டத்தின்படி மேற்கொள்ளப்பட்டது. 67 அரசு கல்லூரிகளுக்குமாக மொத்தம் ரூ.4,37,39,000/– பகிர்ந்தளிக்கப்பட்டு, கல்லூரிகளில் அடிப்படை வசதிகள் பெருமளவு மேம்படுத்தப்பட்டுள்ளன.

❖ **அரசின் அகில இந்திய அளவில் நடைபெறும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., தேர்வுகளில் பெண்கள் சிறப்பாக பங்குபெறும் பொருட்டு சென்னை, இராணி மேரி கல்லூரி (தன்னாட்சி) மற்றும் மதுரை அருள்மிகு மீனாட்சி அரசு மகளிர் (தன்னாட்சி) கல்லூரி ஆகிய**

### பள்ளி மாணவ–மாணவியர்களுக்கு இலவச பஸ் பாஸ்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் அறிவிப்பு

*தமிழ்நாட்டில் உள்ள மாணவ மாணவியர்கள் அனைவரும் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்திலும், அனைவருக்கும் கல்வி என்னும் கொள்கைக்கு உண்மையான அர்த்தம் தரும் வகையிலும் எதிர்வரும் 2004 ஜூன் முதல் தேதியிலிருந்து தொடங்குகின்ற புதிய கல்வி ஆண்டு முதல் 1 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை தனியார் பள்ளிகள் உட்பட அனைத்துப் பள்ளிகளிலும் பயிலுகின்ற மாணவ மாணவியர்களுக்கு, அவர்களது வீட்டிலிருந்து பள்ளி சென்று வர இலவச பேருந்து பயண சலுகை அட்டைகள் வழங்கப்படும். இந்த இலவச பேருந்து பயண சலுகை அட்டைகள் எல்லா விடுமுறை நாட்களிலும் செல்லத்தக்கது ஆகும்.*




*இதே போல, எதிர்வரும் 2004 ஜூன் முதல் தேதியிலிருந்து, தனியார் கல்லூரிகள் உட்பட அனைத்து கல்லூரிகளிலும் படிக்கின்ற அனைத்து மாணவ மாணவியர்களும் தங்கள் வீட்டிலிருந்து கல்லூரி சென்று வர ஏதுவாக 50% சலுகையுடன் பேருந்து பயண சலுகை அட்டைகள் வழங்கப்படும். இந்த பேருந்து பயண சலுகை அட்டைகள் எல்லா விடுமுறை நாட்களிலும் செல்லத்தக்கது ஆகும். சென்னை மாநகர கல்லூரி மாணவர்கள் சென்னை பெருநகர போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பயணம் செய்ய தற்போது 40 மாற்றிக் கொள்ளத்தக்க கூப்பன்கள் வழங்கப்படுவதற்கு மாற்றாக இனி 60 கூப்பன்கள் வழங்கப்படும்.*



**மாணவர்களுக்கு**
**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அறிவுரை**

*"நீங்கள் நன்றாக படிக்கவேண்டும். நன்றாக படியுங்கள். எதுவரை படிக்கஇயலுமோ அதுவரை படியுங்கள். படிப்பு முடிந்து வாழ்க்கையில் முன்னேறியபிறகு, உங்களைவிட கீழ்நிலையில் உள்ளவர்களை கைதூக்கிவிட உங்களால் முடிந்த முயற்சியை மேற்கொள்ளவேண்டும் என்ற உறுதியை நீங்கள் மனதில் வளர்த்துக்கொள்ள வேண்டும்''.*

இரு பயிற்சி மையங்களில் பெண்களுக்கு இலவசப் பயிற்சி அளிக்கப்படுகிறது. நடப்பு நிதி ஆண்டில் இத்திட்ட செயல்பாட்டிற்கென அரசு ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. ஒரு பயிற்சி மையத்தில் 60 மாணவிகள் வீதம் இத்திட்டத்தினால் பயன் பெறுவர்.

❖ கண் பார்வையற்ற மாணவர்களுக்கும் கணினி அறிவு வழங்கப்பட வேண்டும் என்பது மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் அறிவிப்புகளில் ஒன்றாகும். கண் பார்வையற்ற மாணவர்கள் உணர்திரை மென்பொருள் (Screen reading software) உதவியுடன் சொல் தொகுப்பு மற்றும் மின்னணு விரிதாள் (Word Processing and electronic spread sheets) ஆகியவற்றில் பயிற்சி பெற இயலும். முதற்கட்டமாக மாநிலக் கல்லூரியில் பார்வையிழந்த மாணவர்களுக்கு கணினி பயிற்சி அளிக்கும் பொருட்டு ஒரு மையம் அமைக்கப்பட்டுள்ளது. இரண்டு கௌரவ விரிவுரையாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

❖ 14–12–2002 அன்று மேதகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்கள் பொறியியல் கல்லூரிகளுடன் அறிவுசார் இணைவுத் திறனை தொடங்கி வைத்தார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தொலைமருத்துவ வசதியைத் தொடங்கி வைத்தார்கள்.

❖ நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் நீங்கலாக தமிழகத்தில் உள்ள அனைத்து பொறியியற் கல்லூரிகளும் 2002–2003இல் அண்ணா பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டன.

❖ மாண்புமிகு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தகுதிபெற்ற, குறைந்த வருவாய்ப் பிரிவைச் சார்ந்த மாணவர்கள் உயர் கல்வி பெறும் வகையில் அரசு நிதியுதவி அளித்து வருகிறது. 2002–2003ஆம் ஆண்டில் 48 மாணவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ.25,000/– நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

❖ ஆங்கிலம் மற்றும் தமிழ் இளநிலை தட்டச்சுத் தேர்வுகளில் பங்கேற்க மாணவர்களுக்கு ஏற்கெனவே இருந்த தகுதியான "பத்தாம் வகுப்பு தேர்ச்சி" என்பதை "எட்டாம் வகுப்பு தேர்ச்சி" ஆக குறைத்து அரசு ஆணையிட்டுள்ளது.

❖ பொறியியற் கல்லூரி சேர்க்கையில், ஊனமுற்றோருக்காக 3% இட ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

❖ மத்திய அரசின் தொழில்நுட்ப தரமேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற தமிழ்நாடு தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. ரூ.300 கோடி நிதியுதவி மேற்படி திட்டத்தின் கீழ் மத்திய அரசிடமிருந்து கோரப்பட்டுள்ளவாறு இத்திட்டத்தின் மூலம் தொழில்நுட்பக் கல்வியின் தரம் மேலும் உயரும்.

❖ லண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் நடத்தும் உரையாடல் ஆங்கிலப் பாடத்தினை தமிழ்நாட்டில் உள்ள இணைப்புப் பெற்ற பொறியியற் கல்லூரிகள், பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் கலை மற்றும் அறிவியல் கலைக் கல்லூரிகளில், செயல்படுத்திட பிரிட்டிஷ் கவுன்சில் ஆப் இந்தியாவுடன் "ஒத்திசைவு ஒப்பந்தம்'' ஏற்படுத்த தொழில்நுட்பக் கல்வி இயக்குநருக்கு அரசு அனுமதி வழங்கி உள்ளது. இதனால் ஒரு கல்லூரிக்கு 100 மாணவர்கள் வீதம் ஆண்டுதோறும் 50,000 மாணவர்கள் பயன் பெறுவார்கள்.

❖ தமிழக மக்கள் அனைவரும் பல்வேறு துறைகளில் உயர்கல்வியறிவு பெறவும், அறிவினை மேம்படுத்திக் கொள்ளவும் உதவும் வகையில் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



❖ "கல்வி பயிலும் போதே சம்பாதித்தல்'' எனும் புதிய திட்டம் சென்னைப் பல்கலைக் கழகத்தில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

❖ "உடற்கல்வி மற்றும் விளையாட்டுகளுக்கான பல்கலைக்கழகம்" 2004–2005ஆம் ஆண்டில் தொடங்க அரசு ஆணையிட்டுள்ளது.

• • •




மனித குலம் வாழவேண்டும் என்றால் மகளிர் நலம், குழந்தைகள் நலம் பேணப்பட வேண்டும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையின் கீழ் இயங்கும் அரசு, பெண்கள் நலம், குழந்தைகள் நலம் என்பதைப் பேச்சோடு நிறுத்திவிடாமல் செயல்வடிவத்திலும் நிறைவேற்றுவதை தன் மூச்சாகவே கொண்டிருக்கிறது.

**பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் 2001–2002ஆம் ஆண்டில், 1,171 பெண் குழந்தைகள் பயனடையும் வகையில் ரூ.178 இலட்சமும், 2002–2003ஆம் ஆண்டில் 6,717 பெண் குழந்தைகள் பயனடையும் வகையில் ரூ.1,069 இலட்சமும், 31.12.2003 வரை 24,885 பெண் குழந்தைகள் பயனடையும் வகையில் ரூ.2,417 இலட்சமும் செலவு செய்யப்பட்டது.

**சத்தியா அம்மையார் நினைவு அரசு குழந்தைகள் காப்பகங்கள்**

- அரசு குழந்தைகள் காப்பகங்கள் – 25
- உணவீட்டுச் செலவினம் – ரூ.200/–லிருந்து ரூ. 225/– ஆக உயர்த்தப்பட்டது.
- சீருடைக்கான தொகை ரூ.300லிருந்து ரூ.400/ – ஆகவும், ரூ.400லிருந்து ரூ.500/– ஆகவும் உயர்த்தப்பட்டது.
- தருமபுரி மற்றும் மதுரையில் அரசுக் கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு.
- குழந்தைகளுக்கு இலவச மிதி வண்டிகள்.
- ஆதரவற்ற, கணவனால் கைவிடப்பட்ட, உடல் ஊனமுற்ற பெண்களின் நலன் காக்க 2003–2004இல் கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் புதிய சேவை இல்லங்கள் அமைப்பு.

**தமிழ்நாடு அரசு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம்**

- திருமண உதவித் தொகை ரூ.10,000லிருந்து ரூ.20,000ஆக உயர்த்தப்பட்டது.
- ஏற்கெனவே விதிக்கப்பட்டிருந்த வருமான வரம்பு முற்றிலும் தளர்த்தப்பட்டது.
- கடந்த மூன்றாண்டுகளில் பயன்பெற்றோர் எண்ணிக்கை 3,647 பேர், செலவு ரூ.725.10 இலட்சம்.

**டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டம்**

- இத்திட்டத்தின்கீழ், கடந்த மூன்றாண்டுகளில் பயன் பெற்றோர் எண்ணிக்கை 493 பேர், செலவு ரூ.49.30 இலட்சம்.

**ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு விதவை தாய்மார்களின் குழந்தைகளுக்கான திருமண நிதி உதவித் திட்டம்**

- நிதியுதவி ரூ.7,000லிருந்து ரூ.10,000 ஆக உயர்த்தப் பட்டது.
- கடந்த மூன்றாண்டுகளில் பயன் பெற்றோரின் எண்ணிக்கை 3,858 பேர், செலவு ரூ.303.53 இலட்சம்.

**அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டம்**

- நிதியுதவி ரூ.7,000/–லிருந்து ரூ.10,000/–ஆக உயர்த்தப்பட்டது.
- கடந்த மூன்றாண்டுகளில் பயன்பெற்றவர்களின் எண்ணிக்கை 344 பேர், செலவு ரூ.27 இலட்சம்.

**சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்**

இத்திட்டத்தில், கடந்த மூன்றாண்டுகளில் ரூ.430.89 இலட்சம் செலவில் 20,865 பேர்களுக்கு இலவச தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

**தொட்டில் குழந்தைத் திட்டம்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சிந்தனையில் தோன்றிய சீரிய திட்டம்தான் தொட்டில் குழந்தைத் திட்டம். சமுதாயத்தில் ஒருசில இடங்களில் நிலவும் கொலை எனும் கொடூர பழக்கத்திலிருந்து பெண் சிசுக்களைக் காப்பாற்றி, அவர்களும் இந்த நாட்டின் குடிமகள்கள், வருங்கால

தலைமகள்கள் என்பதை உணர்த்திடும் வகையில், இத்திட்டத்தினை உலகம் போற்றிடும் வகையில் இவ்வரசு செயல்படுத்தி வருகிறது. தருமபுரி, சேலம், திண்டுக்கல், மதுரை மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வரும் வரவேற்பு மையங்களை மேம்படுத்தும் வகையில் இவ்வாண்டு, ரூ.24.36 இலட்சத்தினை இவ்வரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், 2001–2002ஆம் நிதியாண்டிற்கு ரூ.4.92 இலட்சம், 2002–2003ஆம் ஆண்டில், ரூ.1.75 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளது. 2003–04ஆம் நிதியாண்டிற்கு 5 வரவேற்பு மையங்களுக்கும் ரூ.24.16 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**முதியோர் நலன்**

முதியோர் இல்லத்தின் மூலம் பயன்பெறும் ஒரு முதியவருக்கு மாதம் ரூ.250 என வழங்கப்பட்டு வந்த பராமரிப்பு செலவினத்தை மாதம் ரூ.500/– என உயர்த்தி இவ்வரசு வழங்கி வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 9 முதியோர் இல்லங்களுக்கு 2001–2002ஆம் நிதியாண்டிற்கு ரூ.8.27 இலட்சமும், 2002–2003ஆம் ஆண்டில் ரூ.12.71 இலட்சமும் இவ்வரசு செலவு செய்துள்ளது. 2003–2004ஆம் ஆண்டில் புதியதாக நான்கு முதியோர் இல்லங்களை தோற்றுவிக்க அரசு உத்தரவிட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 465 முதியோர்களுக்கு 2003–2004ஆம் ஆண்டில் ரூ.17.71 இலட்சம் அரசு செலவினம் மேற்கொண்டுள்ளது.

**தத்துத் திட்டம்**

மாவட்டத்திற்கு ஒரு தத்து நிறுவனம் என்ற இலக்கை எய்தும் வகையில், 23 நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு, இத்திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப் பட்டு வருகிறது. இதற்கு 2003–04 நிதியாண்டிற்கு, அரசு ரூ.5 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. ஆதரவற்ற இல்லங்கள் மற்றும் இதர அறநிலையங்களுக்கான சட்ட வாரியம் அமைக்கப்பட்டு, இதுவரை 431 நிறுவனங் களுக்கு அங்கீகாரச் சான்று வழங்கப்பட்டுள்ளது.

**குடிமகள்**

**"CITIZEN" என்ற ஆங்கிலச் சொல்லுக்கு தமிழில் "குடிமகன்'' என்ற சொல் மட்டுமே இதுவரை பொருளாக இருந்து வந்தது. பெண்களுக்கும் அங்கீகாரம் அளிக்கும் வகையில் அச்சொல்லுக்குச் சரியான பெண் பால் சொல்லாக "குடிமகள்" என வழங்கி, அரசாணையை தமிழக அரசு பிறப்பித்துள்ளது. அதற்கு, பெண்களிடையே பெருத்த வரவேற்புக் கிடைத்துள்ளது.**

**ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்**

- ரூ.3.79 இலட்சத்தில் 962 தாய்மார்கள் எடை



எடுக்கும் கருவிகள், ரூ.43.47 இலட்சம் செலவில் 10,869 குழந்தைகள் எடை கருவிகள் மற்றும் ரூ. 4.11 கோடி செலவில் அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் சமையல் பாத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- நகராட்சிப் பகுதிகளில் உள்ள 435 குழந்தை நல மையங்களுக்கு ரூ. 4.85 இலட்சம் செலவில் எவர்சில்வர் தட்டுகள் மற்றும் டம்ளர்கள், நகராட்சிப் பகுதிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் உள்ள 617 குழந்தை நல மையங்களுக்கு ரூ. 5.12 இலட்சம் செலவில் 2003–04ஆம் ஆண்டிற்கு எவர்சில்வர் தட்டுகள் மற்றும் டம்ளர்கள் வழங்கப்பட்டுள்ளன.

- ரூ.58.08 இலட்சம் செலவில் 10,421 மருந்துகள் அடங்கிய பெட்டிகள், ரூ.55.87 இலட்சம் செலவில் குழந்தைகளுக்கு விட்டமின் 'ஏ' திரவம் 96,950 பாட்டில்கள் (ஒவ்வொன்றும் 100 மி.லி வீதம்) வாங்கி வழங்கப்பட்டது. ரூ.21.06 இலட்சம் செலவில் 390 இலட்சம் இரும்புச்சத்து மாத்திரைகள் வளரிளம் பெண்களுக்கு வாங்கப்பட்டுள்ளது. ரூ. 21.82 இலட்சம் செலவில் ஐந்து மாவட்டங்களில் (தேனி, கடலூர், திருவண்ணாமலை, வேலூர் மற்றும் பெரம்பலூர்) உள்ள 5 வட்டாரங்களில் உள்ள குழந்தைகளுக்கு எம்.எம்.ஆர் தடுப்பூசியும், வளரிளம் பெண்களுக்கு ருபெல்லா தடுப்பூசியும் வழங்கப்பட்டுள்ளது.

- ரூபாய் 7 கோடி செலவில் 10,000 அங்கன்வாடி மையங்கள் பழுது பார்க்கப்பட்டன. ரூ.70.51 இலட்சம் செலவில் 24 மாவட்டங்களில் உள்ள அங்கன்வாடி மையங்களில் 1,575 குழந்தை நேய கழிப்பிடங்கள், ரூபாய் 7.95 கோடி செலவில் 24 மாவட்டங்களில் 159 குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலகம் மற்றும் கிடங்கு, ரூ.102.50 இலட்சம் செலவில் 82 அங்கன்வாடி மையங்கள், ரூ. 50 இலட்சம் செலவில் திட்ட ஒருங்கிணைப்பாளர் அலுவலகம் கட்டப்பட்டு வருகின்றது.

பணியாளர்களுக்கு பணிப் பயிற்சி, புத்தாக்கப் பயிற்சி மற்றும் புதுமையான பயிற்சிகளின் மூலம் 48,700

அங்கன்வாடி பணியாளர்கள், 28,000 அங்கன்வாடி உதவியாளர்கள், 1,250 மேற்பார்வையாளர்கள் மற்றும் 335 இதர அலுவலர்கள் பயனடைந்துள்ளனர். பயிற்சிகள் நடத்துவதற்கு ரூ.10.44 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**529 புதிய அங்கன்வாடி மையங்கள் திறக்கப் பட்டுள்ளன.** கடந்த இரண்டு ஆண்டுகளில் 0.5 சதவிகிதமாக இருந்த கடுமையான ஊட்டச்சத்து பற்றாக்குறை குழந்தைகள் 0.15 சதவிகிதமாகவும், 10.5 சதவிகிதமாக இருந்த மிதமான ஊட்டச்சத்து பற்றாக்குறை குழந்தைகள் 4.27 சதவிகிதமாகவும் குறைந்துள்ளது.

- எடை குறைவாக பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை 23 சதவிகிதத்திலிருந்து 15 சதவிகித மாக குறைந்துள்ளது.
- சத்துணவு அளிப்பதன் மூலம் எடை கூடுகின்ற குழந்தைகளின் சதவிகிதம் 45இல் இருந்து 51 ஆக உயர்ந்துள்ளது.
- பாதுகாப்பற்ற பிறப்பு, இடைவெளியில் பிறக்கும் பிறப்புகளின் சதவிகிதம் 43இல் இருந்து 28 ஆக குறைந்துள்ளது.
- அங்கன்வாடி மையங்கள்/குழந்தை நல மையங்களில் உள்ள முன்பருவ கல்வி குழந்தைகளுக்கு வைட்டமின் 'ஏ' சத்து குறைபாட்டினை போக்கும் பொருட்டு மதிய உணவில் முருங்கை இலை/ கருவேப்பிலை பொடியினை சேர்த்து, ஒரு குழந்தைக்கு நாளொன்றுக்கு 2 கிராம் வீதம், 20 பைசா செலவில் வாரத்தில் ஐந்து நாட்களுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டம், முன்னோடி திட்டமாக 12.11.2003 முதல் தேனி மாவட்டம் ஆண்டிபட்டி, பெரியகுளம் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் பரங்கிமலை, காஞ்சிபுரம் (கிராமம்), வேலூர் மாவட்டம் அணைக்கட்டு, பேரணாம்பட்டு வட்டம், திருவண்ணாமலை மாவட்டம் துரிஞ்சாபுரம், வெம்பாக்கம் வட்டம், கடலூர் மாவட்டம் கடலூர் (கிராமம்), குறிஞ்சிபாடி, பெரம்பலூர் மாவட்டம் திருமானூர், வேப்பந்தட்டை ஆகிய வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டது. இதன்மூலம் 35,000 குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர். இதற்காக வருடத்திற்கு ரூபாய் 22 இலட்சம் செலவாகிறது.

### புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம்

1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரையிலும் மற்றும் 6ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு 2,082 பள்ளிச் சத்துணவு மையங்கள் மூலம் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. இதில் 4,75,607 பயனாளிகள் பயனடைந்து வருகிறார்கள்.

## சத்துணவில் கூடுதலாக முட்டை வழங்கப்படும்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் அறிவிப்பு

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட சத்துணவுத் திட்டத்தின் மூலம் தற்போது 2 வயது முதல் 15 வயது வரையிலான அனைத்து குழந்தைகளும் பயன்பெற்று வருகிறார்கள். இந்த திட்டம் உணவுப் பாதுகாப்பு வழங்குகின்ற மிக முக்கியமான திட்டம் ஆகும். இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் ஒவ்வொரு குழந்தையும் சரிவிகித சத்துணவு பெறவேண்டும் என்ற நோக்கத்துடன் வாரத்தில் ஒரு நாள் உருளைக்கிழங்கும், மேலும் இரண்டு நாட்கள் பருப்பு வகைகளும் வழங்கப்பட வேண்டும் என்று நான் ஏற்கெனவே ஆணையிட்டிருந்தேன். இந்த உணவை மேலும் சத்துள்ளதாக ஆக்க வாரத்தில் ஒரு நாள் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு முட்டை வழங்கிட தற்போது நான் ஆணையிட்டுள்ளேன். வாரத்தில் ஒரு நாள் உருளைக்கிழங்கு, மற்றொரு நாள் பருப்பு வகைகள் என்பதுடன் கூடுதலாக முட்டை வழங்கப்படும்.

### ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டங்கள்

- 2001–2002 ஆம் ஆண்டு 300 ஊனமுற்ற நபர்கள் கணினி பயிற்சியின் மூலம் பயன்பெற்றனர்.



2003–2004ஆம் ஆண்டு ரூ.9.93 இலட்சம் செலவில் 109 கை, கால் ஊனமுற்ற மற்றும் காது கேளாத நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

- ஆய்வுக் கூட தொழில் நுட்பப் பயிற்சி 2001–2002ஆம் ஆண்டு 118 ஊனமுற்ற நபர்களுக்கும், 2003–2004ஆம் ஆண்டு ரூ.10.06 இலட்சம் செலவில் 60 கை, கால் ஊனமுற்ற மற்றும் காது கேளாத நபர்களுக்கும் அளிக்கப்பட்டது. ரூ.8.16 இலட்சம் செலவில் 32 கை, கால் ஊனமுற்ற மற்றும் காது கேளாத பெண்களுக்கு 2003–2004ஆம் ஆண்டில் அழகுக் கலை பயிற்சி அளிக்கப்படுகிறது.
- சிறப்புப் பள்ளிகளின் விடுதியில் தங்கிப் பயிலும் ஊனமுற்ற மாணவ/மாணவியர்களுக்கு உணவூட்டு

மானியம் தலா ரூ.200/– வீதம் 2001–2002ஆம் நிதியாண்டில் ரூ.99.34 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 4,967 பேர்களும், 2002–2003இல் ரூ.96.24 இலட்சம் ஒதுக்கீட்டில் 4,812 பேர்களும், 2003–2004இல் ரூ.126.42 இலட்சம் நிதி ஒதுக்கீட்டின் மூலம் 6,321 மாணவர்களும் பயனடைந்துள்ளனர்.

- தனியார் மற்றும் அரசு பள்ளிகளில் பயிலும் 10,060 ஊனமுற்ற மாணவர்களுக்கு தமிழ்நாடு பாட நூல் சிறப்பு நிறுவனம் மூலம் இலவசமாக பாடப் புத்தகங்கள் வழங்க ரூ.8.53 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- ஊனமுற்றோருக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெறுவோரின் எண்ணிக்கை 13,700லிருந்து 15,000 ஆக உயர்த்தப்பட்டு ரூ.117.20 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பார்வையற்ற மாணவர்களுக்கு பாடங்களை வாசித்துக் காண்பிப்பவருக்கான உதவித்தொகை வருடத்திற்கு ரூ.1,000/–லிருந்து ரூ.1,500/–ஆக உயர்த்தப்பட்டுள்ளது. காது கேளாதோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு ரூ.25 இலட்சம் செலவில் குழு காதொலி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 2003–2004ஆம் நிதி ஆண்டில் உலக ஊனமுற்றோர் தின விழாவில் ரூ.5 இலட்சம் செலவில் மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் ஊனமுற்றோருக்கென நடத்தப்பட்டது.

சமுதாயம் சார்ந்த மறுவாழ்வுப் பணிகளை வழங்கும் ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கான தேசியத் திட்டம் 4 மாவட்டங்களில் 2002–2003ஆம் ஆண்டில் ரூ.1.30 கோடியில் செயல்படுத்தப்பட்டு, 2003–2004இல் இத்திட்டம் ரூ.1.68 கோடி செலவில் தொடரப்பட்டு வருகிறது.

ஊனமுற்றவர்களுக்கு தடையற்ற சுற்றுச் சூழலை ஏற்படுத்தும் வண்ணம் தலைமைச் செயலகத்தில் ரூ.20 இலட்சம் செலவில் சாய்வுதளமும், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் சாய்வுதளமும் அமைக்க மாவட்டத்திற்கு ரூ.1.5 இலட்சம் வீதம் ரூ.45 இலட்சம் அனுமதிக்கப்பட்டது.

அ) காது கேளாத வாய் பேசாதவரை திருமணம் செய்யும் நல்ல நிலையில் உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஊக்கத் தொகை ரூ.7,000/–லிருந்து ரூ.10,000/– ஆக 2002–2003 முதல் உயர்த்தி வழங்கப்படுகிறது.

ஆ) கை, கால் ஊனமுற்றோரை திருமணம் செய்யும் நல்ல நிலையில் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகை ரூ.7,000/–லிருந்து ரூ.10,000/–ஆக 2002–2003 முதல் உயர்த்தி வழங்கப்படுகிறது.

கடும் ஊனத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் பராமரிப்பு உதவித் தொகை பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 2001–2002ஆம் ஆண்டு முதல் 7,400–லிருந்து 8,400 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், 2003–2004ஆம் ஆண்டிலிருந்து மாதாந்திர உதவித் தொகை ரூ.150/–லிருந்து ரூ.200/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

மன நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மறுவாழ்வு மையங்களை முறைப்படுத்துதலுக்கான தமிழ்நாடு மன நோயால் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு மையங்கள் பதிவு விதிகள் 2002 இந்தியாவிலேயே முதலாவதாக வெளியிடப்பட்டது. (Tamil Nadu Registration of Psychiatric Rehabilitation Centres for Mentally ill Persons Rules 2002)

ஊனமுற்றோருக்கு 'அ' மற்றும் 'ஆ' பிரிவு பணியிடங்களில் பணி நியமனம் செய்ய ஏற்ற பணியிடங்கள் கண்டறியப்பட்டு பணி நியமனம் செய்ய வழி வகை செய்யப்பட்டு வருகிறது. ஊனமுற்றோருக்கென சில பணியிடங்கள் கண்டறியப்பட்டு அப்பணியிடங்களில் ஊனமுற்றோரை மட்டுமே கொண்டு நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உடல் ஊனமுற்ற மாணவர்கள் மற்றும் பணிக்கு செல்வோர் பள்ளி, மருத்துவமனை, பணியிடம் செல்ல ஏதுவாக 13,000 நபர்களுக்கு அரசு பேருந்துகளில் இலவச பயணம் மேற்கொள்ள சலுகை வழங்கப்படுகிறது. உடல் ஊனமுற்றோருக்கு சுயதொழில் துவங்க வங்கிகள் மூலம் கடன் வழங்க ஏற்பாடு செய்யப்படுவதுடன் கடன் தொகைக்கு ரூ.2000/–ம் பெட்டிக் கடை வைக்க ரூ.5000/–ம் அதிகபட்ச மானியமாக வழங்கப்படுகிறது.

ரூ.25 இலட்சம் செலவில் ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கான மாநில வள ஆதார மையம் அமைக்கவும், ரூ. 5 இலட்சம் செலவில் ஊனமுற்றோருக்கான பிரெய்லி நூலகம் அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கல்லூரிக் கட்டணச் சலுகை விலக்குப் பெற பார்வையற்றோருக்கு விதிக்கப்பட்டிருந்த ஆண்டு வருமான வரம்பினை ரூ.9000/–லிருந்து ரூ.24,000/– ஆக இவ்வரசு உயர்த்தி வழங்கியுள்ளது.

## சமூகப் பாதுகாப்புத் துறை

தவறிழைத்த குழந்தைகளின் வழக்குகளை விசாரிப்பதற்காக 8 இளைஞர் நீதிக் குழுமங்களும், பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை கவனிக்க 18 இளைஞர் நலக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டது.

நவம்பர் 2002இல் குழந்தைகள் பிச்சை எடுத்தலை தடுக்க நகர அளவிலான குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

துன்பச் சூழ்நிலையிலுள்ள குழந்தைகளுக்கு உதவ குழந்தைகளின் இலவச தொலைபேசித் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இலவச தொலைபேசி



எண். 1098 நாடு முழுவதும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. சமீப காலங்களில் இத்தொலைபேசி வசதி 102 அனைத்து மகளிர் காவல் நிலையங்களிலும் அறிமுகப்படுத்தப்பட்டு குழந்தைகளின் சேவைக்காக மாநிலம் முழுவதும் அமலாக்கப்பட்டுள்ளது.

மகளிர் மற்றும் குழந்தைகள் கடத்தப்பட்டு வணிக ரீதியில் பாலியல் பலாத்காரம் செய்யப்படுவதை தடுக்க ஒவ்வொரு கிராமங்களிலும் தமிழகத்தில்தான் முதன் முதலாக கிராம அளவிலான கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**அரசினால் அங்கீகரிக்கப்பட்ட திட்ட செயலாக்கத்தின் ஒரு பாகமாக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தினரால் வணிகரீதியாக பாலியல் தொழிலில் ஈடுபட்டுவந்த மகளிர்க்கெனவும் மற்றும் கடத்தப்பட்ட மகளிர்க்கெனவும் 177 க்கும் மேற்பட்ட சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் 1,336 உறுப்பினர்கள் உள்ளனர்.**

மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான தமிழ்நாடு சமூக பாதுகாப்பு நல நிதி இத்திட்டத்தின்கீழ் பாதிக்கப்பட்ட மகளிர் 153 பேரின் மறுவாழ்வுக்கென தலா ரூ.500/- வீதம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

ஆதரவற்ற முதியோர் (சாதாரணம்), ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர், ஆதரவற்ற விதவைகள், ஆதரவற்ற விவசாயக்கூலிகள், ஆதரவற்ற கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோர்களுக்கான உதவித்தொகையை 2001-2002இல் 1,17,430 பேர்களும், 2002-2003இல் 11,85,881 பேர்களும், 2003-2004இல் 12,08,504 பேர்களும் பெற்று பயனடைந்துள்ளனர்.

முதியோர் ஓய்வூதியம் பெறும் அனைத்து பயனாளி களுக்கும், அன்னபூர்ணா திட்டத்தின்கீழ் ஆதரவற்ற மிகவும் வயது முதிர்ந்த 71,974 நபர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 10 கிலோ உணவு தானியம் மைய அரசு மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

பயனாளிகளுக்கு ஓய்வூதியம், இலவச அரிசி மற்றும் இலவச கைத்தறி வேட்டி சேலை ஆகியவை 2001-2002இல் ரூ.28,477.83 இலட்சம் செலவிலும் 2002-2003இல் ரூ.32,980.11 இலட்சம் செலவிலும், 2003-2004இல் ரூ.33,624.65 இலட்சம் செலவிலும் வழங்கப்பட்டது.

நலிந்தோர் நிவாரணத் திட்டத்தின்கீழ் 2001-2002 முதல் 2003-2004வரை பயன்பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை 43,718. செலவு ரூ.4,371.70 இலட்சம் ஆகும்.

## தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

2001 முதல் நடப்பு மாதம் வரை மொத்தம் 64.50 கோடி ரூபாய் இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்து செலவிடப் பட்டுள்ளது.

2001 முதல் நடப்பு மாதம் வரை மட்டும் சுமார் 1,57,958 சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு 26,85,717 பெண்கள் பயனடைந்துள்ளனர். இதில் 200 அரவாணிகள், 706 விலைமாதர்கள், 2,656 உடல் ஊனமுற்றோரும் அடங்குவர்.

குழுக்களின் சேமிப்பு 2001 முதல் நடப்பு மாதம் வரை மட்டும் ரூ.422.74 கோடியாகும். இக்குழுக்களுக்கு பிப்ரவரி 2004 வரை 722.02 கோடி ரூபாய் கடன் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

நலிவுற்ற பெண்கள் சுயமாகத் தொழில் தொடங்கி நடத்திட தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி 5 இலட்சம் பெண்களுக்கு வழங்க திட்டமிடப்பட்டு, 2001 முதல் நடப்பு மாதம் வரை மட்டும் பிற அரசு நிறுவனங்களுடன் இணைந்து 3,66,107 பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மட்டும் ரூ.472.85 இலட்சம் செலவில் 62,925 பெண்களுக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி அளித்துள்ளது.

தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி பெற்ற பெண்கள், தாமாக சுயதொழில் தொடங்க ஏதுவாக ரூ.100 இலட்சம் செலவில் 31,307 பெண்களுக்கு வாழ்க்கைத் தொழில் பயிற்சி அளித்துள்ளது. இவற்றுடன் மற்ற அரசுத் துறை பயிற்சியினையும் சேர்த்து சுமார் 76,148 பெண்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெற்றுள்ளனர்.

கிராமப்புற ஏழை எளிய பெண்கள் விறகு அடுப்பில் சமைத்து கஷ்டப்படுவதிலிருந்து விடுபடும் பொருட்டு 25,000 ஏழை எளிய சுயஉதவிக்குழு பெண்கள் வீட்டு புதுமணத் தம்பதிகளுக்கு இலவச எரிவாயு வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

இந்த ஆண்டு ரூ.1.10 இலட்சம் செலவில் புதிதாக 25 பெண்கள் மனமகிழ் மன்றங்கள் 13 மாவட்டங்களில் உருவாக்கப்பட்டு வருகின்றது.

• • •

# வளர்ச்சி நோக்கில் தொழில் வணிகத்துறை

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி அதன் தொழில் வளர்ச்சியைப் பொறுத்தே அமையும். அதுவும் சிறு மற்றும் குறுந்தொழில்களின் வளர்ச்சி மிகவும் இன்றியமையாத தாகும். அவ்வகையில் செய்ய வேண்டிய பணிகளைச் செய்துவரும் தமிழக அரசு சிறு மற்றும் குறுந் தொழில்களை வளரச் செய்ய பல்வேறு திட்டங்களை வகுத்துள்ளது.

சிறுதொழில்களுக்கு பல ஆண்டுகளாக அளிக்கப் பட்டு வந்த விலை மற்றும் கொள்முதல் முன்னுரிமைகள் 1997ஆம் ஆண்டில் விலக்கிக் கொள்ளப் பட்டதன் காரணமாக ஏற்பட்டுள்ள கடும் பாதிப்பினால், தொழில் வளர்ச்சி வெகு வாகக் குறைந்தது. அரசு இவ்வாணையை விலக்கிக்கொண்டு தமிழ்நாடு 1998ஆம் ஆண்டு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளிச் சட்டத்தில் திருத்தம் செய்து, சிறுதொழில் நிறுவனங்களுக்கு விலை மற்றும் கொள்முதல் முன்னுரிமையை மீண்டும் 1.12.2001 முதல் வழங்கியது. இதன் மூலம் அரசு கொள்முதல்களில் 15 சதவிகிதம் விலை முன்னுரிமை வழங்கப்படுகிறது.


சிறுதொழில் நிறுவனங்களிடமிருந்து மட்டுமே வாங்கப்படவேண்டிய 358 இனங்கள் திறந்த ஒப்பந்தபுள்ளிகள் மூலம் வாங்கப்பட வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது.

தற்காலிக சிறுதொழில் சான்றிதழை எளிதில் விரைந்து பெற ஏதுவாக, தற்போது ரூ.50/– சேவைக் கட்டணமாக செலுத்தி, அரசு ஒப்புதல் அளித்த இணையதள மையங்களில் நேரடியாகப் பெறும் திட்டம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 12.9.2002 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. 31.3.2004 வரை 38,349க்கு மேல் சான்றிதழ்கள் ஒப்புதல் அளிக்கப்பட்ட 262 இணையதளம் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

ஏற்றுமதியைப் பெருக்கவும், தொழில் முனைவோரை ஏற்றுமதி செய்ய ஊக்குவிக்கவும் ஒவ்வொரு மாவட்டத் தொழில் மைய அலுவலகத்திலும் ஏற்றுமதி சேவை மையத்தை ஏற்படுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் மாவட்ட அளவில் ஏற்றுமதி வளர்ச்சிக் குழுமமும், தொழில் வணிக இயக்குநர் அவர்களின் தலைமையில் மாநில அளவில் ஏற்றுமதி வளர்ச்சிக் குழுமமும் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள 385 வட்டாரங்களில் "புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" என்ற புதிய திட்டம் ஒன்றை அரசு அறிவித்தது. அந்தந்தப் பகுதிகளில் விளையும் வேளாண் பொருட்களை உபயோகித்து, குறைந்தபட்சம் ரூபாய் ஒரு கோடி மற்றும் அதற்கு மேல் முதலீட்டில் தொழில்களைத் தொடங்க இத்திட்டம் வகை செய்யும். இத்திட்டத்திற்கு மூலதன மானியம் மற்றும் பிற மானியங்கள் வழங்கப்படும். ஒவ்வொரு வட்டாரத்திலும் குறைந்தபட்சம் ரூ.20 இலட்சம் முதலீட்டில் 5 தொழில்கள் அமைக்க முடியும்.


தோட்டப்பயிர்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள், மலர்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பொருட்கள், கயிறு மற்றும் தென்னை நார் மற்றும் உணவுப் பதப்படுத்துதல் சார்ந்த தொழில்கள் உள்ளிட்ட வேளாண்சார் தொழில்களுக்குத் தேவையான இயந்திரங்கள் மற்றும் தளவாடப் பொருட்களின் முதலீட்டில் 15% (அதிகபட்சமாக ரூ.15 இலட்சம்) சிறப்பு மூலதன மானியமாக வழங்கப்படும்.



31.3.2004 வரை தமிழகத்தின் 385 வட்டாரங்களில் 765 திட்டங்களுக்கு ரூ.532.26 கோடி திட்ட முதலீட்டில் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் வேளாண்சார் / உணவு பதப்படுத்தும் தொழில்கள் தொடங்க மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு ஒப்புதலளித்துள்ளது.

91 தொழில் அலகுகளின் மூலம் மொத்தம் ரூ.60.38 கோடி திட்ட மதிப்பீட்டில் உற்பத்தியை தொடங்கியுள்ளன. 2,878 மகளிர் உள்ளிட்ட சுமார் 4,135 ஊரகப் பகுதி மக்களுக்கு இந்த 91 அலகுகள் வேலைவாய்ப்பு அளித்துள்ளன.

சிறுதொழில் நிறுவனங்களை நவீனப்படுத்தவும், ஊக்குவிக்கவும், 2003–2004ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தமிழக அரசு, தொழில்நுட்ப மேம்பாடு, நவீன மயமாக்குதல், ஐ.எஸ்.ஓ. சான்றிதழ் பெறுதல், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி பணிகள், தேசிய கடன் மீது விளிம்பு நிதி திட்டம், கூட்டுக் கடன் திட்டம் ஆகியவற்றுக்காக நிதி நிறுவனங்களிடமிருந்து வாங்கிய கடன்களுக்கு பின் முனை வட்டி மானியம் வழங்குதல் என்ற புதிய திட்டத்தை அறிவித்துள்ளது.



★ 2003–2004ஆம் ஆண்டில் 25,137 மகளிருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 5,137 மகளிருக்கு பாரதப் பிரதமரின் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம், 8,828 தொழில்நுட்பக் கல்வி பயின்ற மகளிருக்கு, 11,172 மகளிருக்கு சுயநிதி உதவிக் குழுக்களிலிருந்து பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.

★ பாரதப் பிரதமரின் ரோஜ்கார் யோஜனா என்ற சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில், 59,222 நபர்களுக்கு கடன் ஒப்புதல் வங்கிகளிடம் பெறப்பட்டு அதில், 43,223 நபர்களுக்கு பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

★ வாடகைக் கட்டடத்தில் இயங்கும் 10 குதிரை சக்தி மின்சார திறனுக்கு கீழ் உள்ள குறுந்தொழில்களுக்கு, 2003–2004ஆம் ஆண்டில் இருந்து குறைந்த அழுத்த மின் வசதி சலுகை வழங்க தமிழக அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக குறைந்தது 10,000 குறுந்தொழில்கள் பயன் பெற்றுள்ளன.

★ சவ்வரிசி தயாரிக்க பயன்படுத்தும் மரவள்ளிக் கிழங்கு உற்பத்தியை ஊக்குவிக்கவும், சவ்வரிசி தொழிற் கூட்டுறவுச் சங்கம், சேலம் (சேகோசர்வ்) நிறுவனத்திற்கு விற்பனை வரிச் சலுகை அளித்துள்ளது.

★ தேயிலை விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க அமைக்கப்பட்ட **டீ சர்வ்** ஏல மைய நிறுவனத்திற்கு விற்பனை வரிச் சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

★ 2001–2002 நிதியாண்டில் 32,544 சிறுதொழில் நிறுவனங்களுக்கும், 2002–2003 நிதியாண்டில் 32,387 சிறுதொழில் நிறுவனங்களுக்கும், 2003–2004 நிதியாண்டில் 26,545 சிறு தொழில் நிறுவனங்களுக்கும் பதிவுச் சான்றுகள் வழங்கப்பட்டு, கடந்த மூன்றாண்டுகளில் ரூ.2,367 கோடி நிரந்தர முதலீட்டுடன் 6,65,916 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

★ 2001–2002ஆம் ஆண்டு முதல் 2005–2006ஆம் ஆண்டு முடிய ஒரு ஆண்டிற்கு 25,000 மகளிர் என்ற விகிதத்தில் 5 ஆண்டுகளில் 1,25,000 பெண்களுக்கு "ஐந்து இலட்சம் மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின்" கீழ் 7 நாட்களுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது.

★ 2001–2002ஆம் ஆண்டில் 25,259 மகளிர் பயிற்சி பெற்றுள்ளனர். அவர்களுள் 10,942 மகளிர் தொழில் நிறுவனங்கள் தொடங்கியுள்ளனர்.

★ 2002–2003ஆம் ஆண்டில் 25,139 மகளிருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 8,845 தொழில் நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

ஒற்றைச் சாளர முறை கூட்டம் மூலம் புதிதாகத் தொழில் தொடங்க இத்துறை உதவி புரிந்து வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில், 3,154 மனுக்கள் பெறப்பட்டு 3,073 மனுக்கள் தீர்வு காணப்பட்டது.

2003–2004ஆம் ஆண்டில் 181 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இலாபத்தில் செயல்பட்டு வருகின்றன.

நீலகிரி மாவட்டத்திலுள்ள சிறு தேயிலை விவசாயிகளுக்கு பச்சைத் தேயிலையின் விலை வீழ்ச்சியால் ஏற்பட்ட பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொது விநியோகக் கடைகளில் **ஊட்டி டீ** என்ற பெயரில் தேயிலைத் தூளை விற்கும் திட்டத்தை செயல்படுத்த உத்தரவு பிறப்பித்தார்கள். இத்திட்டத்தின்படி 31.3.2004 முடிய ரூ.55.40 கோடி மதிப்பிலான 7,386 மெட்ரிக் டன் ஊட்டி டீ விற்பனை செய்யப்பட்டுள்ளது. ஊட்டி டீ விற்பனை மூலம் கிடைத்த வருமானத்திலிருந்து ஒரு பகுதியை தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகள் மூலம் அதன் உறுப்பினர்களாக உள்ள விவசாயிகளுக்கு கூடுதலாக பச்சைத் தேயிலைக்கு விலை வழங்கியும் உள்ளது.

சந்தை தேவைக்கேற்ப தரத்தை உயர்த்தும் வகையில் ரூ.2.32 கோடி திட்ட மதிப்பில் 11 கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் மேம்படுத்தப்படுகிறது. இத்திட்ட செலவில் 50 சதவிகிதத்தை தேயிலை வாரியம் ஏற்றுக் கொள்கிறது.

தேயிலை ஏலத்தை மின்னணு முறையில் வெளிப்படையாக நடத்துவதற்காக ஒரு புதிய ஏல மையத்தை டீசெர்வ் என்ற பெயரில் கூட்டுறவு முறையில் நிறுவப்பட்டு, 31.3.2004 முடிய 80,67,294 கிலோ கிராம் தேயிலைத் தூளை ஏலம் மூலம் விற்பனை செய்துள்ளது.

மிக வெற்றிகரமாக நடைபெறும் தொழிற் கூட்டுறவுகளில் ஒரு எடுத்துக்காட்டாக சேகோசர்வ் நமது மாநிலத்தில் விளங்கி வருகிறது. சேகோசர்வ், 2001–02, 2002–03 மற்றும் 2003–04 நவம்பர் முடிய ஆண்டுகளில், முறையே ரூ.204.70 கோடி அளவுக்கு விற்பனை செய்துள்ளது.

சென்னை தாய்கோ வங்கி திரட்டிய வைப்பு நிதி 31–3–2004 அன்றுள்ளவாறு ரூ.179.47 கோடி, வழங்கிய கடன்களும் முன்பணமும் ரூ.133.89 கோடி ஆகும்.

173 ஆட்டோக்கள் வாங்குவதற்கு ரூ.86.86 இலட்சம் அளவுக்குக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

ரூ.20 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் இலவம் பஞ்சுத் தொழிற் கூட்டுறவுச் சங்கம் ஒன்று 2002 ஆம் ஆண்டு தொடங்கப்பெற்றது. இதன் மூலம் 437 உறுப்பினர்கள் பயனடைந்து ரூ.34.62 இலட்சம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

கடமலைக்குண்டு – மயிலாடும்பாறை வருசநாடு முந்திரி பதப்படுத்துதல் தொழிற் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் ஒரு முந்திரிப் பதப்படுத்தும் தொழிற் கூட்டுறவுச் சங்கம் ரூ.16 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இச்சங்கம் ரூ.5.89 இலட்சம் மதிப்புள்ள 18.50 மெ.டன் முந்திரிக் கொட்டைகளை கொள்முதல் செய்து ரூ.5.99 இலட்சம் அளவிற்கு 2003–2004ல் விற்பனை செய்துள்ளது. 275 உறுப்பினர்கள் இத்திட்டத்தின் பயனாளிகளாவர்.

கோயம்புத்தூர், பொன் நகைத் தயாரிப்போர் தொழிற் கூட்டுறவுச்சங்கம், 2003–2004இல் ரூ.2.82 இலட்சத்திற்கு விற்பனை செய்துள்ளது. இச்சங்கத்தின் மூலம் 200 பொற்கொல்லர்கள் பயன் பெறுவார்கள்.

பெரம்பலூர் மாவட்டம் செயங்கொண்டத்தில் ரூ.16.78 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் தந்தை பெரியார் முந்திரி பதப்படுத்துதல் தொழிற் கூட்டுறவுச் சங்கம் 27.01.2003 அன்று பதிவு செய்யப்பெற்றது.

**மைக்கால்** என அழைக்கப்படும் சென்னை தொழிற் கூட்டுறவு பகுப்பாய்வகத்தின் செயல்பாடுகளை ரூ.10.13 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் விரிவாக்கம் செய்வதற்காக கருவிகள் வாங்குவதற்கென ரூ.7.50 இலட்சம் வழங்க அரசால் அனுமதிக்கப்பட்டு, இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மருந்து தயாரிப்பு அலகுகளான 283 உறுப்பினர்கள் இச்சங்கத்தினால் பயன்பெறுவதுடன், 31 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது.

'கோஸ்மிகோ' (KOSMICO) தீப்பெட்டிச் சங்கத்திற்கு புத்துயிரூட்டப்பட்டு, 2002ஆம் ஆண்டு மீண்டும் செயல்படத் தொடங்கியுள்ளது. அச்சங்கம் 124 உறுப்பினர்கட்கு வேலைவாய்ப்பு நல்கும். திருநெல்வேலி மாவட்டத்தில் இரு தீப்பெட்டி சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஒரே சங்கமாக இணைக்கப்பட்டு, மார்ச் 2003 முதல் 'சாஸ்மிக்' (SASMIC) என்ற பெயரில் செயல்படத் தொடங்கி உள்ளது. இச்சங்கத்தினால் 70 உறுப்பினர்கள் பயனடைந்து வருகின்றனர்.

தமிழ்நாடு அரசு கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடந்த மூன்றாண்டுகளில் ரூ.92.84 இலட்சம் சந்தைமேம்பாட்டு உதவி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 5,000 கயிறுத் தொழிலாளர்கள் பயனடைவார்கள். ★

## குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்பட்ட 'H' முத்திரை நீக்கம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிவிப்பு

"பொது விநியோகத் திட்டத்தை விரிவாக ஆய்வு செய்து பொதுமக்கள் பெருமளவில் பயன்பெறும் வகையில் தற்போதுள்ள விநியோக முறையை மேலும் மேம்படுத்திட நான் ஆணையிட்டுள்ளேன்.

குடும்ப அட்டைகள் மீது 'H' முத்திரையிடும் முறை உடனடியாக திரும்பப் பெறப்படுகிறது. 'H' முத்திரையிடப்பட்ட குடும்ப அட்டைதாரர்கள் இந்த முத்திரை பெறுவதற்கு முன்னர் நியாய விலைக் கடைகளில் என்னென்ன பொருள்களை பெற்று வந்தார்களோ அவற்றை மீண்டும் பெற்றுக் கொள்ளலாம்.

மாதத்திற்கு ரூபாய் 5,000 வரை வருமானம் உள்ளவர்கள்தான் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அத்தியாவசியப் பொருட்களை பெறுவதற்கு தகுதி உள்ளவர்கள் என வரையறுக்கப்பட்ட வருமான வரம்பு உடனடியாக விலக்கப்படுகிறது.

தங்களுக்கு குடும்ப அட்டைகள் இல்லை என்றும், புதிய அட்டைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கைகள் வரப் பெற்றுள்ளன. இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ள குடும்பதாரர்கள் புதிய குடும்ப அட்டை பெற எதிர்வரும் 2004–ஜூன் திங்கள் 1 ஆம் தேதி முதல் 30ஆம் தேதி வரை மாவட்டங்களில் உள்ளவர்கள் சம்பந்தப்பட்ட தாலுகா அலுவலகங்களிலும், சென்னையில் உள்ளவர்கள் உணவு பொருள் வழங்கும் உதவி ஆணையர் அலுவலகங்களிலும் விண்ணப் பிக்கலாம். இதன் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, உரிய ஆய்வுக்கு பின் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படும்.

தற்போதுள்ள அனைத்து குடும்ப அட்டைகள் 31.12.2004 வரை செல்லுபடியாகும். இந்த குடும்ப அட்டைகளை புதுப்பிக்க விரிவான கால அட்டவணை வகுக்கப்பட்டு தனியாக அறிவிக்கப்படும். இவ்வாறு குடும்ப அட்டைகள் புதுப்பிக்கப்படும்போது அரிசியுடன் சர்க்கரை மற்றும் மண்ணெண்ணெய் பெறும் வகையிலும் அல்லது சர்க்கரை / மண்ணெண்ணெய் மட்டுமே பெறும் வகையிலும் குடும்ப அட்டைகள் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். தற்போது உள்ள நடைமுறைப்படி விருப்பத்தின் பேரில் அரிசி அட்டைக்குப் பதிலாக சர்க்கரை அல்லது மண்ணெண்ணெய் அட்டை பெற இயலும்.

நியாய விலைக் கடைகளில் கூப்பன் கொடுத்து அரிசி பெறுகின்ற முறை எதிர்வரும் ஜூலை திங்கள் முதல் தேதியிலிருந்து நிறுத்தப்படும். நடப்பில் உள்ள அரிசி பெறத் தகுதியான குடும்ப அட்டைதாரர்கள் அனைவரும் கூப்பன் முறை இல்லாமலேயே தங்கள் அட்டைகளுக்குரிய அரிசியை 2004 ஜூலை திங்கள் முதல் தேதியிலிருந்து நியாய விலைக் கடைகளில் பெற்றுக் கொள்ளலாம். ●

# கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை

தமிழ்நாட்டை ஒவ்வொரு துறையிலும் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக விளங்கச் செய்ய தான் உறுதி பூண்டிருப்பதாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்



அறிவித்துள்ளார்கள். "அனைவருக்கும் ஆரோக்கிய மான, வளமான வாழ்வு அமைவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித்தருவதே'' இவ்வரசின் இலக்கு ஆகும். இம்மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு குடிமகனும் பொருளாதார மற்றும் சமூக ரீதியாக அத்தியாவசியப் பொருட்களைப் பெற வழிவகுக்கும் பொதுவிநியோகத் திட்டத்தை இத்துறை செயல்படுத்தி வருகிறது.

★ விவசாயிகளுக்கான வட்டி மற்றும் அபராத வட்டித் தள்ளுபடித் திட்டத்தின்படி 6,11,193 விவசாயிகளுக்கு 226.56 கோடி ரூபாய் அளவில் வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. வறட்சியினால் பாதிக்கப்பட்ட சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில், அவர்கள் கூட்டுறவு வங்கியிலிருந்து பயிர் சாகுபடிக்காக பெற்ற கடன்களுக்கு ரூ.61.05 கோடி அளவில் வட்டி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளின் குறுகிய கால பயிர்க் கடனுக்கான வட்டி விகிதம் 15 சதவிகிதத்திலிருந்து 12 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளது.

★ சீரமைக்கப்பட்ட மகளிர் சிறுவணிகக் கடன்களுக் கான வட்டி விகிதம் 15 சதவிகிதத்திலிருந்து 11 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளது. உழைக்கும் மகளிருக்கும், மகளிர் தொழில் முனை வோருக்கும் வழங்கும் கடன்களுக்கான வட்டி விகிதத்தை 15 சதவிகிதத்திலிருந்து 12 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது.

★ சீரமைக்கப்பட்ட மகளிர் சிறு வணிகக் கடன் திட்டத்தின் கீழ், மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் 1,15,029 நபர்களுக்கு ரூ.38.17 கோடி அளவிற்கு கடன்கள் வழங்கப் பட்டுள்ளன. சுய உதவிக் குழுக்களை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது. இவ்வங்கிகளில் 44,091 சுய உதவிக் குழுக்கள் உறுப்பினர்களாக இதுவரை சேர்க்கப்பட்டு 149.50 கோடி ரூபாய் அளவிற்கு கடனாக வழங்கப்பட்டுள்ளது.

★ மகளிர் தொழில் முனைவோர் கடன் திட்டத்தின் கீழ் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளும், நகர கூட்டுறவு வங்கிகளும், ரூ.10 இலட்சம் வரையில் 60 சம தவணைகளில் திரும்பச் செலுத்தும் வகையில் 12 சதவிகித வட்டி விகிதத்தில் சிறு தொழில்கள் மற்றும் சேவை மையங்கள் தொடங்குவதற்கு கடன் வழங்கி வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் ரூ.7.71 கோடி அளவிற்கு 1,130 மகளிர் தொழில் முனைவோருக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. மாத வருமானம் பெறும் மகளிருக்கான கடன் திட்டத்தின் கீழ் மாதச் சம்பளம் பெறும் மகளிருக்கு கூட்டுறவு வங்கிகள் வாயிலாக ரூ.1,00,000/– வரை கடன் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 9,089 மகளிருக்கு ரூ.19.77 கோடி அளவிற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. பேறுகாலத்தில் நிதி வசதியில்லாமல் இருக்கின்ற தாய்மார்களுக்கு உதவி செய்யும் முகமாக, தேவைப்படும் கர்ப்பிணிப் பெண்களுக்கு கூட்டுறவு வங்கிகள் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் ரூ.2,000/– வரை பேறுகாலக் கடன் 11 சதவிகித வட்டி விகிதத்தில் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுகாறும் 13,397 பெண்களுக்கு ரூ.2.90 கோடி பேறுகாலக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் மூலம் கிராமப்புற வீட்டு வசதிக் கடன் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மார்ச் 2004 முடிய 2,315 நபர்களுக்கு ரூ.28.98 கோடி அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின் மொத்த முதலீடு ரூ.4,478.32 இலட்சமாகும். இதில்

மாநில அரசின் உதவித் தொகை ரூ.422.19 இலட்சமாகும்.

★ கூட்டுறவுத் துறைக்கான இணையதளம் (Web site) ஏற்படுத்தப்பட்டுள்ளது.

★ கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் மூலம் இதுவரையில் ரூ.278.87 இலட்சம் மதிப்புள்ள கதர் கிராமப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

ஒட்டு மொத்த கடன் தீர்வுத் திட்டத்தில் (One Time Settlement Scheme) இதுவரையில் 24,138 நபர்கள் ரூ.124.70 கோடி அளவிற்குப் பயனடைந்துள்ளனர். தேசிய வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள 1,36,817 விவசாயிகளுக்கு மாநில அரசின் பங்கு ரூ.21.77 கோடியையும் சேர்த்து ஒட்டுமொத்தமாக ரூ.48.70 கோடி அளவிற்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

★ நியாயவிலைக் கடைகளின் மூலம் 6,012 மெ.டன் ஊட்டி தேயிலைத்தூள் விற்பனை செய்யப் பட்டுள்ளது.

★ 1,570 இனங்களில் ரூ.45.21 கோடிக்கு தண்ட வசூல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு 1,147 இனங்களில் ரூ.13.02 கோடி வசூல் செய்யப் பட்டுள்ளது.

★ **கடந்த மூன்றாண்டுகளில் கூட்டுறவு வங்கிகளால் குறுகியகால வேளாண்மை கடன், நடுத்தரகாலக் கடன், நீண்டகால வேளாண்மைக் கடன், நகைக் கடன், பண்ணை சாராக் கடன், வேளாண் விளைபொருள் ஈட்டுக் கடன், தொழில் முனைவோருக்கான கூட்டுறவுக் கடன்கள் மற்றும் வீடு கட்டக் கடன் ரூ.18,021.37 கோடி வழங்கப் பட்டுள்ளது.**

★ **கடந்த 25 ஆண்டுகளுக்குமேல் நடை முறையில் இருந்து வந்த நெல் மற்றும் அரிசி லெவி முறையை (100% levy system) மாற்றி சோதனைச் சாவடிகளை அகற்றியது இந்த அரசின் மாபெரும் சாதனையாகும்.**

★ இவ்வரசு, மக்களுக்குத் தரமான அரிசியை வழங்க வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையில் தேவைக்கேற்ப மைய அரசிடமிருந்து அரிசியைப் பெற்றுக் கொண்டும், விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டும் மாநிலத்திற்குள் நெல் கொள்முதல் செய்வதில் கண்ணும் கருத்துமாக உள்ளது. இதற்கேற்ப மைய அரசின் பரவலாக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தை (Decentralised procurement system) செயல்படுத்தி மைய அரசுக்காக நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்படுகின்றது.




★ நீலகிரி மாவட்ட சிறு தேயிலை விவசாயிகளின் துயர் தீர்க்கும் வகையில் நியாயவிலைக் கடைகள் மூலம் 100 கிராம் கொண்ட ஒரு பாக்கெட் தேயிலை ரூ.9 என்ற விலையில் மாதா மாதம் ஏறத்தாழ 300 டன் விற்பனை செய்யப்படுவது இந்த அரசின் ஒரு குறிப்பிடத்தக்க சாதனை ஆகும். மைய அரசின் விலை நிர்ணயப்படி, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மண்ணெண்ணெய் லிட்டர் ஒன்றுக்கு ரூ.9.00 முதல் ரூ.9.60 வரை விற்கப்பட வேண்டும். ஆனால் இவ்வரசு 9.3.2002 முதல் பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய் லிட்டர் ஒன்றுக்கு ரூ.8.40 முதல் ரூ.9.00 வரை மானிய விலையில் விற்பனை செய்ய ஆணையிட்டு செயல்படுத்தப்படுகிறது.

★ பல மாநிலங்களில், ஏழை எளியோருக்கு ஒரு கிலோ ரூபாய் 6 என்ற அடிப்படையிலும் மற்றவர்களுக்கு ரூபாய் 8 முதல் ரூபாய் 9 என்ற விலையில் அரிசி வழங்கப்படுகிறது. இந்த அரசு கடுமையான நிதிப் பற்றாக்குறையை எதிர்கொண்டு வந்தபோதும் **பாகுபாடின்றி அனைத்துக் குடும்பங்களுக்கும் உரிய அளவு அரிசியை ஒரு கிலோ ஒன்றுக்கு ரூபாய் 3.50 என்ற ஒரே விலையில் 1.9.2003 முதல் வழங்கி வருகின்றது.**

★ பொது விநியோகத் திட்டத்தில் கூப்பன் முறை கொள்முதலில் மைய அரசின் பரவலாக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தை கடைப்பிடித்தல், அரிசி விலையை சீரமைத்தல் போன்ற நடவடிக்கைகளால் அத்தியாவசியப் பொருள்களை கடத்துதல், பதுக்கல் போன்ற சமூக விரோத செயல்களுக்கு இடம் கொடுக்காமலும் உணவு மானியச் செலவை கட்டுப்படுத்தியும் அதே சமயத்தில் ஏழை எளிய மக்களின் நலனையும் இவ்வரசு பாதுகாத்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்க சாதனையாகும். ❖

# கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத்துறை

கால்நடை பராமரிப்பு மற்றும் வேளாண்மை ஆகிய இரு தொழில்களும் பழங்காலந் தொட்டே இந்திய கிராமப்புற பொருளாதார முன்னேற்றத்திற்கு இன்றியமையாத தொழில்கள் ஆகும். மக்கள் வாழ்கின்ற இருப்பிடத்திற்கு அருகிலேயே முழுநேர மற்றும் பகுதிநேரத் தொழிலாக இத்தொழில் அமைந்துள்ளது. மேலும் நிரந்தர வருவாயை அளிப்பதும், மனிதவள ஆதாரங்களை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வதும், கால்நடை வளர்ப்பின் சிறப்பாகும்.

## கால்நடை பாதுகாப்புத் திட்டங்கள்

★ டென்மார்க் நாட்டின் நிதியுதவியுடன் கூடிய கால்நடை வளர்ச்சித் திட்டம் 49 ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கி புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய 5 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 644 தொடர்பு பணியாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டு, இத்தொடர்பு பணியாளர்கள் 25,588 இலக்கு விவசாயிகளைப் பயிற்றுவித்துள்ளனர்.

★ இத்திட்டத்தின் வெற்றியைக் கண்டு, இத் திட்டத்தினைப் போன்றதொரு திட்டம் ஐந்தாண்டுகளில் எஞ்சியுள்ள 336 ஊராட்சி ஒன்றியங்களிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. 12 மாவட்டங்களில் உள்ள 145 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு, 3,326 தொடர்புப் பணியாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டு, இத்தொடர்புப் பணியாளர்கள் 66,520 இலக்கு விவசாயிகளைப் பயிற்றுவித்துள்ளனர்.

★ கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், கடந்த மூன்று ஆண்டுகளில் 14,237 முகாம்கள் நடத்தப்பட்டு 165.91 இலட்சம் கால்நடைகள் பயனடைந்துள்ளன.

★ மேற்குத் தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டம் 2001–2002இல் ரூ.30.41 இலட்சம் செலவிலும், 2002–2003இல் ரூ.45.79 இலட்சம் செலவிலும், 2003–2004ஆம் ஆண்டில் ரூ.46 இலட்சம் செலவிலும் செயல்படுத்தப்பட்டது.

★ மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் 2001–2002ஆம் ஆண்டில் ரூ.10.80 இலட்சம் செலவிலும், 2002–2003இல் ரூ.14.50 இலட்சம் செலவிலும், 2003–2004ஆம் ஆண்டில் ரூ.23.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டது.

★ 2003–2004ஆம் ஆண்டில் கால்நடை பராமரிப்புத் துறைக்கு வறட்சி நிவாரண பணிகளுக்கு உதவிட இயற்கை சீற்றம் நிவாரண நிதியிலிருந்து ரூ.2,000 இலட்சம் அரசு விடுவித்துள்ளது.

★ பசுந்தீவன உள்ளீடுகளை உற்பத்திச் செய்ய பெரிய பண்ணைகளுக்கு ரூ.388.326 இலட்சமும், சிறு பண்ணைகளுக்கு ரூ.56.57 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளது. கிராமங்களில் உள்ள புறம்போக்கு மேய்ச்சல் நிலங்களை மேம்படுத்தும் பொருட்டு, வேலிகள் மற்றும் நீர்ப்பாசனம் போன்றவைகள் ரூ.168.366 இலட்சம் செலவில் 2,725 ஏக்கர் மேம்படுத்தப்பட்டுள்ளது.

★ கால்நடைகளை கோமாரி நோயிலிருந்து காத்திட, ரூ.170 இலட்சம் செலவில் தடுப்பூசி பணி மேற் கொள்ளப்பட்டது.

★ வறட்சி பாதித்துள்ள 22 மாவட்டங்களில் உள்ள 313 ஊராட்சி ஒன்றியங்களில் 697 ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் 242 அதனைச் சார்ந்த பணிகள் ரூ.469.50 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

★ பால் உற்பத்தியைப் பெருக்க, 12 மாவட்டங்களில் உள்ள 800 பயனாளிகள் பயன்பெறும் வகையில் 800 எருமை கிடேரி கன்றுகள் மானியத்தில் ரூ.28 இலட்சம் செலவில் திட்டம் நிறைவேற்றப்பட்டது.



★ 11 மாவட்டங்களைச் சார்ந்த 150 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 750 பயனாளிகளுக்கு செம்மறியாடு அலகுகள், ரூ.45 இலட்சம் செலவில் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

★ 385 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 5,775 பயனாளிகளுக்கு, மானியத்துடன் சேவல் மற்றும் கோழிகள் வழங்கும் திட்டம் ரூ.34.65 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டது.

★ கடந்த மூன்று ஆண்டுகளில் 3 பன்முக மருத்துவ மனைகள் மற்றும் 156 கால்நடை மருந்தகங்கள் புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

★ 15 கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் செயல்படுகின்றன. 2 கோழி நோய் கண்டறியும் ஆய்வுக்கூடங்கள் மற்றும் 4 நடமாடும் ஆய்வுக்கூடங்கள் செயல்படுகின்றன.

★ கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.80 இலட்சத்துக்கு கோமாரி நோய் தடுப்பூசி கொள்முதல் செய்யப்பட்டு

ஏழை விவசாயிகளின் கால்நடைகளுக்கு போடப்பட்டுள்ளது. மேலும் செம்மறி ஆடுகளை குடற்புழு பாதிப்பிலிருந்து காக்கும் பொருட்டு ஆண்டுதோறும் ரூ.40 இலட்சம் செலவில் குடற்புழு நீக்க மருந்துகள் மூலம் குடற்புழு நீக்கம் செய்யப்படுகின்றன.

★ தமிழ்நாட்டில் பால் உற்பத்தி கடந்த பத்தாண்டுகளில் 35.24 இலட்சம் டன்னிலிருந்து 46.22 இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. முட்டை உற்பத்தி 2,919 மில்லியனிலிருந்து 3,622 மில்லியனாக அதிகரித்துள்ளது. இதே போல் ஒருவருக்கு ஒரு நாளைக்கு உட்கொள்ளும் பாலின் அளவானது 173 கிராமிலிருந்து 204 கிராமாகவும், ஒரு ஆண்டுக்கு உட்கொள்ளும் முட்டை எண்ணிக்கை 52லிருந்து 58ஆகவும் அதிகரித்துள்ளது.

## தமிழ்நாடு கால்நடை மருத்துவக் கல்லூரி நூற்றாண்டு விழா



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியானது தனது நூறாண்டு கால கல்விப் பணியினைச் செவ்வனே நிறைவேற்றியுள்ளது. இதன் நூற்றாண்டு விழா 6-7-2003 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. மேதகு இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர் திரு.பைரான் சிங் ஷெகாவத் அவர்கள், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவைத் தொடங்கி வைத்து நூற்றாண்டு அருங்காட்சியகத்தினைத் திறந்து வைத்தார்கள். மேதகு தமிழக ஆளுநர் திரு. பெ.ஸ்ரீ. ராமமோகன்ராவ் அவர்கள் நூற்றாண்டு விழா நினைவுத் தூணைத் திறந்து வைத்தார்கள்.

★ தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வேளாண் காடுகளுடன் கால்நடைகளை ஒருங்கிணைத்து வளர்க்கும் ஒரு ஆராய்ச்சித் திட்டம் செயல் படுத்தப்பட்டுள்ளது. இதன்படி 1,113 எக்டேர் தரிசு நிலப்பரப்பில் 5,235 வேளாண் குடிமக்கள் கால்நடை மற்றும் மீன் வளர்ப்பின் மூலம் பயனடைந்துள்ளனர்.

★ நம் நாட்டு வெள்ளாடுகளின் தரம் உயர்த்த ஆப்பிரிக்க போயர் இன ஆடுகளுடன் கலப்பினப் பெருக்கம் செய்து அதிக எடை கொண்ட கலப்பின ஆடுகளை உருவாக்கும் திட்டம் காட்டுப்பாக்கம் கால்நடை ஆராய்ச்சி நிலையத்தில் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

★ இப்பல்கலைக்கழகத்தின் லெப்டோஸ்பைரோ நோயறி ஆய்வகப் பிரிவானது அதன் தரமான சேவையைக் கருதி ISO 9001 தரச் சான்றிதழைப் பெற்றுள்ளது. 2003ஆம் ஆண்டின் சாதனைகளில் இது ஒரு மைல் கல்லாகும்.

★ கால்நடைப் பண்ணையாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு இரண்டு புதிய பிரிவுகள் முறையே தலைவாசலில் பறவையின நோய் ஆய்வகம் ஒன்றும், மேல்மருவத்தூரில் கால்நடை பல்கலைக்கழக ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் ஒன்றும் 2003இல் தொடங்கப்பட்டுள்ளது.

## விரிவாக்கக் கல்வித் திட்டங்கள்

★ தமிழகத்தில் கனடா நாட்டு சர்வதேச ஆராய்ச்சி மேம்பாட்டு நிதியுதவியுடன் மூன்று தொலைத் தொடர்பு தொழில்நுட்ப மையங்கள் (Tele Centres) வேலூர் மாவட்டம் சித்தேரியிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் குழுமணியிலும், மதுரை மாவட்டம் புதுதாமரைப்பட்டியிலும் இயங்கி வருகின்றன. இதன் மூலம் 6,831 பண்ணையாளர்கள் செய்தித் தொடர்பு மற்றும் தொலைத் தொடர்பு தொழில் நுட்பம் மூலம் பயனடைந்துள்ளனர்.

★ வேளாண் மற்றும் கூட்டுறவுத் துறையின் நிதியுதவியுடன் விவசாய தொலைபேசி மையம் ஒன்று விரிவாக்கக் கல்வி மையத்தில் 21.01.2004 அன்று தொடங்கப்பட்டுள்ளது. இதுவரை 58 கால்நடைப் பண்ணையாளர்களுக்கு கால்நடை பராமரிப்பு தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. இப்பயிற்சிகளின் மூலம் பண்ணையாளர்கள் 83,893 பேர் பயனடைந்துள்ளனர்.

## பால் கூட்டுறவுச் சங்கங்கள்

பால் பெருக்குத் துறையின் கட்டுப்பாட்டில் தமிழகத்தில் இயங்கும் அனைத்து 7,117 கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களும் இலாபத்தில் செயல்படுகின்றன. 2003-2004ஆம் ஆண்டில், 209 புதிய பால் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப் பட்டுள்ளன.

★ பால் பெருக்குத் துறையின் சீரிய நடவடிக்கை களினால் 2003-2004இல் 15 ஒன்றியங்கள் இலாபத்தில் செயல்பட்டு வருகின்றன.

★ மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் பால் விற்பனை கடந்த 2001ஆம் ஆண்டு நாளொன்றுக்கு 5.36 இலட்சம் லிட்டராக இருந்தது, தற்பொழுது மார்ச் 2004இல் நாளொன்றுக்கு 7.31 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது.

★ 2001ஆம் ஆண்டு இறுதியில் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் மூலம் விற்பனை செய்யப்பட்ட பால் உபபொருட்களின் மதிப்பு மாதம் ஒன்றுக்கு ரூ.100 இலட்சம் ஆகும். ஆனால் தற்பொழுது, பால் உபபொருட்கள் விற்பனை மூன்று மடங்கு வளர்ச்சியடைந்து மார்ச் 2004இல் ரூ.305.58 இலட்சம் அளவு பால் உபபொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

★ 2001ஆம் ஆண்டு இருந்த 226 பாலகங்களின் எண்ணிக்கை தற்பொழுது 2004இல் 420 என்ற இலக்கினை எட்டியுள்ளது. விற்பனை மையங்களின் எண்ணிக்கை 2001இல் 2,412 என்று இருந்தது தற்பொழுது 2004இல் 3,314ஆக உயர்ந்துள்ளது.

★ திருச்சி மாவட்டம், மணப்பாறை நகரத்தில் நாளொன்றிற்கு 50,000 லிட்டர் கையாளும் திறனுடன் பால் குளிரூட்டும் நிலையம் ரூ.42 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

★ "பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பில் உதவி" என்ற திட்டத்தின்கீழ் 2002–2003 மற்றும் 2003–2004 நிதி ஆண்டில் 110 பெண்கள் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு அவற்றில் 7,688 சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த பெண்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

★ "கூட்டுறவுகளுக்கு உதவி" என்ற மத்திய, மாநில அரசு திட்டத்தின்கீழ் ரூ.13 கோடி ஈரோடு மற்றும் விழுப்புரம் ஒன்றியங்களுக்கு மானியமாக வழங்கப்பட்டது. அரசின் சீரிய நடவடிக்கைகளினால் முதல் ஆண்டின் முடிவில் ஈரோடு ரூ.42 இலட்சமும், விழுப்புரம் ரூ.106.42 இலட்சமும் இலாபம் பெற்றுள்ளன.

★ இணையம் 2001–2002இல் ரூ.0.34 கோடியும், 2002–2003இல் ரூ.16.46 கோடியும், 2003–2004இல் ரூ.17.21 கோடியும் இலாபம் ஈட்டியுள்ளது.

★ 2002–2003ஆம் ஆண்டில் சராசரியாக நாளொன்றிற்கு 6.54 இலட்சம் லிட்டராக இருந்த சென்னை மாநகர பால் விற்பனை தற்சமயம் 7.42 இலட்சம் லிட்டர்களாக மார்ச் 2004இல் உயர்ந்துள்ளது.

★ கடந்த காலங்களில், ஆண்டிற்கு சராசரியாக 2,647 டன் பால்பொடி விற்பனை செய்யப்பட்டு வந்தது. இது கடந்த இரண்டு ஆண்டுகளில் உயர்ந்து ஆண்டிற்கு சராசரியாக 9,127 டன்கள் விற்பனை ஆகியுள்ளது. நடப்பு நிதி ஆண்டில் மார்ச் 2004 வரை 9,632 டன் பால்பொடி விற்பனை யாகியுள்ளது.

★ கடந்த இரண்டு ஆண்டுகளில் நெய் விற்பனை ஆண்டிற்கு சராசரியாக 6,477 டன்களும், நடப்பு ஆண்டு மார்ச் 2004 வரை 6,229.8 டன்களும் விற்கப்பட்டுள்ளன.

★ ஆவின் வரலாற்றில் முதன்முறையாக திருமலை – திருப்பதி தேவஸ்தானத்திற்கு ரூ.15 கோடி மதிப்புள்ள 1,350 டன் நெய் விற்பனை செய்ய அனுமதி கிடைத்துள்ளது.

★ நுகர்வோர்களின் குறைகளை உடனுக்குடன் தீர்க்க "நுகர்வோர் நலன் மற்றும் பாதுகாப்புக் குழு" 24 மணி நேரமும் செயல்பட்டு வருகின்றது. இதனைத் தொடர்பு கொள்ள இலவச போன் வசதி, மின் அஞ்சல், இணையதளம், வலைத்தொடர்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆவின் மின்னணு நிருவாகம் (www.Aavin.net) இணைய தளம் (www.Aavinmilk.com) மூலமாக உலக அளவில் தகவல்கள் திரட்டி நடவடிக்கை எடுத்து வருகின்றது.

★ கடந்த சில மாதங்களில் 2,800 டன் பால் உப பொருட்களை புதுதில்லி பால் பண்ணைக்கு வழங்கி அகில இந்திய அளவில் பால்வளத்துறை சாதனை புரிந்துள்ளது.




இந்தியக் கடற்கரை நீளம் 8,129 கி.மீ. அதில் 1,076 கி.மீ. தமிழக கடற்கரை நீளம் ஆகும். 591 மீனவர் கிராமங்கள் தமிழக கடலோரப் பகுதிகளில் உள்ளன. தமிழகத்தின் அண்மைக் கடலில் 4.62 இலட்சம் மெட்ரிக் கடல் மீன்வள ஆதாரங்கள் கிடைக்கும் அளவு உள்ளது. தமிழ்நாட்டின் மீன் உற்பத்தியை அதிகரிக்கவும், கடலோரப் பகுதிகளில் வாழும் ஏழை மீனவர்களின் முன்னேற்றத்தையும் குறிக்கோளாகக் கொண்டு, தமிழக அரசு பல திட்டங்களைத் தீட்டியுள்ளது.

★ 2001–2002ஆம் ஆண்டு மத்திய அரசு திட்டத்தின் கீழ் 2,000 வீடுகள், 90 ஆழ்துளைக் கிணறுகள், 4 சமுதாயக் கூடங்கள் கட்ட மொத்தம் ரூ.834 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மாநில அரசின் திட்டத்தின்கீழ் 1,500 வீடுகள் கடல் மீனவர்களுக்கும், 500 வீடுகள் உள்நாட்டு மீனவர்களுக்கும் கட்டித்தர அரசு ரூ.740 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், நடப்பு நிதியாண்டில் 4,000 வீடுகள் கடல் மீனவர்களுக்கு கட்டித் தருவதற்காக அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. விரைவில் கட்டுமானப் பணி மேற்கொள்ளப்படும். நிதி ஒதுக்கீடு ரூ.15.4 கோடி.

★ சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் 2001–2002இல் 1,19,849 பயனாளிகளுக்கு ரூ.15,27,26,200/–ம், 2002–2003இல் 1,92,922 பயனாளிகளுக்கு ரூ.22,51,54,950/–ம், 2003–2004இல் 1,18,649 (மீனவர்) பயனாளிகளுக்கு ரூ.13,59,95,550/–ம், (31.10.2003 முடிய), 29,866

(மீனவ மகளிர்) ரூ.1,70,76,500–ம் (31.10.2003) முடிய வழங்கப்பட்டது.

★ நடப்பு ஆண்டில் முதன்முறையாக இத்திட்டம் மீனவ மகளிருக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மீனவர் குழு காப்புறுதித் திட்டத்தில் 2001–2004 ஆண்டுகளில் 515 பயனாளிகளுக்கு ரூ.2,20,12,500 வழங்கப் பட்டுள்ளது. மீனவர் தனி நபர் விபத்துக் காப்புறுதித் திட்டத்தில் 2001–2004ஆம் ஆண்டுகளில் 116 பயனாளிகளுக்கு ரூ.102.54 இலட்சம் வழங்கப்பட்டது. வெளி பொருத்தும் / உட் பொருத்தும் இயந்திரங்கள் வாங்க மானியம் வழங்குதல் திட்டத்தில் 2002–2003இல் உட்/வெளி பொருத்தும் இயந்திரம் 731ம், 2003–2004இல் உட்/வெளி பொருத்தும் இயந்திரம் 2,168ம், வலைகள் 173ம் ரூ.234.50 இலட்சம் செலவில் வழங்கப்பட்டது.

★ தமிழகத்தில் 10 இடங்களில் மீன் இறங்கும் தளங்கள் ரூ.113.23 கோடி செலவில் கட்டுவதற்காக அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

★ பழவேற்காடு முகத்துவாரம் 2002–2003இல் அரசால் ரூ.30 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு ரூ.18.42 இலட்சம் செலவில் தூர்வாரப்பட்டது.

★ நீலாங்கரை, கடலூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி, பட்டுக்கோட்டை ஆகிய ஐந்து இடங்களில் மீனவர் அங்காடிகள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

★ கோவளம், கீச்சான்குப்பம், தருவைக்குளம், இடிந்தகரை ஆகிய 4 இடங்களில் கட்டுமானப் பணி முடிக்கப்பட்டுள்ளது.

★ மீனவ மகளிருக்கு கூட்டுறவுத் துறை, மத்திய அரசின் பணியாளர் கல்வி நிறுவனம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்ட அலுவலகம் மற்றும் கால்நடை ஆராய்ச்சி பல்கலைக்கழகம் மூலமாக விரிவாக்கம் மற்றும் பயிற்சியாக மீனவர்களுக்கு நவீன மீன்பிடி முறைகள், பொருத்துநர் பயிற்சி மாதம் ரூ.200 உதவித் தொகையுடன் அளிக்கப்பட்டது.


★ உள்நாட்டு மீனவர்கள் பயனடையும் வகையில் ரூ.15.50 இலட்சம் செலவில் 3 மானியத் திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் அளிக்கப்பட்டு உதவி வழங்கப்பட்டுள்ளது.

★ உள்நாட்டு மீனவர்களுக்கு 500 இலவச வீடுகள் கட்டித்தர அரசு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

★ 2001–2002ஆம் ஆண்டில் பகுதி–2 திட்டத்தில் 57 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை சார்ந்த 1,308 மீனவர்களுக்கு ரூ.571.55 இலட்சம் மதிப்பில் 536 மீனவர்களுக்கு மீன் இடு பொருள்களை 25 சதவிகிதம் மானியத்துடன் வழங்கப்பட்டது.

★ 2003–2004இல் ஒருங்கிணைந்த கடல்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தூத்துக்குடி, தஞ்சாவூர், இராமநாதபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 6 மீனவ கிராமங்களுக்கு ரூ.36.96 இலட்சத்தில் 113 மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு மீன் இடுபொருள்கள் மீன்வள கூட்டுறவு இணையத்தின் மூலமாக வழங்கப்பட்டது.

★ கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 679 இறால் பண்ணைகளுக்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது.



**தமிழ்நாட்டில் மீன்வளத்தினை பெருக்கிடவும், மீனவர்களது சமூகப் பொருளாதார நிலையை உயர்த்திடவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 18.7.2002 அன்று இராமநாதபுரத்தில் மீன்வள மேம்பாட்டு இயக்கத்தினை தொடங்கி வைத்தார்கள்.**

★ மீன்வள மேம்பாட்டு இயக்கத் திட்டத்தின்கீழ் அண்மைக்கடல் பகுதியில் மீனவளத்தைப் பெருக்கும் நோக்கத்துடன் வேதாளை, புன்னக்காயல், பரங்கிப்பேட்டை, சின்னமனை மற்றும் தேத்தாக்குடி கடற்கரைப் பகுதிகளில் வளர்த்தெடுக்கப்பட்ட இறால் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டது. கடலோர பாரம்பரிய மீனவர்கள் பயனடையும் வகையில் இதுவரை 2 மில்லியன் கருப்பு இறால் குஞ்சுகள் அடைப்பான்களில் வளர்க்கப்பட்டு கடலோரப் பகுதிகளில் இருப்பு செய்யப்பட்டது. இதன்மூலம் கடலோரப் பகுதிகளில் மீன்வளம் பெருக வாய்ப்புள்ளது.

★ தமிழகத்தில் 2002–ஆம் ஆண்டு முதல் மத்திய மற்றும் மாநில அரசின் விரிவாக்கம் மற்றும் பயிற்சித் திட்டத்தின்கீழ் மீன்வளத் துறையின் மூலம் 420 மீன்/ இறால் வளர்ப்போருக்கு மீன் வளர்த்தலில் தொழில் நுட்ப மேம்பாட்டினை அடைய பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.

★ ★ ★

# அடித்தள மக்களை அரவணைக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழ்வு வளம்பெற, அவர்கள் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் பெறவேண்டும் என்ற சீரிய நோக்குடன் தமிழக அரசு கடந்த 3 ஆண்டு காலமாக பல்வேறு திட்டங்களைத் தீட்டி முனைப்புடன் செயல்படுத்தி வருகின்றது.

கல்வி உதவி

கல்விக்கடன் உதவித்தொகைத் திட்டம் 2002–2003ஆம் ஆண்டு முதல் உயர்கல்வி சிறப்பு உதவித்தொகைத் திட்டமாகச் செயல்பட்டு வருகிறது. இதற்காகப் பட்டப்படிப்பிற்கு ரூ.6,500, பட்ட மேற்படிப்பு மற்றும் தொழில் கல்வி படிப்புக்கு ரூ.7,000 வழங்கப்பட்டு வருகிறது.



மருத்துவக் கல்விக்கு மட்டும் 25% கல்விக் கடனும் 75% மானியமும், மற்ற படிப்புகளுக்கு முழு மானியமும் வழங்கப்படுகிறது. 2002–2003ஆம் ஆண்டில் ரூ.451.35 இலட்சத்தில் 6,686 மாணவ/மாணவியர்களும், 2003–2004ஆம் ஆண்டில் ரூ.644.87 இலட்சத்தில் 9,553 மாணவ/மாணவியர்களும் பயனடைந்தனர்.

2001–2002ஆம் ஆண்டு வரை நிலுவையில் இருந்த கல்விக் கடன் உதவித்தொகை விண்ணப்பங்களுக்காக ரூ.476 இலட்சம் நிதி ஒதுக்கீடு, 2002–2003ஆம் ஆண்டின் இறுதி திருத்திய மதிப்பீட்டில் வழங்கப்பட்டது. இதில் ரூ.385 இலட்சம் செலவிடப்பட்டு 5,737 மாணவ/மாணவியர் பயனடைந்துள்ளனர்.

2001–2002ஆம் ஆண்டில் முதுகலை பட்டப்படிப்பு வரை ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவியர்களுக்கு இலவச கல்வித் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடு சென்று மேல் கல்வி பயில நிதி பெற 2002–2003 முதல் புதிய விதிமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி பட்ட மேற்படிப்பு, ஆராய்ச்சிப் படிப்பு மற்றும் மருத்துவத் துறையில் குறிப்பாக அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் படிப்புகளுக்கு இத்திட்டத்தைச் செயல்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது.

இலவச மிதிவண்டி வழங்குதல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2001–2002ஆம் ஆண்டில் 11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், மதம் மாறிய ஆதிதிராவிடர் கிறித்துவ மாணவியர்களுக்கு இலவச மிதிவண்டி வழங்கும் திட்டத்தை அறிவித்துள்ளார்கள்.

2001--2002ஆம் ஆண்டில் ரூ.7.69 கோடி செலவில் 56,525 இலவச மிதிவண்டிகளும், 2002–2003ஆம் ஆண்டில் ரூ.6.91 கோடி செலவில் 47,501 மிதிவண்டி களும், 2003–2004ஆம் ஆண்டில் ரூ.8 கோடி செலவில் 48,040 மிதிவண்டி களும், வழங்கப்பட்டுள்ளன.

இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்

- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின்கீழ் 2001–2002ஆம் நிதியாண்டில் ரூ.396.77 இலட்சம் செலவில் 17,240 பயனாளிகளுக்கும், 2002–2003 ஆம் நிதியாண்டில் 11,600 பயனாளிகளுக்கும் ரூ.291.55 இலட்சம் செலவில் இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. 2003–2004 ஆம் ஆண்டில் ரூ.393.50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 12,878 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு. ரூ.381.41 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.
- ஆதிதிராவிடர்களுக்கான மயானம் மற்றும் மயானப்பாதை அமைத்திட 2001–2002ஆம் நிதியாண்டில்ரூ.74.78 இலட்சம் செலவில் மயானம் மற்றும் மயானப் பாதைக்காக நில எடுப்பு செய்யப்பட்டது. 2002–2003ஆம் நிதியாண்டில் ரூ.74 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.44 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2003–2004இல் ரூ.56.50 இலட்சம் இத்திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.46.04 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.
- ஆதிதிராவிடர் மக்களின் வாழ்க்கைத்தரம் முன்னேற பாடுபட்டு வரும் நபர் ஒருவருக்கு, ஒவ்வொரு ஆண்டும் தமிழக அரசால் 'டாக்டர் அம்பேத்கர்' விருது வழங்கப்படுகிறது. இவ்விருது பெறும் நபருக்கு ரூபாய் ஒரு இலட்சத்திற்கான காசோலையும், ஒரு சவரன் தங்கப்பதக்கமும், தகுதியுரை ஒன்றும் வழங்கப்படுகிறது.
- ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் இந்திரா அவாஸ் யோஜனா (இந்திரா நினைவு குடியிருப்பு) திட்டத்தின் கீழ் 2001–2002இல் ரூ.3,141 இலட்சம் செலவில் 36,134 வீடுகளும், 2002–2003இல் ரூ.2,268.48 இலட்சம் செலவில் 18,904 புதிய வீடுகளும் மற்றும் 11,604 கச்சா வீடுகளும் ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்டன.
- கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்ட ஒவ்வொரு தொழிலாளருக்கும் உடனடி நிவாரணம் ரூ.1,000மும், மறுவாழ்வு உதவித்தொகையாக ரூ.19,000மும் வழங்கப்படுகிறது.மேலும் இவர்களுக்குச் சுயவேலை வாய்ப்பும் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகிறது.



விடுதிகள்

2001–2002ஆம் ஆண்டில் 8 மாணவர் விடுதிகளும், 2 மாணவியர் விடுதிகளும் ரூ.315 இலட்சம் மதிப்பில் கட்ட எடுத்துக்கொள்ளப்பட்டது. தற்பொழுது, வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் விடுதிகளுக்குப் படிப்படியாக சொந்தக் கட்டடங்கள் கட்டித் தர அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, 2001–2002ஆம் ஆண்டில் ஹட்கோ நிறுவனம் மூலம் கடனுதவி பெற்று 143 விடுதிகள் கட்ட தாட்கோ நிறுவனத்திற்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 2002–2003ஆம் ஆண்டிற்கு மத்திய அரசின் 50:50 திட்டத்தின் கீழ் 9 மாணவர் மற்றும் 4 மாணவியர் விடுதிகள் கட்ட மத்திய அரசு பங்குத் தொகையாக ரூ.204.75 இலட்சமும், மாநில அரசு பங்குத் தொகையாக ரூ.204.75 இலட்சத்தை தாட்கோ சேமிப்பிலிருந்து செலவிடவும் ஆணையிடப்பட்டுள்ளது. 2003–2004ஆம் ஆண்டிற்கு 150 விடுதிகள் கட்ட சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியாக ரூ.590 இலட்சத்துடன் மாநில அரசின் நிதி ஒதுக்கீடான ரூ.4,135 இலட்சமும் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் 2003–2004ஆம் ஆண்டில் 50:50 திட்டத்தின் கீழ் 13 மாணவர் மற்றும் 24 மாணவியர் விடுதிகளும் கட்ட மத்திய அரசு பங்குத் தொகையாக ரூ.582.75 இலட்சமும், மாநில அரசு பங்குத் தொகையாக ரூ.582.75 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம்

தீண்டாமையை ஒழிக்கும் வகையில், 2001–2002இல் ரூ.84,000–ம், 2002–2003ஆம் ஆண்டில் ரூ.2,51,000–ம், 2003–2004ல் ரூ.1,42,100-செலவில், வில்லுப்பாட்டு, கலைநிகழ்ச்சிகள் மூலம் தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம் செய்யப்பட்டது. மேலும் 2003–2004ஆம் ஆண்டில் சமபந்தி போஜன திட்டத்திற்காக ரூ.53 ஆயிரம் செலவிடப்பட்டுள்ளது. சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளியைத் தலைமை இடமாகக் கொண்டு இரண்டு விளம்பரப் பிரிவுகள் மூலம் தீண்டாமை ஒழிப்பு குறித்து திரைப்படங்கள் மூலம் விளக்கப்பட்டு வருகிறது.

பழங்குடியினர் நலத்துறை

- விழுப்புரம் மாவட்டம் வெள்ளிமலையில் பழங்குடியினர் மாதிரி உண்டி உறைவிட மேல்நிலைப்பள்ளி ரூ.2.95 கோடியில் தொடங்கப்பட்டுள்ளது.
- கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு ரூ.49.54 இலட்சம் மதிப்பில் சூரிய சக்தி மின் வசதிகள் செய்யப்பட்டுள்ளது. கோவை மாவட்டம் தோலம்பாளையம் முதல் கோப்பனேரி வரை ரூ. 310 இலட்சம் மதிப்பில் சாலை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ரூ.150 இலட்சம் மதிப்பில் மாணவ/மாணவியர் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. நீலகிரி மாவட்டத்தில் ரூ.25 இலட்சம் மதிப்பில் பணியர் பண்ணை வீடுகள் கட்டித்தரப் பட்டுள்ளன.
- ரூ.63 இலட்சம் செலவில் பழங்குடியினர்களுக்கு வீடுகள் மற்றும் மின்வசதி செய்து தரப்பட்டுள்ளன. ரூ.239.77 இலட்சம் செலவில் பழங்குடியினருக்கு சாலை வசதி மற்றும் மின்சார வசதியும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. ரூ.70 இலட்சம் மதிப்பில் நாமக்கல் மாவட்டம் முள்ளுக்குறிச்சி முதல் நரியங்காடு வரை சாலை வசதி செய்து தரப்பட்டுள்ளது.
- உதகை பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தில் ரூ.120 இலட்சம் மதிப்பில் ஒரு அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. கோவை மாவட்டத்தில் ரூ.70 இலட்சம் மதிப்பில் ஐந்து இணைப்பு சாலை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளது.

தாட்கோ

தாட்கோ மூலம் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் 2001–2002இல் 48,675 நபர்கள் பயன்பெற்றுள்ளனர். மானியமாக ரூ.26.95 கோடியும், விளிம்புத் தொகையாக ரூ.10.30 கோடியும், வங்கிக் கடன் மற்றும் பருவக்கடன் தொகையாக ரூ.40.98 கோடியும் மொத்தம் ரூ.78.23 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

2002–2003 நிதியாண்டில் 1,22,334 ஆதிதிராவிட மக்கள் பயன்பெறும் வகையில் ஆண்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதில் 45,789 பயனாளிகளுக்கு ரூ.19.16 கோடி மானியத்துடன் வங்கிகள் மூலம் ரூ.40.75 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. 13,920 படித்த இளைஞர்களுக்கு ரூ.17.76 கோடி செலவில் வேலை வாய்ப்புகள் பெறும் தொழில் பயிற்சிகள் வழங்கப் பட்டுள்ளன. 36,524 மகளிர்களுக்கு சுயஉதவிக் குழுக்கள் மூலம் ரூ.1.52 கோடி செலவில் தொழில் முனைவோர் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

மத்திய சிறப்பு நிதியிலிருந்து ரூ.8 கோடி செலவில் ஆதிதிராவிடக் குடியிருப்புகளில் அடிப்படைக் கட்டமைப்பு ஏற்படுத்த 15,000 நபர்கள் பயன்பெறும் வகையில் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தாட்கோ பொறியியல் பிரிவு மூலம் விடுதி கட்டடப் பணிகள் ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்கள் பயன்பெறும் வகையில் 2002இல் 153 விடுதிகளும், 2003இல் 13 விடுதிகளும் கட்ட அரசு ஆணை பிறப்பித்துள்ளது. ❖



# போக்குவரத்துத்துறை

ஒரு நாட்டின் வளர்ச்சி அதன் போக்குவரத்து அமைப்பினை ஒட்டியே அமையும். மக்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் பொருளாதார வளர்ச்சி ஏற்றம் பெறுவதற்கு, போக்குவரத்துத்துறை முக்கிய பங்கு வகிக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் முனைப்பான செயல்திறனால் தமிழக போக்குவரத்துத்துறை தன்னிகரில்லா திறனைப் பெற்று, தமிழகத்தின் வளர்ச்சிக்கு வழிவகுத்துள்ளது.

**போக்குவரத்துக் கழகங்கள் ஒருங்கிணைப்பு**

- ★ தமிழ்நாட்டில் ஏற்கெனவே இயங்கி வந்த 21 போக்குவரத்துக் கழகங்களை 7 கழகங்களாக ஒருங்கிணைப்பதன் மூலம் அவைகளின் இயக்கத் திறன் மேம்பட்டும், கட்டமைப்புகளை நல்ல முறையில் பயன்படுத்தி நிருவாகச் செலவினங்களைக் குறைப் பதற்கும் மற்றும் போக்குவரத்து கழகங்களிடையே ஏற்படும் போட்டி மனப்பான்மை தவிர்க்கும் பொருட்டும், முதல் கட்டமாக மாநகர் போக்குவரத்துக் கழகம் கோட்டம் 1 மற்றும் 2, அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் கோட்டம் 1 மற்றும் 2, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கோவை மற்றும் உதகை கழகங்கள் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளன. மீதமுள்ள 16 போக்குவரத்துக் கழகங்களை 5 கழகங்களாக ஜனவரி 2004 முதல் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது ஏழு போக்குவரத்துக் கழகங்கள் மட்டும் இயங்கி வருகின்றன.
- ★ போக்குவரத்து கழகங்களினால் கடந்த மூன்று ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பேருந்துகள் – 2,138.
- ★ 2003–04ஆம் ஆண்டில் மாநகர போக்குவரத்துக் கழகத்தில் 10 தாழ்வுதள பேருந்துகள் முதியோர்கள் மற்றும் சிறுவர்கள் சிரமமின்றி ஏறுவதற்கு வசதியாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- ★ பேருந்துகளின் கட்டமைப்பை மேம்படுத்துதல், பேருந்துகளின் தொழில்நுட்ப குறைகளை நிவர்த்தி செய்தல், பேருந்து தடத்தில் பழுதாகி நின்றுவிடாமல் இருப்பதற்காக பராமரிப்புப் பணியை மேம்படுத்துதல், பயணிகள் பாதுகாப்பு மற்றும் விபத்துகளை குறைப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தல், ஓட்டுநர் மற்றும் நடத்துநர்கள் பொதுமக்களிடையே நல்லுறவை வளர்ப்பதன் அவசியத்தை உணர்த்துதல், பேருந்து தடங்களில் பரிசோதனை முடுக்கி விடப்பட்டு பயணச்சீட்டு இல்லாமல் பயணம் செய்யும் பயணிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல், சகோதர போக்குவரத்துக் கழகங்களிடையே பயணச்சீட்டு பரிசோதனை செய்யும் முறை அமல்படுத்தப் பட்டு, வருவாய் அதிகரிக்க வழிவகை செய்தல் ஆகிய நடவடிக்கைகளின் காரணமாக பேருந்து இயக்கத்திறன் மேம்பட்டு, பேருந்துகளின் தோற்றம் மேம்படுத்தப்பட்டு வருவாய் அதிகரிப்பதற்கும் ஏதுவாக உள்ளது.
- ★ தமிழ்நாட்டில் உள்ள அனைத்து போக்குவரத்துக் கழகங்களும், சீரிய கவனம் செலுத்தி, சென்னை உயர்நீதிமன்றத்தில் பல ஆண்டுகளாக நிலுவையில் இருந்த விபத்து இழப்பீட்டு வழக்குகள், மக்கள் நீதிமன்றம் முன் கொண்டுவந்து உரிய நேரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயமான இழப்பீட்டை வழங்கி தீர்வு செய்ததன் காரணமாக, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உரிய நிவாரணம் கிடைத்ததுடன், உரிய தருணத்தில் கிடைக்கப் பெற்றமையால் சமூக நீதி வழங்க ஏதுவாகவுள்ளது.
- ★ அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் மழை நீர் சேகரிப்பு திட்டத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு, போக்குவரத்துக் கழகங்களுக்கு சொந்தமான 470 கட்டடங்களிலும் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- ★ அகில இந்திய அளவில் எரிபொருள் (டீசல்) சிக்கனத்திற்கான முதலிடத்தை 2001–02ஆம் ஆண்டிலும், இரண்டாம் இடத்தை 2002–03ஆம் ஆண்டிலும் முன்னாள் திருநெல்வேலி அரசுப் போக்குவரத்துக் கழகம் தொடர்ந்து பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.
- ★ 2001–02ஆம் ஆண்டிற்கு முன்னாள் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சேலத்திற்கு அகில இந்திய அளவில் மசகு எண்ணெய் பயன்பாட்டில் சேமிப்பிற்கான விருது பெற்றுள்ளது.
- ★ 2001–02ஆம் ஆண்டிற்கு அரசு விரைவு போக்குவரத்துக் கழகம், அகில இந்திய அளவில் நாள் ஒன்றிற்கு அதிக கி.மீ இயக்கத்திற்கான விருது பெற்றுள்ளது.
- ★ தமிழக போக்குவரத்துக் கழகங்களின் உதவி யுடனும் போதிய அளவில் சிறப்புப் பேருந்துகள்




விடப்பட்டு கும்பகோணம் மகாமகம் விழா சீரும் சிறப்புமாக நடைபெற்றது. பொதுமக்கள், பத்திரிக்கைகளின் பாராட்டுகளை பெருமளவில் பெற்றுத்தந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

★ இயக்கத்தின் வருவாயை அதிகரிக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டும் முந்தைய ஆண்டுகளில் கிடைக்கப்பெற்ற வருவாயை விட, 2003–2004 ஆம் ஆண்டில் தமிழகப் போக்குவரத்துக் கழகங்கள் ரூ.120.17 கோடி வருவாயை கூடுதலாக ஈட்டியுள்ளன.

★ 2002–2003 ஆம் ஆண்டில் ஒரு லிட்டர் உயர்வேக டீசல் மற்றும் மசகு எண்ணெய் பயன்படுத்தப்பட்டு ஓடிய 4.37 கிலோ மீட்டர் தூரம் 2003–2004 ஆம் ஆண்டில் 4.45 கிலோ மீட்டராக அதிகரிக்கப் பட்டுள்ளது. எண்ணெய்க் கம்பெனிகள் உயர்வேக டீசலின் விலையை அடிக்கடி திருத்தி அமைத்ததாலும், கிலோ மீட்டர் இயக்கம் அதிகரித்ததாலும் பயன்பாட்டு மதிப்பு ரூ.125.93 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. ஒரு லிட்டரின் உபயோகத்தில் கிலோ மீட்டரின் அளவு அதிகரித்ததினால் 2003–2004 ஆம் ஆண்டில் ஏறக்குறைய ரூ.23.15 கோடி வரை சேமிப்பு கிடைக்கப்பெற்றது. இன்ஜின் ஆயில் / 10,000 கிலோ மீட்டர் இயக்கத்திற்கு நடப்பு ஆண்டில் 11.09 லிட்டரிலிருந்து 9.58 லிட்டராக குறைந்துள்ளது.

★ 15,316 பேருந்துகளும், 1,348 மாற்றுப் பேருந்துகளும் தமிழக போக்குவரத்துக் கழகங்களில் உள்ளன. 2003–2004ஆம் ஆண்டில் தமிழக போக்குவரத்துக் கழகங்கள் 233.24 கோடி கிலோ மீட்டர் தூரத்திற்கு பேருந்துகளை இயக்கியுள்ளன. இது முந்தைய ஆண்டுகளை விட 3.87 கோடி கிலோ மீட்டர் அதிகமாகும். 2002–2003 ஆம் ஆண்டு கிலோ மீட்டரின் இயக்கத்திறன் 100.88 சதவிகிதமாக இருந்தது, 2003–2004ஆம் ஆண்டில் 101.74 சதவிகிதமாக உயர்த்தப்பட்டது.

★ 2003–2004ஆம் ஆண்டில் பயணம் செய்தவர்களின் எண்ணிக்கை 58,522 இலட்சமாக உயர்ந்துள்ளது.

★ பயணிகளின் வசதிக்காக போக்குவரத்து இணையதளம் ஒன்று அண்மையில் திறக்கப்பட்டு செயல்படத் தொடங்கியுள்ளது. •

# பொதுப்பணித்துறை

★ உலக வங்கி நிதி உதவியுடன் அடிப்படை மதிப்பு ரூ.807.49 கோடிக்கு நீர்வள ஆதார தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் திருத்திய மதிப்பு ரூ.1126 கோடி.

★ வடசென்னையிலுள்ள எண்ணூர் துரித வழி தடத்தில் 2.38 கி.மீ. நீளத்திற்கு ரூ.10.57 கோடி மதிப்பில் கடலரிப்பு தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நிறைவடைந்து உள்ளன.

★ அரசு ரூ.124 கோடி மதிப்பிற்கு சென்னை குடிநீர் வழங்கல் அதிகப்படுத்தும் திட்டம் 2ன் கீழ் திருத்திய ஆட்சி ஒப்புதல் வழங்கியுள்ளது.

★ பொதுப்பணித்துறையின் கட்டட அமைப்பானது பல்வேறு அரசுத் துறைகளுக்காக பொதுமக்கள் பயன்பாட்டுக்குரிய கட்டடங்கள் கட்டுதல் மற்றும் அவற்றைப் பராமரித்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகிறது.

★ 2001–2002ஆம் ஆண்டில் ரூ.2,245 இலட்சம் மதிப்பிலும், 2002–2003ஆம் ஆண்டில் ரூ.2,328 இலட்சம் மதிப்பிலும், 2003–2004ஆம் ஆண்டில் ரூ.21,887 இலட்சம் மதிப்பிலும் "பெரும் பணிகள்" செய்து முடிக்கப்பட்டுள்ளன.

இவற்றில், சென்னை பசுமை வழிச் சாலையில் 30 நீதிபதிகள் மாளிகைகள், சென்னை அரசினர் தோட்ட வளாகத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்திற்கு நிர்வாகப் பிரிவு வளாகம், சென்னையில், மத்திய கிடங்கு அலுவலகம், தூத்துக்குடியில் மருத்துவக் கல்லூரி, சென்னையில் கண்ணியமிகு காயிதே மில்லத் அவர்களுக்கு மணிமண்டபம் மற்றும் நூலகக் கட்டடம், சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவ மனையில் கை சீரமைப்பு ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சைக்கான புதிய கட்டடம், 200 சுகாதார மையங்கள், மதுரையில் உயர்நீதிமன்ற கட்டடம், 34 இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் ஆகிய கட்டடப்பணிகளும், தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் அரங்கம், சென்னை, டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவகத்தில் அருங்காட்சியகம் அமைக்கும் பணி, 221 தொகுதிகளில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல், புதுதில்லி தமிழ்நாடு இல்லத்திற்கு, கூடுதல் விருந்தினர் மாளிகை மற்றும் பணியாளர் குடியிருப்புகள் கட்டுதல் ஆகியவை உள்பட பல பணிகள் முடிக்கப்பட்டன.

• • •

# வருவாய்த்துறை



அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிக் கொண்டிருக்கும் பல துறைகளில் மக்களின் நேரடி தொடர்புக்குட்பட்ட இன்றியமையாத துறையாக வருவாய்த்துறை உள்ளது.

- மனுநீதித் திட்டத்தின்கீழ் சென்ற 4.5.2001 முதல் 31.3.2004 வரை 5,97,256 மனுக்கள் பெறப்பட்டு 2,63,101 மனுக்களில் உள்ள கோரிக்கைகள் ஏற்கப்பட்டன. 2,14,465 மனுக்களில் உள்ள கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன. ஆக மொத்தம் 4,77,566 மனுக்கள் முடிவு செய்யப்பட்டன. நிலுவையில் உள்ள 1,19,690 மனுக்கள் ஆய்வில் உள்ளன.

- மக்கள் குறை தீர்க்கும் நாள் திட்டத்தின்கீழ் 2001ஆம் ஆண்டு முதல் 31.3.2004 வரை 9,52,936 மனுக்கள் பெறப்பட்டு 4,09,919 மனுக்களில் உள்ள கோரிக்கைகள் ஏற்கப்பட்டன. 3,75,453 மனுக்களில் உள்ள கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன. ஆக மொத்தம் 7,85,372 மனுக்கள் முடிவு செய்யப்பட்டன. நிலுவையில் உள்ள மனுக்கள் ஆய்வில் உள்ளன.

- இடர்பாடு இன்றி மாணவர்/ மாணவியருக்கு சாதிச் சான்றிதழ்கள் வழங்க இயலும் வகையில் புதிய முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இப்புதிய முறையின்படி நிரந்தர சாதிச் சான்றிதழ் அட்டைகள் அச்சிட்டு மாவட்ட ஆட்சியர்களுக்கு வழங்குவதற்காக உத்திரவிடப் பட்டுள்ளது. இதற்கிணங்க பிற்பட்டோர் சான்று – 14,73,492 மிகவும் பிற்பட்டோர் சான்று – 8,05,347 சீர் மரபினர் சான்று 2,12,343 ஆதிதிராவிடர் – 10,08,067 பழங்குடியினர் – 47,114 சான்றிதழ்கள் மார்ச் 2004 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டுள்ளது.

- **தருமபுரி மாவட்டத்தைப் பிரித்து கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய கிருஷ்ணகிரி மாவட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 9.2.2004 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.**

- அரசின் திருத்திய கொள்கை முடிவின்படி 2001 முதல் 2004 ஆண்டுக்கு வருவாய்த்துறையில் பணிபுரியும் 12,506 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்காக ஒவ்வொரு ஆண்டும் 4,000 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகக் கட்டடங்கள் ஊராட்சி அலுவலகத்துடன் இணைத்து சுமார் 180 சதுர அடி பரப்பளவில் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது. 2001–02ஆம் ஆண்டில் ஒவ்வொரு கட்டடமும் ரூ. 60,000 மதிப்பீட்டில் 3,851 கட்டடங்கள் ரூ. 23 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 2002–03ஆம் ஆண்டு ஒவ்வொரு கட்டடமும் ரூ. 70,000 மதிப்பீட்டில் 3,740 கட்டடங்கள் ரூ.26 கோடி செலவில் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- 2001 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் 2004ஆம் ஆண்டு மார்ச் முடிய 85,002 பட்டாக்கள் ஆதிதிராவிடர் களுக்கும் , 6,420 பட்டாக்கள் பழங்குடியினருக்கும், ஏனைய இனத்தவர்களுக்கு 1,90,748 பட்டாக்களும், ஆக மொத்தம் 2,82,170 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

- நிலமற்ற ஏழைகளுக்கு இலவசமாக நிலம் ஒப்படை செய்யப்பட்டு வருகிறது. 2001ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் 2004ஆம் ஆண்டு மார்ச் முடிய ஆதிதிராவிடர்களுக்கு 7,149 பட்டாக்களும், பழங்குடியினருக்கு 150 பட்டாக்களும் ஏனைய இனத்தவர்களுக்கு 21, 999 பட்டாக்களும், ஆக மொத்தம் 29,298 விவசாய நிலப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மொத்தப் பரப்பு 17, 548 ஏக்கர் நிலமாகும்.

❖ 1961ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச்சீர்திருத்த சட்டத்தின்படி, 1.5.2001 முதல் 31.3.2004 வரை 3,545 ஏக்கர் நிலம் உபரியாக அறிவிக்கப்பட்டு 5,245 ஏக்கர் நிலம் 4,318 நபர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டது.

❖ குடிநீர் பிரச்சினையை சமாளிக்கும் பொருட்டு 2002–2003 ஆம் ஆண்டில் ரூ. 16,810.60 இலட்சமும், 2003–2004ஆம் ஆண்டில் ரூ. 18,136.97 இலட்சமும் இயற்கை இடர்பாடு நிவாரண நிதி / தேசிய பேரிடர் எதிர்பாரா நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டது.

❖ 2003–04ஆம் ஆண்டில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.6,118.60 இலட்சமும், பேரூராட்சிகளுக்கு ரூ.2,381.86 இலட்சமும், நகராட்சிகளுக்கு ரூ.1,451.51 இலட்சமும், மாநகராட்சிகளுக்கு ரூ.8,185 இலட்சமும் ஒதுக்கப்பட்டது. இதில் சென்னை நகருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 80 கோடியும் அடங்கும்.

❖ 2002ஆம் ஆண்டு டெல்டா மாவட்டங்களில் நிலவிய வறட்சியைக் கருதி, தீபாவளிப் பண்டிகையை வறட்சியால் பாதிப்புக்குள்ளான விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர் குடும்பங்களும் மகிழ்ச்சியாகக் கொண்டாடும் வகையிலும், நிலமற்ற விவசாயத் தொழிலாளர் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் 10 கிலோ அரிசி, 1 கிலோ சர்க்கரை, தேங்காய் ஒன்று, 250 கிராம் இனிப்பு, 7 ரூபாய் மதிப்புள்ள காய்கறிகள், 100 கிராம் நெய், 200 கிராம் பாசிப்பருப்பு, 50 கிராம் மஞ்சள், 50 கிராம் கடுகு, 50 கிராம் உலர்ந்த மிளகாய் மற்றும் ரொக்கமாக ரூ.50/– ஆக மொத்தம் ரூ.210/– மதிப்புள்ள ஒரு பரிசுப் பை வழங்கப்பட்டது. இதற்கான மொத்த செலவு ரூ. 21.28 கோடி ஆகும்.

❖ வறட்சியால் முழுதும் பாதிக்கப்பட்ட 11 இலட்சம் தென்னை மரங்களுக்கு மரம் ஒன்றுக்கு ரூ. 150/–ம், பகுதியாக பாதிக்கப்பட்ட 28 இலட்சம் தென்னை மரங்களுக்கு மரம் ஒன்றுக்கு ரூ. 50/–ம், ஆக மொத்தம் ரூ. 30.50 கோடி ரூபாய் நிவாரணமாக ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் ரூ. 21.65 கோடி ரூபாய் 20 மாவட்டங்களில் உள்ள பாதிப்படைந்த 1,05,553 தென்னை விவசாயிகளுக்கு நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

❖ தமிழ்நாட்டில் 2002ஆம் ஆண்டில் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை பொய்த்து விட்ட காரணத்தால், வறட்சியால் பாதிக்கப்பட்டு வறிய நிலையில் உண்ண உணவின்றி வருந்தும் விவசாயத் தொழிலாளர் மற்றும் சிறு குறு விவசாயக் குடும்பத்தினர் அனைவருக்கும் கிராமப்புற சத்துணவு மையங்கள் மூலம் மதிய உணவு 15.1.2003 பொங்கல் தினம் முதல் வழங்கப்பட்டது. இத்திட்டம் தொடங்கப்பட்ட பொங்கல் தினத்தன்று அனைத்து பயனாளிகளுக்கும் சர்க்கரைப் பொங்கல் வழங்கப்பட்டது. 4.02.2003 அன்றைய நிலவரப்படி இத்திட்டத்தில் 14.03 இலட்சம் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் சிறு / குறு விவசாயிகள் பயனடைந்தனர்.

❖ வறட்சியால் பாதிக்கப்பட்ட சிறு / குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாயக் கூலிகள் ஆகியோரின் குடும்பங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 30 கிலோ இலவச அரிசி வழங்கும் திட்டம் 05.02.2003 முதல் அறிமுகப்படுத்தப்பட்டு 31.08.2003 வரை தொடரப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் சென்னை தவிர்த்த அனைத்து மாவட்டங்களில் மொத்தமாக 9.65 இலட்சம் குடும்பங்கள் பயனடைந்தன.

❖ சென்னை தவிர்த்து ஏனைய மாவட்டங்களில் 2002–03ஆம் ஆண்டின் குறுவை மற்றும் சம்பா பருவங்களில் நிலவிய வறட்சி காரணமாக பயிர் செய்யப்பட்ட பரப்பில் 50 சதவிகிதம் மற்றும் அதற்கு மேலும் பயிர் உற்பத்தி இழப்பை அடைந்த விவசாயிகளுக்கும் தங்கள் நிலங்களை பயிரிடாமல் விட்ட விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்குவதற்காக அரசு ரூ.323.56 கோடி அனுமதி அளித்தது. இத் தொகையில் ரூ. 240.07 கோடி ரூபாய் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு 28,93,268 விவசாயிகள் பயனடைந்தனர்.

❖ தமிழகத்தில் நிலவி வந்த தீவிர வறட்சியின் காரணமாக 2003 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மீண்டும் மத்திய குழு ஒன்று வறட்சியால் பாதிக்கப்பட்ட தருமபுரி, சேலம், தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களை பார்வையிட்டது. அக்குழுவிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வறட்சி நிவாரணத்திற்காக ரூ.2,094 கோடியும், வேலைக்கு உணவு திட்டத்தின்கீழ் 9 இலட்சம் மெட்ரிக் டன் கூடுதல் உணவு தானியங்களும் கோரப்பட்ட மனுவை அளித்தார்கள்.

❖ 2003–04ஆம் ஆண்டு வரவு–செலவு திட்ட அறிக்கையில், வறட்சியால் பாதிக்கப்பட்ட 28 மாவட்டங்களில் வேலை வாய்ப்பினை உருவாக்கும் பொருட்டு ரூ. 341.92 கோடி ரூபாய்க்கான வேலைக்கு உணவு திட்டங்கள் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

❖ **காவிரி டெல்டா மாவட்டங்களில் வறட்சியின் காரணமாக குறுவை நெல் சாகுபடி செய்யாமல் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் துயர் துடைக்கும் பொருட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ. 217.09 கோடியிலான சிறப்பு நிவாரணத் திட்டங்களைச் செயல்படுத்த ஆணையிட்டார்கள்.** இத்திட்டங்களை செம்மையாக செயல்படுத்தும்

பொருட்டு தலைமைச் செயலர் தலைமையிலான பேரிடர் நிவாரண நிதிக்கான மாநில அளவிலான குழு ஒன்று அமைக்கப்பட்டது.

❖ எஸ்.ஜி. ஆர். ஒய். சிறப்புக் கூறு (வேலைக்கு உணவு) திட்டத்தின்கீழ் 2002–03 ஆம் ஆண்டு 1.25 இலட்சம் மெட்ரிக் டன் அரிசியும், 2003 ஆம் ஆண்டு பிப்ரவரி வரை 1.75 இலட்சம் மெட்ரிக் டன் அரிசியும், 2004ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் 3.04 இலட்சம் மெட்ரிக் டன் அரிசியும் இதுவரை தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு பணியாளருக்கும் ஒரு மனித வேலை நாளுக்கு கூலியாக ரூ. 54/– அளவில், ரூ.39.55 மதிப்புள்ள 7 கிலோ அரிசியும், ரொக்கமாக ரூ. 14.45–ம் வழங்கப்பட்டது.

❖ வறட்சியின் காரணமாக கால்நடைகளை வாய் மற்றும் பாத நோய்களிலிருந்து பாதுகாக்கவும், வறட்சியால் பாதிக்கப்பட்ட 22 மாவட்டங்களில் உள்ள 313 ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை பராமரிப்பு மையங்களில் குடிநீர் வசதி ஏற்படுத்தவும், பெரிய மற்றும் சிறிய கால்நடை தீவன உற்பத்தி பண்ணைகளின் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காகவும் மற்றும் கிராமங்களில் கால்நடை தீவன மேம்பாட்டிற்காகவும், ரூ. 20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

❖ இது தவிர விடுபட்ட 6 மாவட்டங்களில் உள்ள கால்நடை பராமரிப்பு மையங்களில் ஆழ்துளை கிணறு அமைக்க ரூ. 162 இலட்சமும், புதுக்கோட்டை மாவட்டத்தில் மீதமுள்ள கால்நடை பராமரிப்பு மையங்களில் குடிநீர் வசதி ஏற்படுத்த ரூ. 16.60 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கால்நடை பராமரிப்புத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 20 கோடியில் தருமபுரி, ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களின் வனப்பகுதியில் உள்ள யானைகள் மற்றும் வன விலங்குகளின் குடிநீர்த் தேவைக்காக 79 ஆழ்துளை கிணறுகள் அமைப்பதற்காக ரூ. 76.10 இலட்சம் மாற்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ கடும் வறட்சியின் காரணமாக பாதிக்கப்பட்ட மல்பரி தோட்ட விவசாயிகளுக்கு நிவாரணமாக ரூ. 75.92 இலட்சம் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டது.

❖ தமிழகத்தில் நிலவி வரும் கடுமையான வறட்சியினைச் சமாளிக்க தமிழக அரசு மத்திய அரசின் தேசிய பேரிடர் எதிர்பாரா நிதியிலிருந்து ரூ. 1,584 கோடி நிவாரண நிதியும், வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டங்களுக்காக கூடுதலாக 10.8 இலட்சம் டன் உணவு தானியங்களும் வழங்கக் கோரும் விரிவான கோரிக்கை மனு ஒன்றினை 2004–ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் சமர்ப்பித்துள்ளது. இதனடிப்படையில் மத்தியக் குழு ஒன்று 2004 பிப்ரவரி மாதத்தில் தமிழகத்தின் வறட்சிப் பகுதிகளை பார்வையிட்டு வறட்சி நிலை குறித்த விவரங்களை பெற்றுச் சென்றுள்ளது.

❖ இவை தவிர தமிழகத்தில் நிலவி வரும் வறட்சியினைச் சமாளிக்க தமிழக அரசு கீழ்கண்ட நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

- ➢ கூட்டுறவுக் கடன்களை ஒத்திவைக்க அரசாணைகள் வெளியிடப்பட்டன.
- ➢ எஸ்.ஜி. ஆர்.ஒய்., சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம், 11ஆவது நிதிக்குழு மானியம், உள்ளாட்சி பொது நிதி, சிறு சேமிப்பு நிதி போன்ற திட்டங்களின் வாயிலாக பல்வேறு வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பினை அளிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- ➢ பசலி ஆண்டு 1412 (01.07.02 முதல் 30.06.03) மற்றும் 1413 ( 01.07.03 மற்றும் 30.06.04) ஆகியவற்றுக்கான நிலவரியை தள்ளுபடி செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

❖ மாநிலத்தில் நிலவி வரும் வறட்சியினை சமாளிக்கும் பொருட்டு, பேரிடர் நிவாரண நிதி / தேசிய பேரிடர் எதிர்பாரா நிதியிலிருந்து வறட்சி நிவாரணத் திட்டங்களுக்கு 2003–04ஆம் நிதியாண்டில் பல்வேறு அரசாணைகள் மூலம் அரசு ரூ. 489.27 கோடி ஒதுக்கீடு செய்தது.

❖ 5,394 வருவாய்த்துறை கட்டடங்கள் அனைத்திலும் மழைநீர் சேகரிப்பு வசதிகள் செய்து முடிக்கப் பட்டுள்ளன.

❖ தமிழ் நிலம் எனப்படும் நில ஆவணங்களை கணினி மயமாக்கும் திட்டம் தற்பொழுது அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நிரந்தர கிராம ஆவணங்களான 'அ' பதிவேடுகள் மற்றும் சிட்டா பதிவுகள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

31.12.2003 வரையிலான காலத்திற்கு தமிழ்நாட்டில் உள்ள மொத்த கிராமங்களில் நகர்புறம் சாராத (Rural Villages) கிராமங்களின் 'அ' பதிவேடு மற்றும் சிட்டா பதிவுகள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. Urban Villages–க்கான பதிவுகளை கணினிமயமாக்க தேசிய தகவலியல் மையத்தால் தயாரிக்கப்பட்டு கணினி மயமாக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாநிலத்திலுள்ள 206 வட்டங்களில் 201 வட்டங்கள் Online–க்கு கொண்டுவரப்பட்டுள்ளன. இந்த 201 வட்டங்களிலும் நில உடைமைதாரர்கள் அவர்களுக்குத் தேவையான 'அ' பதிவேடு மற்றும் சிட்டா நகல்களை கணினி மூலம் பெறும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

29 வட்டங்களில் தொடுதிரைத் தகவல் கணினி மேடை (TSCK) நிறுவிட அரசால் உத்தரவிடப்பட்டு 15–4–2002 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தேனி மாவட்டம் ஆண்டிபட்டி வட்டத்தில் தொடங்கப்பட்டு, ஏனைய வட்டங்களிலும் அதே நாளிலிருந்து செயல்பட்டு வருகிறது. 31–3–2004 வரையிலான காலத்திற்கு தொடுதிரை தகவல் மேடை மற்றும் நில ஆவண கணினிப் பிரதிகள் வழங்கியதன் மூலம் ரூ.2.35 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது. மாநிலத்தின் இதர வட்டங்களிலும் தொடுதிரை தகவல் மேடை அமைக்க பகுதி–2 திட்டத்தின் கீழ் ரூ.175.60 இலட்சம் அரசால் வழங்கப்பட்டு, அதன் தொடர்ச்சியாக 97 வட்டங்களில் தொடுதிரை தகவல் கணினி மேடை நிறுவப்படவுள்ளது.

நில அளவை ஆவணங்களை கணினி மயமாக்கும் திட்டத்தின்கீழ் கீழ்நிலைப் பணியாளர்களுக்கு கணினியில் பயிற்சி வழங்க முடிவெடுக்கப்பட்டு, 8,500 பணியாளர்களுக்கு இதுவரை பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

நிலவியல் தகவல் முறைக்கு அதிக முக்கியத்துவம் மற்றும் நம்பகத் தன்மை ஏற்பட்டு வரும் நிலையில், முன் எப்பொழுதும் இல்லா வகையில் தற்சமயம் மிகத் துல்லியமான டிஜிடல் கடாட்ஸட்ரல் நிலஅளவை தேவை உணரப்படுகிறது. இதனால் விண்கோள் சமிக்ஞை கொண்டு அளவிடும் (GPS) ஒரு முன்னோடித் திட்டத்தை ரூ.120 இலட்சம் ரூபாயில் மேற்கொள்ள அரசு அனுமதி வழங்கியுள்ளது. மத்திய மாநில நிதி உதவியுடன் ரூ.40 இலட்சம் பெறப்பட்டு இதுவரை 8 மாவட்டங்களின் கிராம வரைபடங்களை ஸ்கேன் செய்யும் பணி முடிவு பெற்றுள்ளன.

இத்துறையின் கட்டுப்பாட்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரத்தநாடு நிலஅளவைப் பயிற்சிப் பள்ளி செயல்பட்டு வருகிறது. இதில் அலுவலர்களுக்கு துறை தொடர்பான பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. நவீன தொழில்நுட்பக் கருவிகளைக் கொண்டு நிலஅளவை செய்வதற்கு நிலஅளவைப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் சென்னையில் அண்ணா பல்கலைக்கழகத்தின் உயர் தொழில் நுட்பத்துடன் கூடிய பயிற்சிப் பள்ளி அமைக்க அரசு ரூ.127.03 இலட்சம் அனுமதி வழங்கியது. இந்த உயர் தொழில்நுட்பப் பயிற்சி நிலையம் C-STAR என்ற பெயரில் செயற்குழுவின் கீழ் செயல்பட உள்ளது.

★ ★ ★

# சட்டத்துறை

★ டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் கணினிக் கூடம் ஒன்று ரூ.7.50 இலட்சம் மதிப்பில் நிறுவப்பட்டுள்ளது. பல்கலைக்கழகப் பாடத்திட்டத் திற்கிணங்க சட்டப்புத்தகங்கள் அனைத்தும் தமிழில் தயாரித்து வெளியிடப்பட வேண்டுமென ஆணை பிறப்பிக்கப்பட்டு இதுவரை 31 பாடங்களுக்கான புத்தகங்கள் தமிழில் எழுதப்பட்டுள்ளன. சட்டத்துறையால் மொழி பெயர்க்கப்பட்ட 60 மையச் சட்டங்கள் 16.4.2003 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டன.

★ சென்னையிலுள்ள டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக்கல்லூரியில் பயின்றுவரும் 6 மாணவ, மாணவியர்களுக்கு, 2003–2004 ஆம் கல்வியாண்டில், வியன்னா மற்றும் ஹாங்காங்கில் நடைபெற்ற வில்லெம் சி.விஸ் சர்வதேச மாதிரி நீதிமன்ற போட்டிகளில் கலந்துகொள்ள ஏதுவாக ரூ.4.50 இலட்சம் அளவில் அரசால் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

★ திருச்சிராப்பள்ளி அரசு சட்டக் கல்லூரியில் பயிலும் மாணவிகளுக்கான விடுதி தொடங்கப்பட்டுள்ளது.


★ பல்கலைக்கழக உறுப்பு சட்டக் கல்லூரி 2003–2004 கல்வியாண்டில் தொடங்கப் பட்டுள்ளது.

★ புதிய முதுகலைப் பட்டயப் படிப்புகளுக்கான பொதுக் காப்பீடு பற்றிய முதுகலைப் பட்டயப் படிப்பு 2003–2004 கல்வியாண்டில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. வணிகவியல் சட்டத்தில் முதுகலைப் பட்டப் படிப்பும், அரசமைப்பு மற்றும் சட்ட ஒழுங்கு முதுகலைப் பட்டப் படிப்பும் 2002–2003 கல்வியாண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தின் சீர்மிகு சட்டப் பள்ளிக்கு கட்டடம் கட்டுவதற்கு ரூ.55 இலட்சம் அரசால் ஒதுக்கப்பட்டு, அப்பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

• • •

# நெடிய சாதனை படைக்கும் நெடுஞ்சாலைத் துறை



ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு சாலைகளின் கட்டமைப்பு இன்றியமையாதது. தேசிய நெடுஞ் சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட பெரிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகள் ஆகியவற்றை நெடுஞ்சாலைத்துறை தன்னகத்தே கொண்டு சிறந்த பாதுகாப்பான சாலைப் போக்குவரத்தினை வழங்கி வருகிறது. **சாலைகளை மேம்படுத்துவதுடன், தற்போதுள்ள சாலைக் கட்டமைப்பு வசதிகளை பாதுகாத்து, பராமரிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 'சிறப்பு பராமரிப்பு திட்டம்' என்ற திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளார்கள்.**

தமிழகத்திலுள்ள 3,850 கி.மீ நீள தேசிய நெடுஞ்சாலைகள், 7,223 கி.மீ. நீள மாநிலச் சாலைகள், 7,376 கி.மீ. நீள மாவட்ட முக்கியச் சாலைகள், 41,156 கி.மீ. நீள மாவட்ட இதரச் சாலைகள், 1,603 கி.மீ. நீள கரும்பு சாலைகள் என மாநிலத்தில் உள்ள மொத்தம் 61,208 கி.மீ. நீள சாலைகளை நெடுஞ்சாலைத்துறை பராமரித்து வருகிறது.

2001–2002ஆம் ஆண்டில் திட்டப் பணிகளின் கீழ் ரூ.510.85 கோடியும், 2002–2003ஆம் ஆண்டில் ரூ.483.46 கோடியும், 2003–2004ஆம் ஆண்டில் ரூ.650.23 கோடியும் செலவிடப்பட்டுள்ளது.

2001–2002ஆம் ஆண்டில் 10 பாலப் பணிகள் முடிக்கப்பட்டன. 2002–2003ஆம் ஆண்டில் மீதமுள்ள 8 பாலப் பணிகள் முடிக்கப்பட்டன. மேலும் இத்திட்டத்தின் கீழ் 2001–2002ஆம் ஆண்டில் 30.80 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 6 பாலப் பணிகளும் மொத்தம் ரூ.4.75 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு, 12.50 கி.மீ. சாலை மேம்பாட்டுப் பணிகள் மற்றும் 1 பாலப் பணியும் 2002–2003இல் முடிக்கப்பட்டுள்ளது. 2003–2004ஆம் ஆண்டில் மீதமுள்ள பணிகள் முடிக்கப்பட்டன. 2003–2004ஆம் ஆண்டில் பகுதி–2 திட்டத்தின்கீழ் ரூ.9 கோடி மதிப்பில் 26 பாலப் பணிகள் எடுக்கப்பட்டு 10 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

நபார்டு வங்கியின் கடன் உதவியுடன், ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதியின் மூலம், மாவட்ட இதரச் சாலைகளை மேம்பாடு செய்யும் பணி மேற்கொள்ளப் பட்டது. இத்திட்டத்தின் கீழ் 213.90 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 76 பாலங்களை கட்டும் பணிகளும் 2001–2002ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டன. 2002–2003ஆம் ஆண்டில் 248.23 கி.மீ. நீள சாலைப்பணிகளும், 120 பாலங்களை கட்டும் பணிகளும் முடிக்கப்பட்டன. 2003–2004ஆம் ஆண்டில் 111 பாலப் பணிகளும், 31 சாலைப் பணிகளும் ரூ.50.01 கோடி மதிப்பில் எடுக்கப்பட்டு, இவ்வாண்டில் இதுவரை 800 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 50 பாலப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

500 முதல் 1,000 வரை மக்கள் தொகை உள்ள கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கும் நோக்கத்துடன், நபார்டு வங்கியின் கடன் உதவியுடன் ஊரகச் சாலைகள் திட்டம், சிறப்பு உறுப்புத் திட்டம் மற்றும் பேருந்து சாலைகளை மேம்படுத்தும் திட்டம் ஆகியவை அடங்கிய குறைந்தபட்ச சேவைகள் திட்டத்தின்கீழ் 669 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 9 பாலங்களை கட்டும் பணிகளும் 2001–2002ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் 2002–2003ஆம் ஆண்டில் 907 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 10 பாலங்களை கட்டும் பணிகளும் முடிக்கப்பட்டன. 2003–2004ஆம் ஆண்டில் ரூ.64.30 கோடி மதிப்பில் 377.65 கி.மீ. நீள சாலைப்பணிகளும், 11 பாலப் பணிகளும், ரூ.57.97 கோடி மதிப்பில் 337.06 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 9 பாலப் பணிகளும் எடுக்கப்பட்டுள்ளன. 2003–2004ஆம் ஆண்டில் இதுவரை 323 கி.மீ. நீள சாலைகளும், 20 பாலப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

ஹட்கோ கடன் உதவியைக் கொண்டு, சென்னை நகரைச் சுற்றி ஆரச்சாலைகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் 2001–2002ஆம் ஆண்டில் 49 கி.மீ. நீளமுள்ள சாலை மேம்பாட்டுப் பணிகள் மற்றும் 5 சிறிய பாலங்கள் முடிக்கப்பட்டுள்ளன. 2.14 கி.மீ. நீளமுள்ள சாலை மேம்பாட்டுப் பணிகள் மற்றும் 2 சிறிய பாலங்கள் 2002–2003ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளன. அனைத்து பணிகளும் தற்போது முடிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் மூலமாக, பொதுமக்களிடமிருந்து, பங்கு பத்திரங்கள் வாயிலாக திரட்டப்பட்ட நிதியைக் கொண்டு பழுதடைந்த மாவட்ட இதரச் சாலைகளை, படிப்படியாக சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் 4,890 கி.மீ. நீள சாலைப் பணிகள் எடுக்கப்பட்டு, அவற்றுள் எஞ்சியுள்ள 2,557 கி.மீ. நீள சாலைப் பணிகளை ரூ.171.19 கோடி மதிப்பீட்டில் 2001–2002ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டன.

பெட்ரோல் மற்றும் டீசல் மீது விதிக்கப்படும் மிகைவரி மூலமாகக் கிடைக்கும் நிதியிலிருந்து சாலை மேம்பாட்டுப் பணிகளுக்காக, மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.67 கோடி நிதியைப் பயன்படுத்தி மாநிலத்தில் உள்ள மாநிலச் சாலைகள் மற்றும் மாவட்ட முக்கியச் சாலைகளில் தேவைப்படும் பகுதிகளை அகலப்படுத்தி வலுப்படுத்துதல், விபத்துப் பகுதிகளை மேம்படுத்துதல் போன்ற 250 பணிகளை ரூ.154.97 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசின் வழிகாட்டி நெறிமுறைகளின் அடிப்படையில் மேற்கொள்ள, மாநில அரசு நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

இயந்திரக் கலவைகள் மூலம் சாலைகள் மேம்படுத்தும் திட்டத்தின்கீழ், எஞ்சியுள்ள 160 கி.மீ. நீளமுள்ள அனைத்து சாலைப் பணிகளும் முடிவு பெற்றன.

2001–2002ஆம் ஆண்டில் பராமரிப்புப் பணிகளின் கீழ் ரூ.58.73 கோடி மதிப்பீட்டில் 1,460 கி.மீ. நீள சாலைகளின் மேற்தளம் புதுப்பிக்கப்பட்டன. 2002–2003ஆம் ஆண்டில் ரூ.33.41 கோடி மதிப்பீட்டில் 835 கி.மீ. நீள சாலைகளின் மேற்தளம் புதுப்பிக்கப்பட்டன. **முதலமைச்சரின் சிறப்பு சாலை பழுதுபார்ப்புத் திட்டம் 2002–2003ன் கீழ் ரூ.90.65 கோடி மதிப்பீட்டில் 1,685 கி.மீ. நீளசாலைப் பணிகள் எடுக்கப்பட்டு புதுப்பிக்கப் பட்டுள்ளன. முதலமைச்சரின் சிறப்பு சாலை பழுதுபார்ப்புத் திட்டம் 2003–2004ன் கீழ் ரூ.184 கோடி மதிப்பீட்டில் 3,864 கி.மீ. நீள சாலைப் பணிகள் எடுக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளன. 2003–2004ஆம் ஆண்டில் ரூ.150 கோடி மதிப்பீட்டில் பழுதுபட்ட 3,000 கி.மீ. நீள பேருந்து தடச்சாலைகளை ஹட்கோ கடனுதவியுடன் புதுப்பிக்க எடுக்கப்பட்டு 2,100 கி.மீ. நீள சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.**

2001–2002ஆம் ஆண்டில் 2,817 கி.மீ. நீளமுள்ள மாவட்ட முக்கிய சாலைகளும், 151 கி.மீ. நீளமுள்ள மாவட்ட இதர சாலைகளும் மாநில நெடுஞ்சாலைகள் தரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளன.

**காவிரி வடிநில மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் நாடு சுதந்திரம் அடைவதற்கு முன் கட்டப்பட்ட 204 பாலங்களை ரூ.200 கோடி மதிப்பீட்டில் திரும்ப கட்டும் ஒரு மாபெரும் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். முதற்கட்டமாக 94 பாலங்களை நபார்டு வங்கியின் கடனுதவியுடன் திரும்ப கட்ட மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் 82 பாலப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.**

இருப்புப்பாதை பணிகள் திட்டத்தின்கீழ் 2001–2002ஆம் ஆண்டில் 6 சாலை மேம்பாலம் மற்றும் கீழ்ப்பாலம் எடுக்கப்பட்டன. அவற்றுள் 2001–2002ஆம் ஆண்டில் 1 சாலை கீழ்ப்பாலம் கட்டப்பட்டது. 2002–2003ஆம் ஆண்டில் 2 சாலை மேம்பாலங்கள் கட்டப்பட்டன. மீதமுள்ள 3 சாலை மேம்பாலங்கள் 2003–2004ஆம் ஆண்டில் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும், ஹட்கோ கடனுதவியுடன் ரூ.513.92 கோடி மதிப்பீட்டில் 37 சாலை மேம்பாலம் / கீழ்ப்பாலம் கட்டும் பணி எடுக்கப்பட்டன. அவற்றுள் 24 பணிகள் நடைபெற்று வருகின்றன. 12 சாலைப் பணிகள், 1 பாலப் பணி மற்றும் 1 சாலை மேம்பாலம் மற்றும் கீழ்ப்பாலம் அடங்கிய மதுரை ஆரச்சாலைகள் திட்டம் 2002–2003ஆம் ஆண்டில் ரூ.112 கோடி மதிப்பீட்டில் ஹட்கோ கடனுதவியுடன் எடுக்கப்பட்டது. இவற்றில் 55.20 கி.மீ. நீள சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ஹட்கோ கடனுதவியுடன் ரூ.60 கோடி மதிப்பீட்டில் 60 பாலங்களைத் திரும்பக் கட்டும் பணி 2001–2002ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டது. அவற்றுள் 14 பாலங்கள் 2002–2003ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது. நடப்பாண்டில் 8 பாலப் பணிகள் முடிவு பெற்றுள்ளன.



தேசிய நெடுஞ்சாலை திட்டப் பணிகளின்கீழ் 2001–2002ஆம் ஆண்டில் ரூ.96.54 கோடி மதிப்பீட்டில் 386 கி.மீ. நீள சாலை மேம்பாட்டுப் பணிகளும், 5 சிறு பாலங்கள் கட்டும் பணிகளும் முடிக்கப்பட்டன. 2002–2003ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.100 கோடி மதிப்பீட்டில் 327 கி.மீ. நீள சாலை மேம்பாட்டுப் பணிகளும், 1 சிறு பாலம் கட்டும் பணியும் முடிக்கப்பட்டன. நடப்பாண்டில் ரூ.80.25 கோடி மதிப்பீட்டில் 243.59 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 7 சிறிய பாலங்களும் முடிக்கப்பட்டுள்ளன.

★ ★ ★

# இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு

ஒரு நாட்டின் மேன்மை அந்நாட்டு மக்களின் அறிவுத் திறனாலும் உடல் ஆரோக்கியத்தாலும் அறியப் படுகிறது. தமிழகத்தின் சார்பில் பன்னாட்டு அளவிலும், தேசிய அளவிலும் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் வீரர்கள் மற்றும் வீராங்கனைகள், அந்தப் போட்டிகளில் பதக்கங்கள் வென்றிட ஊக்குவிக்கும் வகையில், அவர்களுக்கு உரிய ஊக்கத்தொகை வழங்கிட, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணைபிறப்பித்தார்கள். அதன்படி, வீரர்கள் வீராங்கனைகளுக்கு அரசு ஊக்கத்தொகைகளை வழங்கி வருகிறது.

★ நீலகிரி மாவட்ட விளையாட்டு வளாகத்தில் மலைப்பிரதேச விளையாட்டுப் பயிற்சி மையம் அமைத்தல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

★ திருச்சி, சேலம், ஈரோடு, நாகர்கோவில், திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் நீச்சல் குளங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

★ 2002–2003ஆம் ஆண்டு முதல் சர்வதேச விளையாட்டு வீரர் கண்டறியும் திட்டத்தின்கீழ் உடற் திறன் தேர்வுப் போட்டிகளை, மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் பயிலும் சிறுவர் / சிறுமியர்களுக்கு நடத்துவதன் அவசியத்தை உணர்ந்து இத்திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது.



★ 53 விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளை கண்டறிந்து அவர்களுடைய திறமைகளை மேலும் வளர்க்க அவர்களது தேவைக்கேற்ப உதவிகள் வழங்கப்படுகின்றன.

★ 300 இளைஞர் மன்றங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

★ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும், ரோட்டரி இன்டர்நேஷனல் கழகமும் இணைந்து, "சென்னை மராத்தான்" ஓட்டப் பந்தயப் போட்டியை சர்வதேச மராத்தான் போட்டிகளுக்கு இணையாக கடந்த மூன்றாண்டுகளாக நடத்தி வருகிறது.

★ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும் மற்றும் ஐஎம்சி (International Merchandising Corporation) நிறுவனமும் இணைந்து "சென்னை ஓபன்"(CHENNAI OPEN) என்ற பெயரில் டென்னிஸ் போட்டிகளை ஒவ்வொரு ஆண்டும் நடத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

★ சர்வதேச ஹாக்கி இணையமும், தமிழ்நாடு ஹாக்கி சங்கமும் இணைந்து "டாக்டர் ஜெ ஜெயலலிதா தங்கக் கோப்பை" எனும் பெயரில் சர்வதேச அளவிலான போட்டியினை 2004–ஆம் ஆண்டிலும், சாம்பியன்ஸ் டிராபி 2005 எனும் போட்டியினையும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உதவியுடன் நடத்திட திட்டமிட்டுள்ளது.

★ ஒலிம்பிக், ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் காமன்வெல்த் போட்டிகள், தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் பெற்ற தமிழ்நாட்டைச் சார்ந்த விளையாட்டு வீரர்களுக்கு தமிழ்நாடு அரசு உயரிய ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் மூலம் 123 விளையாட்டு வீரர்களுக்கு ரூ.2.10 கோடி வழங்கப்பட்டது.

★ தற்போது காவல்துறையில் நடைமுறையில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கான 10% இட ஒதுக்கீடு முறை ஏனைய சீருடைப் பணித் துறைகளான சிறைத் துறை மற்றும் வனத் துறைக்கும் நீட்டிக்கப் பட்டுள்ளது. மேலும் இது தீயணைப்பு மற்றும் மீட்புத் துறைக்கும் நீட்டிக்கப்படும்.

★ நாட்டு நலப்பணித் திட்டத்தின் மூலம் தத்தெடுக்கப் பட்ட கிராமங்களிலும், நகர்ப்புறங்களில் உள்ள குடிசைப் பகுதிகளிலும் 10 நாள் சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. 2001–02ஆம் ஆண்டில் 1,990 கிராமங்களிலும் 2002–2003ஆம் ஆண்டில் 2,436 கிராமங்களிலும், 2003–2004 ஆம் ஆண்டில் 2,645 கிராமங்களிலும் முகாம்கள் நடத்தப்பட்டன.

★ 1.10.2001 அன்று மட்டும் ஒரே நாளில் சென்னைப் பல்கலைக்கழகம், டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகம் மற்றும் அண்ணா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவத் தொண்டர்கள் 5,270 அலகுகள் இரத்தம் தானம் செய்து கின்னஸ் சாதனையில் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது..

★ நாட்டுநலப் பணித்திட்டத்தின் மூலம் கடந்த மூன்றாண்டுகளில் சுமார் 12,000 குழந்தைத் தொழிலாளர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்கள் கல்வி பெறுவதற்கு வேண்டிய அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

# தமிழ் வளர்ச்சிக்கு தன்னிகரற்ற முயற்சி

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்''

– பாரதியார்

தொன்மைமிக்க உலக மொழிகள் அனைத்திலும் தமிழே தொன்மை, முன்மை, எளிமை, ஒளிமை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, செம்மை, மும்மை, இனிமை, தனிமை, பெருமை, திருமை, இயன்மை, வியன்மை என்னும் பல்வகைச் சிறப்புகளை ஒருங்கேயுடையது என்பார் மொழிஞாயிறு ஞா.தேவநேயப்பாவாணர். இத்தகு பெருமையுடைய தமிழின் வளர்ச்சியில் இவ்வரசு மிகுந்த அக்கறை கொண்டு செயல்பட்டு வருகிறது.

★ மும்பைப் பகுதியில் உள்ள ஏழை – எளிய தமிழ் மாணவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ரூ.43,025/– மதிப்புள்ள பாடநூல்கள் 3.10.2002 அன்று வழங்கப்பட்டன.

★ படைப்பாளர்கள் திரு.ந. பிச்சமூர்த்தி, திரு.க.நா. சுப்பிரமணியம், நாவலர். ந.மு. வேங்கடசாமி நாட்டார் ஆகியோரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

★ **புதுதில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் தமிழ்மொழியைக் கற்பித்தல், கற்றல் மற்றும் ஆய்வு செய்தல் ஆகிய திட்டங்களுக்காகத் தமிழ் இருக்கை நிறுவ ரூ.50/– இலட்சம் நல்கைத் தொகை 9.9.2003 அன்று மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணைப்படி ஒரே தவணையில் வழங்கப்பட்டுள்ளது.**

★ அரசின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் திருவள்ளுவர் திருநாள் விழா கொண்டாடப்பட்டு, ஒரு இலட்சம் ரூபாய் தொகையும், ஒரு சவரன் தங்கப்பதக்கமும், தகுதியுரையும் கொண்ட திருவள்ளுவர் விருது தகுதியுடைய தமிழறிஞர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

★ ஒவ்வொரு ஆண்டும் பாரதியார் விருது, பாரதிதாசன் விருது, திரு.வி.க. விருது, கி.ஆ.பெ. விருது வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது ஒவ்வொன்றும் ஒரு இலட்சம் ரூபாயும், ஒரு சவரன் தங்கப்பதக்கமும், தகுதியுரையும் கொண்டதாகும்.

★ புதிய தமிழ்ச் சொற்களை உருவாக்கும் 'சொல்வங்கித் திட்டம்' தோற்றுவிக்கப்பட்டு, இதுவரை 19 கூட்டங்கள் நடத்தப்பட்டு 361 சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

★ எட்டாவது உலகத்தமிழ் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கிணங்க, மதுரை உலகத் தமிழ்ச்சங்கம் தொடர்பான பணிகள் தொய்வின்றிப் புதிய பொலிவுடன் தொடர்வதற்குத் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகக் கட்டுப்பாட்டின் கீழ் அமைய அரசு ஆணையிட்டுள்ளது.

★ **சென்னை ஏழுகிணறு பகுதியில் வள்ளலார் வாழ்ந்த இல்லம் அரசு நினைவிடமாக அமைத்திட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

★ அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு ஒய்வூதியம் வழங்கும் திட்டத்தின் கீழ் கடந்த மூன்றாண்டுகளில் 14 தமிழறிஞர்களுக்கு வாழ்நாள் முழுவதும் பெறத்தக்கவகையில் ஒய்வூதியம் வழங்கி ஆணையிட்டுள்ளது.

★ தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 2001 மே முதல் இந்நாள் வரை 69 தமிழறிஞர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ.10,000/– 11 தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ.5,000/– வழங்கப்பட்டுள்ளது.

★ சிறந்த நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 2001– 2002ஆம் நிதியாண்டில் ரூ.9,10,956ம், 2002 – 2003ஆம் நிதியாண்டில் ரூ.4,72,460ம், 2003 – 2004 ஆம் நிதியாண்டில் ரூ.4,98,616ம் நூலாசிரியர்களுக்கு வழங்கப் பட்டுள்ளது.

★ **திருவாரூர் மாவட்டம் உத்தமதானபுரத்தில் தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதய்யர் வாழ்ந்த இல்லம் அரசு நினைவிடமாக அமைத்திட அரசால் ஆணையிடப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.**

★ சென்னை அரசு அருங்காட்சியகம் நாட்டிலுள்ள மாநில அருங்காட்சியகங்களுள் மிகவும் பழமை

வாய்ந்த பெரிய அருங்காட்சியகம் ஆகும். இதன் 151ஆவது ஆண்டு நிறைவு விழா 19-6-2003 அன்று நடைபெற்றது. இவ்விழாவில், மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் முனைவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்கள், மேதகு தமிழக ஆளுநர் திரு.பெ.ஸ்ரீ ராமமோகன் ராவ் அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.



★ நவீனத் தொழில்நுட்பத்துடன் கூடிய வலைத்தளம் மற்றும் மின்னஞ்சல் ரூ.5 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டது. சென்னை அருங்காட்சியக வலைத் தளம் உலகத்திலேயே மூன்றாவது சிறந்த வலைத்தளமாகத் திகழ்கிறது.

★ ஆய்வறிஞர்களுக்குத் தேவையான சந்தைகளில் கிடைக்காத மிக அரிய 53 அருங்காட்சியக நூல்களை மறு அச்சீடு செய்தது.

★ தமிழ் மொழியில் சொற்பிறப்பியல் பேரகரமுதலியைப் பன்மடலங்களில் 31 தொகுதிகளாகத் தொகுத்து வெளியிடுவதே இத்துறையின் ஆக்கமும் நோக்கமும் ஆகும். பேரகரமுதலி வெளியீடுகள் வரிசையில் 6ஆவது பகுதியின் அச்சீட்டுப்பணி விரைவு படுத்தப்பட்டு 2002 ஏப்ரல் திங்களில் வெளியிடப்பட்டது. பேரகரமுதலி எஞ்சிய 25 பகுதிகளை நான்காண்டு கால வரம்பெல்லைக்குள் முடிக்கப்பெற வேண்டும் என்ற அரசின் அறிவிப்புக்கிணங்க, ஆண்டுக்கு 6 பகுதிகள் என்ற செயல் இலக்கு வரையறுக்கப்பட்டு, முதற்கட்டமாக 2002-2003ஆம் நிதியாண்டில் 6 பகுதிகள் தொகுத்து முடிக்கப்பட்டன. இவ்வாறு 6 பகுதிகள் ஒரு சேர முடிக்கப்பட்டு, அச்சுக்கு அணியமாக்கப்பட்டது குறிப்பிடத்தக்க சாதனையாகும். இந்த 6 பகுதிகள் கணியச்சு செய்வதற்கு ரூ.125 இலட்சம் நிதி ஒப்பளிப்புச் செய்து வழங்கப்பட்டது. அதனையடுத்து, 2003-2004ஆம் நிதியாண்டில் இரண்டாவது கட்டமாக 6 பகுதிகள் தொகுப்புப் பணி முடிக்கப்பட்டு, இறுதியாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

★ நலிந்த கலைஞர்களுக்கு நிதி உதவி வழங்கும் திட்டத்தில் 498 கலைஞர்களுக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ.500/- வீதம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

★ 11,176 கலைஞர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

★ தமிழ்நாட்டில் இயங்கி வரும் 17 மாவட்ட அரசு இசைப்பள்ளிகளுக்கு ரூ.5 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு இந்நிதியாண்டில் இசைக் கருவிகள் மற்றும் இதர உபகரணங்கள் வாங்கப்பெற்றுள்ளன.

★ ரூ.5 இலட்சத்தில் சவகர் சிறுவர் மன்ற மாணவர்களுக்கு கோடைக் காலப் பயிற்சி சென்னை உட்பட அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டு வருகின்றன.

★ 2003-2004 ஆம் ஆண்டில் நலிந்த கலைஞர்களுக்கு நிதி உதவி வழங்கப்படும் திட்டத்தில் நலிந்த கலைஞர் ஒருவருக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ.500/- வீதம் 500 கலைஞர்களுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது.

★ இளங்கலைஞர்கள் ஊக்குவிக்கும் திட்டத்தில் 2003-2004ஆம் ஆண்டில் ரூ.1 இலட்சமும், 2002-2003ஆம் ஆண்டில் பண்பாட்டுப் பலகணி மூலம் குறுந்தொகை நாட்டிய நிகழ்ச்சிக்கு ரூ.0.65 இலட்சமும், இராக ஆராய்ச்சி மையத்திற்கு இராக ஆராய்ச்சிப் பணிக்கு 2002-2003ஆம் ஆண்டில் ரூ.5 இலட்சமும், 2003-2004ஆம் ஆண்டில் ரூ.5 இலட்சமும் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

★ 2003-2004 ஆம் ஆண்டில் இந்தியா மற்றும் இந்தோனேசியா நாடுகளில் புகழ் பெற்ற பரதநாட்டியத்தின் ஒரு பிரிவான அசைவுகள் குறித்து புத்தகத் தொகுப்பு வெளியிட ரூ.7 இலட்சம் நிருத்யோதயா கலை நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு 3 தொகுதி நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

★ நுண்கலை பயில ஆர்வமுள்ளவர்களுக்காக, 15 வயதுக்கு மேற்பட்ட எவரும் கலந்து கொண்டு ஓவியப் பயிற்சி பெறுவதற்கான 6 மாத பயிற்சித் திட்டம் 2004 ஜனவரி திங்கள் முதல் தொடங்கப்பட்டுள்ளது.

★ 2003–2004 ஆம் ஆண்டு கோடைக்காலத்தில் அனைத்துச் சிறுவர் மன்றங்களிலும் இலவசக் கலைப் பயிற்சி அளிக்கப்பட்டது. சென்னைச் சிறுவர் மன்றத்தில் 1,465 சிறுவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். மாநில அளவில் கொடைக்கானல் நகரில் 2001 மே மாதம் 10 நாட்கள் 100 சிறுவர்களுக்குக் கோடைக்காலச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. மாநில அளவில் உதகமண்டலம் நகரில் 100 சிறார்களுக்கு 2002 மே திங்களில் எட்டு நாட்களில் கோடைக்காலச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. நடனம், நாடகம், குரலிசை, ஓவியம், கைவினை ஆகிய கலைகளில் மாநிலத்திலுள்ள அனைத்துச் சவகர் சிறுவர் மன்றங்களிலிருந்தும் 100 குழந்தைகளுக்கு 2003 மே மாதம் 10 நாட்கள் கொல்லிமலையில் கோடைக்காலச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது.

★ 2001, 2002, 2003 ஆண்டுகளில் கலைமாமணி விருது 91 பேர்களுக்கும், பொற்கிழி 9 பேர்களுக்கும், சுழற்கேடயம் ஒரு சிறந்த கலை நிறுவனத்துக்கும், ஒரு கேடயம் சிறந்த கலை நிறுவனத்துக்கும் வழங்கப்பட்டது. 18 கலை மேதைகளின் திருவுருவப் படங்கள் திறந்து வைக்கப்பட்டன.

★ 2002–2003 ஆம் நிதியாண்டில் 498 நலிந்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் ரூ.500/– நிதியுதவி வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. கலைஞர்களின் மறைவினால் தவிக்கும் குடும்பங்களுக்கு ரூ.5,000/– நிதியுதவித் தொகையாக கடந்த மூன்றாண்டுகளில் 34 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. தற்போது குடும்பப் பராமரிப்பு நிதியுதவித் தொகை ரூ.5,000/– லிருந்து ரூ.6,000/– ஆக உயர்த்தி வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

★ கடந்த மூன்றாண்டுகளில் 89 கலைஞர்களுக்கு தமிழகத்தில் உள்ள 14 கலை நிறுவனங்களின் மூலம் கலை நிகழ்ச்சிகள் நடத்திட இளங்கலைஞர்களுக்கு ஊக்கமளிக்கும் திட்டத்தின் கீழ் வாய்ப்பு வழங்கப்பட்டது.

★ கிராமியக் கலைஞர்களுக்கு இசைக்கருவிகள் மற்றும் ஆடை அணிகலன்கள் வாங்க நிதியுதவி வழங்கும் திட்டத்தில் 2001–2002 நிதியாண்டில் 145 தனிப்பட்ட கலைஞர்களுக்கும், 48 கலைக் குழுக்களுக்கும், 2002–2003 நிதியாண்டில் 181 தனிப்பட்ட கலைஞர்களுக்கும், 50 கலைக் குழுக்களுக்கும் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. நட்டுவாங்க கலைஞர்களை உருவாக்கும் திட்டத்தின் கீழ் 2001–2002 ஆம் ஆண்டில் 6 பரதநாட்டியக் கலைஞர்களுக்குப் படிப்புதவித் தொகை வழங்கப்பட்டு சிறந்த பரதநாட்டிய வல்லுநர் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது.

★ 300 கிலோ மீட்டர் தொலைவிற்கு அப்பால் உள்ள இடங்களுக்கு கலை நிகழ்ச்சிகள் நடத்த செல்லும் கலைஞர்களுக்கு இரயிலில் இரண்டாம் வகுப்பில் 75 சதவிகிதம் சலுகைக் கட்டணமும், முதல் வகுப்பில் 50 சதவிகிதம் சலுகைக் கட்டணமும் வழங்கப்பட்டு வருகின்றது. கடந்த மூன்றாண்டுகளில் 9,572 பயணச் சலுகைச் சான்றுகளும் வழங்கப்பட்டுள்ளன. இவ்வகையில் ஆண்டுதோறும் சராசரியாக இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட கலைஞர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

★ தமிழக அரசுப் பேருந்துகளில் நாடகக் கலைக்குழுக்களுக்கு 50 சதவிகித பேருந்துக் கட்டணச் சலுகை வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வகையில் 2001–2002 ஆம் ஆண்டில் 35 நாடகக் குழுக்களைச் சேர்ந்த 423 கலைஞர்களும், 2002–2003 ஆம் ஆண்டில் 36 நாடகக் குழுக்களைச் சார்ந்த 438 கலைஞர்களும், 2003–2004 ஆம் ஆண்டில் 29 நாடகக் குழுக்களைச் சேர்ந்த 398 கலைஞர்களும் பயன்பெற்றுள்ளனர்.

## இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 23.3.2002 அன்று தொடங்கி வைக்கப்பட்ட அன்னதானத் திட்டம், விரிவுபடுத்தப்பட்டு தற்சமயம் 162 திருக்கோயில்களில் சிறப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 31.3.2004 முடிய இத்திட்டத்தின் கீழ் பயனடைந்தோரின் எண்ணிக்கை 1,20,18,047 ஆகும். சுமார் 2,123.6 இலட்சம் ரூபாய் நன்கொடையாகவும், ரூபாய் 590.03 இலட்சம் உண்டியல் மூலமும், செலவினங்கள் போக இத்திட்டத்தில் உபரி நிதியாக ரூ.600.9 இலட்சமும் கிடைக்கப்பெற்று மக்களின் பேராதரவை பெருமளவில் பெற்றுள்ளது.

அன்னதானத் திட்டம் நடைபெற்றுவரும் அனைத்து திருக்கோயில்களிலும், சிறுவர், சிறுமியர்களுக்கு ஆன்மீகம் மற்றும் ஒழுக்க நெறியைப் போதிப்பதற்கான "ஆன்மீக வகுப்புகள்" ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நடைபெற்று வருகின்றன. இதன் மூலம் 31.3.2004 முடிய




3,74,095 சிறுவர், சிறுமியர் பயனடைந்துள்ளனர். "மாணவர்களுக்கு நீதிபோதனை" என்ற நூல் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

சமுதாயத்தில் நலிவுற்ற ஏழை எளிய மக்களுக்கு வசதிமிக்க திருக்கோயில்கள் சார்பாக இலவசத் திருமணங்கள் திட்டத்தில் இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு தற்கால விலைவாசி உயர்வின் அடிப்படையில் இணை ஒன்றுக்கு செலவு ரூ.4,500/– ஆக உயர்வு செய்யப்பட்டுள்ளது. 2003–2004ஆம் ஆண்டில் பொன் திருமாங்கல்யத்தின் எடையை 4 கிராமாக உயர்வு செய்து இணை ஒன்றுக்கு செலவுத் திட்டம் ரூ.5,500/– ஆக உயர்வு செய்யப்பட்டுள்ளது. 14.7.2002 அன்று 1,008 இணைகளுக்கும், 18.6.2003 அன்று 1,053 இணைகளுக்கும், சென்னை திருவேற்காட்டில், சிறப்பாக இலவசத் திருமணங்கள் நடத்தப்பட்டன. திருக்கோயில்கள் சார்பில் 5/2001 முதல் 3/2004 முடிய உள்ள காலத்தில் 2,550 இணைகளுக்கு இலவசத் திருமணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

உலகிலேயே மிகப்பெரிய கோவில் பிரகாரத்தைக் கொண்ட இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில் திருத்தலத்தில் 125 வருடங்களாக பயனற்றுகிடந்த இரண்டாம் பிரகாரத்தின் தெற்குப் பகுதி செப்பனிடப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்காக 8.4.2002 அன்று திறந்துவிடப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம், அருள்மிகு தாணுமாலயசுவாமி திருக்கோயிலில் 49 திருப்பணி வேலைகள் ரூ.136.40 இலட்சம் செலவில் திருப்பணி வேலைகள் நடைபெற்று, 9.4.2004இல் குடமுழுக்கு நடத்தப்பட்டது.

திருநெல்வேலி நெல்லையப்பர் திருக்கோயிலில் ரூ.150 இலட்சம் செலவில் திருப்பணி வேலைகள் நடைபெற்று 7.4.2004இல் திருக்குடமுழுக்கு நடைபெற்றது.

திருக்கோயில்களில் நடைபெறும் பல்வேறு திருப்பணிகள் மற்றும் கட்டுமானப் பணிகளுக்கு 676 திருக்கோயில்களில் 1,086 பணிகளுக்கு ரூ.5,646.79 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்றுள்ளது.

இத்துறை ஆளுகையின் கீழ் இல்லாத ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியில் உள்ள திருக்கோயில்களின் திருப்பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/– வீதம் 2001–02ஆம் ஆண்டில் 50 திருக்கோயில்களுக்கும், 2002–2003ஆம் ஆண்டில் 100 திருக்கோயில்களுக்கும், ஆகமொத்தம் 150 திருக்கோயில்களுக்கு ரூ.37.50 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேலும் 6,500 திருக்கோயில்களுக்கு, திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/– வீதம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

கிராமப்புற பகுதியில் உள்ள திருக்கோயில்களின் திருப்பணித் திட்டத்தின் கீழ் 2001–2002ஆம் நிதியாண்டிற்கு 100 திருக்கோயில்களுக்கும், 2002–2003ஆம் நிதியாண்டிற்கு 100 திருக்கோயில்களுக்கும் தலா ரூ.25,000/– வீதம் ரூ.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 2003–2004ஆம் நிதியாண்டிற்கு 100 திருக்கோயில்களுக்கு ரூ.25 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

திருக்கோயில்களில் திருப்பணிகள் முடித்து கடந்த மூன்றாண்டுகளில் 3,195 திருக்கோயில்களில் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டுள்ளது. சுமார் 18 ஆண்டு காலம் கடந்த நிலையில் திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலில் சுமார் ரூ.300 இலட்சம் செலவில் அனைத்து திருப்பணிகளும் மேற்கொள்ளப்பட்டு 27.6.2002 அன்று குடமுழுக்கு வெகு சிறப்பாக நடைபெற்றது. சுமார் 450 ஆண்டுகளுக்குப் பிறகு ரூ.20 இலட்சம் செலவில் புராதன சிறப்புமிக்க ஆயிரங்கால் மண்டபம் புதுப்பிக்கப்பட்டு சீரமைக்கப்பட்டது. இது தவிர சுமார் ரூ.85 இலட்சம் செலவில் சுவாமி மற்றும் அம்பாள் சன்னதி கொடி மரங்கள் தங்க ரேக்குகள் ஒட்டப்பட்டு புதுப்பிக்கப்பட்டது. இத்திருக்கோயிலின் அலங்கார மண்டபம் ரூ.107 இலட்சம் செலவில், புதிதாக கட்டப்பட்டு, 7.10.2003 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

காஞ்சிபுரம் மாவட்டம், திருத்தணி வட்டம் மற்றும் நகரில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயிலில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் பல்வேறு திருப்பணிகள் மேற்கொள்ளப் பட்டு, கடந்த 6.7.2003 அன்று கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

ஒரு கால பூஜை முறையாக நடத்திட இயலாத நிதிவசதியற்ற திருக்கோயில்களுக்கு ஒரு கால பூஜை முறைப்படி நடத்திட கடந்த மூன்றாண்டுகளில் 1,550 திருக்கோயில்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

சிவன்மலை அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயிலில் புதிய தங்க ரதம் ரூ.57 இலட்சம் மதிப்பிலும், மருதமலை அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயிலில் ரூ.111 இலட்சம் மதிப்பிலும் புதிய தங்க ரதம் செய்யப்பட்டது.

சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்கு ரூ.22.30 இலட்சம் மதிப்பில் புதிய தேர் செய்யப்பட்டு, 8.4.2002–லும், மயிலாடுதுறை நகர், அருள்மிகு மாயூரநாதசுவாமி திருக்கோயிலுக்கு ரூ.22.50 இலட்சம் மதிப்பில் தேர் திருப்பணி செய்யப்பட்டு, 15.11.2003–லும், காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் அருள்மிகு பாஷ்யகாரசுவாமி திருக்கோயிலுக்கு ரூ.35 இலட்சம் மதிப்பில் புதிய தேர் செய்யப்பட்டு, 4.4.2004–லும் தேரோட்டம் நடத்தப்பட்டது.

சென்னை, திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயிலில், சுமார் ரூ.25 இலட்சம் மதிப்பில் புதிய தேர் செய்யும் பணி நடைபெற்றுவருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் மொத்தம் 118 திருத்தேர்கள் பழுது பார்க்கப்பட்டு சீரமைக்கப்பட்டுள்ளன. **"கிராமக்கோயில் பூசாரிகள் ஒய்வூதிய தேர்வுக் குழுவினரால்" இத்துறை நிர்வாகத்தின் கீழ் இல்லாத திருக்கோயில்களில் பணிபுரிந்து ஒய்வு பெற்ற பூசாரிகளுக்கு 1.5.2001 முதல் நபர் ஒருவருக்கு ரூ.500/– வீதம் 1.5.2001 முதல் 31.3.2004 முடிய மொத்தம் 1,186 ஒய்வுபெற்ற பூசாரிகளுக்கு ஒய்வூதியம் வழங்க அனுமதிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது.**

திருக்கோயில்களில் பணியாற்றி ஒய்வு பெற்ற அர்ச்சகர்கள், இசைக்கலைஞர்கள், ஓதுவார் ஆகியோருக்கு ஒய்வூதியம் வழங்கும் திட்டத்தின்படி, கடந்த இரண்டரை ஆண்டுகளில் 6 ஓதுவார்கள், 2 வேத பாராயணர்கள், 11 இசைக் கலைஞர்கள், 110 அர்ச்சகர்கள், ஆகியோர்களுக்கு ஒய்வூதியம் ரூ.500 வீதம் தொடர்ந்து வழங்க அனுமதிக்கப்பட்டு பயனடைந்து வருகின்றனர்.

திருக்கோயில்களுக்குச் சொந்தமான இடங்களில் 557 பழைய நந்தவனங்கள் சீரமைக்கப்பட்டும், புதியதாக 336 நந்தவனங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. திருக்கோயில்களுக்குச் சொந்தமான தரிசு நிலங்களில் 4,89,359 மரங்கள் நடப்பட்டுள்ளன. 600 திருக்கோயில் திருக்குளங்கள் தூர்வாரப்பட்டு சீரமைக்கப்பட்டன. 1,232 திருக்கோயில் திருக்குளங்களிலும், 106 குட்டைகளிலும் மழைநீர் சேகரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த மூன்று ஆண்டுகளில் 1,928 திருக்கோயில்களுக்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, யானைகள் புத்துணர்ச்சி முகாம் முதுமலை வனச்சரணாலயத்தில் 2003 நவம்பர் 16ஆம் நாள் தொடங்கப்பட்டு, மொத்தம் 100 யானைகள் இம்முகாமில் கலந்து கொண்டன. இம்முகாமில் நல்ல மருத்துவ சிகிச்சைகளும், இயற்கையான சூழ்நிலையில் நல்ல சத்துணவும், சிறப்பான பயிற்சிகள், ஆற்றுக் குளியல் போன்ற அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, இப்புத்துணர்ச்சி முகாம் ஆண்டுதோறும் 45 நாட்களுக்கு நடத்தப்படும்.**

12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் மகாமகப் பெருவிழா கும்பகோணம் மாநகரில் 2004 மார்ச் மாதம் 6ஆம் நாள் சிறப்பாக நடத்தப்பட்டது.

பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில், பக்தர்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றிடும்பொருட்டு, தொங்கு உந்து (ரோப் கார்) நிறுவும் திட்டம் ரூ.388 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

உபரி நிதி வசதிமிக்க 7 திருக்கோயில்களின் நிதியிலிருந்து, நிதி வசதியற்றதும், பாடல் பெற்றதும் / மங்களாசாசனம் பெற்றதுமான 17 திருக்கோயில்களின் கால பூஜைகள் நடத்துவதற்கான திட்டம் பரிசீலிக்கப்பட்டு, தற்பொழுது உபரி நிதி வசதி மிக்க 2 திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து, 10 நிதி வசதியற்ற திருக்கோயில்களின் கால பூஜைகள் நடத்த ஆவன செய்யப்பட்டுள்ளது. நிதி வசதியற்ற 13 திருக்கோயில்களின் திருப்பணிகளை, 5 நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து மேற்கொள் வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖



# வரிச்சலுகை வழங்கிய வணிகவரித்துறை

வணிகவரித்துறையில் 2001–2002ஆம் நிதியாண்டில், 2.78 விழுக்காடாக இருந்த வளர்ச்சி விகிதம், 2002–2003ஆம் நிதியாண்டில் 14.55 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. 2003–2004ஆம் நிதியாண்டில் வளர்ச்சி விகிதம் 15.27 சதவிகிதமாக உள்ளது.

2003–2004ஆம் ஆண்டிற்கான வருவாய் 98 சதவிகிதமாக எட்டப்பட்டுள்ளது.

2001–2002ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அனைத்து இனங்களுக்கும், சமச்சீர் வரிவிகிதம் முழுமையாக அமலாக்கப்பட்டது. மேலும்,

அ) பதிவுத் தொகை மாற்றம்.

ஆ) பொருட்களின் பிரிவுகள் மாற்றியமைக்கப்பட்டு வரி விகிதம் திருத்தியமைப்பு

இ) 1.7.2002 முதல் உள் கட்டமைப்பு மேல் வரி 5 சதவிகிதமாக விதிக்கப்பட்டது.

ஈ) மதிப்புக் கூட்டு வரி அமலாக்கத்திற்கு முன்னோடியாக மறு விற்பனை வரி 1 சதவிகிதம் 1.7.2002 முதல் விதிக்கப்பட்டது.

உ) வரி ஏய்ப்பினைத் தவிர்க்கவும், உள் மாநிலத் தொழில் நிறுவனங்களைப் பாதுகாக்கவும், சுமார் 23 அத்தியாவசிய வரி ஏய்ப்பு பொருட்களின் மீது நுழைவு வரி விதிக்கப்பட்டது.

ஊ) ஆடம்பர வரிச் சட்டத்தின் கீழ் 1.7.2002 முதல் தங்கம், வெள்ளி நகைகள் மற்றும் மதிப்புமிக்க கற்கள் மீதான இருப்பின் மீது 1 சதவிகிதம் ஆடம்பர வரி விதிக்கப்பட்டுள்ளது.

எ) வரி வழக்குகளையும், பூசல்களையும் குறைக்க புதிய சமாதானத் திட்டம் 1.7.2002 முதல் 31.10.2002 வரை அமல்படுத்தப்பட்டு இதன்மூலம் ரூ.10.43 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது. ரூ.45.40 கோடி ஈடு செய்யப்பட்டுள்ளது.

## வழங்கப்பட்ட சலுகைகள்

- கரும்புச்சாறு கழிவினை உபயோகப்படுத்தி மருந்து மற்றும் இரசாயனப் பொருட்கள் தயாரிக்கும் அறிவிக்கப்பட்ட தொழிற்சாலைகளுக்கு கரும்புச் சாற்றின் கழிவு மீதான வரி விகிதம் 30 சதவிகிதத்திலிருந்து 20 சதவிகிதமாகக் குறைக்கப்படுகிறது.
- சாகோசேர்வ் மூலம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 3 சதவிகித கூடுதல் விற்பனை வரிக்கு விலக்கு அளிக்கப்பட்டு, நடப்பு ஆண்டில், வரி சதவிகிதம் 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது.
- பெட்ரோலியப் பொருட்களின் மீதான அரசின் வருவாயை அதிகரிக்கும் வகையிலும் லூப் பேஸ் எண்ணெய் மீதான கொள்முதல் வரிக்கு 7 சதவிகிதம் வரி ஈடுசெய்து கொள்ள (set off) அரசுடைமையாக்கப்பட்ட எண்ணெய் நிறுவனங் களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.
- சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேசன் லிமிடெட் என்ற நிறுவனத்திலிருந்து சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு விற்கும் மெழுகுக்கு வரி 4 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

- இயற்கை ரப்பர் வெளி மாநில விற்பனையின் மீது செலுத்தப்படும் 4 சதவிகித வரியினை தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய கொள்முதல் வரியிலிருந்து சரி செய்து கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது.

- மத்திய அரசுத்துறையாக இருந்து தற்போது அரசு நிறுவனமாக குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங் களுக்கு விற்கப்படும் தொலைச் செய்தி சாதனங்கள் மீதான வரி, 12 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

- மின்சாதனங்கள் மின்கருவிகள், மின் பொருட்கள், கையால் தயாரிக்கப்பட்ட சோப்புகள், இயந்திரத்தினால் தயாரிக்கப்பட்ட தீக்குச்சிகள் மற்றும் காகிதம் ஆகியவற்றிற்கான விற்பனை வரியிலிருந்து இப்பொருட்கள் தயாரிப்பதற்காக படிவம் 17 கொடுத்து வாங்கப்பட்ட மூலப்பொருட்களின் மீது செலுத்தப்பட்ட 3 சதவிகிதம் வரியினை ஈடுசெய்து கொள்ளும் (set off) முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

- அச்சுப்பொருட்கள் தொடர்பான வழக்குகளைக் குறைக்கும் வகையில் விற்பனையாக இருப்பினும் அல்லது ஒப்பந்தப் பணியாக இருப்பினும் 3 சதவிகிதம் இணக்க வரி செலுத்த வகை செய்யப்பட்டுள்ளது.

- சிமெண்ட் மற்றும் வெள்ளை சிமெண்ட் மீது விதிக்கப்பட்டு வந்த நுழைவு வரி விலக்கப் பட்டுள்ளது.

- ரூபாய் ஒரு கோடியாக இருந்த சுய வரிவிதிப்பு முறை ரூபாய் பத்து கோடியாக உயர்த்தப்பட்டது. வரிவிதிப்பு நிலுவையினைக் குறைக்க சம்மரி வரிவிதிப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- "டீ செர்வ்" மூலம் விற்கப்படும் தேயிலைக்கு உள் மாநில வரி 8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகவும், இடைமாநில விற்பனை மீதான வரி 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

- சுற்றுச்சுழல் பாதுகாப்பினைக் கருதி பெட்ரோலிய நிறுவனங்களுக்கு விற்கப்படும் 'எத்தனால்' மீதான உள் மாநில வரி 12 சதவிகிதத்திலிருந்து 8 சதவிகிதமாக 1.10.2003 முதல் குறைக்கப் பட்டுள்ளது.

- வணிகர்களின் கோரிக்கைகளைக் கருத்திற் கொண்டு பிளாஸ்டிக் மூலப் பொருட்கள், பி.வி.சி. ரெசின், பொட்டாசியம் குளோரேட், லேப், சோடா ஆஷ், காஸ்டிக் சோடா, குளோரின், அலுமினியம் போன்றவற்றின் மீதான நுழைவு வரி 1.7.2002 முதல் 3 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

- தமிழகத்தில் உள்ள வறட்சி நிலையினைக் கருத்திற்கொண்டு அரிசியின் மீது விதிக்கப்பட்ட 2 சதவிகித வரி விலக்கிக் கொள்ளப்பட்டது.

- தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக்கென தங்கும் விடுதிகளின் மீது விதிக்கப்பட்டு வந்த ஆடம்பர வரிவிகிதம் மற்றும் கேளிக்கைப் பூங்காக்கள் மீது விதிக்கப்பட்ட வரி விகிதம் 20 சதவிகிதத்தி லிருந்து 10 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது.

- தின்பண்டமான பேரீச்சம் பழத்தின் மீதான வரிவிகிதம் 12 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகித மாகக் குறைக்கப்பட்டது.

- சி.ஏ.பி.டி. என்ற திரவ மருந்திற்கும், எய்ட்ஸ்க்கு வழங்கப்படும் மிக முக்கிய பத்து மருந்துகளுக்கும் உயிர் காக்கும் மருந்துகளெனக் கருதி முழு வரிவிலக்கு வழங்கப்பட்டது.

- சுற்றுச்சூழல் பாதிப்பைத் தடுக்கும் கருவிகளுக்கு வரிவிகிதம் 12 விழுக்காட்டிலிருந்து 4 விழுக் காடாக குறைக்கப்பட்டுள்ளது.

- கைவினைப் பொருட்கள் மீதான வரி விகிதத்தை 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது.

- இந்திய இசைக் கருவிகளுக்கு முழு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

- கோழித்தீவனம் தயார் செய்யப் பயன்படும் சுண்ணாம்புக்கல் மீதான விற்பனை வரி 12 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

- கூட்டுறவு நிறுவனங்கள் விற்பனை செய்யும் நுகர்வோர் பொருட்கள் மீதான ஒரு சதவிகித மறு விற்பனை வரி ரத்து செய்யப்பட்டது.

- மத்திய அரசின் நிறுவனமான எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனம் (ONGC) தமிழ்நாடு மின் வாரியத்திற்கு விற்கும் இயற்கை எரிவாயுவின் மீதான விற்பனை வரியை 8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைத்தும், மற்றொரு மத்திய அரசு நிறுவனமான கேஸ் அதாரிட்டி ஆப் இந்தியா லிட்., (GAIL) விற்கும் இயற்கை வாயுவின் இரண்டாம் விற்பனைக்கு ஒரு சதவிகித மறு விற்பனை வரி விலக்கும் வழங்கப்பட்டது.

- கணினி உபரிப் பொருட்களின் இடைமாநில விற்பனை மீதான மத்திய விற்பனை வரி 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது.

- வரி ஏய்ப்பினைத் தவிர்க்கவும், உள் மாநிலத் தொழில்களைப் பாதுகாக்கவும், வரி வருவாயைப்

பெருக்கவும், 1.12.2001 முதல் 6 இனங்களுக்கும், 21.3.2003 முதல் 2 இனங்களுக்கும், 27.3.2002 முதல் மேலும் 18 இனங்களுக்கும், 1.10.2003ல் ஒரு இனத்திற்கும், நுழைவு வரி விதிக்கப் பட்டுள்ளது.

- சுற்றுச்சூழல் பாதுகாப்பினைக் கருத்திற் கொண்டும், வெள்ளை மண்ணெண்ணெய் மீது டீசலுக்கு இணையாக 25 விழுக்காடு வரி விதிக்கப்பட்டுள்ளது.

- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மது வகைகள், வெள்ளை மண்ணெண்ணெய் ஆகியவற்றை எடுத்துச் செல்வதற்கென நுழைவுச்சீட்டு முறை (Transit pass) அமலாக்கப்பட்டுள்ளது.

- செயலாக்கக் குழுவினர் கடந்த ஆண்டுகளில் இணக்கக் கட்டண வசூல், முன்வரி வசூல், வரி, தண்டத்தொகை வசூல் போன்றவற்றின் மூலம் 31.3.2002ல் ரூ.29,505.81 இலட்சமும், 31.3.2003ல் ரூ.93,727.71 இலட்சமும், 31.3.2004–ல் ரூ.75,562.59 இலட்சமும் வசூல் செய்யப் பட்டுள்ளது.

- **வரி ஏய்ப்பு தொடர்பான தகவல்களை வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் பெறும் பொருட்டு தகவல் பரிமாற்றக் குரல் பதிவு செய்யும் கருவி வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் பொருத்தப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 20.2.2004 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.**

- **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 20.2.2004 அன்று வணிகவரித் துறையைச் சார்ந்த நான்கு அலுவலர்களுக்கு தலா ரூ.25,000/– வீதம் ரூபாய் ஒரு இலட்சம் ரொக்கப் பரிசுடன் சிறப்புப் பணிச் சான்றிதழும் வழங்கப்பட்டது.**

- **வணிகவரித் துறைக்கு புதிதாக 36 வாகனங்கள் 20.2.2004 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன.**

- வணிகவரித் துறைக்கென ஒரு நிலையான இணைய தளம் (www.tnsalestax.com) ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- வணிகர் நல வாரியம், மாற்றியமைக்கப்பட்டு, அலுவல் சார் உறுப்பினர்களைத் தவிர 16 அலுவலர் சாரா உறுப்பினர்களை நியமிக்க அரசாணையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ரூபாய் 2 கோடி இவ்வாரியத்திற்கு நிதியாக வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது. இந்த 2 கோடியில், 1.95 கோடி ரிசர்வ் வங்கியில் பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. ரூபாய் 5 இலட்சம் வாரியத்தின் நடவடிக்கைக்கென ஒதுக்கப் பட்டுள்ளது.

## பதிவுத்துறை

கடந்த மூன்று ஆண்டுகளில் பதிவுத்துறை வருவாய் பின்வருமாறு ஈட்டப்பட்டது. அதாவது, 2001–02ல் ரூ.1,264.20 கோடி, வளர்ச்சி சதவிகிதம் 15.54, 2002–03ல் ரூ.1,648.86 கோடி, வளர்ச்சி சதவிகிதம் 30.43, 2003–04ல் ரூ.1,732.91 கோடி, வளர்ச்சி சதவிகிதம் 5.10.

பதிவுத்துறையில் தகவல் தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டு வெளிப்படையான விரைவான சேவை அளித்திடவும் தமிழ்நாட்டில் இதுவரை 350 அலுவலகங்கள் கணினி மயமாக்கப்பட்டு பொது மக்களுக்கு சொத்துப் பதிவு நடவடிக்கைகள் ஒரு மணிக்குள்ளாக முடித்திடும் வகையில் சேவை புரிகின்றன. சான்றுகள், சான்றிட்ட ஆவண நகல்கள் மற்றும் வடிப்புகள் கோரும் கோரிக்கைகள் தனிப்பட்ட இணையதளம் (http://tnreginet.net) வழி அனுப்பப்பட்டு அவைகள் மனுதாரரின் இல்லத்திலேயே பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.


### சமாதானத் திட்டம் 2002

மதிப்பு நிர்ணயத்திற்காக தனித்துணை ஆட்சியரிடம் (முத்திரை) நிறைய ஆவணங்கள் நிலுவையில் இருந்தமையால் 'சமாதான் திட்டம்' அறிமுகப்படுத்தப் பட்டது. இத்திட்டம் வழி சார்பதிவாளரால் ஆவணத்திற்கு கோரப்பட்டவாறு ஆட்சேபிக்கப்படும் முத்திரைத் தீர்வை/பதிவு கட்டணத்தில் 60 சதவிகிதம்மட்டுமே செலுத்தி ஆவணத்தைத் திரும்பப் பெற வசதி செய்யப்பட்டது. மொத்தமிருந்த 91,101 ஆவணங்களில் 50,694 ஆவணங்கள் ரூ.95.95 கோடி முத்திரைத்தீர்வை மற்றும் பதிவு கட்டணமாக வசூலிக்கப்பட்டு திருப்பி அளிக்கப்பட்டுள்ளன. 34,000 ஆவணங்கள் முடிவு செய்யப்பட்டு ரூ.34.56 கோடி வருவாய் ஈட்டப்பட்டது.

முத்திரைத் தீர்வையை 6 சதவிகிதம் எனவும், மிகுவரியை 2 சதவிகிதம் எனவும் அரசு குறைத்துள்ளது. இந்த நடவடிக்கை தொழில் வளர்ச்சி மற்றும் கட்டுமான நடவடிக்கைகளை அதிகமாக்கும்.

சாதாரண அடைமானம் – தீர்வை 4 சதவிகிதத் திலிருந்து 1 சதவிகிதம் ஆக குறைக்கப்பட்டு உச்ச தீர்வை ரூ.20,000/– மற்றும் பதிவுக் கட்டணம் 1 சதவிகிதத்தில் உச்ச கட்டணமாக ரூ.5000 ஆக குறைக்கப்பட்டது. சுவாதீன அடைமானம் – தீர்வை மற்றும் மிகுவரி 3 சதவிகிதம் மற்றும் 1 சதவிகிதம் குறைக்கப்பட்டுள்ளது. பதிவுக் கட்டணம் 1 சதவிகிதத்தில் உச்ச வரம்பு ரூ.2 இலட்சமாக்கப் பட்டுள்ளது. உரிமை ஆவணங்கள் வைப்பீடு – முத்திரைத் தீர்வை 0.5 சதவிகிதத்தில் உச்ச தீர்வை ரூ.5,000 பதிவுக் கட்டணம் 1 சதவிகிதத்தில் உச்ச கட்டணம் ரூ.1,000. கைமாற்றுத் தொகையின் பேரிலான அதிகார ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை 4 சதவிகிதம் ஆக குறைக்கப்பட்டுள்ளது. ❖

# சாதனை ஏட்டில் சரித்திரப் பதிவுகள்



முதுமலை வனவிலங்கு சரணாலயம் தெப்பக்காட்டில் 12 ஏக்கர் நிலப்பரப்பில் 100 யானைகளுக்கு புத்துணர்வு முகாம் 16–11–2003 முதல் 30 நாட்கள் நடைபெற்றது.



குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கும் திட்டம்



சத்துணவில் கருவேப்பிலை, முருங்கை இலைப் பொடி வழங்கும் திட்டம் (12–11–2003)




சென்னை அரசு அருங்காட்சியகத்தின்
151ஆவது ஆண்டு விழா
மேதகு இந்தியக் குடியரசுத்தலைவர் அவர்கள்
பங்கேற்பு (19-6-2003)




சிறுவர்களிடையே
நற்பண்புகளை வளர்க்க
காவலர் சிறார் மன்றங்கள்
தொடக்கம் (17-9-2003)




புதிய தொழில்வாய்ப்புகள்
பற்றிய கருத்தரங்கம்
(15-10-2003)




ரூ.5 இலட்சம் மற்றும் தங்கப்பதக்கத்துடன்
கல்பனா சாவ்லா விருது வழங்கல்
(15–8–2003)



மகளிர் காவலர்களுக்கான
குழந்தைகள் நல காப்பகங்கள் திறப்பு
(27–1–2003)



இந்தியாவிலேயே முதன்முறையாக
தட்டம்மை, புட்டாலம்மை தடுப்பூசித் திட்டம்
தொடக்கம் (10–10–2003)




அரசு மருத்துவமனைகளுக்கு
அல்ட்ரா ஸ்கேன் கருவி வழங்கல்
(17–4–2003)

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுடன் பன்னாட்டினர் சந்திப்பு




இந்தியாவிற்கான அமெரிக்க தூதர்
திரு.ராபர்ட் டி. பிளாக்வில் அவர்கள்
(6-11-2002)



சென்னையில் நடைபெற்ற
இந்திய மற்றும் ஆசியா தகவல் தொழில்நுட்பம் -
மென்பொருள் தொழில் வளர்ச்சி கருத்தரங்கம்
(11-11-2002)



ஜெர்மன் நாட்டு ஒக்ஸ்வேகன்ட் கார் நிறுவன தயாரிப்பு
நிறுவனத்தலைவர் டாக்டர் எல்மத் ஸ்விஸ்டர் அவர்கள்
(12-3-2003)




உகாண்டா நாட்டின் துணை ஜனாதிபதி
திரு. இஸ்பிகோஸா வாண்டிரா அவர்கள்
(5-3-2003)



நேபாள மன்னர் ஸ்ரீஞானேந்திரா,
ராணி கோமல் ராஜ்யலக்ஷ்மி தேவிஷா
ஆகியோருக்கு வரவேற்பு (22–3–2003)



அரசுத்துறையில் மின்னணு நிருவாகத்திற்காக
அமெரிக்காவின் சன்மைக்ரோ சிஸ்டத்துடன்
புரிந்துணர்வு ஒப்பந்தம் (22–3–2003)




இந்தியத் தொழில் வர்த்தக சங்கக் கூட்டமைப்பின்
தேசியக் குழு சார்பில் முதலீட்டாளர்களுக்கு
ஏற்ற மாநிலமாக தமிழகத்தை மாற்றுவது குறித்த
கருத்தரங்கம் (1–7–2003)




ஜப்பான் நாட்டின் தூதர்
திரு. அகிரா ஆயாஷி அவர்கள்
(19–3–2003)





சென்னையில் அமெரிக்க பன்னாட்டுப் பள்ளித் திறப்பு (25-9-2003)



புதுடெல்லியில் உள்ள
பிரிட்டிஷ் ஹைகமிஷனர்
திரு. சர் ராப் யங்,
துணை ஹை கமிஷனர்
திரு. ஸ்டூவர்ட் இன்னஸ் ஆகியோர்
(29-9-2003)



பிரிட்டிஷ் ஏர்வேஸ் நிறுவனத்தைச் சேர்ந்த
திரு. டேவிட் ரிச்சர்ட்சன் அவர்கள்
(21-4-2003)



வாஷிங்டனில் உள்ள
உலக வங்கித் துணைத்தலைவர்
திரு. ஃபெய்சூல் எச். சவுத்ரி அவர்கள்
(17-11-2003)



பன்னாட்டு மருத்துவ வல்லுநர்கள்
(12-11-2003)

நியுயார்க்கில் உள்ள
ஐ.நா. வளர்ச்சித் திட்ட அமைப்பினர்
(13-11-2003)





லண்டன் தொழிலதிபர்
திரு. லாட் ஸ்வராஜ்பால் அவர்கள்
(1-1-2004)

அமெரிக்க நார்த்வெஸ்டன்
பல்கலைக்கழக பேராசிரியர்
திரு.வி பாலசந்திரன் அவர்கள்
(1-1-2004)





தூத்துக்குடியில் ரூ.4 ஆயிரம் கோடியில்
அனல் மின் நிலையம் அமைப்பதற்கான
ஒப்பந்தம் (19–6–2003)



சென்னையில், சுற்றுலா வளர்ச்சிக்கான
64ஆவது ஸ்கால் பன்னாட்டு மாநாடு
(20–10–2003)



மாநில ஊட்டச்சத்து கொள்கை
வெளியீடு (12–11–2003)



எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகத் தலைவர்
திரு. சுபீர்ரஹா சந்திப்பு
(17–11–2003)



# வியத்தகு தொழில் வளர்ச்சி

தமிழ்நாட்டின் பன்முக தொழில் வளர்ச்சி தமிழக பொருளாதாரத்திற்கு பெரும் வலிமையாக இருந்து வருகிறது. இம்மாநிலம் தொழிற்சாலைகளுக்கு போதுமான ஆற்றலை வழங்கியும், தேர்ச்சி பெற்ற மனித ஆற்றல் வளம் நிரம்பியும், தொழில் உறவுகளில் இணக்கமான சூழ்நிலை நிலவியும் விளங்குவதோடு தொழிலாளர் வேலை நிறுத்தம் இன்மை இங்கு வாழ்வோரிடையே நல்ல தரமான பணிச்சூழலையும் அமைதியான வாழ்க்கை முறையினையும் வழங்கி வருகிறது. இவை அனைத்திற்கும் மேலாக, தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல உறுதி பூண்டுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், ஆக்கபூர்வ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

❖ சுப்ரீம் சுகுணா புட்ஸ் லிமிடெட், உடுமலைப்பேட்டை திட்ட முதலீடு – ரூ.11 கோடி செலவில் கூட்டுத்துறைக்கான ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டு முழு வீச்சில் நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

❖ கோல்டன் ப்ரைஸ் லிமிடெட் மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர் திட்ட முதலீடு ரூ.38.68 கோடியில் திட்டம் முடிவு பெற்று ஏற்றுமதியும் செய்யப்பட்டு வருகிறது.

❖ மஹேந்திரா இண்டஸ்ட்ரியல் பார்க், மறைமலை நகர் திட்ட முதலீடு ரூ.233 கோடியில் பூங்கா தொடங்கப் பட்டது.

❖ தமிழ்நாடு வர்த்தக மேம்பாட்டு நிறுவனம், சென்னை திட்ட முதலீடு ரூ.26.84 கோடியில் உலகத் தரம் வாய்ந்த கருத்தரங்கு மைய கட்டடப் பணிகள் நடந்து வருகிறது.

❖ டைசல் பயோ பார்க் லிமிடெட், தரமணி, சென்னை திட்ட முதலீடு ரூ.62.5 கோடியில் திட்டம் உருவாக்கப்பட்டு கட்டடப் பணிகள் நடைபெற்று வருகிறது.

❖ நர்மதா டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், ஈரோடு திட்ட முதலீடு ரூ.76.87 கோடியில் கூட்டுத் துறை ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு மாதிரி உற்பத்தி ஆரம்பம்.

❖ டான்ப்ளோரா மலர் கட்டமைப்பு பூங்கா, ஒசூர், தர்மபுரி திட்ட முதலீடு ரூ.24.85 கோடியில் மாதிரி பண்ணை அமைப்புகள் கட்டி முடிவு பெற்று, கடன் வசதிகள் ஏற்பாடு, மத்திய பதப்படுத்தும் அரங்கத்தின் கட்டடப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

❖ சென்னை தரமணியில், புதிய தகவல் தொழில் நுட்ப பூங்கா உருவாக்க கூட்டுத் துறைக்கான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

❖ சிறப்பு பொருளாதார மண்டல கொள்கை(SEZ Policy) அறிவிக்கப்பட்டுள்ளது.

❖ டிட்கோவின் கூட்டுத்தொழில் நிறுவனங்களான தமிழ்நாடு பெட்ரோப்ராடக்ஸ் லிமிடெட் (Tamilnadu Petroproducts Limited)டிசம்பர் 2001இல் DNV என்ற நிறுவனத்தின் பெருமைக்குரிய ஐஎஸ்ஓ (ISO) 14001 சான்றிதழை டிபிஎல் நிறுவனத்தின் க்ளோர் அல்கலி பிரிவிற்கு வழங்கப்பட்டது. மேலும் இதற்கு காப்புக் கழகத்தின் 2002–03 தேசிய காப்பு விருதுகள் LAB மற்றும் க்ளோர் அல்கலி பிரிவிற்கு வழங்கப்பட்டது. அத்துடன் மத்திய அரசின் விஞ்ஞானம் மற்றும் சுற்றுச்சூழலுக்கான பசுமை மதிப்பீடு செய்யும் திட்டம் வழங்கும் பெருமைக்குரிய மூன்று இலைகள் விருது க்ளோர் அல்கலி பிரிவிற்கு வழங்கப்பட்டது.


❖ டைட்டான் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் (Titan Industries Limited)க்கு 2001 ஆம் ஆண்டிற்கான FICCI யின் சமூக ஏற்புத்தன்மைக்கான விருது வழங்கப் பட்டது.

❖ 2002ஆம் ஆண்டில் ஊனமுற்றோருக்கு மிகவும் அதிக அளவில் வேலை வாய்ப்புகள் வழங்கியதை பாராட்டும்



வகையில், தமிழக அரசின் "மிகவும் சிறந்த அமர்த்துனருக்கான" விருது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

❖ டான்ஃபாக் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்(TANFAC Industries Limited)க்கு ஜப்பான் நாட்டின் JIPM நிறுவனத்தால் நிலையான முழுமையான ஆலை பராமரிப்புப் பணிகளில் முதல் பிரிவிற்கான 2002



❖ தமிழ்நாடு கனிம நிறுவனம் கல்வி செலவு ஈடு செய்யும் திட்டத்தின் கீழ் அனைத்து ஊழியர்களுக்கும், தொழிலாளர் களுக்கும் ஆண்டு ஒன்றுக்கு இரண்டு குழந்தைகளுக்கு குழந்தை ஒன்றுக்கு ரூ.1000/– வீதம் வழங்கி வந்ததை தற்பொழுது ரூ.2000/– ஆக உயர்த்தி உள்ளது. இதனால் மொத்தம் 1500 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

ஆம் ஆண்டிற்கான சிறப்பாக செயல்பட்டமைக்கான சிறப்பு விருதும், நிலையான பாதுகாப்பு வழங்கியதை கௌரவிக்கும் வகையில் தமிழக அரசிடமிருந்து மூன்று விருதுகளும் கிடைத்துள்ளன.

❖ தகவல் தொழில் நுட்ப பூங்கா (TIDEL Park)க்கு உட்கட்டமைப்பு மற்றும் இதர சேவைகளை மேம்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட மேலாண்மை சேவைகளுக்கு ISO-9001-2000 சான்றிதழ் 29.3.2002இல் வழங்கப்பட்டது.

❖ தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் சுழற்சி முறை திட்டத்தின் கீழ் வட்டி விகிதம் சிறு தொழில் முதலீட்டாளர்களுக்கு 18 சதவிகிதத்திலிருந்து 15.25 சதவிகிதமாகவும், மற்ற தொழில் முதலீட்டாளர் களுக்கு 23 சதவிகிதத்திலிருந்து 16 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. இதனால் 31.12.2003 வரை 1,733 கடனாளிகள் பயனடைந் துள்ளனர்.

❖ வேறுபாடற்ற மற்றும் விருப்புரிமையற்ற ஒருமுறைத் தீர்வை 31.3.2004 வரை செயல்பட்டது. இதன்மூலம் 1822 கடனாளிகள் பயனடைந்துள்ளனர். மேலும் ரூ.10 இலட்சத்திற்கு கடன் பெற்றோருக்கு ஒருமுறைத் தீர்வை திட்டமும் உள்ளது. இத்திட்டம் 27.2.2004 வரை நடைமுறையில் இருந்தது. இதன் மூலம் 127 கடனாளிகள் பயன் பெற்றுள்ளனர்.

❖ தேசிய பங்கு மூலதனம், ஐ.எஸ்.ஒ. சான்றிதழ் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட கடன்களுக்கு 2003–2004 வரவு செலவு திட்டத்தில் அரசு 3 சதவிகிதம் வட்டி மானியம் அறிவித்துள்ளது.

❖ 2003–2004 ஆம் ஆண்டில் தொழிற்சாலைகளை தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் நவீனமயமாக்கு தலுக்காக சலுகை வட்டிவிகிதத்தில் ரூ.17.97 கோடி 103 தொழில் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டது. 2003–04ஆம் ஆண்டில் மரபுசாரா எரிசக்தித் துறையின் கீழ் 7 காற்றாலைகளுக்கு ரூ.18.10 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. சிட்பி (SIDBI) வங்கியிலிருந்து சலுகை வட்டி விகிதத்தில் தனியாக நிதியுதவி பெறப்பட்டது.

❖ 2001–2002ஆம் ஆண்டில் டாமின் குவாரிகளில் மொத்தம் 23,335 க.மீ கிரானைட் கற்கள் வெட்டியெடுக்கப் பட்டுள்ளது. 2002–2003 ஆம் ஆண்டில் கிரானைட் கற்களின் உற்பத்தியானது 29,066 க.மீ ஆக அதிகரித்துள்ளது. 2003–2004 ஆம் ஆண்டில் கிரானைட் கற்களின் உற்பத்தி 35,057 க.மீட்டராக உயர்ந்துள்ளது.

❖ 2001–2002 ஆம் ஆண்டில் 21,776 க.மீ கிரானைட் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 2003 –2004 ஆம் ஆண்டில் புதிய சாதன்ன அளவான 43,938 க.மீ உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

❖ நடப்பு ஆண்டில் குவாரிகளின் இயக்கம் 54 ஆக உயர்ந்துள்ளது.

❖ சிவகங்கை கிராபைட் செழுமைப்படுத்தும் தொழிற்சாலை 2001–2002இல் 4,554 மெட்ரிக் டன் செழுமைபடுத்திய கிரானைட் உற்பத்தி செய்து ரூ.5.18 கோடி மதிப்புள்ள 4,011 மெட்ரிக் டன் விற்பனை செய்து முதன் முறையாக ரூ.43.33 இலட்சம் ரொக்க இலாபம் ஈட்டியுள்ளது.

❖ 4,830 மெட்ரிக் டன் செழுமைப்படுத்திய கிரானைட் உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளது. ரூ 6.18 கோடி மதிப்புள்ள 4,625 மெட்ரிக் டன் விற்பனை செய்து சாதனை படைத்துள்ளது. மேலும் உற்பத்தி மீட்பானது 70 விழுக்காட்டிலிருந்து 79 விழுக்காடாக உயர்ந்துள்ளது.

❖ இத்தொழிற்சாலை முதன் முறையாக ரூ.116 இலட்சம் ரொக்க இலாபமும்,ரூ.5 இலட்சம் நிகர இலாபமும் ஈட்டியுள்ளது. 2003–04ஆம் ஆண்டில் இத்தொழிற் சாலை ரூ.7.3 கோடி (தணிக்கை செய்யப்படாதது) அளவிற்கு விற்பனை செய்து சாதனை படைத்துள்ளது.

❖ 2002–2003 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.2 கோடி செலவில் ஒரு புதிய பல ரம்ப இயந்திரத்தையும், ஒரு

காலிப்ரேஷன் இயந்திரத்தையும் மாதேப்பள்ளி கிரானைட் ஓடுகள் தயாரிக்கும் தொழிற்சாலையில் நிறுவி நவீன மயமாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இத்தொழிற்சாலையின் உற்பத்தி திறன் ஆண்டொன்றுக்கு 21,300 ச.மீட்டரிலிருந்து 33,600 ச.மீ. ஆக அதிகரித்துள்ளது. 2003–04ஆம் ஆண்டில் இத்தொழிற்சாலை ரூ.160 இலட்சம் (தணிக்கை செய்யப்படாதது) அளவிற்கு விற்பனை செய்துள்ளது.

❖ 2001–02ஆம் ஆண்டில் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம், 24.62 மெகாவாட் திறன் கொண்ட நான்காவது மின் உற்பத்தி இயந்திரத்தை நிறுவியது. உற்பத்தியில் 100 சதவிகிதம் தன்னிறைவு பெற்றுள்ளது.

❖ **தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் இந்தியாவிலேயே ஓரிடத்தில் இயங்கும் முதல் பெரிய ஆலையாகவும், ஒட்டுமொத்த உற்பத்தித் திறனில் இரண்டாம் பெரிய ஆலையாகவும் விளங்குகிறது.**

❖ 2001–2002ஆம் ஆண்டில், வரிக்குப்பின் நிகர இலாபம் ரூ.35.31 கோடியும், 2002–2003ஆம் ஆண்டில் ரூ. 52.04 கோடியும், 2003–2004ஆம் ஆண்டில் (டிசம்பர் 2003 வரை) ரூ.44.67 கோடியும் ஆகும்.

★ **RWTUV என்ற ஜெர்மனி நிறுவனம். 2003ஆம் ஆண்டில் இந்நிறுவனத்திற்கு ISO 9001:2000 சான்றிதழை வழங்கியது.**

❖ இந்நிறுவனத்தின் ஏற்றுமதி சாதனையைப் பாராட்டும் வகையில், மத்திய அரசின் CAPEXIL அமைப்பு 2002–2003ஆம் ஆண்டில் சிறப்பு ஏற்றுமதி விருதினை வழங்கியது. இவ்விருது தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக இந்நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

❖ பிப்ரவரி 2002இல் இந்நிறுவனம் ISO 14001 தரச் சான்றிதழைப் பெற்றது.

❖ இந்நிறுவனம் பிப்ரவரி 2003இல், சி.ஐ.ஐ.–ன் உயர்ந்த மற்றும் தலைமை அங்கீகரிப்பு சான்றிதழைப் பெற்றது.

## அறிவுத்திறன் தொழில் நகரியம்

❖ **சிங்கப்பூர் கீம்டா ஹோல்டிங்ஸ் குழுமம், நிறுவனத்தினர் சுமார் 102 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய ஒருங்கிணைந்த அறிவுத் திறன் சார்ந்த தொழில் நகரியத்தை சிறுசேரியில் சிப்காட் தகவல் தொழில் நுட்பப் பூங்காவில் உருவாக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் 16.9.2003 அன்று ஒப்பந்தம் கையெழுத்தானது.**

❖ பெரிய தொழிற் சாலைகள் 2001–2004ஆகிய மூன்று ஆண்டுகளில் பிராக்ஸ் ஏர் லிமிடெட் (அமெரிக்கா நிறுவனம்), சான்சா லிமிடெட் (எம்என்சி), சிறுசேரி, டாடா கன்சல்டன்ஸி சர்வீசஸ், ஏசியன் பெயின்ட்ஸ், பிரிமியர் டெக்ஸ்டைல்ஸ், லீ கீம் டா ஹோல்டிங், அசாஹி கிளாஸ் ஓரியன் டெக்ஸ், போலாரிஸ் ஆகிய தொழிற் சாலைகளுக்கு நிலஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

❖ 2002–2003இல் இந்நிறுவனம் 8,073 மெட்ரிக் டன்கள் நைட்ரோ கிளிசரின் வெடிமருந்துகளை உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளது. 2003ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இந்நிறுவனம் ஐ.எஸ்.ஒ. 9001:2000 தரச் சான்றிதழைப் பெற்றுள்ளது.

❖ நைட்ரோ கிளிசரின் வெடிமருந்துகள் விற்பனை ஆண்டு விற்பனை அளவில் 70 விழுக்காட்டுக்கும் மேலாக மிகவும் பாதித்துள்ள நிலையிலும், நிறுவனம் 2003–04இல் ரூ. 42.57 கோடி விற்பனை அளவை எய்தியுள்ளது.

❖ 2001–ஆம் ஆண்டு "மே" மாதத்திலிருந்து 2003 ஆம் ஆண்டு டிசம்பர் வரையிலான வருடாந்திர மேக்னசைட் மூலப் பொருள் உற்பத்தி 16.1 சதவிகித மாக உயர்ந்துள்ளது.

❖ 2000–2001–ஆம் ஆண்டில் ரூபாய் 170 இலட்சமாக இருந்த அயோடின் கலந்த அரசு உப்பு விற்பனை, 2002–2003–ஆம் ஆண்டில் ரூபாய் 525 இலட்சமாக உயர்ந்துள்ளது. மேலும் 2003–2004ஆம் ஆண்டில் ரூபாய் 630 இலட்சமாக உயர்ந்துள்ளது.

❖ **தமிழ்நாடு உப்பு நிறுவனம் முதன்முறையாக கர்நாடகாவின் அனைத்து மாவட்டங்களுக்கும் சுமார் ரூ.79 இலட்சம் மதிப்புள்ள அயோடின் கலந்த உப்பை, 2003–2004ஆம் ஆண்டில் விநியோகித்து உள்ளது. மேலும், ஆந்திராவில் உள்ள 8 மாவட்டங்களுக்கு அயோடின் கலந்த உப்பினை வழங்குவதற்கு ஆந்திர அரசின் ஆணையைப் பெற்றுள்ளது. இந்நிறுவனம் தமிழ்நாட்டில் தொடர்ந்து பொது விநியோக திட்டத்தின் கீழ் அயோடின் கலந்த உப்பினை வழங்கி வருகிறது.**

❖ கனிம வள நிறுவனத்தின் வருவாய், 2001–2002இல், 163.12 ரூபாய் கோடியிலிருந்து 254.26 கோடியாகவும், 2002–2003ஆம் ஆண்டில் ரூபாய் 317.20 கோடியாக உயர்ந்துள்ளது. 2003–2004–ஆம் நிதியாண்டில் இத்துறையின் வருவாய் ரூ.355 கோடியாகும்.

❖ அரசும், டாடா இரும்பு மற்றும் எஃகு நிறுவனமும் 27.6.2002இல் டைட்டானியம்– டை–ஆக்ஸைடு திட்டத்திற்காக ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொண்டது. ★



# தூய்மைபேணும் சுற்றுச்சூழல்துறை

தமிழக அரசின் சுற்றுச்சூழல்துறை சீரிய பணிகளை ஆற்றி வருகிறது. தேசிய நதிநீர்த் திட்டத்தின்கீழ் காவிரி, வைகை, தாமிரபரணி ஆறுகளைத் தூய்மைப்படுத்துதல், நகர்ப்புற ஏரிகளைத் தூய்மைப்படுத்துதல் சென்னை நகரின் நீர் வழிகளின் மாசுகளைக் களைதல் ஆகிய திட்டங்களைச் செயல்படுத்துவதோடு, தேசிய பசுமைப்படை சுற்றுச்சூழல் மன்றங்கள் மூலம் விழிப்புணர்வுப் பணிகளை மேற்கொள்ளுதல், கடலோரக் கட்டுப்பாட்டு அறிவிக்கையின் வரைமுறைகளை நடைமுறைப் படுத்துதல், தமிழ்நாட்டின் சுற்றுச்சூழல் நிலை குறித்த தகவல்களை சேகரித்து, இணைய தளம் மூலம் பொதுமக்களுக்கு வழங்குதல் போன்ற பணிகளையும் செய்து வருகிறது.

★ கடந்த மூன்று ஆண்டுகளில் தேசீய நதிநீர் பாதுகாப்புத் திட்டத்தில் ரூ.678.23 இலட்சம் செலவிடப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் காவிரி ஆற்றின் கரையில் அமைந்துள்ள திருச்சி, ஈரோட்டில் 100 சதவிகித பணிகளும், குமாரபாளையத்தில் 70.72 சதவிகித பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

★ சென்னை நகரின் நீர்வழிகளில் மாசுத்தடுப்புப் பணிகளைச் செயல்படுத்த கூவம், அடையாறு, பக்கிங்ஹாம் கால்வாய், ஓட்டேரி ஓடை, காப்டன் குக் கால்வாய், மாம்பலம் கால்வாய் ஆகியவற்றில் சேரும் கழிவுநீரைத் தடுத்து நிறுத்தி குழாய் மூலம் மாற்று வழியில் எடுத்துச் செல்லும் பணிகள் சென்னைப் பெருநகர நதிநீர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ரூ.19,658.16 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. குழாய் பதிக்கும் பணியும், கழிவுநீர் சுத்திகரிப்பு பணிகளும் விரைந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

★ காவிரி, வைகை, தாமிரபரணி ஆறுகள் பாயும் ஏழு முக்கிய நகரங்களான திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், கரூர், மதுரை, மயிலாடுதுறை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் நதிநீரைத் தூய்மைப்படுத்தும் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. கடந்த மூன்று ஆண்டு காலத்தில் ரூ.11,323.59 இலட்சம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், பொதுப்பணித்துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் செலவிடப்பட்டு மதுரையில் 42.84%, கும்பகோணத்தில் 34.71%, திருநெல்வேலியில் 30.08%, தஞ்சாவூரில் 26%, மயிலாடுதுறையில் 40%, கரூர்–இனாம் கரூரில்–31%, திருச்சியில் 13% அளவு நதி நீரைத் தூய்மைப்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

★ உதகை ஏரியின் பணிகளுக்காக மார்ச் 2004 வரை ரூ.141.63 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. நுண்ணுயிர் தொழில்நுட்பத்தின் மூலம் உதகை ஏரி தற்போது தூய்மையாகியுள்ளது. ரூ.31.80 இலட்சம் செலவில் கொடைக்கானல் ஏரியில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

★ சுற்றுச்சூழல் மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்த ஏதுவாக சூழலுக்கு உகந்த முன்னோடி நகரங்களை உருவாக்கும் திட்டத்தின் கீழ் காஞ்சிபுரம் நகரம் தேர்ந்தெடுக்கப்பட்டு தேசிய சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிலையம் (NEERI) மூலமாக ரூ.2.50 இலட்சம் செலவில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

★ உலக சுற்றுச்சூழல் தினம் (ஜுன்–5), ஓசோன் தினம் (செப்–16) மற்றும் பூமி நாள் (ஏப்ரல்–22) போன்ற நாள்களில் பல விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. போகிப் பண்டிகையின் போது ஏற்படும் புகையின் அளவும், தீபாவளியின்போது ஏற்படும் புகை மற்றும் ஒலி மாசு 20 முதல் 25 சதவிகிதம் அளவில் ஒவ்வொரு ஆண்டும் குறைந்து வருகிறது.

★ தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் மொத்தம் 1,260 கல்வி நிறுவனங்களில் சுற்றுச்சூழல் மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் அவ்வப்போது கண்காட்சிகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

★ கடந்த மூன்று ஆண்டு காலத்தில் அனைத்து சுற்றுச்சூழல் விழிப்புணர்வுப் பணிகளுக்காக தமிழக அரசினால் ரூ.45. இலட்சங்கள் செலவிடப் பட்டுள்ளது.

★ தமிழ்நாட்டில் மாவட்டத்திற்கு 100 பள்ளிகள் வீதம் 29 மாவட்டங்களில் 2,900 பள்ளிகளில் தேசிய பசுமைப்படைத் தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

★ தேசிய பசுமைப்படைத் திட்டத்திற்கென கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.76.56 இலட்சம் பள்ளிகள் மூலமாக செலவிடப்பட்டுள்ளது.

★ சுற்றுச்சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மேலாண்மை மற்றும் ஆராய்ச்சிக் கட்டுரை ஆகிய பிரிவுகளில் முதற்பரிசாக ரூ.10,000 மற்றும் சான்றிதழும், இரண்டாம் பரிசாக ரூ.7,500 மற்றும் சான்றிதழும், மூன்றாம் பரிசாக ரூ.5,000 மற்றும் சான்றிதழும், சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைக்கு ரூ.5,000/–மும் பரிசாக தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் சுற்றுச்சூழல் துறையால் நடத்தப்படும் உலக சுற்றுச்சூழல் தினவிழாவின்போது வழங்கப்பட்டு வருகின்றன.

★ **சுற்றுச்சூழல் துறைக்கென தனியாக இணையதளம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் உலகச் சுற்றுச்சூழல் தினமான ஜூன் 5ஆம் தேதி 2003ஆம் ஆண்டு அன்று தொடங்கி வைக்கப்பட்டது.**

## புதிய திட்டங்கள்

★ கோவில் குன்றுகளில் சூழல்–மறு சீரமைப்பு முன்னோடித் திட்டத்தின் கீழ் வேலூர் மாவட்டத்திலுள்ள சோளிங்கர் கோவிலின் குன்றுப் பகுதிகளை ரூ.9 இலட்சம் திட்டச் செலவில் பசுமைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, தரிசாகவும், தரங்குன்றியும் உள்ள மலைப்பகுதியில் மரக்கன்றுகள் நடும் பணி வனத்துறை மூலம் ரூ.6 இலட்சம் செலவில் நிறைவு பெற்றுள்ளது.



★ சுற்றுச்சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாநிலத்தில் 60 பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் முன்மாதிரியாக மழைநீர் சேகரிப்பு, மண்புழு உரம் தயாரித்தல், மரம் வளர்த்தல், பள்ளித் தோட்டம் ஆகியவைகள் ரூ.3 இலட்சம் அரசு நிதியுதவியுடன் நிறைவேற்றப்பட்டுள்ளன.

★ சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக மாநிலத்தில் பல்வேறு பல்கலைக் கழகங்களின் வல்லுநர்களிடமிருந்து சுற்றுச்சூழல் ஆராய்ச்சிக் கருத்துருக்கள் பெறப்பட்டு, வல்லுநர் குழு மூலம் மூன்று சிறந்த கருத்துக்கள் தேர்வு செய்யப்பட்டன. அரசு ஒதுக்கிய ரூ.10 இலட்சத்தில் சென்னை, அண்ணா பல்கலைக் கழகம், கோவை பாரதியார் பல்கலைக் கழகம் மற்றும் சென்னை, சி.பி.ஆர். சுற்றுச்சூழல் கல்வி மையம் ஆகியவற்றிற்கு ரூ.9.78 இலட்சம், ஆராய்ச்சித் திட்டப் பணிகளுக்காக விடுவிக்கப்பட்டுள்ளது.

★ சுயஉதவிக் குழுக்கள் மூலமாக சுற்றுச்சூழல் மேம்பாடு செய்யும் பொருட்டு கழிவுக் காகிதங்களிலிருந்து பயனுள்ள காகிதம் தயாரித்து, காகிதப் பை போன்ற பொருட்கள் தயாரிக்கும் பணிகளை ஊக்குவிக்க ரூ.12 இலட்சம் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஐந்து மாநகராட்சிகளில் தலா ஒரு தன்னார்வ நிறுவனம் மூலம் சுயஉதவிக் குழு தேர்ந்தெடுக்கப் பட்டு ரூ.12 இலட்சம் விடுவிக்கப் பட்டுள்ளது.

## அரசு ரப்பர் கழகம்

2001–02, 2002–03, 2003–04ஆம் ஆண்டுகளில் 8047 டன் ரப்பர் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.4054.22 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டது.

2001–02 மற்றும் 2003–04ஆம் ஆண்டுகளில் வறட்சி மிகவும் அதிகமாக இருந்தும் குறிப்பிட்ட இலக்கிற்கு மிக அருகாமையில் சாதனை படைத்துள்ளது. அரசு ரப்பர் கழக குத்தகை தொகை எக்டருக்கு ரூ.6000/–த்திலிருந்து ரூ.3000/– ஆக அரசு குறைத்ததாலும் புனரமைப்பு குறித்த அரசு ஆணை, நிருவாக மேன்மை, விற்பனை தரம், ரப்பர் விற்பனை விலையில் முன்னேற்றம், தொழிலாளர்கள் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் முழு ஒத்துழைப்போடு கடந்த 2002–03ஆம் நிதியாண்டில் ரூ.59.27 இலட்சம் நிகர இலாபம் ஈட்டியதுடன் 2003–04ஆம் ஆண்டில் தணிக்கை செய்யப்படாத கணக்குப்படி, ரூ.284 இலட்சம் இலாபத்தை ஈட்டும் நிலையில் இயங்கி வருகிறது. மேலும் பல ஆண்டுகளுக்குப் பிறகு 2002–03 மற்றும் 2003–04 ஆண்டுகளில் 135 எக்டர் பரப்பில் புதிய வீரிய ரப்பர் மரக்கன்றுகள் மறு நடவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த பல ஆண்டுகளாக விற்பனை செய்யப்படாமல் இருந்த முதிர்ந்த ரப்பர் மரங்கள் 2001–02, 2002–03

மற்றும் 2003–04ல் விற்பனை செய்யப்பட்டு ரூ.601 இலட்சம் வருவாயும் பெறப்பட்டுள்ளது. இந்த வருவாயிலிருந்து ரூ.113.03 இலட்சம் தொகை அரசிற்கு செலுத்தப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

★ பசுமைப் போர்வை திட்டத்தின்படி, தொழிற்சாலைகள் தமது வளாகத்தில் 25 சதவிகிதத்தை பசுமைப் பகுதியாக உருவாக்க வாரியத்தால் அறிவுறுத்தப் பட்டுள்ளன. தொழிற்சாலைகள் சுமார் 30 இலட்சம் மரக்கன்றுகளை நட்டு அதனைப் பாதுகாத்து வருகின்றன.

★ சுற்றுச்சூழல் மேலாண்மை அமைப்பினை தொழிற்சாலைகள் தாமாகவே தணிக்கை செய்யும் பொருட்டு, அனைத்து முக்கிய தொழிற்சாலைகளும் வெளி நிறுவனங்களால் தணிக்கை செய்யப்பட்டு வழங்கப்படும் ஐஎஸ்ஓ (ISO) 14001 சான்றிதழைப் பெறவேண்டும் என வாரியம் வலியுறுத்துகிறது. இதுவரை 102 தொழிற்சாலைகள் ஐஎஸ்ஓ (ISO) 14001 க்கான சான்றிதழைப் பெற்றுள்ளன.

★ பன்னாட்டு நிறுவனத்தால் வெளியேற்றிய அபாயகரமான பாதரசக் கழிவுகள் அமெரிக்காவிலிருந்து அதற்கான பாதரச மூலப் பொருள் பெறப்பட்டதால் அந்நாட்டிற்கே திருப்பி அனுப்பப்பட்டது. அபாயகரமான கழிவுகள் வளர்ந்த நாட்டிற்கே இந்தியாவிலிருந்து திருப்பி அனுப்பப்படுவது இதுவே முதன்முறையாகும். அபாயகரமான கழிவுகள் சுத்திகரிப்பு, சேமிப்பு மற்றும் வெளியேற்றுதல் ஆகியவற்றிற்காக ஒரு பொது அமைப்பினை நிறுவுவதற்கு காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், மேலகோட்டையூரில் ஓர் இடம் அரசினால் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இத்தகைய பொது அமைப்பினை நிறுவ பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் கூட்டமைப்புகள் திருப்பூர் மற்றும் கரூர் பகுதியில் தலா ஒரு இடத்தை தெரிவு செய்துள்ளன.

★ காஞ்சிபுரம் மாவட்டம், தென்மேல்பாக்கம் மற்றும் சென்னகுப்பம் ஆகிய இடங்களில் நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு அமைப்புகள் தொடங்கப்பட்டு சோதனை ஓட்டத்தில் உள்ளன. வேலூர் மாவட்டம், கண்டிப்பேடு மற்றும் தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டி ஆகிய 2 இரண்டு இடங்களில் பொது அமைப்புகள் நிறுவும் பணி முடியும் தருவாயில் உள்ளது.

★ நகரத் திடக்கழிவுகளை அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் உரமாக்க வாரியம் 25 நகராட்சிகளுக்குத் தடையில்லா சான்றிதழ் வழங்கியுள்ளது.

★ பிளாஸ்டிக்கிற்கு மாற்றான சுற்றுச் சூழலுக்குகந்த பொருட்களின் நடமாடும் கண்காட்சி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 3.8.2001 அன்று சென்னையில் தொடங்கி வைக்கப்பட்டது. இது போன்ற கண்காட்சிகள் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டன.

★ 29 மாவட்டங்கள் காற்று ஒலிப்பான் அற்ற மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதுமாக சுமார் 44,500 காற்று ஒலிப்பான்கள் பேருந்துகள் மற்றும் லாரிகளிலிருந்து அகற்றப்பட்டுள்ளன.

★ தீபாவளி மற்றும் போகி பண்டிகைகளில் ஏற்படும் ஒலி மாசு மற்றும் காற்று மாசு குறிப்பிடத்தக்க அளவு குறைக்கப்பட்டுள்ளது.

★ **பசுமை விருது–2002 – சேலம், நீலகிரி மற்றும் விருதுநகர் மாவட்ட ஆட்சியர்களுக்கும், பசுமை விருது 2003 – கன்னியாகுமரி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், திருவண்ணாமலை மற்றும் வேலூர் மாவட்ட ஆட்சியர்களுக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.**

★ "புதுமை படைப்போருக்கான பசுமை விருது" அரசால் 2003ஆம் ஆண்டு புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம்

★ தைல மரக்கூழ் மரம், பேப்பர் மற்றும் செய்தித்தாள் உற்பத்திக்கு முக்கியமானதாக இருந்ததினால் முந்தைய காலங்களின் வன நிலங்களில் விதை மூலம் எழுப்பப்பட்ட தைலத்தோட்டத்தின் விளைச்சல் ஒரு எக்டேருக்கு சராசரியாக 20 டன்களை 60 டன்களாக அதிகரிக்கச் செய்யும் பொருட்டு கடந்த மூன்று வருடங்களில் இக்கழகத்தின் விதையில்லா தைலமரத்தோட்டங்கள் அதிக அளவில் வளர்க்கப்படுகிறது.

★ மேலும் 80 டன்கள் முதல் 100 டன்கள் வரை மகசூல் தரக்கூடிய உயர்ரக தைலக் குளோன்களை அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டு, மேலும் மேம்படுத்தப்பட்டுள்ளது. கடந்த மூன்று வருடங்களில் 4,200 எக்டேரில் தைலக்குளோன் தோட்டங்கள் வளர்க்கப்பட்டு ஒரு சொத்தாக உருவாக்கப் பட்டுள்ளது.

★ கடந்த மூன்று வருடங்களில் பணப்பயிரான முந்திரி சுமார் 3,200 எக்டேரில் வளர்க்கப்பட்டுள்ளது. முந்திரி மூலம் வருவாய் ரூ.1,122 இலட்சங்கள் பெறப் பட்டுள்ளது.

★ வேலூர் மாவட்டம் திருப்பத்தூருக்கு அருகில் தெக்குப்பட்டு என்னுமிடத்தில் அரசுக்குச் சொந்தமான ஒரு சந்தனப் பொருட்கள் உற்பத்தி தொழிற்சாலையானது 2002–2003ம் வருடத்தில் சந்தன எண்ணெய் மற்றும் அதன் பிற உற்பத்திப் பொருட்களை உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் விற்றதால் கழகத்திற்கு முன்பு இல்லாத அளவிற்கு ரூ.1.60 கோடி அளவில் இலாபம் பெறப்பட்டுள்ளது.

★ இக்கழகமானது திருச்சியிலுள்ள அதன் தலைமை அலுவலகத்திற்கு ரூ.90 இலட்சம் செலவில், புதிய கட்டடம் கட்டப்பட்டு இயங்கிவருகிறது. ●

# வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை



மக்களின் இன்றியமையாத அடிப்படைத் தேவைகளில் ஒன்றான உறைவிட தேவையினை பூர்த்தி செய்வதை தலையாய கடமைகளில் ஒன்றாகக் கருதி தமிழக அரசு "ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு" எனும் உன்னத குறிக்கோளை எய்த புதிய திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது.

சென்னை மாநகரின் தற்போதைய போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் கோயம்பேட்டில் அதிநவீன புறநகர் பேருந்து முனையம் 37 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.103 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 18.11.2002 அன்று இந்த முனையத்தை திறந்து வைத்தார்.

## மெரினா கடற்கரையை அழகுபடுத்துதல்

**அண்ணா நினைவிடம் முதல் கலங்கரை விளக்கம் முடிய 3.2 கி.மீ. பகுதியை ஆண்டிற்கு ரூ.32 இலட்சம் செலவில் சென்னை மெரினா கடற்கரையை இயந்திரம் மூலம் சுத்தம் செய்யும் பணியினை 22.9.2003 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.**

## தனியார் ஒப்பந்த ஊர்திக்கான பேருந்து முனையம்

சென்னை கோயம்பேட்டில் 4.5 ஏக்கர் பரப்பளவில் ரூ.3 கோடி செலவில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் தனியார் ஒப்பந்த ஊர்தி பேருந்து முனையம் கட்டப்பட்டுள்ளது. இதனை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 25.8.2003 அன்று திறந்து வைத்தார்கள்.

⇨ கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் ரூ.5 கோடி செலவில் சோதனை அளவில் காய்கறி கழிவிலிருந்து மின் உற்பத்தி செய்யும் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 25.8.2003 அன்று அடிக்கல் நாட்டினார்கள்.

⇨ சென்னை துரித இரயில் போக்குவரத்துத் திட்டத்திற்கு இதுவரை தமிழக அரசு ரூ.414 கோடி விடுவித்துள்ளது. இத்திட்டம் 26.1.2004 அன்று திருவான்மியூர் வரை நீட்டிப்பு செய்யப்பட்டு இயங்கி வருகிறது. இத்திட்டத்தை ரூ.378 கோடி செலவில் வேளச்சேரியிலிருந்து புனித தோமையர் மலை வரை 4.5 கி.மீ. தூரத்திற்கு நீட்டித்து சென்னை கடற்கரை–தாம்பரம் புறநகர் பாதையுடன் இணைக்கும் வகையில் செயல்படுத்த தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

⇨ 31.3.2002–க்கு முன் அனுமதியின்றி மற்றும் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டடங்களை ஒழுங்குபடுத்தும் திட்டத்தை 2000, 2001 மற்றும் 2002–ம் ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு அறிவித்தது. இத்திட்டத்தின்கீழ் பொது மக்களிடமிருந்து 59,000 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, இவ்விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு வரன்முறை செய்யப்பட்டு வருகின்றன. இதுவரை சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமம் ரூ.210 கோடியினை வரன்முறைப் படுத்தும் கட்டணமாக வசூல் செய்துள்ளது. இதில் ரூ.184 கோடியினை தமிழக அரசின் தொகு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளன.

⇨ தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் மே 2001 முதல் ஏப்ரல் 2004 வரையிலான மூன்றாண்டு காலங்களில் 7,911 அடுக்கு மாடி குடியிருப்புகளும், 7,250 தனி வீடுகளும் மற்றும் 9,060 கல்நார் ஓட்டு கூரை வீடுகளும் அமைக்கப்பட்டுள்ளன, இத்திட்டப் பணிகளுக்காகவும், இதர பணிகளுக்காகவும் ரூ.155.52 கோடி செலவிடப்பட்டுள்ளது.

⇨ சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் கடந்த மூன்று ஆண்டு காலங்களில் 1,624 குடியிருப்புகள் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் கட்டி முடிக்கப்பட்டு ரூ.12.39 கோடி செலவிடப்பட்டுள்ளது. சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதி–2ல் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் கடந்த மூன்றாண்டு காலங்களில் 3,000 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு ரூ.26.11 கோடி செலவிடப்பட்டுள்ளது.

⇨ குடிசைப்பகுதி மாற்று திட்டத்தின் கீழ் மே 2001 முதல் ஏப்ரல் 2004 வரையிலான மூன்றாண்டு காலங்களில் சென்னை நகரில் 816 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு ரூ.8.59 கோடி செலவிடப் பட்டுள்ளது.

⇨ சென்னை வாசுகி நகர் பகுதியில் மே 2001 முதல் ஏப்ரல் 2004 வரையிலான மூன்று ஆண்டு காலங்களில் 64 அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்து முடிக்கப்பட்டு ரூ.0.77 கோடி செலவிடப் பட்டுள்ளது.

⇨ தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் கடந்த மூன்றாண்டு காலங்களில் சென்னை நகரில் சுற்றுச் சுவர்களுடன் கூடிய கல்நார் ஓட்டுக் கூரைகள் 9,060 குடும்பங்களுக்கு ரூ.15.37 கோடி செலவில் அமைத்து முடிக்கப்பட்டுள்ளது.

⇨ நகர குடிசைப் பகுதிகளில் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டதின் கீழ் மே 2001 முதல் ஏப்ரல் 2004 வரையிலான மூன்று ஆண்டு காலங்களில் அடிப்படை வசதிகள் 30,124 குடும்பங்களுக்கு ரூ.5.25 கோடி செலவில் அமைத்துத்தரப்பட்டுள்ளது.

⇨ தமிழகத்தில் நகர குடிசைப்பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு கான்கிரீட் தளம், கூரைத் தளம் மற்றும் செங்கல் சுவர்களுடன் கூடிய 150 சதுர அடி கட்டட பரப்பளவு கொண்ட 7,250 தனி வீடுகள் ரூ.29 கோடி செலவில் அமைத்து முடிக்கப் பட்டுள்ளன.

⇨ பதினொன்றாவது நிதிக் குழு – சிறப்பு மானியம் – பெருநகரங்களில் வாழும் குடிசைப் பகுதி வாழ் குடும்பங்களை மறு குடியமர்வு செய்தல் திட்டத்தில் சென்னை நகரில் 3,054 அடுக்கு மாடிக் குடியிருப்புகள் அமைத்து முடிக்கப்பட்டுள்ளன. மேலும், மதுரை மற்றும் கோவை நகரங்களில் 337 தனி வீடுகளும் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டப் பணிகளுக்காக இதுவரை ரூ.39 கோடி செலவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள வீடுகளுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

⇨ மத்திய தர வருவாய் பிரிவினருக்கான வீடுகள் அமைத்தல் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் சென்னை திருவான்மியூர் சிங்காரவேலர் நகர் பகுதியில் 112 மத்திய தர வருவாய் பிரிவினருக்கான அடுக்ககங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

⇨ **சென்னை மாநகரில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு மாடிப்படிகள் சீர் செய்தல், தளங்களை செப்பனிடுதல் மற்றும் மழைநீர் கசிவினைத் தடுக்க ஓடுகள் பதித்தல் போன்ற கட்டமைப்புப் பழுதுபார்ப்பு பணிகள் சுமார் 30,514 குடியிருப்புகளுக்கு ரூ.11.63 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டன.** சென்னை மாநகரில் தண்ணீர் பற்றாக்குறையால் அவதியுறும் அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப் பகுதிகளில் உடனடியாக தேவையான ஆழ்துளை குழாய் கிணறுகளை அமைக்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டது.



இத்திட்டத்திற்கான பணிகள் சென்னை பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் ஒத்துழைப்புடன் 30.4.2002 வரையிலான ஓராண்டு காலத்தில் 100 ஆழ்துளை குழாய் கிணறுகளை தண்ணீர் பற்றாக்குறை உள்ள அடுக்குமாடிக் குடியிருப்புப் பகுதிகளில் அமைக்கப்பட்டு ரூ.0.76 கோடி செலவிடப்பட்டுள்ளது.

⇨ வாரியத்தால் நிறைவேற்றப்பட்ட அனைத்து 144 திட்டப் பகுதிகளிலும் ரூ.23.61 இலட்சங்கள் செலவில் மழைநீர் சேகரிப்பு முறைகள் நிறுவப்பட்டுள்ளன.

⇨ **வாரியத்தால் சென்ற இரண்டு ஆண்டு காலங்களில் நிறைவேற்றப்பட்ட பல்வேறு திட்டப் பணிகளின் மூலம் குடிசைப் பகுதிகளில் வாழும் 45,889 ஆதி திராவிட வகுப்பை சேர்ந்த குடும்பங்கள் ரூ.76.56 கோடி செலவில் பயனடைந்துள்ளனர்.**

⇨ 2001ம் ஆண்டு முதல் நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 35,706 நகர்ப்புற பயனீட்டாளர்களுக்கு புதிய வீடுகள் கட்ட ரூ.634.12 கோடி கடன் நகர்ப்புற கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

⇨ கிராமிய வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர்கள் வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலம் பெற்ற கடன் தொகையை பல்வேறு காரணங்களால் திருப்பி செலுத்திட இயலாத சூழ்நிலையை கருத்தில் கொண்டு தள்ளுபடி சலுகை ஒன்றினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதன்படி 31.3.2001 வரை நிலுவையில் உள்ள அசல் தொகையை பயனாளிகள் 30.9.2002க்குள் செலுத்தும் பட்சத்தில் ரூ.100 கோடி அளவிற்கான வட்டி, அபராத வட்டி மற்றும் சேவைக் கட்டணத்தை அரசு தள்ளுபடி செய்ய ஆணை பிறப்பித்துள்ளது.

⇨ வாம்பே திட்டத்தின் கீழ் இதுவரை நகர்ப்புற கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் 7,299 வீடுகளை கட்டிக்கொள்ள ரூ.20.33 கோடி நிதி உதவி வழங்கப்பட்டது. ●




**த**மிழ்நாட்டைத் தகவல் தொழில்நுட்ப முதலீட்டிற்கு, ஏதுவான ஒரு மாநிலமாக உருவாக்குதல், அரசு அலுவலகங்களில் மின் ஆளுமை (e-governance) மற்றும் தகவல் தொழில்நுட்பப் பயன்பாடுகளின் மூலம், நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், ஊரக மக்களுக்குக் கணிப்பொறியின் பயன் பாட்டினை அளித்து ஊரகப் பகுதிகளுக்கும் நகரப் பகுதிகளுக்கும் இடையே உள்ள தகவல் தொழில்நுட்ப அறிவின் இடைவெளியை Digital Divide-ஐ குறைத்தல், தகவல் தொழில்நுட்ப ஆய்வு மற்றும் வளர்ச்சிக்கான செயற்பாடுகளை மேலும் மேம்படுத்துதல், தகவல் தொழில்நுட்பத் துறைகளில் தமிழ் மொழியின் பயன்பாட்டை ஊக்குவித்தல் போன்ற நோக்கங்களைக் கொண்ட ''தகவல் தொழில்நுட்பக் கொள்கை 2002''–ஐ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இதற்கேற்ப, தமிழ்நாடு, தகவல் தொழில்நுட்பத் துறையில், நாட்டில் முன்னணியில் உள்ள மாநிலங்களில் ஒன்றாகத் தொடர்ந்து திகழ்ந்து வருகின்றது. கடந்த இரண்டு ஆண்டுகளாக உலக அளவில் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் ஒரு தொய்வு ஏற்பட்ட போதிலும், இத்துறை தமிழ்நாட்டில், சிந்தனை வேகத்தில் வளர்ந்து, ஒவ்வோர் ஆண்டும் அதன் வளர்ச்சியை இரட்டை இலக்க சதவிகிதத்தில் (Double Digit Growth) நிலைநாட்டி வருகின்றது.

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் சான்றிதழ் கல்வித் திட்டம் ஜூன் 2002ல் தொடங்கி வைக்கப்பட்டது. ஏறத்தாழ 40 நாடுகளிலிருந்து 2,111 மாணவர்கள் பல்வேறு நிலைகளில் பதிவு செய்துள்ளனர். இக்கல்வியைப் பயின்று தேர்ச்சிப் பெற்ற கலிபோர்னியா தமிழ் அகாதெமியைச் சேர்ந்த 55 மாணவர்களுக்கு ஜூலை 2003ல் சான்றிதழ்கள் வழங்கப்பெற்றன. Sishya School of India, நியூயார்க்கிலிருந்து 2 மாணவர்களும், கலிபோர்னியா தமிழ் அகாதெமி, நியூயார்க்கைச் சேர்ந்த 21 மாணவர்களும் மார்ச் 2004ல் சான்றிதழ் கல்வித் திட்டம் – நிலை 1ல் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

★ சங்க காலம் முதல் தற்காலம் வரையிலான நூல்கள் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் மின்நூலகத்தில் இடம்பெற்றுள்ளன. மேலும், இதன் இணையதளத்தில் பண்பாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் சைவ, வைணவக் கோயில்களின் ஒலி–ஒளிக் காட்சிகளாகத் தொகுத்து வழங்கப் பட்டுள்ளன.

**★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ஜூன் 2002ல் 'தமிழ் எழுத்துரு அறிவி' என்ற மென்பொருளும், ஆகஸ்டு 2003ல் 'இயந்திர வழி ஆங்கிலம் – தமிழ் மொழிபெயர்ப்பு' என்ற மென்பொருளும் வெளியிடப்பட்டன.**




- ☐ தமிழ் இணையதள உலாவி மற்றும் தேடுபொறி
- ☐ இதம் 2000 – தமிழ் சொற்செயலி

**உருவமைக்கப்பட்டு வரும் மென்பொருள்கள்**

- ❖ திருக்குறள் – கணினி மூலம் தமிழ்ச் சொல்லை உச்சரித்தல்
- ❖ தமிழில் விண்டோஸ் 95/98
- ❖ தமிழ்ச் சொல்வலை
- ❖ தமிழ் லினெக்ஸ்
- ❖ கையெழுத்துப் பிரதி – தமிழ் எழுத்துரு அறிவி
- ❖ தமிழ்த் துறைத்தள மேலாண்மை
- ❖ ஜாவா மொழி மூலம் தமிழ்ச் சொல்லை உச்சரித்தல்

❖ தமிழ் இணையம் 2003 மாநாடு ஆகஸ்டு திங்கள் 22ஆம் நாள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இம்மாநாட்டில் பல்வேறு நாடுகளிலிருந்து 245 சார்பாளர்கள் பங்கேற்றனர்.

❖ மார்ச் 2004இல் இந்திராகாந்தி திறந்தவெளிப் பல்கலைக்கழகத்துடன் பட்டக் கல்விக்கானப் பாடத்திட்டங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகியது.

❖ இலங்கை, மலேசியா, மொரீஷியஸ், அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகளில் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் கல்வி தொடர்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

❖ வருகிற கல்வியாண்டில், முதுநிலைப் (தமிழியல்) பட்டத்திற்கான பாடத்திட்டம் மற்றும் ஆய்வுக் கல்வியை மேற்கொள்பவர்களுக்குத் தேவையான வற்றை வழங்கவும் மின்நூலகத்தை மிகப் பெரிய அளவில் விரிவுபடுத்தவும் தமிழ் இணையப் பல்கலைக் கழகம் உத்தேசித்துள்ளது.

## தகவல் தொழில்நுட்பக் கொள்கை

★ தமிழக அரசால் 2002 செப்டம்பர் 19ஆம் நாள் அறிவிக்கப்பட்ட தகவல் தொழில் நுட்பக் கொள்கை 2002 தமிழகத்தைத் தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் சென்று நாட்டின் கணிசமான அளவு ஏற்றுமதியில் இடம் பெற்றுள்ளது. இந்தியாவின் ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் ஏற்றுமதி விகிதம் 2001–2002ல் 14.7% ஆகவும் 2002–2003ல் 17% ஆகவும் உயர்ந்துள்ளது.

★ இன்போசிஸ், டாடா கன்சல்டன்சி மற்றும் விப்ரோ போன்ற மூன்று பெரிய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் தங்களின் விரிவாக்கத் திட்டங்களுக் காக சென்னையைத் தேர்ந்தெடுத்துள்ளன.

★ இணைப்பு (CONNECT) 2001, 2002 மற்றும் 2003 வாயிலாக தகவல் தொழில்நுட்பப் பணிகள் மற்றும் வங்கி, நிதி, ஆயுள் காப்பீடு, சுகாதாரம், போக்குவரத்து ஆகிய துறைகளில் சென்னையை உலகின் தகவல் தொழில்நுட்பத் துறையின் தலைநகரமாக மாற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அறிவுசார் தொழில் நகரியம் உருவாக்க சிறப்புத் திட்டம் தொடங்கப்பட்டு கே.பி.எம்.ஜி. என்ற உலகத்தரம் வாய்ந்த ஆலோசனை அளிக்கும் நிறுவனம் இதற்கென்று விரிவான ஒரு திட்ட அறிக்கையைத் தயாரித்து அளித்துள்ளது. இதற்காக 300 ஏக்கர் நிலம் முதற்கட்டமாக சோளிங்கநல்லூரில் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

★ தகவல் தொழில் நுட்ப வளர்ச்சிக்காக தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மற்றும் இந்தியத் தொழில் கூட்டமைப்பு இணைந்து தயாரித்து அளித்த அறிக்கையின் அடிப்படையில், கோயம்புத்தூரில் அரசு சில இடங்களைத் தெரிவு செய்துள்ளது. இதற்கான பணிகளை எல்காட் இன்ப்ராஸ்ட்ரக்சர் நிறுவனம் தொடங்க உள்ளது. பாரதியார் பல்கலைக்கழக வளாகத்தில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பூங்கா 109 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்க தமிழ்நாடு மின்னணு நிறுவனமும் பாரதியார் பல்கலைக்கழகமும் ஒப்பந்தம் கையெழுத்திட்டுள்ளன. கோயம்புத்தூரை தகவல் தொழில்நுட்ப இடமாக வடிவமைக்க கோவை ஐடி.காம் என்ற மாநாட்டை இந்திய தொழில் கூட்டமைப்புடன் இணைந்து 2001, 2002 மற்றும் 2003ஆம் ஆண்டுகளில் அரசு நடத்தியது.

★ தமிழக அரசு தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மூலம் தேசிய அளவில் கனெக்ட் 2001, 2002 மற்றும் 2003 பெங்களூரில் ஐடி.காம், இந்தியாசாப்ட் 2003, அவுட்சோர்சிங் சம்மிட், டைக்கான் இந்தியா 2003 மற்றும் சர்வதேச அளவில் பொருட்காட்சி சிபிட் 2003 ஜெர்மனியிலும், இன்கிரிடிபிள் இந்தியா 2003 மலேசியா, கோலாலம்பூரிலும், சர்வதேச பொருட்காட்சி 2004 ஹாங்காங்கிலும் கலந்து கொண்டுள்ளது.

★ **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் முன்னிலையில் நடைபெற்ற 7ஆவது தேசிய மின் ஆளுமை மாநாடு, மாநிலத்தில் மின் ஆளுமை செயற்பாடுகளின் வளர்ச்சிக்கு பெருமளவில் வழி வகை செய்துள்ளது.**

★ தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் மாநகர குடிநீர் வழங்கும் துறை ஆகியவற்றிற்குச் செலுத்த வேண்டிய தொகையை செலுத்த முன்னோடித் திட்டமாக மின்னிணைய சேவை மையங்கள் 2003–2004இல் தொடங்கப்பட்டது.

## மின் ஆளுமைத் திட்டங்கள்

★ **மாண்புமிகு அமைச்சர்கள், அனைத்து அரசுச் செயலர்கள், அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் பிற உயர்நிலை அரசு அலுவலர்கள் ஆகியோர் தகவல் பரிமாற்றம் செய்து கொள்ள வசதியாக ஒளிப்படக் கலந்துரையாடல் வலையமைப்பு நிறுவப்பட்டுள்ளது.** சென்னை தலைமையகத்தில் 1,000 இணைப்பு களுடன் கூடிய உள்பேசி இணைப்பகம் ரூ.76 இலட்சத்தில் அமைக்கப்பட்டுள்ளது. முக்கியமான முடிவுகளை மேற்கொள்வதற்கு 2 எம்பிபிஎஸ் கொள்ளளவு உயர்தர கணினி தலைமைச் செயலகத்தில் ரூ.63 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது.

★ "ராசி" முன்னோடித் திட்டம், மதுரை மாவட்டம் மேலூரில் தேவையான ஊரக உள்கட்டமைப்பு களுடன் தொடரப்பட்டுள்ளது. வெற்றிகரமாக செயல்படும் இத்திட்டத்தை அரசு மின் ஆளுமை வழங்கும் மையங்களாக மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

★ "தமிழ்நிலம்" திட்டமானது மாநிலத்தின் முக்கியத் துறைகளான வருவாய், நில சீர்திருத்தம் மற்றும் நில அளவை மற்றும் நில ஆவணங்கள் ஆகியவற்றின் வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க மைல் கல்லாக அமையும். இந்த திட்டமானது இரு கட்டமாக முறையே ரூ.132.60 இலட்சத்திலும் , ரூ.405 இலட்சத்திலும் நிறைவேற்றப்பட்டது.

★ மின் ஆளுமையை அறிமுகப்படுத்தும் முகமாக, மின் ஆளுமை, காகிதமற்ற கோப்பு மேலாண்மை செயல்பாடு ஓர் உத்வேக கருவியாக எல்காட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

★ மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் மாநகராட்சிகளில் மக்கள் சேவைக்காக மின் ஆளுமையை இணையதளம் மூலமாக அறிமுகப்படுத்தியது. இந்த சேவை எல்லாவிதமான வரி வசூலிப்பதற்கு ஏதுவாக உள்ளது.

★ தமிழ்நாடு மருத்துவப் பணித் தொகுதி கழகம் கணினி மயமாக்கப்பட்ட மருந்து பகிர்ந்தளித்தல் நிருவாக முறையை நடைமுறைப்படுத்தியது.

★ தமிழக அரசு தற்பொழுது நடைமுறையில் உள்ள தேயிலை ஏலமுறையை முற்றிலுமாக மாற்றி மின்னணு மூலம் தேயிலை ஏல முறையை உலகிலேயே முதன்முறையாக அறிமுகப்படுத்தியுள்ளது.

★ போக்குவரத்துத்துறை கணினிமயமாக்கப் பட்டுள்ளது.

★ பத்திரப் பதிவுத் துறையில் ஸ்டார் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் உள்ள 325 பதிவுத் துறை அலுவலகங்களும் மைய சேவையகத்துடன் இணைக்கப்பட்டது.

★ ஒன்பது வேளாண்மை ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் கணினிமயமாக்கப்பட்டு, வேளாண்மை பொருட்களின் விலை விவரங்களை விவசாயி களுக்கு உடன் நிகழ் சேவை மூலமாக தொடர்ந்து வழங்குகிறது.

★ கருவூலங்கள் எல்லா நிலையிலும் பயன்படுத்தப்படும் வகையில் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. நகரம் சார்ந்த உள்ளாட்சி மன்றங்கள் கணினிமயமாக்கப் பட்டுள்ளது.

★ வணிகவரித்துறையில் 323 மதிப்பீட்டு வட்டத்தில் 140 மதிப்பீட்டு வட்டங்களை ரூ.357 இலட்சங்களில் கணினிமயமாக்கப்பட்டது.

★ **புதிய தொழில் முனைவோர்களுக்கு மாவட்ட அலுவலகங்களில் உடன் நிகழ் மூலமாக "தற்காலிகமான சிறு தொழில் பதிவுச் சான்றிதழ்" வழங்க வழி செய்துள்ளது.**

★ **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 12.9.2002 அன்று முதல் இந்த ஒருங்கிணைந்த நடவடிக்கை தொடங்கி வைக்கப்பட்டது. இந்தச் சேவை அங்கீகரிக்கப்பட்ட 260க்கும் மேற்பட்ட மையங்களில் வழங்கப்படும். இத்திட்டம் நாட்டிலேயே முதன்மையானது.**

★ 30 மாதிரி தாலுகா அலுவலகங்களில் தொடுதிரை தகவல் மையம் அமைக்கப்பட்டுள்ளது.

★ **பொதுமக்களின் குறை தீர்ப்பதற்காக மாநில அளவில் ஒரு கணினி மென்பொருள் உருவாக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ளது. மாவட்ட கணினி அலகுகள் மாநில அளவிலான முதன்மைக் கணினியுடன் இணைக்கப்பட்டுள்ளது. பல வழிகளில் பெறப்படும் புகார்கள் இந்த கணினியில் உட்செலுத்தப்பட்டு புகார்கள் பரிசீலிக்கப்பட்டு பொதுமக்களின் குறைகள் தீர்க்கப்படுகிறது.**

★ தமிழக அரசு ஒரு முன்னோடித் திட்டமாக அனைத்து மேல்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வியை அறிமுகப்படுத்தியுள்ளது. மொத்தமாக 1,197 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் இத்திட்டம் செயல்படுகிறது. முதல் கட்டமாக 666 மேல்நிலைப் பள்ளிகளிலும் இரண்டாம் கட்டமாக 531 மேல்நிலைப் பள்ளி களிலுமாக செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் வருடத்திற்கு சுமார் 92,500 மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத்தில் முழு தேர்ச்சிப் பெறுவார்கள். அரசினர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், சட்டம் மற்றும் மருத்துவக் கல்லூரி மொத்தம் 76 கல்லூரிகளிலுள்ள 14,000 மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப கல்வி அளிக்கப்பட்டிருக்கிறது.

★ தமிழ்நாட்டிலுள்ள 325 பதிவு அலுவலகங்களும் இணைக்கப்பட்டு, குடிமக்களுக்கு பதிவுத் துறை சம்பந்தமான விளக்கங்கள் விரைவாகவும், தரமாகவும் அளிப்பதற்கு ஏற்றாற்போல் வடிவமைக்கப் பட்டிருக்கிறது. மாநிலத்தின் எந்த பதிவுத் துறை அலுவலகத்திலிருந்தும், எந்தவொரு உடைமை களுக்கும் வில்லங்கச் சான்றிதழ் அளிப்பதே ரெஜினெட்டின் நோக்கமாகும்.

★ அண்ணா பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட உள்ள KDC மாணவச் சமுதாயத்திற்கு ஒரு தொழில்நுட்பக் களஞ்சியமாக விளங்கும். ●

# மக்கள் நல்வாழ்வுத்துறை



மாநிலத்தின் மனித வளர்ச்சி அளவினை நிர்ணயிப்பதில் மக்கள் நல்வாழ்வே முக்கியப் பங்கு வகிக்கிறது. சமுதாயத்தின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சிக்கு ஆரோக்கியமான மக்களே ஆக்க பூர்வமான பங்கினை அளிக்க இயலும். எனவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் மாநிலத்தின் அனைத்து மக்களுக்கும் சுகாதாரப் பாதுகாப்பினை அளித்திட தமிழக அரசு உறுதி பூண்டுள்ளது.

## இந்திய மருத்துவத்துறை

❖ சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் ரூ.40 இலட்சம் செலவில் வெளிநோயாளி துறைக்கான கூடுதல் கட்டடம் கட்டப்பட்டு வருகின்றன. ரூ.30 இலட்சம் செலவில் யோகா மற்றும் இயற்கை வைத்திய பிரிவுக்கு மேல் முதல் தளம் கட்டி முடிக்கும் தருவாயிலுள்ளது. உயிர் வேதியியல் மற்றும் உடற்கூறியல் ஆய்வுக்கூட மேம்பாட்டிற்காக ரூ.7.37 இலட்சம் செலவில் சாதனங்களும் இரசாயனப் பொருட்களும் வாங்கப்பட்டுள்ளன. இங்கு மருந்து செய் நிலையத்திற்கு ரூ.15 இலட்சம் செலவில் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

❖ பாளையங்கோட்டை, அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் மருந்து செய் நிலையத்திற்கு ரூ.30 இலட்சம் செலவில் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

❖ சோதனைக் கூடத்திற்கு ரூ.15 இலட்சம் செலவில் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

❖ சென்னை, அரசினர் யுனானி மருத்துவக் கல்லூரிக்கு ரூ.15 இலட்சம் செலவில் கட்டடம் கட்டி முடிக்கப் பட்டுள்ளது.

❖ 2002–2003ஆம் ஆண்டில், 2 வட்ட மருத்துவ மனைகள், 37 வட்டமல்லாத மருத்துவமனைகள் மற்றும் 50 அரசினர் ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்திய மருத்துவ பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

❖ மைய அரசும், தமிழக அரசும் சேர்ந்து ரூ.47 கோடி செலவில் தேசிய சித்த மருத்துவ நிறுவனத்தை நிறுவ முடிவு செய்துள்ளது. இதற்கென மாநில அரசு ரூ.6.64 கோடி மதிப்புள்ள நிலத்தையும், ரூ.4 கோடி மானியமும் மாநில அரசின் பங்காக அளித்துள்ளது.

❖ வீட்டு மருந்து பெட்டகத் திட்டம் தேனி மாவட்டத்தில் முன்னோடித் திட்டமாக 24–8–2003 அன்று தொடங்கப்பட்டது. இதன் மூலம் கிராமப்புற செவிலியர்கள் மருந்துகளை மக்களின் வீடுகளில் வழங்குகின்றனர்.

❖ மூலிகைத் தாவரங்களை உற்பத்தி செய்யவும், மூலிகைத் தாவரங்களை உபயோகப்படுத்தவும், பாதுகாக்கவும் அவற்றை ஏற்றுமதி செய்யவும் அரசு தமிழ்நாடு மூலிகை வாரியத்தை நிறுவியுள்ளது.

❖ சென்னைப் பல்கலைக்கழகம் மற்றும் இந்திய மருத்துவம் மற்றும் ஒமியோபதி ஆணையரகம் இணைந்து பணியாற்ற கூட்டுப் பரிவர்த்தனை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.



❖ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில், தேனியில் மருத்துவக் கல்லூரி தொடங்க ஆணை பிறப்பிக்கப்பட்டதோடு, தேனி மாவட்டம் ஆண்டிபட்டி வட்டம் சண்முகசுந்தரபுரம் கிராமத்தில் 19.17.0 எக்டேர் நிலம் தேர்வு செய்யப்பட்டு இந்திய மருத்துவ குழுமத்தின் நடைமுறை ஆணைப்படி 300 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையும், மருத்துவக் கல்லூரியும் ஒரே இடத்தில் அமையுமாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ரூ.12 கோடி ஹட்கோ நிதிக் கடன் பெறப்பட்டு பொதுப்பணித்துறையால் மருத்துவமனை கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

## புதிய மருத்துவக் கல்லூரிகள்

❖ இந்திய மருந்தியல் குழுமத்தின் விதிப்படி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை ஒரே வளாகத்தில் அமைய வேண்டுமென்பதால், வேலூர் அடுக்கம் பாறையிலும், கன்னியாகுமரி ஆசாரிபள்ளத்திலும் 300 படுக்கை வசதியுடைய மருத்துவமனை கட்டடப் பணி தொடங்கப்பட்டுள்ளது. இவ்விரு பணிக்கும் ரூ.5 கோடி வீதம் தனித்தனியே ஹட்கோ நிதிக்கடன் பெற்று கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

❖ கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதிதாக செவிலியர் பயிற்சிப் பள்ளி தொடங்கப் பட்டுள்ளது.

❖ மதுரை மருத்துவக் கல்லூரியில் செவிலியர் பட்டப் படிப்புக் கல்லூரி தொடங்க ஆணையிடப்பட்டுள்ளது.

❖ ரூ.1 கோடி செலவில் அனைத்து மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளிலும் கண் பார்வை சிகிச்சைப் பிரிவு மேம்படுத்தப்பட்டுள்ளது.

❖ 5 அரசு மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை 150ஆக உயர்த்தப்பட்டு ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. மேற்குறித்த மருத்துவக் கல்லூரி களுக்கு கூடுதல் பணியாளர்களும் கருவிகள் வாங்க ரூ.9.98 கோடியும், கூடுதல் கட்டடங்கள் கட்ட ரூ.18.82 கோடியும் ஒப்பளிக்கப்பட்டது. 2002–2003இல் ரூ.1 கோடியும், 2003–2004ல் ரூ.1 கோடியும் ஒப்பளிக்கப்பட்டு கருவிகள் வாங்கப்பட்டன.

❖ சென்னை அரசு மன நலக் காப்பகத்தினை நிலை உயர்த்தும் முகமாக ரூ.1.05 கோடி செலவில் நிருவாக பிரிவிற்கான புதிய கட்டடம் கட்டும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

❖ அரசின் அறிவிப்பின்பேரில் முதியோர் நலனில் அக்கறை செலுத்தும் முகமாக அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் 10 படுக்கைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ தமிழக அரசு கடந்த மூன்று ஆண்டுகளில் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை மேம்பாட்டில் தனி கவனம் செலுத்தி வருகிறது. குறிப்பாக தாய் சேய் நலனில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. 2000–2001ஆம் ஆண்டுகளில் சிசு மரணம் 52 என இருந்தது மூன்று ஆண்டுகளில் 44 என்கின்ற நிலையை எட்டியுள்ளது.

❖ தமிழகத்தின் குக்கிராமங்களிலும், மூலை முடுக்குகளிலும் உள்ள மக்களுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சையை அவர்கள் வாழும் பகுதிக்கே சென்று அளிக்கின்ற வகையில் அமைக்கப்பட்ட சிறப்பு மருத்துவ முகாம்களில் கடந்த மூன்றாண்டுகளில் 896 சிறப்பு முகாம்கள் நடைபெற்றுள்ளன. இந்த முகாம்களின் மூலம் 18 இலட்சம் மக்கள் பயன் பெற்றுள்ளனர்.

❖ தாய் சேய் உயிரைக் காப்பாற்ற தமிழகம் முழுவதும் உள்ள வளர் இளம் பெண்களுக்கு ஒவ்வொரு வாரமும் ஒரு இரும்பு சத்து மாத்திரை வழங்கப்படுகிறது. இதற்கான ஆண்டு செலவு ரூ.190 இலட்சங்களாகும். மேலும் கர்ப்பிணிப் பெண்களுக்கு 100 இரும்பு சத்து மாத்திரைகளும் வழங்கப்படுகிறது.

❖ தமிழகத்தில் சென்னை உட்பட 5 மாவட்டங்களில் மஞ்சள் காமாலை 'பி' தடுப்பூசி போடப்படுகிறது. வரும் ஆண்டுகளில் மற்ற மாவட்டங்களில் இத்திட்டம் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

❖ பிறப்பு பதிவு ஒரு முக்கியமான பணியாகும். அதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் 10 வயதிற்குட்பட்ட 29 இலட்சம் குழந்தைகளுக்கு இலவசமாக பிறப்பு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

❖ தமிழகத்தில் தொழுநோயாளிகள் 10,000 மக்கள் தொகைக்கு 113 என்ற நிலை கட்டுப்படுத்தப்பட்டு, தற்போது 10,000 மக்கள் தொகைக்கு 1.4 என்ற அளவில் வெகுவாக குறைந்துள்ளது.

❖ தமிழகத்தில் யானைக்கால் நோய் அதிகமாக தென்படும் 10 மாவட்டங்களில் உள்ள அனைத்து மக்களுக்கும் ஒரே நாளில் டி.இ.சி. மாத்திரைகள் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 2.3 கோடி மக்கள் பயனடைந்துள்ளனர்.

❖ பல் சம்பந்தப்பட்ட நோய் அதிகமாக காணப்படும், தருமபுரி, சேலம், நாமக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் சம்பந்தமான நோய்களுக்கான சிகிச்சை அளிக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

❖ மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் வாழும் கிராமப்புற மக்கள் உயர் மருத்துவ சிகிச்சை பெற வசதியாக தொலை மருத்துவத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

❖ தமிழகமெங்கும் உள்ள மலைவாழ் மற்றும் குக்கிராமங்களில் நடமாடும் மருத்துவக் குழு மூலம் அவர்கள் வாழும் பகுதிக்கே சென்று சிகிச்சை அளித்து வருகிறது. இதன் மூலம் 4.16 இலட்சம் மக்கள் பயனடைந்துள்ளனர்.

2001–02 மற்றும் 2002–03 ஆண்டுகளில் ரூ.218 கோடி மதிப்பிலும், 2003–04ஆம் ஆண்டில் ரூ.120 கோடி மதிப்பிலும் மருந்து மற்றும் மருந்து பொருட்களை அரசு மருத்துவமனைகளுக்கு கொள்முதல் செய்து வழங்கியுள்ளது.

❖ **2001–02இல் சென்னை பொது மருத்துவமனையில் ஒன்றும், மதுரை இராஜாஜி மருத்துவமனையில் ஒன்றுமாக மொத்தம் ரூ.958 இலட்சம் மதிப்புள்ள இரண்டு எம்.ஆர்.ஐ. கருவிகளையும் 18 மாவட்ட தலைமை மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ரூ.1,316 இலட்சம் மதிப்புள்ள 18 சி.டி. ஸ்கேனர் கருவிகளையும் பொது மக்கள் பயன்பெறும் வகையில் நிறுவியுள்ளது.**

❖ 2001–02இல் ஆரம்ப நலவாழ்வு மையம் மற்றும் துணை நலவாழ்வு மையங்களுக்காக பிரதம மந்திரி கிராம நலத்திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ.525 இலட்சம் மதிப்புள்ள இரத்த அழுத்தமானி, மகப்பேறு பலகை, எடை கருவி, இதயத்துடிப்பு அறியும் கருவி, அல்ட்ரா சவுண்டு ஸ்கேனர், இரத்த சர்க்கரை அறியும் கருவி போன்ற மருத்துவக் கருவிகளை கொள்முதல் செய்து வழங்கியுள்ளது.

❖ ரூ.50 இலட்சம் மதிப்பு மிக்க அறுவை நுண்நோக்கி, ஆர்கன் பிளாஸ்மா கருவி, மானிடர், வென்டிலேட்டர் போன்ற கருவிகளை சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவ மனைக்கும், எழும்பூரில் உள்ள மகளிர் மற்றும் மகப்பேறு அரசு மருத்துவமனைக்கும் கொள்முதல் செய்து வழங்கியுள்ளது. டானிடா திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ.420 இலட்சம் மதிப்புள்ள ஆரம்ப நலவாழ்வு மையம் மற்றும் துணை நலவாழ்வு மையங்களில் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புப் பணிகளும், சென்னை பூவிருந்தவல்லியில் உள்ள பொது சுகாதார நிலையத்தில் புதிய பயிற்சி நிலையமும் மற்றும் திருவாரூரில் மருந்து கிடங்கும் கட்டியதோடு ஆரம்ப நலவாழ்வு மையம் மற்றும் துணை நலவாழ்வு மையங்களுக்கு மருத்துவக் கருவிகளை கொள்முதல் செய்து வழங்கியுள்ளது.

❖ 2002–03ஆம் ஆண்டில் ஆரம்ப நலவாழ்வு மையம் மற்றும் துணை நலவாழ்வு மையங்களுக்காக பிரதம மந்திரி கிராம நலத்திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ.369 இலட்சம் மதிப்புள்ள இரத்த அழுத்தமானி, மகப்பேறு பலகை, எடை கருவி, இதயதுடிப்பு அறியும் கருவி, அல்ட்ரா சவுண்டு ஸ்கேனர், இரத்த சர்க்கரை அறியும் கருவி போன்ற மருத்துவ கருவிகளையும், டானிடா திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ.718 இலட்சம் மதிப்புள்ள ஆரம்ப நலவாழ்வு மையம் மற்றும் துணை நலவாழ்வு மையங்களில் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு பணிகளும், ஆரம்ப நலவாழ்வு மையம் மற்றும் துணை நலவாழ்வு மையங்களுக்கு மருத்துவக் கருவிகள், குறிப்பேடுகளையும், தேசிய புற்றுநோய் ஒழிப்பு திட்டத்தின்கீழ் ரூ.449 இலட்சம் மதிப்பிற்கு 3 புற்றுநோய் கண்டறியும் கோபால்ட் கருவி வீதம் மதுரை இராஜாஜி மருத்துவமனை, சென்னை இராயப்பேட்டை மருத்துவமனை, மகளிர் மற்றும் மகப்பேறு அரசு மருத்துவமனை ஆகியவற்றிற்கு வழங்கியுள்ளது.

❖ இந்த ஆண்டில் உலக வங்கி உதவியுடன் ரூ.600 இலட்சம் செலவில் 6 மருந்து கிடங்குகள் கே.கே. நகர் (சென்னை), விருதுநகர், திண்டுக்கல், பெருந்துறை, உதகமண்டலம் மற்றும் புதுக் கோட்டையில் கட்டப்பட்டுள்ளது. மேலும், குழந்தை நலத்திட்டத்தின் கீழ் உலக வங்கி உதவியுடன் மொத்தம் ரூ.315 இலட்சம் மதிப்புள்ள நகர்ப்புற நலவாழ்வு மையம் மற்றும் துணை நலவாழ்வு மையங்களில் கட்டுதல் மற்றும் பராமரிப்புப் பணிகளை மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் செய்துள்ளது.

மேலும், உலக வங்கி உதவியுடன் மொத்தம் ரூ.411 இலட்சம் மதிப்புள்ள மருந்துகள் அரசு மருத்துவமனைகளுக்கு கொள்முதல் செய்து வழங்கியுள்ளது.

❖ 2003–04ஆம் ஆண்டில் டானிடா திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ.950 இலட்சம் மதிப்புள்ள மருத்துவக் கருவிகள், குறிப்பேடுகளை கொள்முதல் செய்து ஆரம்ப நலவாழ்வு மையம் மற்றும் துணை நலவாழ்வு மையங்களுக்கு வழங்கியும், ஆரம்ப நலவாழ்வு மையம் மற்றும் துணை நலவாழ்வு மையங்களுக்காக பிரதம மந்திரி கிராம நலத்திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ.160 இலட்சம் மதிப்புள்ள இரத்த அழுத்தமானி, மகப்பேறு பலகை, எடை கருவி, இதயதுடிப்பு அறியும் கருவி, அல்ட்ரா சவுண்டு ஸ்கேனர், இரத்த சர்க்கரை அறியும் கருவி போன்ற மருத்துவக் கருவிகளையும், ரூ.90 இலட்சம் மதிப்பில் 3 மார்பக புற்றுநோய் கண்டறியும் கருவி தலா ஒன்று வீதம் அரசு மருத்துவமனை தஞ்சாவூர், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலிக்கும் வழங்கியுள்ளது.

இதே ஆண்டில், மகளிரியல் மற்றும் மகப்பேறு அரசு மருத்துவமனையில் 30 படுக்கைகள் கொண்ட சிறப்பு வசதி கட்டண மகப்பேறு மையம் நிறுவப்பட்டுள்ளது.

மேலும், குழந்தைகள் நலத்திட்டத்தின்கீழ் உலக வங்கி உதவியுடன் மொத்தம் ரூ.327 இலட்சம் மதிப்புள்ள நகர்புற நலவாழ்வு மையம் மற்றும் துணை நலவாழ்வு மையங்கள் கட்டுதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் செய்துள்ளது. உலக வங்கி உதவியுடன் மொத்தம் ரூ.252 இலட்சம் மதிப்புள்ள மருந்துகள் அரசு மருத்துவமனைகளுக்கு வழங்கியுள்ளது.

❖ இந்திய அரசின் 11ஆவது நிதிக்குழு திட்டத்தின் கீழ் ரூ.21 கோடி மதிப்பிலான 7 வட்டார நோய்க்குறி அறிதல் மையங்கள் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் கட்டும்பணி மற்றும் மருத்துவ கருவிகளை கொள்முதல் செய்யும் பணியை செய்து வருகிறது.

❖ உள்துறை உதவியின் கீழ் ரூ.293 இலட்சம் செலவில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப்பிரிவு அரசு மருத்துவமனை திண்டிவனம், ஆம்பூர், கிருஷ்ணகிரி, திருபெரும்புதூர், கோவில்பட்டியில் கட்டும்பணி மற்றும் மருத்துவக் கருவிகளை கொள்முதல் செய்யும் பணியை செய்து வருகிறது.

❖ தமிழ்நாடு மருத்துவப்பணிகள் கழகம் ISO 9001:2000 சான்றிதழைப் பெற்றுள்ளது.

**“நல்வாழ்வு என்பது நோயற்ற தன்மையோ அல்லது இயலாமை இல்லாமையோ மட்டுமல்ல. அது முழுமையான உடல் நலத்துடனும் மற்றும் சமுதாயத்துடன் ஒன்றி வாழும் நிலையாகும்’’**

❖ ❖ ❖

# தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு

*தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சி தன் மெய் வருத்தக் கூலி தரும்*

உற்பத்தியைப் பெருக்கவும், பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தவும், நிர்வாகத்திற்கும், தொழிலாளர்களுக்குமிடையே நல்லுறவு அவசியமாகிறது. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் ஆகிய இரு மத்திய அமைப்புகள் மூலம் பெருமளவில் சமூகப் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது.

★ பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கான ஊதிய உயர்வு உள்ளிட்ட பொதுக் கோரிக்கைகள் தொடர்பான பிரச்சினைகளை விசாரித்து தொழில் தீர்ப்பாயத்தின் தீர்ப்பிற்கு விடுவதற்காகவும் மற்றும் தோட்டத் தொழிலாளர்களின் தின ஊதிய குறைப்பு மற்றும் உற்பத்தி உயர்வு உள்ளிட்ட பணி நிலைமை மாற்றங்கள் குறித்து தோட்ட நிறுவன அதிபர்களால் எழுப்பப்பட்ட தொழிற் பிரச்சினைகளை விசாரிக்கவும், சிறப்பு தொழில் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டுள்ளது.

★ தொழிலாளர் துறையின் சமரச அலுவலர்களின் முயற்சியால் 15 நிறுவனங்கள் தொடர்புடைய தொழில் பிரச்சினைகள் தீர்வு செய்யப்பட்டன.

★ மூடப்பட்டுள்ள நிறுவனங்களை மீண்டும் திறந்து இயக்கிடவுள்ள சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்காக மாவட்ட வாரியான முத்தரப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

★ **நீண்ட காலமாக இயங்காமல் மூடப்பட்ட நிறுவனங்களில் பணிபுரிந்த 2,215 தொழிலாளர்களுக்கு மாதம் ரூ.250 வீதம் உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் இதுவரையில் ரூ.58,01,000 உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.**

★ 'லோக் அதாலத்' என்ற மக்கள் நீதிமன்றம் சென்னை மற்றும் மதுரையில் அமைக்கப்பட்டு, 43 வழக்குகள் முடிக்கப்பட்டு கேட்புரிமைதாரர்களுக்கு ரூ.73,03,521 நட்டஈட்டுத் தொகை வழங்கப் பட்டுள்ளது.

★ மத்திய அரசின் ஒருங்கிணைந்த பீடித் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 2002–2003ஆம் ஆண்டில் 375 பீடித் தொழிலாளர்களுக்கு மொத்தம் ரூ.18.75 இலட்சம் அனுமதித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தின்கீழ் மாநில அரசின் மானியம் வழங்கும் பொருட்டு 2003–2004ஆம் ஆண்டின் திட்ட மதிப்பீட்டில் ரூ.60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 124 பீடித் தொழிலாளர்களுக்கு மொத்தம் ரூ.6.20 இலட்சம் அனுமதித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. இது தவிர, 2,715 பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்ட ஏதுவாக ரூ.5.43 கோடி மானியத் தொகையாக வழங்கக் கோரி மத்திய அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது.

★ குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு செயல் திட்டத்தை அமல்படுத்துவதற்காக மாநில குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் நலச் சங்கம் ஏற்படுத்துவதற்காக அரசு உத்தரவு பிறப்பித்து ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும், மாவட்ட குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் நலச் சங்கங்கள் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் செயல்படுத்தும் நலத் திட்டங்களின்கீழ் 24,128 பயனாளிகளுக்கு ரூ.79,27,419 உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

★ **தமிழ்நாடு கட்டடத் தொழிலாளர் நல வாரியத்தில் 24,768 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ரூ.9,04,37,675 உதவித் தொகை வழங்கப் பட்டுள்ளது. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்திற்கென சென்னையில் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய கட்டடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.**



★ தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் 9 இதர தொழிலாளர் நல வாரியங்களில் 6,124 தொழிலாளர்களுக்கு ரூ.1,99,43,000 உதவித்தொகை வழங்கப் பட்டுள்ளது.

## வேலைவாய்ப்புத்துறை

★ 25 வேலைவாய்ப்பு அலுவலகங்களும், 4 சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகங்களும் கணினி மயமாக்கப்பட்டுள்ளன. கரூர், பெரம்பலூர், உதகமண்டலம் மற்றும் சிவகங்கை வேலைவாய்ப்பு அலுவலகங்களில் 2003–04ஆம் நிதியாண்டில் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. வேலைவாய்ப்பு அலுவலகங்களின் புள்ளி விவரங்களை

உடனுக்குடன் தெரிந்து கொள்ள ஏதுவாக வேலைவாய்ப்பு அலுவலகங்களை ஆணையரகத்துடன் வைடு ஏரியா நெட்ஒர்க் மூலம் இணைக்க முன் மொழியப்பட்டுள்ளது. இதில் ஏற்படும் முன்னேற்றம் இத்துறையில் மின்ஆளுமை (e-governance) வர வழிவகுக்கும்.

★ **வேலைவாய்ப்புத் துறையின் இணைய தளம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 6–6–2003 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இந்த இணையதளத்தில் 2.85 இலட்சம் சென்னை, தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் தொழில் படிப்பு படித்த மற்றும் முதுநிலைப் பட்டதாரிகளின் பதிவு விவரங்கள் உள்ளன. இதுவரை 1,09,038க்கும் மேலானவர்கள் பார்வையிட்டுள்ளனர். 935 வேலையளிப்பவர்கள் பணி வாய்ப்பளிக்கும் நோக்கத்திற்காக வலைதளத்தில் கண்டுள்ளனர். இந்த இணையதளத்தில் சென்னை, தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு பதிவுதாரர்கள் வேலைவாய்ப்பு அலுவலகம் செல்லாமலேயே "ஆன் லைன்'' முறையில் தங்கள் பதிவுகளை புதுப்பிக்க வசதி உள்ளது.**

★ 12,011 மனுதாரர்கள் தனியார் துறையில் தமிழ் நாட்டிலுள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களால் பணியமர்த்தம் செய்யப் பட்டுள்ளனர்.

★ ஊரகத்தில் படித்தவர்களுக்கு 6 ஊராட்சி ஒன்றியங்களில் தன்னார்வப் பயிலும் வட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. பின்னர் தமிழ்நாட்டிலுள்ள 379 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தன்னார்வப் பயிலும் வட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 23–9–2003 அன்று சிவகங்கையில் 379 ஊராட்சி ஒன்றியங்களுக்கான தன்னார்வ பயிலும் வட்டங்களைத் தொடங்கி வைத்தார்கள். புத்தகங்கள், நாளிதழ்கள் மற்றும் இதர சாதனங்கள் வாங்குவதற்கு தமிழக அரசால் ரூ.53.06 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 7,316 மனுதாரர்கள் உறுப்பினராகி உள்ளனர்.

★ சென்ற நிதியாண்டில் சென்னை, தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கான மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் கணினிகளை மேம்படுத்த ரூ.7 இலட்சம் அரசால் ஒப்பளிக்கப்பட்டது. கணினிகள் கொள்முதல் செய்யப்பட்டு நிறுவப்பட்டன.

★ **2001 மற்றும் 2002ஆம் வருடங்களில் பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறிய மனுதாரர்களுக்கு பதிவு புதுப்பித்தலுக்கான சிறப்புச் சலுகை கடந்த ஆண்டில் வழங்கப்பட்டது. இச்சிறப்புச் சலுகையின் மூலம் 82,337 பேர் பயனடைந்துள்ளனர்.**

★ கடந்த மூன்றாண்டு காலத்தில் ரூ.21.53 இலட்சம் செலவில் 3,200 இந்து ஆதிதிராவிட மனுதாரர்களுக்கு தொழிற்கல்வி நுழைவுத் தேர்விற்கான பயிற்சியளிக்கப்பட்டது. இப்பயிற்சியில் கலந்துகொண்ட 398 மாணவர்கள் பல்வேறு தொழிற்கல்லூரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

★ **கடந்த மூன்றாண்டுகளில் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக 4,653 மனுதாரர்களுக்கு சுயவேலைவாய்ப்பிற்காக ரூ.1,897.43 இலட்சம் பல்வேறு வங்கிகள் மூலம் கடன் உதவி பெற்றுத் தரப்பட்டது.**

## தொழிற்சாலைகள் ஆய்வகத்துறை

★ கடந்த மூன்று ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது.

1–4–2004 முடிய இதன் எண்ணிக்கை 34,101 ஆகும்.

பயன்பெற்ற தொழிலாளர்கள் 12,56,402 பேர்.

★ கடந்த மூன்று ஆண்டுகளில், இதில் விசாரித்து முடிக்கப்பட்ட புகார்களின் எண்ணிக்கை 1,447.

★ கடந்த மூன்று ஆண்டுகளில் நிரந்தரம் செய்யப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 59,424. சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 15,078.

★ கடும் முரண்பாடுகள் காணப்பட்ட நிர்வாகத்தினர் மீது 7,580 வழக்குகள் தொடரப்பட்டு, ரூ.1,60,13,965 நீதிமன்ற அபராதத் தொகையாக வசூலிக்கப் பட்டுள்ளது.

★ கடந்த மூன்று ஆண்டுகளில் குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு சம்பந்தமாக 397 வழக்குகள் தொடரப்பட்டு ரூ.12,52,500/– அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளது.

★ இத்துறையின் கடும் நடவடிக்கையினாலும், செயலாக்கத்தினாலும் கடந்த மூன்று ஆண்டுகளில் 2,793 சிறப்பு குழு ஆய்வுகள் மாநிலம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு 534 குழந்தைத் தொழிலாளர்கள் பணிபுரிவது கண்டுபிடிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினர் மீது வழக்குகள் தொடரப்பட்டுள்ளது. மேலும், அபாயகரமான தொழிலில் குழந்தைத் தொழிலாளர்களை பணிக்கு அமர்த்துதலை 2005ஆம் ஆண்டிற்குள் முற்றிலும் நீக்குவதற்காக 2003ஆம் ஆண்டில் ஒரு செயல் திட்டம் உருவாக்கப்பட்டது.

★ 31–3–2003 அன்று சென்னையில் நடைபெற்ற அரசு விழாவில், 1998, 1999 மற்றும் 2000ஆம் ஆண்டுகளுக்கான மாநில பாதுகாப்பு விருதுகள் 198 நிர்வாகத்தினருக்கு முதல் பரிசும், 134 நிர்வாகத்தினருக்கு இரண்டாம் பரிசும் வழங்கப்பட்டன. ❖

# கைத்தறி மற்றும் துணிநூல் துறை

தமிழ்நாட்டில் கைத்தறி நெசவாளர்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்துவதும், கைத்தறி, விசைத்தறி மற்றும் துணிநூல் பிரிவுகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை ஏற்படுத்துவதும் கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் முக்கிய நோக்கங்களாகும். தமிழ்நாட்டில் துணித்தொழில் தேசிய மற்றும் மாநில பொருளாதாரத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றது. இது தொழில் வளர்ச்சியில் முன்னோடியாக திகழ்வதுடன் மாநிலத்தில் அதிக வேலைவாய்ப்பும் வழங்குகிறது. துணித்தொழிலின் அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்கிய ஒரு சில மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு திகழ்கின்றது.

★ கோ–ஆப்டெக்ஸ் மற்றும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் தேங்கியிருக்கும் கைத்தறி துணிகளின் விற்பனைக்கு வழக்கமாக வழங்கப்படும் 20 சதவிகிதம் தள்ளுபடியுடன் 10 சதவிகிதம் கூடுதல் தள்ளுபடி, சிறப்புக் கழிவு கண்காட்சிகள் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டதால் 31–5–2001இல் ரூ.368.48 கோடியாக இருந்த கைத்தறித் துணிகளின் இருப்பு 31–3–2004இல் ரூ.239.67 கோடியாக குறைக்கப்பட்டுள்ளது. இதேபோன்று கூடுதலாக 10 சதவிகிதம் தள்ளுபடி மானியம் வழங்கியதால் ரூ.116.28 கோடி மதிப்புள்ள பருத்தி இரக துணிகளும், ரூ.173.81 கோடி மதிப்புள்ள கைத்தறி துணிகளும் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

★ இலவச வேட்டி சேலை திட்டத்தில் ஈடுபட்டு வந்த 22,072 கைத்தறி நெசவாளர்களுக்கு 20 கிலோ அரிசி வீதம் மொத்தம் 1,324.48 மெட்ரிக் டன் அரிசி ரூ.119 கோடி செலவில் இலவசமாக வழங்கப்பட்டது.

★ 2002–2003ஆம் ஆண்டில் ''மலிவு விலை வேட்டி சேலை திட்டம்'' அறிமுகப்படுத்தப்பட்டு சேலை ஒன்றினை ரூ.40–க்கும், வேட்டி ஒன்றினை ரூ.30–க்கும் விற்பனை செய்து தேங்கியிருந்த 57 இலட்சம் வேட்டிகள் மற்றும் 59.34 இலட்சம் சேலைகள் ரூ.40.84 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டன.


★ கோ–ஆப்டெக்ஸ் மற்றும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிலுவையில் இருந்த வட்டி மானியத்தொகை ரூ.27.50 கோடியினை 2002–03ஆம் ஆண்டிலும், 2003–04ஆம் ஆண்டில் ரூ.2 கோடியும் அரசால் வழங்கப்பட்டது.

★ இலவச சேலை மற்றும் வேட்டி வழங்கும் திட்டம் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டு, 2004ஆம் ஆண்டு பொங்கல் திருநாள் முதல் 111 இலட்சம் பாலிகாட் சேலைகளும், 111 இலட்சம் பாலிகாட் வேட்டிகளும் ரூ.173 கோடி செலவில் இலவசமாக விநியோகம் செய்யப்பட்டன. இத்திட்டம் 2005ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும்.

★ 20,000 நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை அளிக்கும் வகையில் இலவச சீருடை உற்பத்தித் திட்டம் ரூ.25 கோடி செலவில் மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது.

★ இலாபத்தில் இயங்கி வந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 2003–04ஆம் ஆண்டில் 513 ஆக உயர்ந்துள்ளது.

★ நெசவாளர்களின் நலன் கருதி தள்ளுபடி மானியம் 2003–04ஆம் ஆண்டில் ரூ.88 கோடியாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.



★ 586 நெசவாளர் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் நெசவாளர் குடும்ப ஓய்வூதியம் ரூ.250–லிருந்து ரூ.350 ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

★ **பட்டுச் சேலைகளிலுள்ள ஜரிகையின் அளவீட்டினை அறிய ரூ.22.84 இலட்சம் செலவில் "எக்ஸ்–ரே ஊடுகதிர் பகுப்பாய்வு இயந்திரம்'' காஞ்சிபுரத்தில் நிறுவப்பட்டுள்ளது.**

★ இறந்த நெசவாளர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் மொத்த காப்பீட்டுத் தொகை ரூ.60,000லிருந்து ரூ.65,000ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

★ 2001–02ஆம் ஆண்டு முதல் மைய அரசின் நலவாழ்வு செறிவுத் திட்டத்தில் மாநில அரசும் இணைந்து 2001–02ஆம் ஆண்டில் ரூ.12.99 இலட்சமும், 2002–03ஆம் ஆண்டில் ரூ.52.11 இலட்சமும் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

★ 25,000 நெசவாளர்களுக்கு புதிய இரகங்கள் உற்பத்தி செய்ய பயிற்சி அளித்தல், வடிவமைப்பு மற்றும் திறன் மேம்பாடு போன்ற பல்வேறு இனங்களுக்கு சுவர்ண ஜெயந்தி கிராம

சுயவேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ், உதவித் தொகையாக ரூ.25.30 கோடி வழங்குவதற்கு ஒரு சிறப்புத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

★ சென்னிமலை பகுதி நெசவாளர்களுக்கு ஒரே இடத்தில் ரூ.686.80 இலட்சம் செலவில் 1,010 தொழிற்கூடத்துடன் கூடிய வீடுகள் அடங்கிய ஆசியாவிலேயே மிகப்பெரிய நெசவாளர் காலனி கட்டப்பட்டுள்ளது.

★ 5,000 மகளிர் கைத்தறி நெசவாளர்களுக்கு சுயமாக வேலை செய்து வருவாய் ஈட்டும் வகையில் பயிற்சி அளிக்க அரசு ரூ.20 இலட்சம் வழங்கியுள்ளது. இதுவரை, 4,930 மகளிர் நெசவாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

★ தமிழ்நாட்டிலுள்ள 2,000 சாதாரண விசைத்தறிகளை தறி ஒன்றுக்கு ரூ.5,000 மானியத்துடன் நவீனமாக்க மொத்தம் ரூ.1 கோடி விசைத்தறி பதிவு நிதியிலிருந்து விடுவிக்கப்பட்டு செயலாக்கப்படுகிறது.

★ 374 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள 24,000க்கும் மேற்பட்ட கைத்தறிகள் ஏற்றுமதி இரக உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மேலும் 2001–02ஆம் ஆண்டில் ரூ.146.25 கோடி அளவிற்கும், 2002–03ஆம் ஆண்டில் ரூ.179 கோடி அளவிற்கும், 2003–04ஆம் ஆண்டில் ரூ.195.08 கோடி அளவிற்கும் ஏற்றுமதி விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

★ சென்னையிலுள்ள தேசிய ஆடை வடிவமைப்பு மையம் மூலம் 1,061 நெசவாளர்களுக்கு ரூ.13.83 இலட்சம் செலவில் வடிவமைப்பு மற்றும் ஆடை அலங்கார தொழில்நுட்ப சிறப்புப் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டு, முதற்கட்டமாக, 55 நெசவாளர் களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

★ கடாக் மற்றும் வெங்கடகிரியில் உள்ள இந்திய கைத்தறி தொழில்நுட்பப் பயிலகத்தில் பயிலும் தமிழக மாணவர்களுக்கு 2002–03ஆம் கல்வி ஆண்டில் உதவித்தொகையாக ரூ.81,000/– வழங்கப் பட்டுள்ளது.

★ **பல்மருத்துவக் கல்லூரியில் பி.டி.எஸ். பட்டப்படிப்பு பயிலும் நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்த மாணவ மாணவியருக்கு ரூ.3,000/– வீதம் டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளையிலிருந்து கல்வி உதவித் தொகையாக 2002–03ஆம் கல்வி ஆண்டு முதல் வழங்கப்படுகிறது.**

★ கூட்டுறவு நூற்பாலைகளின் செயல்பாடுகளைச் சீரமைக்க அரசு தன்விருப்ப ஓய்வுத் திட்டத்தினைச் செயல்படுத்தி 7,096 தொழிலாளர்கள்/ பணியாளர்களுக்கு ரூ.68.38 கோடி வழங்கியுள்ளது.

★ விசைத்தறி நெசவாளர்களின் குறைகளைக் களையவும், ஆலோசனைகள் வழங்கவும் சென்னையில் கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் அலுவலகத்திலும், மாவட்ட அளவில் 18 சரக அலுவலகங்களிலும் விசைத்தறி வளர்ச்சிப் பிரிவுகள் (Powerloom Development Cell) உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

★ சந்தை நிலவரத்தை முன்கூட்டியே அறியவும், கைத்தறித் துணிகளின் விற்பனையை மேம்படுத்தவும், சென்னையிலுள்ள கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் அலுவலகத்தில் ''புள்ளி விவர மற்றும் சந்தை நிலவர நுண்ணாய்வு மையம்'' (Data and Market Intelligence Cell) ரூ.5 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

★ காஞ்சிபுரம், சேலம், கரூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய ஜவுளி நகரங்களின் சாலை, மின்வசதி, குடிநீர்வசதி, நெசவுப் பயிற்சி, மாசுக்கட்டுப்பாடு போன்ற உள்கட்டமைப்புகளை மேம்படுத்த தலா ரூ.20 கோடி மதிப்பீட்டில் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ வேகமாக வளர்ச்சியடைந்து வரும் துணிநூல் தொழிலை மேம்படுத்திடவும், சீரிய முறையில் வழிகாட்டிடவும், அரசு ஒரு துணித்தொழில் இயக்கம் (Textile Mission) அமைக்க தக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

**பட்டு உற்பத்தி**

2001–02 முதல் 2003–04 வரை பட்டு உற்பத்தியில் அடையப்பட்ட சாதனையில் 2001–02ஆம் ஆண்டின் சாதனை குறிப்பிடத்தக்க அளவு அதாவது 655 மெட்ரிக் டன்னாகும். முந்தைய ஆண்டைக் காட்டிலும் 15 சதவிகிதம் அதிகமாகும்.

2002–03ஆம் ஆண்டு முதல் இருசுழற்சியின புழுவளர்ப்புத் திட்டத்தினை 5 ஆண்டுகளுக்கு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு மாவட்டத்திலுள்ள சத்தி, ஒசூர், பாப்பிரெட்டிப்பட்டி, கிருஷ்ணகிரி ஆகிய தொழில்நுட்பச் சேவை மையங்களில் செயல்படுத்தப் படுகிறது.

பட்டுத்தர மேம்பாட்டுக் குழுக்களுக்கு 50 சதவிகித மானிய விலையில் விசைத் தெளிப்பான் வழங்கப்பட்டது.

2001–02, 2002–03, 2003–04 ஆகிய ஆண்டுகளில் விவசாயிகள் பயிற்சிக்கு ரூ.13.587 இலட்சமும், சொட்டுநீர்ப் பாசனத்திற்கு ரூ.122.48 இலட்சமும், தனியாகப் புழுவளர்ப்பு மனை அமைக்க ரூ.166.50 இலட்சமும், புழுவளர்ப்பு தளவாடங்கள் கொள்முதல் செய்ய ரூ.73.30 இலட்சமும், இளம்புழு வளர்ப்பு மையம் அமைக்க ரூ.2.42 இலட்சமும், பட்டுத்தர மேம்பாட்டுக் குழுக்களுக்கு விசைத் தெளிப்பான் வழங்க ரூ.13.84 இலட்சமும், பட்டுத்தர மேம்பாட்டுக் குழுக்களுக்கு மூலதன உதவிக்கு ரூ.18.29 இலட்சமும், சிறு பட்டு நூற்பாளர்களுக்கு சிறு கடன் உதவி அளிக்க ரூ.37.50 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 37,635 வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

# தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்



### கதர்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணைப்படி தேங்கிக் கிடந்த கதர் இரகங்களில் ரூ.3 கோடி மதிப்புள்ள கதர் வேட்டிகள், முதியோர் ஒய்வூதியத் திட்டத்தின்கீழ் ஒய்வூதியம் பெறுபவர்களுக்கு விநியோகம் செய்யத்தக்க வகையில் ரூ.3.09 கோடி மதிப்புள்ள கதர் இரகங்கள் விற்பனை செய்யப்பட்டு விற்பனை அதிகரிக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதின் பேரில் அதிக தள்ளுபடி வழங்கி இதுவரை ரூ.6.43 கோடி மதிப்பிற்கான கதர் இரகங்கள் விற்பனை செய்து கணிசமாக கதர் இரகங்களின் இருப்பு குறைக்கப்பட்டுள்ளது. **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பதவியேற்றவுடன் அனைத்து கதர் பருத்தி, பாலிவஸ்திரா இரகங்களுக்கு 30% தள்ளுபடியும், கதர் பட்டு இரகங்களுக்கு 20% தள்ளுபடியும், பட்டு இரகங்களின் ரொக்க விற்பனைக்கு 30% தள்ளுபடியும் ஆண்டு முழுவதும் ஒரே சீராக அளித்து ஆணை வெளியிட்டுள்ளார்.**

கிராம நூற்பு நிலையங்களில் நூல் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கிராமங்களில் உள்ள வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள நூற்பாளர்கள், கதர் மற்றும் பட்டு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நெசவாளர்கள் சுமார் 41,500 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

சோப்பு உற்பத்தி, 2001–2002ஆம் ஆண்டில், ரூ.207.10 இலட்சமாக உயர்ந்துள்ளது. 2002–2003ஆம் ஆண்டில் இரு மடங்குக்கு மேல் அதிகமாக ரூ.542.42 இலட்சம் மதிப்பிற்கு உயர்ந்தது. 2003–04ல் ரூ.546.22 இலட்சம் மதிப்பிற்கு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பதவியேற்ற பிறகு வாரியத்தின் உற்பத்திப் பொருள்களான சோப்பு வகைகள், தேன் முதலான கிராமத்தொழில் பொருட்களை நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனையை அறிமுகப்படுத்தி தொடங்கி வைத்தார்கள்.

ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு தேவையான அனைத்து சோப்பு வகைகளையும் வாரியத்தின் மூலம் விநியோகம் செய்யத் தக்க வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், குறைந்த விலையில், நிறைந்த தரத்துடன் புதிய தயாரிப்புகளாக மூலிகை சோப்பு (மூலிகா), வலி நிவாரண எண்ணெய் (சுகப்பிரியா), கை கழுவும் திரவம் (சூப்பர் கிளீன்), ஷாம்பூ (எழில்), ஜவ்வாது பவுடர், கம்ப்யூட்டர் சாம்பிராணி ஆகியவை விற்கப்படுவதோடு, பாத்திரம் துலக்கும் ரப்–அப் என்ற சோப்பும் அறிமுகப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

ஜூலை 2002இல் சென்னையில் குறளகம் காதி கிராப்டில் 10 நாட்கள் தேன் கண்காட்சி நடத்தப்பட்டு தேன் விற்பனை பல மடங்கு அதிகரித்துள்ளது. 2002–2003ஆம் நிதியாண்டில் ரூ.84.48 இலட்சம் மதிப்பிற்கும், 2003–2004ஆம் நிதியாண்டில் ரூ.107.83 இலட்சம் மதிப்பிற்கும் தேன் விற்பனை உயர்ந்துள்ளது.

தோல் காலணிகள், ஷூக்கள், கைப்பைகள் மற்றும் பெல்ட்கள் ஆகியவை விற்கப்பட்டு, சலுகை விலையில் விற்பனை 2003–2004இல் ரூ.6.87 கோடியாக அதிகரித்துள்ளது.

காதி கிராப்ட் வளாகத்தில் ஒரு "இரத்த சோதனை மையம்" (Blood Pressure Testing Centre) திறக்கப்பட்டுள்ளது. இதற்கு கட்டணமாக ரூ.10/– மட்டும் வசூலிக்கப்படுகிறது.

விளிம்புத் தொகை திட்டத்தில் 983 கிராமப்புற மக்கள் பயனடைந்துள்ளனர்.

2001 முதல் 2003–2004 வரை கதர் இரகங்கள் உற்பத்தி ரூ.4,768.70 இலட்சம் என்ற அளவிலும் கிராமத் தொழில் பொருட்கள் உற்பத்தி ரூ.3,631.97 இலட்சம் என்ற அளவிலும், கதர் இரகங்கள் விற்பனை ரூ.4,701.92 இலட்சம் என்ற அளவிலும் கிராமத் தொழில் பொருட்கள் விற்பனை ரூ.3,183.80 இலட்சம் என்ற அளவிலும் எய்தப்பட்டு வாரிய செயல்பாடுகள் வளர்ச்சி அடைந்துள்ளது.

# தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம்

பனைத் தொழிலில் சுமார் ஆறு இலட்சம் கைவினைஞர்கள் நேரடியாகவும் மற்றும் மறைமுக மாகவும் ஈடுபட்டு வருகின்றனர்.

2003–2004ஆம் ஆண்டில் இணையம்/ சம்மேளனங்கள் கட்டுப்பாட்டிலுள்ள அலகுகள் ரூ.489.71 இலட்சம் மதிப்பிலான பனை பொருட்கள் உற்பத்தி

செய்துள்ளன. ரூ.561.11 இலட்சம் மதிப்பிலான பனை பொருட்களை விற்பனை செய்துள்ளன.

★ பதப்படுத்தப்பட்ட பனம்பழ ஜாம் மற்றும் பனநுங்கு ஜாம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

★ 2001–2002ஆம் ஆண்டு நவீன முறையில் பனநுங்கு பதப்படுத்தும் பிரிவு மாதவரம் குமரப்பாபுரம் பனைப் பண்ணையில் தொடங்குவதற்கு ரூ.1.25 இலட்சமும், எழும்பூர், பாம்கோலா பிரிவினை நவீனப்படுத்த கன்வேயர் ஒன்று வாங்கவும் ரூ.1 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

★ கோயம்புத்தூர், திண்டுக்கல், தேனி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் பனைநடவு திட்டம் ரூ.6. இலட்சம் செலவில் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

★ 2002–2003ஆம் ஆண்டு விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் பனைப் பண்ணையில் உள்ள பனைவெல்லம் மற்றும் பனங்கற்கண்டு உற்பத்திப் பிரிவிற்கு உபகரணங்கள் மற்றும் கட்டமைப்பு வசதிகள் அமைத்துத் தரும் திட்டத்திற்கும் மற்றும் ஈரோடு, கோயம்புத்தூர், திண்டுக்கல் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் பனைத்தொழில் கைவினைஞர்களுக்கு பதநீரிலிருந்து பனைவெல்லம் தயாரிக்க தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கும் திட்டத்திற்கும் அரசினால் ரூ.7 இலட்சம் அனுமதிக்கப்பட்டு திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இத்திட்டங்களின்படி பயன்பெற்ற மொத்த பயனாளிகள் 720 நபர்களில் 495 நபர்கள் மகளிர் ஆவர்.

★ 2003–2004ஆம் ஆண்டு ரூ.10 இலட்சம் நிதி மானியமாக அனுமதிக்கப்பட்டு சென்னை மாதவரம் பனைப் பண்ணை பதநீர் பிரிவில் பாலிதீன் பேக்கிங் இயந்திரம், காற்று அழுத்தான் மற்றும் குளிர் பதன இயந்திரம் பொறுத்துதல், தருமபுரி மாவட்டத்தில் 200 பனைத் தொழில் கைவினைஞர்களுக்கு பதநீரிலிருந்து பனைவெல்லம் தயாரிக்க தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல், சென்னை மாதவரம் பனைப் பண்ணை பனஞ்சீனி மிட்டாய் பிரிவினை நவீனப்படுத்துதல் போன்ற பணிகள் நிறைவேற்றப்பட்டன.

★ 2003–2004ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் தாலுகா, வள்ளியூரில் பனம்பழ மற்றும் பனநுங்கு ஜாம் உற்பத்தி பிரிவு தொடங்கும் திட்டம் ரூ.2 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

★ பூம்புகார் என்ற சிறப்பு பெயரில் இயங்கி வரும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், கடந்த மூன்று ஆண்டுகளில், ரூ. 3,763.73 இலட்சம் விற்பனை செய்துள்ளது.

★ தமிழக கைவினைப் பொருட்களின் மேம்பாட்டினை அயல்நாடுகளில் வெளிப்படுத்தும் நோக்குடனும், ஏற்றுமதியை அதிகரிக்கும் நோக்குடனும் இந்திய அரசால் மலேஷியா தலைநகர் கோலாலம்பூரில் டிசம்பர் 2003, 2 முதல் 6ஆம் தேதி வரை நடத்தப்பட்ட "*வியத்தகு இந்தியா 2003*" எனும் கண்காட்சியின் தமிழ்நாட்டு அரங்கில் இந்நிறுவனம் பங்கேற்றது.

★ மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் சுதந்திர தின நாளில் அறிமுகம் செய்து அறிவித்த திட்டத்தின்படி, தமிழக கைவினைஞர்களுக்கு அடையாள அட்டைகளும், அதனடிப்படையில் இந்தியன் வங்கி மூலமாக கடன் அட்டைகளும் வழங்கியதன் மூலம் கைவினைஞர்கள் பயனடையும் திட்டமும் அமல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி 3 ஆண்டுகளுக்கு ரூ.25,000/– அளவில் தனி நபரும் சுயசேவை குழுவிற்கு ரூ.2 இலட்சம் வரை கடன் பெற முடியும்.

★ ஆண்டுதோறும் மைய அரசு கைவினைஞர்களுக்கு வழங்கி வரும் தேசிய விருதுக்கு 2003ஆம் ஆண்டிற்கு தமிழகத்தின் கைதேர்ந்த 10 கைவினைஞர்களை மாநில அளவில் பரிந்துரை செய்ததில், தமிழகத்தைச் சேர்ந்த 3 கைவினைஞர்கள் தேசிய விருதுக்குத் தகுதி பெற்று தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.


★ ஆண்டுதோறும் 5 கைவினைஞர்களுக்கு 'பூம்புகார் மாநில விருது' வழங்கி வருகிறது. இவ்விருது பெறுபவர்களுக்கு ரூ.5,000/– ரொக்கமும், சான்றிதழுடன் வெள்ளிபதக்கமும் வழங்கி கௌரவிக்கப்படுகிறது.

சுவாமிமலை, அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோயில் வளாகத்தில் பரிசுப் பொருள்கள் விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டு விற்பனை நடைபெற்று வருகிறது. இவ்விணையகம் ஈரோட்டில் பூம்புகார் விற்பனை நிலையத்தில் அமைந்துள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இப்புதிய கட்டடத்தை 12.02.03 அன்று திறந்துவைத்தார்கள். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.35.48 இலட்சம். இதில் தமிழக அரசின் நிதி உதவி ரூ.12 இலட்சம்.

★ நடப்பு ஆண்டில் இந்நிறுவனம் தமிழகத்திலும் பிற மாநிலங்களிலும் தமிழ்நாட்டில் உள்ள சிறப்புப் பெற்ற திருக்கோயில்களிலும் ரூ.479.98 இலட்சம் மதிப்பீட்டில் சிறப்பு பணிகளை மேற்கொண்டுள்ளது.

★ விருத்தாசலம் அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோயிலுக்கு வெள்ளி இரதமும், அருள்மிகு பண்ணாரியம்மன் திருக்கோயிலுக்கு தங்க இரதமும், அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் தாரமங்கலம், சென்னை, திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயிலுக்கு மர இரதமும், அருள்மிகு முண்டகக் கண்ணியம்மன் திருக்கோயில் மற்றும் மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயில்களுக்கு வெள்ளித் தகடு போர்த்தும் பணியினையும், பிற மாநிலங்களிலுள்ள பெங்களூர் ஸ்ரீ ஆஞ்சநேயர் திருக்கோயில் மற்றும் ஸ்ரீகாளஹஸ்தி திருக்கோயில் வெள்ளி வேலையும் மேற்கொண்டுள்ளது. இவ்வேலைகளின் மொத்த மதிப்பு ரூ.99.17 இலட்சத்தில் மேற்கொண்டுள்ளது. •

# எரிசக்தித்துறை



தமிழ்நாடு மின்சார வாரியத்தின் முக்கிய குறிக்கோள் மின் உற்பத்தி, அனுப்புகை மற்றும் பகிர்மானம் ஆகியவற்றை சீரிய முறையில் மேற்கொண்டு மின் பயனீட்டாளர்களுக்கு தரமான மின்சாரத்தை வழங்குவதாகும். இந்தியாவில் சிறப்பாகப் பணியாற்றிடும் மின்வாரியங்களில் ஒன்றாக தமிழ்நாடு மின்சார வாரியம் திகழ்கிறது. 2001ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையேற்றபின், தமிழ்நாடு மின்சார வாரியம் சிறப்பாகப் பணியாற்றி தன்னுடைய தனித்தன்மையை நிலைநிறுத்தி வருகிறது. மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு இதன் பங்கு குறிப்பிடத்தக்கது.

★ கடந்த மூன்று ஆண்டுகளில் மாநிலத்தின் எந்த ஒரு பகுதியிலும் மின்தடை இல்லை.

★ தூத்துக்குடி, மேட்டூர் மற்றும் வடசென்னை அனல் மின் நிலையங்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் தொடர்ந்து மிக சிறப்பாக செயல்பட்டு, ஒரே சமயத்தில் இந்திய அரசின் தங்கப்பதக்கம்/ரொக்கப்பரிசுகள் பெற தகுதி பெற்றுள்ளன.

★ வடசென்னை, தூத்துக்குடி, மேட்டூர் அனல் மின் நிலையங்கள் மேலும் தகுதி மேம்பட்ட ஐ எஸ் ஓ (ISO) - 9001 : 2000 தரச் சான்றிதழை இந்த ஆண்டு பெற்றுள்ளன.

★ தனியார் துறையில், சமயநல்லூரில் 106 மெகாவாட் நிறுவுத்திறன் கொண்ட மின்திட்டம் 22–9–2001லும், தனியார் துறையில் நெய்வேலியில் பழுப்பு நிலக்கரியை எரிபொருளாகக் கொண்ட 250 மெகாவாட் திறனுடைய மின் திட்டம் 16–12–2002லும், வழுதூரில் எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட 95 மெகாவாட் திறனுடைய வாரியத்தின் சொந்த மின் திட்டம் 13–3–2003லும், குத்தாலத்தில் எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட 101 மெகாவாட் திறனுடைய வாரியத்தின் சொந்த மின் திட்டம் 24–3–2004லும் செயல்பட்டு வருகின்றது.

★ மத்திய துறையில், நெய்வேலி அனல் மின் நிலையம் – 1 விரிவாக்கத்தின் கீழ் ஒவ்வொன்றும் 210 மெகாவாட் திறனுடைய இரண்டு பிரிவுகள் வணிக இயக்கத்திற்கு முறையே 6–5–2003 மற்றும் 5–9–2003 தேதிகளில் இயக்கி வைக்கப்பட்டு தமிழ்நாட்டின் பங்காக 240 மெகாவாட் மின்சாரம் கிடைக்கப்பெறுகிறது.

★ கடந்த 3 ஆண்டு காலங்களில் மட்டும் 548 மெகாவாட் திறன் அளவிற்கு காற்றாலைகள் நிறுவப்பட்டுள்ளன. 31–3–2004 வரை 1,361 மெகாவாட் திறன் அளவிற்கு காற்றாலைகள் நிறுவப்பட்டதன் மூலம் நாட்டிலேயே தொடர்ந்து காற்றாலை மின் உற்பத்தியில் தமிழகம் முன்னிலையில் இருந்து வருகின்றது.

★ சென்னையில் 1,000 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் திட்டத்தை கூட்டு முயற்சியில் நிறுவுவதற்காக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் தேசிய அனல் மின் கழகத்திற்கும் இடையே 12–7–2002 அன்று ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

★ தூத்துக்குடியில் 1,000 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் திட்டத்தை கூட்டு முயற்சியில் நிறுவ தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்குமிடையே 19–6–2003 அன்று ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் 25 துணை தொடர் மற்றும் மின் பகிர்மானத் திட்டங்கள் பெரும்பாலான மாநிலத்திலுள்ள நகர்புறப் பகுதிகளை உள்ளடக்கி, மொத்தம் ரூ.977 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் மின்சாரத்தின் தரம் மேலும் மேம்படுத்தப்படும்.

★ ஊரக வளர்ச்சிக்கான தேசிய விவசாய வங்கியின் உதவியுடன் ரூ.146.39 கோடி செலவில் 14 மாவட்டங்களில் துணை தொடர் மற்றும் மின் பகிர்மானத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

★ **மின்நுகர்வோர்களின் மின்தடை பற்றிய குறைகளை உடனடியாக தீர்க்கும் பொருட்டு கணினி மயமாக்கப்பட்ட மின்தடை நீக்கும் மையம் ஒன்று சென்னை மாநகரில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 12–11–2003 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.**

★ மின் உற்பத்தி 2001–02ஆம் ஆண்டு 43.920 மில்லியன் யூனிட்டுகள், 2002–03ஆம் ஆண்டு–46.389 மில்லியன் யூனிட்டுகள், 2003–04ஆம் ஆண்டு 49.301 மில்லியன் யூனிட்டுகள்.

## புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள்

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் சிறப்பாகப் பணியாற்றி, அதன்மூலம் தமிழ்நாடு காற்றுசக்தி மற்றும்

கரும்பு சக்கை மூலம் மின் உற்பத்தி செய்வதில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது.

தமிழ்நாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் மூலம் மொத்த மின் உற்பத்தித் திறன், கடந்த மூன்றாண்டுகளில் (2001–2004) 680 மெகாவாட் அதிகரித்துள்ளது, புதுப்பிக்கதக்க எரிசக்தி மூலம் (நீர் மின் நிலையம் நீங்கலாக) மொத்த மின் உற்பத்தித் திறன் 31.3.2004 வரை 1,648 மெகாவாட்டான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் கட்டமைப்பின் மொத்தத் திறனான 10,947 மெகாவாட்டில் 15 சதவிகிதம் ஆகும்.

தமிழகத்தில் சர்க்கரை ஆலைகளில் கரும்பு சக்கையினைப் பயன்படுத்தி மின்உற்பத்தி செய்வதில் கடந்த மூன்றாண்டுகளில் 132 மெகாவாட் அதிகரித்துள்ளது. இதன் மூலம் 31.3.2004 வரை தமிழ்நாட்டில் மொத்த மின் உற்பத்தி திறன் 274 மெகாவாட் ஆகும். இது இந்தியாவின் மொத்த உற்பத்தித் திறனில் 30 சதவிகிதம் ஆகும்.

ஊராட்சிகளில் மின்கட்டணச் செலவைக் குறைக்கும் வகையில் 3,387 சூரியசக்தி தெருவிளக்குகள் மத்திய அரசு மானியத்துடன் 2003–04ஆம் ஆண்டில் நிறுவப்படுகிறது. சூரியஒளி சக்தி மூலம் விவசாயத்திற்கும், குடிநீர் இறைப்பதற்கும் பம்புகளை அரசு மானியத்துடன் 243 இடங்களில் கடந்த மூன்று ஆண்டுகளில் நிறுவப்பட்டுள்ளன.

2002–03ஆம் ஆண்டுக்கான கொள்கை குறிப்பிலுள்ள அறிவிப்பின்படி, சூரியசக்தி சுடுநீர் அமைப்புகள் 500 சதுர மீட்டர் மற்றும் அதற்கு மேல் கட்டப்படும் வணிகரீதியான புதிய கட்டடங்களிலும் 150 சதுரமீட்டருக்கு மேற்படி கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களில் நிறுவுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலைகளில் வெப்பசக்தி மற்றும் மின்சக்தி தேவைகளுக்கு தாவர எரிசக்தி வாயுக்கலன்களை (gasifier) அமைப்பதற்கு அரசு மானிய உதவி அளிக்கிறது. மூன்றாண்டுகளில் 10 தாவர எரிசக்தி வாயுக் கலன்கள் நிறுவப்பட்டுள்ளன.

மனிதக் கழிவுகளிலிருந்து பெறப்படும் வாயு மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் திட்டத்திற்கு தமிழக அரசு மானியம் வழங்கி வருகிறது. தமிழகத்தில் 3 இடங்களில் இவ்வகை எரிவாயு கலன்கள் அமைக்கப்பட்டுள்ளது. 2003–04–ஆம் ஆண்டில் 14 சுகாதார வளாகங்களில் மனிதக் கழிவு எரிவாயுக் கலன்கள் அமைத்து கிடைக்கும் வாயு மூலம் பம்புகளை இயக்கி அந்த வளாகங்களை சுயசார்புடையவைகளாக மாற்றும் பணியினை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை செய்து வருகிறது. இதைத் தவிர 25 நிறுவனங்களில் மனிதக் கழிவு எரிவாயு கலன்கள் அமைக்கப்படுகின்றன. இதற்காக தமிழக அரசு மொத்தம் ரூ.43.5 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது.

எத்தனால் மற்றும் உயிரியல் எரிபொருளாக ஜெட்ரோபா(காட்டாமணக்கு) பயன்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு ஊக்கமளித்து வருகிறது.

## அனைத்து விவசாயிகளுக்கும் குடிசைவாசிகளுக்கும் முற்றிலும் இலவச மின்சாரம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் அறிவிப்பு

*"தமிழ்நாட்டிலுள்ள அனைத்து விவசாயிகளும், குடிசைவாசிகளும் முற்றிலும் இலவசமாக மின்சாரம் பெற்றிட நான் தற்போது ஆணையிட்டுள்ளேன். இதன்படி, விவசாய பம்புசெட்டுகளுக்கும், குடிசைகளுக்கும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் நிர்ணயிக்கப்படுகின்ற கட்டணம் முழுமையாக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அரசே நேரடியாக செலுத்திடும். 2003–2004 இரண்டாவது அரை ஆண்டிற்கான பண அஞ்சல்கள் ஏற்கெனவே அனுப்பப்பட்டு விட்டன. எனவே, இந்த முற்றிலும் இலவச மின்சாரத் திட்டம் 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் தேதியிலிருந்து தொடங்குகின்ற 2004–2005ன் முதல் அரையாண்டிலிருந்து செயல் படுத்தப்படும்.*

*முந்தைய திமுக அரசு அனைத்து விவசாய பம்பு செட்டுகளுக்கும், குடிசைகளுக்கும் மீட்டர் பொருத்தப்பட வேண்டும் என்ற ஷரத்து உள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஒப்புக் கொண்டதின் அடிப்படையில் நிதி உதவியை பெற்றுக்கொண்ட போதிலும், விவசாய பம்பு செட்டு இணைப்புகளுக்கும், குடிசைகளுக்கும் மீட்டர் பொருத்தப்பட வேண்டிய தில்லை என்று நான் இப்பொழுது ஆணை யிட்டுள்ளேன்".*

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள் மற்றும் கருவிகளைப் பார்த்து அதன் செயல்பாடுகளை பொதுமக்கள் மற்றும் மாணவ மாணவிகள் அறிந்து கொள்ளும் வகையில் 8 மாவட்டங்களில் எரிசக்தி பூங்காக்களை நிறுவியுள்ளது.

இந்தியாவில் தமிழ்நாடு 2002–லேயே புதுப்பிக்கத் தக்க எரிசக்தியின் அளவு 10 சதவிகிதமாக உயர்த்தும் நிலையை அடைந்து சாதனை படைத்துள்ளது. 2004ஆம் ஆண்டில் 15 சதவிகிதமாக உள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கடந்த 15.8.2003 அன்று சென்னை கோட்டையில் சுதந்திரதின விழாவில், கொடியேற்றி உரையாற்றும் போது **"பசுமையானதுமான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களைப் பயன்படுத்துவதை விரிவுப்படுத்தவும், ஊக்குவிக்கவும் அதனை மற்றுமொரு மக்கள் இயக்கமாக மாற்றவும் நான் விரும்புகிறேன்"** என்று அறிவித்துள்ளார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உயரிய நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் முழுத் திறனோடும், வேகத்துடனும் பணியாற்றி வருகிறது. ❖

# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் விருப்பப்படி, இந்திய நாட்டின் முதன்மை மாநிலமாகத் தமிழ்நாட்டினைக் கொணர பிற்படுத்தப் பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மை வகுப்பினரை சமூகப் பின்னடைவிலிருந்து விடுவிக்கவும் அவர்களது பொருளாதார மேம்பாட்டிற்கும், பல்வேறு நலத்திட்டங்களை வகுக்கவும் செயல்படுத்தவும் தமிழக அரசு முக்கியத்துவம் அளித்துள்ளது.

❖ பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளுக்கு அடிப்படை வசதிகள் அளிக்கும் மிகுவிரைவுத் திட்டம் 2001–2002ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மின் இணைப்புகள் பழுதுபார்த்தல் / புதுப்பித்தல், குடிநீர் வசதி மற்றும் கழிவறை வசதி ஆகிய பணிகள் ரூ.124.06 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

❖ தனியார் கட்டடங்களில் இயங்கி வரும் 770 விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டும் ஒரு பெரும் திட்டத்தினை 2001–2002ஆம் ஆண்டு முதல் அரசு முனைப்புடன் செயல்படுத்தத் தொடங்கி இதுவரை 214 விடுதிகளுக்கு கட்டடம் கட்டும் பணி ரூ.68.49 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் 114 விடுதிகளுக்கான கட்டடப் பணிகள் முடிவடைந்துள்ளது. மீதம் உள்ள 100 விடுதிகளுக்குக் கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

❖ பள்ளி விடுதிகளில் வழங்கப்படும் உணவின் தரத்தினை உயர்த்திட, ஒரு மாணவனுக்கான மாதாந்திர உணவுக் கட்டணத்தை 1.10.2001 முதல் ரூ.225லிருந்து ரூ.300ஆக உயர்த்தப் பட்டது.

❖ கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தும் மிகு விரைவுத் திட்டத்தின்கீழ், குடிநீர் வசதி, மின் இணைப்பு மற்றும் கழிவறை வசதி போன்ற அடிப்படை வசதிகள் அமைக்கும் பணி ரூ.379.09 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது.

❖ பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப் பட்டோர், சீர்மரபினர் மற்றும் முன்னேறிய வகுப்பினருக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கியுள்ள இடங்களில் முதல் கட்டமாக சாலை வசதி, தெருவிளக்குகள், குடிநீர் வசதி மற்றும் சுகாதார வசதி ஆகிய அடிப்படை வசதிகள் அமைக்கும் பணி ரூ.8.25 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டது.

❖ தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டத்தின்கீழ் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப் பட்ட, சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் உள்ளிட்ட 5,000 மகளிருக்கு 2001–2002இல் அனைத்து மாவட்டங்களிலும் தொழில் தொடங்க தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் மூலம் 7 நாள் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி பெற்ற மகளிர் தொழில் தொடங்க ஒவ்வொருவருக்கும் ரூ.10,000/– வீதம் குறைந்த வட்டியில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் ரூ.5. கோடி கடன் வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

❖ மலைப்பிரதேசங்களில் உள்ள 18 விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ / மாணவியருக்கு கம்பளி ஆடைகள் ரூ.1.50 இலட்சம் செலவில் வழங்கப்பட்டது. அரசுப் பணியில் சேருவதற்குக் குறைந்தபட்சக் கல்வித் தகுதியுடைய பிற்படுத்தப்பட்டோருக்கான அதிகபட்ச வயதுவரம்பு 30லிருந்து 32ஆக உயர்த்தி 3.5.2002 அன்று அரசு ஆணை வெளியிடப்பட்டது. விடுதி ஒன்றிற்கு ரூ.1,000/– வீதம் மொத்தம் ரூ.9.72 இலட்சம் செலவில் 972 விடுதிகளிலும் தங்கிப் பயில்பவர்களுக்கு விளையாட்டு சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளது. 972 விடுதிகளிலும், விடுதி நூலகம் ஒன்றிற்கு ரூ.3,000/– வீதம் மொத்தம் ரூ.29.16 இலட்சம் செலவில் நூலகங்களுக்குப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளது.



❖ மலைப்பிரதேசங்களில் உள்ள 18 விடுதிகளில் தங்கிப் பயிலும் 922 மாணவ / மாணவியர்களுக்கு ரூ.17 இலட்சத்தில் இரண்டு அடுக்கு மரப் படுக்கைகள் வழங்க அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. சிறு வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒரு இலட்சம் மகளிருக்கு ஒருவருக்கு ரூ.2,000/– வீதம் மிகக்குறைந்த வட்டியில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தால் இதுவரை 37,665 மகளிருக்கு ரூ.753.30 இலட்சம் சிறு தொழில் செய்வதற்கான கடன் வழங்கப்பட்டுள்ளது. 200 விடுதிகளுக்கு ரூ.85 இலட்சம் செலவில் சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. பிற்படுத்தப் பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரின் பொருளாதார நிலையினை உயர்த்த 2002–2003ஆம் ஆண்டு முதல் இலவச தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளது.

❖ விடுதிகளில் தங்கி 10 ஆவது வரை பயிலும் மாணவ/மாணவியர் மற்றும் கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/ மாணவியருக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த 2 தொகுதி கதர் சீருடைகளுக்குப் பதில் "பாலிகாட்டன்" சீருடைத் துணிகள் 2003–04 முதல் வழங்கப்படுகிறது.

❖ 2002–2003ஆம் ஆண்டில் தேசிய சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தால் தொடங்கப்பட்டுள்ள மகிளா சம்ரிதி யோஜனா திட்டம், தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 40 ஏழை சிறுபான்மை மகளிருக்கு தையல் பயிற்சி அளிக்கப்பட்டது. அரசு சாரா நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

❖ தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தால், முதன் முறையாக, தோல்பொருட்கள் தயாரிப்பதற்கான பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் முதல் தொகுதியில் மகளிர் உள்பட 21நபர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

❖ 1,000 இஸ்லாமிய இளைஞர்களுக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பயிற்சி அளிக்க, அரசு, தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு ரூ.3.85 இலட்சம் பயிற்சிக் கட்டணமாக வழங்கியுள்ளது. பயிற்சி முடித்தவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.25,000 வீதம் வியாபாரம், தொழில் தொடங்கு வதற்கு கடனாக வழங்கப்படுகிறது.

❖ தேசிய சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திடமிருந்து காலக்கடன் தொகையாக ரூ.25 இலட்சம் பெற்று, சிறுபான்மையினருக்கு நபருக்கு ரூ.10,000/–க்கு மிகாமல் சிறுவியாபாரக் கடன் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

❖ **பள்ளிப்படிப்பு உதவித் தொகைத் திட்டத்தில் 9 மற்றும் 10ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இலவச பாடப் புத்தகங்கள் வழங்குதல், தேர்வுக் கட்டணம் மற்றும் தனிக்கட்டணம் வழங்குதல், பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை, இலவசக் கல்வி, விடுதிகள் மற்றும் பள்ளிகளில் 10ஆம் வகுப்பு வரை மாணவ மாணவியர்களுக்கு சீருடை வழங்குதல், தந்தை பெரியார் நினைவுப் பரிசு வழங்குதல், பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு வழங்குதல், கிராமப்புற பள்ளிகளில் 3 முதல் 6ஆம் வகுப்பு வரை பயிலும் மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மாணவியர் களுக்கு ஊக்கத் தொகை வழங்குதல், பல்வேறு விதமான வேலைவாய்ப்பு சார்ந்த பயிற்சித் திட்டம், பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட குடியிருப்பு களுக்கு சாலை வசதி, குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகள் செய்து தருவது ஆகியவை தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதற்காக 2001–2002 முதல் 2003–2004ஆம் ஆண்டு வரை ரூ.20,333.43 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.**

• • •

# காவல்துறை

இந்தியாவிலேயே தமிழகம் முதல்மாநிலமாகத் திகழ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் காவல்துறையில் சீர்மிகு திட்டங்கள் புதிய எழுச்சியுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கல்வித்துறையில் பெற்றோர்–ஆசிரியர் கழகம் பாலமாக இருப்பதைப்போல காவல்துறை, மக்களும், காவலர்களும் இணக்கமாக இருக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் செயல்பட்டு வருகின்றது. சிறுவயதிலேயே குற்றங்களில் ஈடுபடாத வாறு காவலர் சிறார் மன்றங்கள் அமைக்கப்பட்டு சிறப்பாக பணியாற்றி வருகின்றது.




இந்தியாவிலேயே முதன் முதலாக பெண் கமாண்டோக்கள் பயிற்சி மற்றும் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டு, காவல்துறை சிறப்பாக செயல்பட்டு வருகின்றது.

★ ரூ.108 இலட்சம் மதிப்பில் அனைத்து விளம்பர சாதனங்களுடன் கூடிய 17 நடமாடும் ஆலோசனைக் குழு வாகனங்கள் 2003ஆம் ஆண்டில் அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

★ சென்னை மாநகரில் குற்றங்களை தடுக்கும் பொருட்டு ரூ.196 இலட்சம் செலவில் 40 ரோந்து வாகனங்களும், 60 மோட்டார் சைக்கிள்களும் 2003ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளன.

★ 90 காவல் நிலையங்களுக்கு ஜீப்கள் 2003ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

★ வட்டாரத் தலைமை இடங்களில் பெண் காவலர்களுக்கு ரூ.92 இலட்சம் மதிப்பில் 287 மோட்டார் சைக்கிள்கள் 2003ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

★ 80 நெடுஞ்சாலை ரோந்து வாகனங்கள் அதற்கான உபகரணங்களுடன் வாங்கப்பட்டு 2003இல் வழங்கப்பட்டுள்ளது.

★ ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்ட மாதிரி காவல் நிலையங்களின் பயன்பாட்டிற்காக 215 மோட்டார் சைக்கிள்கள் 2003இல் வழங்கப்பட்டுள்ளது.

★ 2003–2004 வரவு செலவு திட்டத்தில், கைதிகளை ஓரிடத்திலிருந்து வேறு இடத்திற்குக் கொண்டு செல்லும் பணிக்காக 27 பேருந்துகள் வழங்கப் பட்டது.

★ அதி விரைவு அலைவரிசை – நிலை சாதனம் 292, மொபைல் சாதனங்கள் 901, கையடக்க சாதனங்கள் 1,407, ரூ.10 கோடிக்கான நுண் அலை திட்டத்தை இலக்கமயமாக்கல் திட்டத்தை (Digitalization of Microwave Project) செயல்படுத்த கொள்முதல் ஆணை மார்ச் 2004இல் வழங்கப்பட்டுள்ளது.

★ தமிழ்நாட்டில் 94 சந்திப்புக்களுக்கு தானியங்கி போக்குவரத்து அறிவிப்பு விளக்குகள் ரூ.3.30 கோடி செலவில் 2003ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டுள்ளது.

★ மாவட்டம், உட்கோட்டம் மற்றும் காவல் நிலையங்களுக்கு 1,702 கணினிகள் 2003இல் வழங்கப்பட்டு விட்டது.

★ ரூ.144 இலட்சம் செலவில் இரு பயிற்சி மையங்கள் மற்றும் தங்குமிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ரூ.12 இலட்சம் செலவில் காண் ஒலி ஒளிக்காட்சி உரையாடல் சாதனங்கள் வழங்கப்பட்டன. ரூ.45 இலட்சம் செலவில் 6 உட்பணி பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

★ ஆலோசனை மையங்களுடன் கூடிய 130 மகளிர் காவல் நிலையங்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் திறக்கப்பட்டன.

★ அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் இலவச தொலைபேசி வசதிகள் கொண்ட உதவி மையங்கள் (Help Line) ஏற்படுத்தப்பட்டு நிராதரவற்ற பெண்களின் அபய குரல்களுக்கு அவர்களிடத்திலேயே சென்று அவர்களைக் காப்பாற்ற இந்த உதவி மையங்கள் உதவி புரிகின்றன.

★ நடமாடும் ஆலோசனை மையங்கள் 2003–2004இல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பின்படி 17 வேன்கள் இதற்காக வாங்கப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கு உதவுவதற்கான வசதிகள் மகளிர் காவல்நிலையங்களில் ஏற்படுத்தப்பட்டு குழந்தை களுக்கு உதவிகள் வழங்கப்படுகிறது. 287 வட்ட தலைமையக காவல் நிலையத்தில் 1 பெண் உதவி ஆய்வாளர், 2 பெண் காவலர்கள் நியமித்து பெண்களுக்கு உதவ வகை செய்யப்பட்டுள்ளது.

★ பணி நிமித்தமாகச் செல்லும் பெண் காவல் ஆளிநர்களின் குழந்தைகளைப் பாதுகாக்க 27.01.2003 அன்று 6 குழந்தைகள் காப்பகங்கள் திறக்கப்பட்டு மேலும் 30 குழந்தைகள் காப்பகங்கள் ரூ.47.12 இலட்சத்தில் 2003–2004இல் ஒவ்வொரு மாவட்ட தலைநகரங்களிலும் திறக்கப்பட உள்ளது.

★ 2004ஆம் ஆண்டில், 77 பெண் தலைமைக் காவலர்கள் பெண் உதவி ஆய்வாளர்களாகப் பதவி உயர்வு அளிக்கப்பட்டு, 19.1.2004 அன்று காவலர் பயிற்சி கல்லூரிக்கு 9 வார பயிற்சிக்காக அனுப்பப்பட்டனர். 21.01.2003 அன்று 415 பெண் முதல் நிலைக் காவலர்கள், தலைமைக் காவலர்களாக பதவி உயர்வு அளிக்கப்பட்டனர்.




★ மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் ஆணைப்படி, இந்தியாவிலேயே முதன் முதலாக 21 பெண் காவல் பணியாளர்களுக்கு, 04.10.2002 முதல் அதிரடிப்படை பயிற்சி அளிக்கப்பட்டு, 04.02.2003 அன்று அப்பயிற்சியை சிறப்பாக முடித்து அதிரடிப்படை வீராங்கனைகளாக காவல்துறையில் சேர்க்கப் பட்டனர். இந்தியாவிலேயே முதன் முறையாகப் பெண் கமாண்டோ படை நிறுமம் ஏற்படுத்துவதற்காக, 130 பெண் காவல் பணியாளர்களுக்கு 13 வார கால கமாண்டோ படை பயிற்சி 27.01.2003 முதல் அளிக்கப்பட்டு, பெண் கமாண்டோ படை நிறுமம் ஏற்படுத்தப்பட்டது.

காவலர் முதல் காவல் ஆய்வாளர் வரை காவல்துறையில் உள்ள அனைவருக்கும் பாலின நிகர்நிலை பயிற்சி அளிப்பதற்காக ரூ.99,98,450/- செலவில் அனைத்து நகரங்கள் மற்றும் அனைத்து மாவட்டங்களில் 6 நாட்கள் கொண்ட மேற்படி பயிற்சி அணி, அணியாக (in batches) நடத்தப்பட்டது.

★ 1999ஆம் ஆண்டிற்குப் பிறகு நடத்தப்படாமல் இருந்த பதக்க அணி வகுப்பு விழா 3 ஆண்டுகளுக்குப் பிறகு 2002-இல் நடத்தப்பட்டது. தமிழக முதலமைச்சரின் வீரதீரச் செயல்களுக்கான பதக்கங்கள் 18 காவல் பணியாளர்களுக்கும், மெச்சத்தகுந்த பணிக்கான பதக்கங்கள் 358 காவல் பணியாளர்களுக்கும் 09.07.2002 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன. 26.01.2003 குடியரசு தினத்தன்று உத்தமர் காந்தி பதக்கங்கள் 5 காவல் பணியாளர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன.

★ 192 இந்திய அரசு பதக்கங்கள், 172 தமிழக முதலமைச்சரின் 2002-ஆம் ஆண்டிற்கான பதக்கங்கள், சிறப்புமிக்க புலன் விசாரணைக்கான 10 பதக்கங்கள், லஞ்ச ஒழிப்புத்துறையினருக்கான பதக்கங்கள் 16 நபர்கட்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 14.02.2003 இல் வழங்கப்பட்டன. மேலும், 18.11.2003 இல் 143 காவல் பணியாளர்கள் உட்பட 206 பேருக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

★ மாண்புமிகு முதலமைச்சரின் காவலர் பதக்கங்கள் 1,500 பேருக்கு 15.01.2004 அன்று வழங்கப்பட்டன.

★ 183 நபர்கள் (137 ஆண் மற்றும் 46 பெண்) கருணை அடிப்படையில் இரண்டாம் நிலைக் காவலராக 21.07.2003 அன்று பணி நியமனம் செய்யப்பட்டு, தமிழ்நாடு சிறப்பு காவல் படையில் பணியமர்த்தப் பட்டார்கள். 2001-2003ஆம் ஆண்டுக்குரிய இரண்டாம் நிலைக் காவலர் பதவிகளுக்கு தற்காலிகமாக தேர்வு செய்யப்பட்ட 8,431 நபர்களில், முழு தகுதி பெற்ற 7,940 நபர்களுக்கு ஆண் இரண்டாம் நிலைக் காவலர் பணி நியமனம் ஆணை வழங்கப்பட்டு 01.12.2003 முதல் அடிப்படைப் பயிற்சிக்கு அனுப்பப்பட்டுள்ளார்கள். காவல்துறையில் 961 பெண் காவல் உதவி ஆய்வாளர் பதவிகளுக்கு, தகுதியுள்ள நபர்களைத் தேர்வு செய்வதற்காக, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் தேர்வு நடைமுறைகளை முடித்து உள்ளது.

★ கள்ளச் சாராயத்தை ஒழிக்கும் பொருட்டும், ரூ.1.44 இலட்சம் தொடரும் செலவினம் மற்றும் ரூ.60 இலட்சம் தொடரா செலவினத்தில் 8 மதுவிலக்கு பிரிவுகள் கூடுதலாக அமைக்கப்பட்டன.

★ சாலை பாதுகாப்புக் குழு ஒன்று 13 சாலையோர முதல் உதவி மையங்களுடன், ரூ.25.32 இலட்சம் தொடரும் செலவினம் மற்றும் ரூ.16.86 இலட்சம் தொடரா செலவினத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

★ 50 கிலோ மீட்டர் இடைவெளிக்கு ஒரு போக்குவரத்து உதவி மையம் வீதம் ரூ.14.74 இலட்சம் தொடரும் செலவினம் மற்றும் ரூ.1,214.64 இலட்சம் தொடரா செலவினத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

★ மாநில நுண்ணறிவுப் பிரிவிற்கு ரூ.120 இலட்சம் தொடரும் செலவினம் மற்றும் ரூ.15.98 இலட்சம் தொடரா செலவினத்தில் கூடுதலாக 6 ஆய்வாளர், 17 உதவி ஆய்வாளர், 46 தலைமைக் காவலர் மற்றும் 57 காவலர் பணியிடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

★ அழிவுச் செயல்களை முற்றிலுமாகத் தடுக்க சிறந்தப் பயிற்சியாளர்களை கொண்ட வெடிகுண்டு கண்டுபிடிப்பு மற்றும் செயலிழப்பு குழுக்கள், சென்னை தனிப்பிரிவு புலனாய்வுத் துறையிலும் தமிழ்நாட்டிலுள்ள ஆறு காவல் ஆணையரகங் களிலும், தலைமைச் செயலக பாதுகாப்பு மாவட்டத்திலும் ரூ.134.49 இலட்சம் தொடரும் செலவினம் மற்றும் ரூ.371.75 இலட்சம் தொடரா செலவினத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

★ மாநிலத்திலுள்ள ஆறு காவல் ஆணையரகங்களிலும் செங்கற்பட்டு மாவட்டத்திலும் "திட்டமிட்டு நடத்தப்படும் குற்ற தடுப்பு பிரிவுகளும்" (Organised Crime Units) சென்னை குற்றப் புலானய்வு குற்றப்பிரிவு தலைமையிடத்தில் "கணினி வலைசார் குற்ற தடுப்புப் பிரிவும்" (Cyber Crime Cell Units) ஏற்படுத்தப்பட்டுள்ளன.

★ இலங்கைக்கும் தூத்துக்குடிக்கும் இடையில் தோணி இயந்திரப் பயணம் புதுப்பிக்கப்பட்டதை முன்னிட்டு ரூ.11.25 இலட்சம் தொடரும் செலவினம் மற்றும் ரூ.4.33 இலட்சம் தொடரா செலவினத்தில், தனிப்பிரிவு (Immigration Staff) பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

★ குடிசைப் பகுதி சிறார்கள் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடாமல் கண்காணிக்கவும் அவர்களிடையே காவலர் நட்புறவுச் சூழ்நிலையை ஏற்படுத்தவும், மாநிலம் முழுவதும், ரூ.32 இலட்சம் தொடரும் செலவினத்தில், 64 சிறார் பள்ளி மற்றும் மனமகிழ் மன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இது தவிர, சென்னை மாநகரத்தில் 53 மையங்கள் சில நிறுவனங்களால் தொடங்கப்பட்டுள்ளன.

★ தலைமைச் செயலகப் பாதுகாப்பிற்காக ரூ.5.72 கோடி செலவில், சென்னை மாநகரத்தில் பாதுகாப்பு மாவட்டம் உருவாக்கப்பட்டது.

★ ரூ.18.05 இலட்சம் செலவில், 10 உள்ளூர் காவல் நிலையங்களில் பணியிடங்கள் அதிகரிக்கப் பட்டுள்ளன.

★ சென்னை மாநகர அண்ணாநகர் காவல் மாவட்டத்தில்,ரூ.17.42 இலட்சம் செலவில் நடமாடும் காவல் நிலையம் ஒன்று உருவாக்கப் பட்டுள்ளது.

★ மாநிலக் குற்றப்புலனாய்வுத் துறையில் தனியாக "விபச்சாரத் தடுப்பு பிரிவு" ஒன்று சென்னையில் உருவாக்கப்பட்டுள்ளது.

★ நான்கு மண்டல காவல்துறை தலைவர் பதவிகள் உருவாக்கப் பட்டுள்ளன.

★ முக்கிய சுற்றுலா மையங்களில் முதல் கட்டமாக ரூ.1.19 கோடி செலவில் நான்கு போக்குவரத்து காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

★ சென்னை மாநகரத்தில், குற்றப்பிரிவு ஆய்வாளர் பதவிகள் இல்லாத காவல் நிலையங்களில், வழக்குகளை கவனிக்க ரூ.1.35 கோடி செலவில், 27 உதவி ஆய்வாளர் பதவிகள், ஆய்வாளர் பதவிகளாக நிலையு யர்த்தப்பட்டன. சென்னை மாநகர காவல் பிரிவுக்கு, ரூ.2.30 கோடி செலவில் கூடுதலாக 231 உதவி ஆய்வாளர் பதவிகள் உருவாக்கப் பட்டுள்ளன.

★ சென்னை மாநகர, போக்கு வரத்தைக் கவனிப்பதற் காக ரூ.81.78 இலட்சம் செலவில், 100 மோட்டார் சைக்கிள்களுடன், கூடுதலாக 100 ஆயுதப்படை உதவி ஆய்வாளர் பதவிகள் தோற்றுவிக்கப் பட்டுள்ளன.

★ மத்திய சிறை உள்ள ஒன்பது இடங்களில் ஒன்பது ஆயுதப்படை பிரிவுகள் ரூ.7.10 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.


★ மகளிர் சிறப்புக் காவல் படை அணியை 31.01.2004 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

★ கடின இடர்படி மாதத்திற்கு ரூ.900/- மற்றும் 1½ மடங்கு தினப்படியும் சிறப்பு அதிரடிப் படையில் பணி புரிபவர்களுக்கு வழங்கப்படுகிறது. இது தவிர மாதம் ரூ.1,500/- இடர்படியாகவும் வழங்கப்படுகிறது.

★ **"தமிழ்நாடு காவல் மருத்துவ நிதி" திட்டத்திலிருந்து காவல் துறையினருக்கு வழங்கப்பட்டு வரும் உதவித் தொகையின் அளவு, 01.07.2002 முதல் ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து ரூபாய் ஒன்றரை இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.**

★ தீரச் செயல்களில் ஈடுபடும் காவல் பணியாளர்கள் மரணமடைந்தால் வழங்கப்பட்ட தொகை ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாகவும், நிரந்தரமாக உறுப்புகள் செயல் இழந்தால் வழங்கப்பட்ட தொகை ரூ.50,000/-திலிருந்து ரூ.1 இலட்சமாகவும், கொடுங்காயம் அடைந்தால் வழங்கப்பட்ட தொகை ரூ.10,000/-திலிருந்து ரூ.20,000/-மாகவும், சிறுகாயம் அடைந்தால் வழங்கப்பட்ட தொகை ரூ.5,000/- திலிருந்து ரூ.10,000/-மாகவும் கருணைத் தொகை உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

★ தமிழ்நாடு கமாண்டோபடை, கமாண்டோபள்ளி மற்றும் கோர்செல் பிரிவுகளில் பணியாற்றும் காவலர்களின் துணை காவல் கண்காணிப்பாளர் மரணமடைந்தால் வழங்கப்பட்ட தொகை ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.10 இலட்சமாகவும், காவலர் முதல் ஆய்வாளர் வரை மரணமடைந்தால் வழங்கப்பட்ட தொகை ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.6 இலட்சமாகவும், நிரந்தரமாக உறுப்புகள் செயல் இழத்தல் மற்றும் பார்வையிழப்பு ஏற்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட தொகை ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.4 இலட்சமாகவும், உறுப்பு சிதைவடைந்தால் வழங்கப்பட்ட தொகை ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாகவும் கருணைத் தொகை உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.



★ ரயில்வே காவலில் இரவில் பணிபுரியும் காவலர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.20/– வீதம் 10 நாட்களுக்கு சிறப்புப்படி வழங்கப்படுகிறது.

★ சென்னை மாநகரில் பணிபுரியும் காவல் ஆளிநர்களுக்கு உணவுப்படி ரூ.45/–இல் இருந்து ரூ.80/– வழங்கப்படுகிறது.

★ மிகை நேர ஈட்டுப்படி நாள் ஒன்றுக்கு ரூ.50/–இல் இருந்து ரூ.100/–ஆக மாதத்தில் 4 நாட்களுக்கு வழங்கப்படுகிறது.

★ **2001–2002 ஆம் ஆண்டில் 3,865 மாணவ, மாணவிகளுக்கு தமிழ்நாடு காவலர் நூற்றாண்டுக் கல்விக் கொடை திட்டத்தின் கீழ் ரூ.1,37,08,500/– வழங்கப்பட்டது. 2002–2003ஆம் ஆண்டில் 4,116 மாணவ, மாணவிகளுக்கு ரூ.1,56,86,000/– கல்விக் கொடை வழங்கப்பட்டது.**

★ அரசு ஆணையின்படி மண்டல காவல்துறை தலைவர்கள், சரக காவல்துறை தலைவர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் தங்கள் மண்டல/சரக/மாவட்டங்களில் குறை தீர்க்கும் நாட்கள் நடத்தி வருகிறார்கள்.

★ 2001–2002ஆம் ஆண்டு 3,000 காவலர் குடியிருப்புகள் கட்டப்பட்டன. 2002–2003 ஆம் ஆண்டில் 3,000 காவலர் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. 2003–2004 ஆம் ஆண்டுக்கு மேலும் 3,000 குடியிருப்புகள் கட்ட அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. 2001–2002 மற்றும் 2002–2003 ஆகிய ஆண்டுகளில் யு.என்.டி.பி. மாதிரியில் 74 காவல் நிலையங்கள் மேல்நிலை படுத்தப்பட்டு ரூ.296 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 2002–2003ஆம் ஆண்டில் ரூ.2,400 இலட்சம் செலவில் 120 காவல் நிலையங்களுக்கு கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. 80 காவல் நிலையங்களுக்கான புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

★ சென்னை மாநகரத்தில் ராஜா அண்ணா மலைபுரத்தில் காவல் வானொலி தொழில் நுட்ப பிரிவில் ரூ.51 இலட்சம் செலவில் தொழில்நுட்ப பயிற்சி மையம் கட்டப்பட்டு வருகிறது.

★ வேலூர், தஞ்சாவூர், தூத்துக்குடி மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் ரூ.1.15 கோடி செலவில் காவல் வானொலி செய்தி பரிமாற்ற வளாகங்கள் கட்டப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு சிறப்பு அணிகள், ஆயுதப்படைகள் மற்றும் தாலுகா காவல் ஆகியவற்றில் 570 இடங்களில் பெண் காவல் பணியாளர்களுக்காக கழிவறை வசதியுடன் கூடிய ஒய்வறைகள் ரூ.513 இலட்சம் செலவில் தமிழகத்தில் கட்டப்பட்டு வருகின்றன. இவற்றில் 424 இடங்களில் கட்டுமானப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 146 இடங்களுக்கு கட்டுமானப்பணிகள் நடைப்பெற்று வருகின்றன. ஆவடி, உளுந்தூர்பேட்டை மற்றும் திருச்சியில் உள்ள தமிழ்நாடு சிறப்பு காவல் அணிகளுக்கு பாதுகாப்பு சுற்றுச்சுவர் ரூ.75 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

★ 25 அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்கு ரூ.3 கோடியில் புதிய கட்டடங்கள் கட்டுதல். சென்னைக்கு வரும் பெண் காவல் பணியாளர்களுக்கான ரூ.62.29 இலட்சம் செலவில் சென்னை நகரில் விருந்தினர் / ஒய்வு அறைகள் கட்டுதல். இதேபோல், காவல் பணியாளர்களுக்கு ரூ.67.36 இலட்சம் செலவில் விருந்தினர் / ஒய்வு அறைகள் கட்டுதல். காவல்துறை குடியிருப்பு மற்றும் கட்டடங்களின் சிறப்பு பழுது பார்க்கும் பணிக்கு ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்தல். சென்னை நகரில் உள்ள இராஜரத்தினம் மைதானத்தை ரூ.3 கோடியில் புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல். சென்னை மாநகரத்தில் ஆண் மற்றும் பெண் காவல் பணியாளர்களுக்கு ரூ.7.20 கோடியில் பத்து பயிற்சி மையம் மற்றும் படைகுடியிருப்புகள் கட்டுதல். மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகர காவல் ஆணையரகங்களுக்கு ரூ.2.20 கோடியில் நவீன காவல் கட்டுப்பாட்டறை அமைத்தல்.

★ 09.04.2003 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழக சட்டப் பேரவையில் அறிவித்ததையொட்டி தற்போதுள்ள நெடுஞ்சாலை ரோந்துக் காவல் மற்றும் போக்குவரத்து உதவி மையங்கள் ஆகியவற்றை ஒன்றிணைத்து, ஒரு சுற்றுக் காவல் பிரிவுக்கு ஒரு உதவி ஆய்வாளர், 4 காவலர்கள், ஒரு ஓட்டுநர் காவலர் என்ற விகிதத்தில் 160 நெடுஞ்சாலை சுற்றுக் காவல் பிரிவுகளை ஏற்படுத்தி, அவற்றின் செயல்பாடுகளைக் கண்காணிக்க ஒரு தனியாக ஒரு பிரிவும் அமைக்கப்பட்டுள்ளது.

★ சிறைகளில் காவலர்களுக்கு மிகை நேரப் பணிக்கான ஊதியம் வழங்கிட அரசினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

★ கூடுதலாக சிறைவாசிகளை அடைக்க வேண்டி நேரிடும் போது கிளைச் சிறை காவலர்களும் மத்திய சிறைகளில் சிறப்புப் பணியில் ஈடுபடுத்தப் படுகின்றனர். எனவே, இது போன்ற சமயங்களில் காவலர்களுக்கு நாளொன்றிற்கு ரூ.35 முதல் ரூ.80 வரை உணவுக் கட்டணமாக வழங்கிட அரசினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

★ மத்திய சிறைகளில் எட்டு மணி நேர பணித்திட்டத்தினை முழு அளவில் செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தீர்மானிக்கப்பட்டவாறு கூடுதலாக 352 காவலர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

★ கிளைச்சிறைகளிலுள்ள 112 முதல் நிலைக் காவலர் பதவிகளை முதல் தலைமைக் காவலராக மேம்படுத்தி அரசினால் ஆணையிடப்பட்டுள்ளது.



★ **9 கிளைச் சிறைகள் மற்றும் 3 தனிக் கிளைச் சிறைகளை பெண்கள் தனிச்சிறைகளாக மாற்றி அரசு ஆணையிட்டுள்ளது. அச்சிறைகளில் பெண் பணியாளர்களால் மட்டுமே பெண் சிறைவாசிகள் பராமரிக்கப்படுகிறார்கள். இது இந்தியாவிலேயே முதன்மையானதாகும்.**

★ சிறைவாசிகளின் மறுவாழ்விற்காக ஒவ்வொரு மத்திய சிறையிலும் மற்றும் பெண்கள் தனிச்சிறையிலும் மொத்தம் ரூ.155 இலட்சம் செலவில் கணிப்பொறி மையம் தொடங்கப்பட்டுள்ளது.

★ கிளைச் சிறைகளில் அனுமதிக்கப்படும் சிறைவாசி களுக்கு மத்திய சிறை சிறைவாசிகளின் உணவுக்கு நிகரான உணவு வழங்கிட 5.3.2003 அன்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

★ **தமிழக அரசின் முயற்சியால், இந்திய அரசின் உள்துறை அமைச்சகம், முதல் அகில இந்திய சிறைத்துறை திறனாய்வு போட்டிகளை நடத்துவதற் கான ஆட்சி முறை ஒப்பளிப்பினை அளித்ததோடு ரூ.3.86 இலட்சம் நிதியினையும் ஒதுக்கியது. தமிழ்நாடு அரசு இந்த வரலாற்று சிறப்பு மிக்க திறனாய்வு போட்டியினை நடத்த முன்வந்து தமது பங்காக ரூ.6.08 இலட்சம் நிதி ஒதுக்கீடும் செய்து இப்போட்டியினை சென்னையில் சிறப்பாக நடத்தியது சிறை வரலாற்றில் ஒரு மைல் கல் ஆகும்.**

★ இந்திய சிறை வரலாற்றிலேயே முதன் முறையாக சிறைவாசிகள் நீதிமன்றம் மற்றும் இலவச சட்ட உதவி மையம் ஆரம்பிக்கப்பட்டு சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

★ இத்துறையின் இணையதளம் தேசிய தகவல் மையத்தினரால் தயார் செய்யப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

★ மத்திய சிறைகளில் உள்ள சிறைவாசிகள் பயில்வதற்காகவே, மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தினரால், பட்ட மற்றும் பட்டய மேற்படிப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த திட்டம் இந்தியாவிலேயே முதன்மையானது மட்டுமல்லாமல் இத்திட்டத்தின் கீழ் நடத்தப்படும் பாடங்களின் பாடத்திட்டம் திறந்த வெளிக் கல்வித் திட்டத்தின் கீழ் நடத்தப்படும் பாடத் திட்டமாகும்.

★ திருவள்ளூர் மாவட்டம் புழலில் 211.92 ஏக்கர் பரப்பளவில் 1,250 விசாரணை சிறைவாசிகள், 1,250 தண்டனை சிறைவாசிகள் மற்றும் 500 பெண் சிறைவாசிகளை அடைக்கத் தக்க வகையில் மூன்று சிறைகள் கொண்ட நவீன சிறை வளாகத்தை ரூ.77.09 கோடி செலவில் அமைத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது.

★ திண்டுக்கல் மற்றும் நாகர்கோவில் கிளைச் சிறைகளை ரூ.472 இலட்சம் செலவில் மாவட்ட சிறைச்சாலையாக தரம் உயர்த்துவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

★ மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சிறைகளையும் நீதிமன்றங்களையும் வீடியோ மூலம் இணைக்கும் திட்டத்தினை அறிவித்தார்கள். மத்திய சிறைகளையும், தேர்ந்தெடுக்கப்பட்ட நீதிமன்றங்களையும் வீடியோ மூலம் இணைக்கும் வகையில் 78 இடங்களில், வீடியோ மூலம் இணைக்கும் முறையினை அறிமுகப்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது. •




இவ்வரசு 2001ஆம் ஆண்டில் பொறுப்பேற்றுக் கொண்டவுடன், செய்தி–மக்கள் தொடர்புத்துறையை நவீனப்படுத்தி, மக்கள் தொடர்பை மேம்படுத்தும் குறிக்கோளுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின் கீழ் இத்துறையில் பல்வேறு நவீனமயமாக்கும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டத்தின் கீழ், முந்தைய அரசால் வழங்கப்பட்டுவந்த ரூ. 50,000 உதவித்தொகையை நான்கு மடங்கு உயர்த்தி ரூ.2 இலட்சமாக வழங்க ஆணை பிறப்பித்து, இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நலிவுற்ற பத்திரிகையாளர்களுக்கு முந்தைய அரசால் மாதந்தோறும் வழங்கப்பட்டுவந்த ஓய்வூதியத் தொகையான 2,000 ரூபாயை, மாதந்தோறும் 3,000 ரூபாயாக வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டு இத்திட்டத்தின் கீழ் தற்போது 67 பத்திரிகையாளர்கள் மாதந்தோறும் ரூ. 3,000/– ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள்.

அதே போன்று ஓய்வு ஊதியம் பெற்று வந்த பத்திரிகையாளர் இறந்தால், அவரது துணைவியாருக்கு வழங்கப்பட்டு வந்த குடும்ப ஓய்வூதியமான 500 ரூபாயை மாதந்தோறும் 1,500 ரூபாயாக உயர்த்தி வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்து, இத்திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தற்போது இயற்கையெய்திய 12 பத்திரிகையாளர்களின் துணைவியர் குடும்ப ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப் பேற்றவுடன் நாளிதழ்களைச் சேர்ந்த பத்திரிகை யாளர்களுக்கு வழங்கப்படுவதுபோல, அனைத்து தனியார் தொலைக் காட்சி நிறுவனங்களில் பணியாற்றும் பத்திரிகை யாளர்களுக்கும், ஒளிப்பதிவாளர்களுக்கும் அரசு அங்கீகார அட்டை வழங்க வேண்டும் என ஆணை பிறப்பிக்கப்பட்டு 420 அரசு அங்கீகார அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு வீட்டு வசதி அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் வீடுகளை சுலபத் தவணைகளில் பத்திரிகையாளர்கள் வாங்குவதற்கு ஏதுவாக ஒரு திட்டத்திற்கு ஒப்புதல் அளித்து, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமும், பாரத மாநில வங்கியும் இணைந்து செயல்படுத்தி வருகிறது.

செய்தி–மக்கள் தொடர்புத்துறையை நவீனப்படுத்தி புதிய தகவல் தொடர்பு சாதனங்களை வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

50 இலட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்ட 8 வீடியோ விளம்பர ஊர்திகளையும், 2 மீடியா ஊர்திகளையும், மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10–6–2002 அன்று வழங்கினார்கள்.

ரூ. 16 இலட்சம் செலவில் 4 வீடியோ புரொஜெக்டர்கள், வி.சி.ஆர். மற்றும் உபகரணங்களும் 4 மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கும், 26 செய்தி–மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு ரூ.1.82 இலட்சம் செலவில் வீடியோ காசெட் பிளேயர்கள் 9 செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு ரூ. 9 இலட்சம் செலவில் 9 ஒளிநகல் இயந்திரங்களும் தமிழ்நாடு திரைப்படப் பிரிவிற்கு ரூ.15 இலட்சம் செலவில் ஒரு பீட்டாகாம் ஒளிப்பதிவு கேமராவும், செய்தி வெளியீடு மற்றும் புகைப்படப் பிரிவிற்கு கணினி மற்றும் துணைக்கருவிகள், ஒரு ஒளிநகல் இயந்திரம்,ஒரு டிஜிட்டல் கேமரா ஆகியவை ரூ.3 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.


அதேபோன்று 2002–2003ஆம் ஆண்டில் ரூ. 66 இலட்சம் செலவில் 14 மீடியா ஊர்திகளும், 2 வீடியோ ஊர்திகளும் 15 மாவட்ட செய்தி – மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 17–4–2003 அன்று வழங்கினார்கள்.

13 மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலகங் களுக்கு ஒளி நகல் இயந்திரங்களும், பேக்ஸ் இயந்திரங்களும் ரூ.14 இலட்சம் செலவிலும், தலைமைப் புகைப்படப் பிரிவுக்கு ரூ.2.40 இலட்சம் செலவில் இரண்டு டிஜிட்டல் கேமராக்களும், 9 மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு ரூ. 2.70 இலட்சம் செலவில் புகைப்பட கேமராக்களும் வாங்கி வழங்கப்பட்டுள்ளது, தற்போது அனைத்து 29 மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு வீடியோ விளம்பர ஊர்திகள், மீடியா ஊர்திகள், புகைப்பட கேமராக்கள், ஒளிநகல் இயந்திரங்கள், நிகரி இயந்திரங்கள் ஆகியவை வழங்கப்பட்டு, தன்னிறைவு பெற்றுள்ளன. புகைப்படக்காரார்கள் நியமிக்கவும் ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது,

2003–2004ஆம் ஆண்டில் தலைமையிடத்தில் ரூ.25 இலட்சம் செலவில் ஒரு இணைய வலைதள ஒளிபரப்பு மேடை (Web Screening) அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாண்டு பிப்ரவரி மார்ச் திங்களில் கும்ப கோணத்தில் மகாமகத்தையொட்டி அரசு பொருட்காட்சி நடத்தப்பட்டது.

இவ்வாண்டில் செய்தி வெளியீட்டுப் பிரிவில் ரூ.4.70 இலட்சம் செலவில் கணினி மற்றும் துணைக் கருவிகளையும், ஒரு ஜெராக்ஸ் இயந்திரமும் வாங்கி வழங்கப்படவுள்ளது. அதேபோன்று மேற்கோள் பிரிவிற்கு ரூ.1.50 இலட்சம் செலவில் கணினியும், பேக்ஸ் இயந்திரமும் வாங்கி வழங்கப்பட்டுள்ளது. மாவட்டங்களில் செய்தி நிலையங்களுக்கும், மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கும் 10 விசிடி பிளேயர்கள் வாங்கி வழங்கப்பட்டுள்ளது. இத்துறையில்



அலுவலர்களுக்கு ரூ.2 இலட்சம் செலவில் அண்ணா மேலாண்மை கழக பயிற்சி அளிக்கப்படவுள்ளது. இவ்வாண்டில் மாண்புமிகு முதலமைச்சர் பெயரில் ஒரு தனி 'வெப்சைட்' ஒன்றினை ரூ.1.82 இலட்சம் செலவில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்திய நாட்டின் விடுதலைக்காகவும், தமிழ்மொழி மேன்மையைக் காக்கவும், அருந்தொண்டாற்றிய தலைவர்களையும், அறிஞர் பெருமக்களையும் போற்றிப் புகழ்ந்திட அவர்தம் பெருமையை நாட்டு மக்கள் அறிந்திடும் வகையில் அவர்களது பிறந்த நாள் விழாக்கள், நினைவு நாள் நிகழ்ச்சிகள் அரசினால் நடத்தப்படுகின்றன. அவர்களது திருவுருவச் சிலைகளுக்கு அரசின் சார்பில் மாலையணிவித்தும் மரியாதை செலுத்தப்படுகிறது.

பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டு விழா தமிழக அரசின் சார்பில் ஓராண்டு காலம் மாநிலம் முழுவதும் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டையொட்டி அமையவுள்ள ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் நினைவுத்தூணுக்கும் மற்றும் ரூ. 9 இலட்சம் மதிப்பீட்டில் அமையவுள்ள மணிமண்டபத்திற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 14.7.2003 அன்று அடிக்கல் நாட்டினார்கள்.

நினைவகங்கள்

திருநெல்வேலி மாவட்டத்தில் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் நினைவாக மணிமண்டபம் அமைக்க ரூ. 75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இம்மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு தற்போது பணிகள் முடிந்துள்ளதுடன், தூத்துக்குடி மாவட்டம், கட்டாரங்குளத்தில், வீரன் அழகு முத்துக்கோன் மணிமண்டபம் ரூ.35 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. சென்னையில் டாக்டர் எம்.ஜி.ஆர். அருங்காட்சியகம் ரூ.38.5 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

சட்டப்பேரவை நிகழ்ச்சிகள் வீடியோ மூலம் எடுத்து, அனைத்துத் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கும் வழங்க ரூ. 2.70 கோடி செலவில் வீடியோ சாதனங்கள் வாங்கப்பட்டு சட்டமன்ற பேரவையில் நிறுவப்பட்டுள்ளது.

திரைப்படக் கல்லூரி மாணவர்களும், திரைப்படத் துறையினரும் பயனடையும் வகையில் திரு பிலிம் நியூஸ் ஆனந்தன் அவர்களின் அரிய திரைப்பட சேகரிப்புகளை அரசுடைமையாக்கியும், அவரின் திரைப்பட வரலாறு குறித்த நூலினை வெளியிடவும் ரூ.15.50 இலட்சம் அவருக்கு வழங்கப் பட்டுள்ளது,

திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன மாணவர்களுக்கு ரூ.11 இலட்சம் செலவில் கணினி மையம் அமைக்கப்பட்டு வருகிறது. இம்மாணவர்கள் தயாரிக்கும் குறும் படங்களை திரைப்பட விழாக்களில் பங்கேற்க அனுப்புவதற்காக ரூ.75 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அலுவலகத்திலுள்ள மக்கள் தொடர்பு அலுவலகத்திற்கு ரூ. 1 இலட்சம் செலவில் கணினியும், துணைக்கருவிகளும் வாங்க ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

இத்துறையின் சார்பில் அரசு வெளியீடாக 'தமிழரசு' தமிழ் இதழ் மாத இதழாகவும், ஆங்கில இதழ் காலாண்டு இதழாகவும் வெளியிடப்படுகின்றது. இவ்விதழில் அரசின் நலத்திட்டங்கள், அறிவிப்புகள், சாதனைகள் ஆகியவையும் சிறப்பு வெளியீடாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் மற்றும் உரைகள் வெளியிடப்படுகின்றன.

முந்தைய ஆட்சிக் காலத்தில், 1996 முதல் 2001 வரை 5 ஆண்டுகளில், இத்துறையின் திட்டங்களுக்காக பகுதி–II திட்டங்களின் கீழ் ரூ.249.32 இலட்சம் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2001–2002–ஆம் ஆண்டில் ரூ.100 இலட்சமும், 2002–2003ஆம் ஆண்டில் ரூ.375.25 இலட்சமும், 2003–2004ஆம் ஆண்டில் ரூ.49.72 இலட்சமும் ஆக மொத்தம் ரூ. 521.97 இலட்சம் இத்துறையின் மேம்பாட்டிற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்தது மிகவும் மகத்தான ஒன்றாகும். •

# நிதித்துறை

தமிழக அரசின் நிதியை நிருவகிப்பது நிதித்துறையின் பொறுப்பாகும். 2001, மே திங்களில் இந்த அரசு பதவி ஏற்றபோது, தமிழக அரசின் நிதி நிலைமை முற்றிலும் ஒழுங்கற்ற நிலையில் இருந்தது. முந்தைய அரசு, சுமார் ரூ. 4,000 கோடி அளவிற்கு தீர்க்கப்படாத கடன் பொறுப்புகளை விட்டுவிட்டு ஆட்சிப் பொறுப்பைத் துறந்தது. பழுப்பு நிலக் கரியிலிருந்து சிறுகச் சிறுகச் சேர்ந்து வருகின்ற உரிமத்தொகையான அரசின் எதிர்கால வருவாயைக் கூட, முன்னதாகவே பெற்று, அப்போதைய ஆண்டின் பணப்பொறுப்பு களுக்காகப் பயன்படுத்திக் கொண்டது. மாநிலம் ஒட்டு மொத்த நிதி நெருக்கடியின் பிடியில் சிக்கியது. நிதி இடர்பாடுகளின் காரணமாக, 2001–2002ஆம் ஆண்டிற்கான ஆண்டுத் திட்ட முதலீடு ரூ. 6,040 கோடியிலிருந்து ரூ.5,200 கோடியாக குறைக்கப் பட்டதிலிருந்து இதனை அறியலாம்.

தமிழக அரசின் நிதி நிலைமையை மீண்டும் நல்ல நிலைமைக்குக் கொண்டுவர இவ்வரசு விரிவான நிதிச்சீர்திருத்தத் திட்டம் ஒன்றைத் தயாரித்து செயல்படுத்தியது.

மாநிலத்தின் நிதி நிலைமையை மேம்படுத்துவதற் காக, அரசு, நிதிப்பொறுப்புணர்வு, சட்டத்தைக் கொண்டு வந்து அதைச் செயல்படுத்த சட்டம் இயற்றப்பட்டது.

தமிழ்நாடு அரசின் திட்ட முதலீடு 2001–2002இல் ரூ.5,200 கோடியிலிருந்து தொடர்ந்து அதிகரித்து வந்து 2004–2005 இல் ரூ. 8,001 கோடியாக உயர்த்தக் கருதப்பட்டுள்ளது.

தமிழக அரசு, உலக வங்கியிடம் வெற்றிகரமாகப் பேச்சுவார்த்தை நடத்தி ரூ. 2,116 கோடி மூலதனச் செலவில், தமிழ்நாடு சாலைத்துறைத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு அதன் ஒப்புதலைப் பெற்றுள்ளது.

2002 மே திங்களிலிருந்து சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் அனைத்து மாவட்டக் கருவூலங்கள் காசோலைகள் மூலமாகவே தொகைகள் அனைத்தையும் வழங்குகின்றன.

நவீனமயமாக்கலின் ஒரு நடவடிக்கையாக, வங்கிப் பணிசாரா அனைத்து துணைக் கருவூலங்களும் வங்கிப் பணி துணைக் கருவூலங்களாக ஏற்கெனவே மாற்றப்பட்டுள்ளன. மேலும், எஞ்சியுள்ள வங்கிப் பணிசாரா 45 துணைக் கருவூலங்களை வங்கிப் பணி துணைக் கருவூலங்களாக மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது, வங்கிகள் மூலம் மக்கள் நேரடியாக கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ள உதவுகிறது.

கருவூலங்கள் மற்றும் கணக்குகள் துறை 1993ஆம் ஆண்டில் கணினி மயமாக்கப்பட்டுள்ளது. ரூ.3.50 கோடி நிதியொதுக்கீட்டில் புதிய கணினிகளை நிறுவியதன் மூலம் இந்தக் கருவூலங்களிலும் மற்றும் துணைக் கருவூலங்களிலும் கணினியின் பயன்பாட்டுத் திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது. சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலகங்களின் பணியை நவீனமயமாக்குவதற்காக, பழைய கணினிகளுக்குப் பதிலாக, நவீன தலைமைக் கணினி (Modern Servers) வசதி அமைக்கப் பட்டுள்ளது.

சென்னை மற்றும் மதுரையிலுள்ள அனைத்து அரசுப் பணியாளர்களுக்கும் 2003ஆம் ஆண்டிலிருந்து சம்பளம் மின்னணுவியல் வங்கிப் பணமாற்ற முறையில் (ECS) வழங்கப்பட்டு வருகிறது.

கருவூலங்கள்–கணக்குகள் துறையில் கணினிவழி நிருவாகத்திற்காக மாதிரி மின் ஆளுமைத் திட்டமொன்றைச் செயற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

## உள்ளாட்சி நிதித் தணிக்கை

நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்கள் மற்றும் பேரூராட்சிகளில் தற்போது செயலில் உள்ள ரொக்க அடிப்படையில் கணக்கிடும் முறையில் சீர்திருத்தம் கொண்டுவரும் ஒரு நடவடிக்கையாக தமிழ்நாடு அரசு சேர்ந்து வரும் தொகை அடிப்படையில் கணக்கிடும் முறையைச் செயற்படுத்தியுள்ளது. சேர்ந்துவரும் தொகை அடிப்படையில் கணக்கிடும் முறையை நாடு முழுவதிலும்வெற்றிகரமாகச் செயல்படுத்தப்படுவதை, இந்தியத் தணிக்கைத்துறைத் தலைவர் ஆய்வு செய்தார். இத்திட்டத்தின் முக்கியமான அம்சங்களை ஆய்வு செய்ய ''சிறப்புப் பணிக்குழு'' ஒன்று நியமிக்கப்பட்டது. விரிவான ஆய்விற்குப் பின்னர், இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலுமுள்ள, எல்லா நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களிலும், இக்கணக்கிடும் முறையைச் செயல்படுத்த பணிக்குழு பரிந்துரைத்துள்ளது. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர், இதனை ஏற்றுக்கொண்டு, ஏனைய எல்லா மாநிலங்களிலும், இந்த நிதியாண்டிலிருந்து இக்கணக்கிடும் முறையைச் செயல்படுத்த ஆணையிட்டுள்ளார். இம்முறையை வெற்றிகரமாகச் செயல்படுத்தியதில், தமிழ்நாடு இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் திகழ்கிறது என்ற தனிச் சிறப்பைப் பெற்றுள்ளது.

**கடந்த மூன்று ஆண்டுகளில், சிறு சேமிப்பின் ஒட்டு மொத்த மற்றும் நிகர வசூல் பெருமளவு அதிகரித்து சாதனை அளவை எய்தியுள்ளது. 2001–2002ஆம் ஆண்டில், சிறுசேமிப்பு வசூல் மூலம் திரட்டிய தொகை ரூ. 1,854.40 கோடி ஆகும். 2002–2003 ஆம் ஆண்டிற்கான சிறுசேமிப்பு இலக்கு ரூ.2,400 கோடி என நிர்ணயிக்கப்பட்டு, வசூல் இலக்கை விட ரூ. 502 கோடி அளவில், விஞ்சியது. இதுபோலவே, 2003–2004 ஆம் ஆண்டிற்கு ரூ. 3,500 கோடி நிகர இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. வசூலிக்கப்பட்டுள்ள தொகை ரூ. 3,900/– (ஏறக்குறைய) கோடியாகும்.** •



# தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சி

உலக மக்களிடையே மனிதநேயத்தை உருவாக்கவும், பழங்கால வரலாற்று சிறப்புகளை அறிந்திடவும் சுற்றுலாத்துறை விளங்கி வருகிறது.

உலகின் பல பகுதிகளிலும், தமிழகத்திலுள்ள சுற்றுலா வளங்களை பற்றி அறிந்திடும் வண்ணம் விளம்பரங்கள் செய்யவும், உள் கட்டமைப்பு வசதிகளை அதிகரித்து அடிப்படை வசதிகளை பெருக்கவும், 2001–2002இல் ரூ.17 கோடியும், 2002–2003இல் ரூ.33 கோடியும் 2003–2004இல் ரூ.26 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஒட்டல்களில் விதிக்கப்படும் சொகுசுவரியை 200 ரூபாயிலிருந்து 500 ரூபாய்க்கு குறைவாக உள்ள கட்டணத்திற்கு 5 சதவிகிதமாகவும், 500 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரை 10 சதவிகித மாகவும், 1,000க்கு மேல் உள்ள கட்டணத்திற்கு 12.5 சதவிகிதமாகவும் குறைத்து உத்திரவிடப்பட்டது.

மைய அரசு நாடு முழுவதும் அடிப்படை வசதிகளை மேம்படுத்த 25 சுற்றுலா வழித்தடங்களை தேர்ந்தெடுத்துள்ளது. அதில் இரண்டு வழித்தடங்கள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளன.

1. சென்னை – மாமல்லபுரம் – பாண்டிச்சேரி – திருவண்ணாமலை – காஞ்சிபுரம் – சென்னை
2. இராமேஸ்வரம்–மதுரை–தேக்கடி ஆகியவையாகும்.

இந்த வழித்தடங்களில் அடிப்படை வசதிகளை மேற்கொள்ள உரிய பெருந்திட்டம் தயாரிக்க மாநில அரசு ரூ.20 இலட்சத்தை வழங்கியுள்ளது.

மதுரையில் – நாட்டிய விழா, திருவண்ணாமலையில் – அருணாஞ்சலி விழா, சென்னையில் – இந்திய பல்வகை நடனங்கள், காஞ்சிபுரத்தில் – பட்டு விழா மற்றும் மாமல்லபுரம் நாட்டிய விழா ஆகிய விழாக்கள் மாபெரும் அளவில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாக்கள் நடைபெறும் காலங்களைக் குறிப்பிடும் கையேடு ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

கேரளா டிராவல் மார்ட், சென்னை விழா (Chennai Fest), ஆக்ராவில் நடைபெற்ற தாஜ் மஹோஸ்சவ், டிராவல் மற்றும் டூரிஸம் எக்ஸ்போ–நாக்பூர், இந்தியா டிராவல் மார்ட்–அகமதாபாத், ஒரிசா சுற்றுலா பொருட்காட்சி போன்ற விழாக்கள்/பொருட்காட்சிகளில் தமிழ்நாடு சுற்றுலாத் துறை பங்கேற்று தனி முத்திரை பதித்துள்ளது. இத்தகைய விழாக்களில் பங்கேற்பதன் மூலம் தமிழ்நாடு சுற்றுலா பற்றிய விழிப்புணர்வு பிற மாநில/பிற நாட்டு மக்களிடம் ஏற்படுத்தி உள்நாட்டு/வெளிநாட்டுப் பயணிகளின் வருகையை அதிகரிப்பதே தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் நோக்கமாகும். அந்நோக்கம் வெற்றியடைந்து வருகிறது.

கடந்த நிதியாண்டில் கீழ்கண்ட விழாக்கள் மிகச் சிறப்பாக கொண்டாடப் பட்டது.

### பிச்சாவரத்தில் விடியல் விழா

கடலூர் மாவட்டம் சிதம்பரம் அருகே சின்னவாய்க்கால் கடற்கரை கிராமத்தில் சுற்றுச்சூழல் சுற்றுலாவை இங்கு மேம்படுத்தும் வகையில் விடியல் விழா நடைபெற்றது. இவ்விழா வெளிநாட்டுப் பயணிகளை மிகவும் கவர்ந்தது.

### பழவேற்காடு படகு அலங்கார அணி வகுப்பு

இயற்கையோடு ஒன்றிய சுற்றுலா மையமாகப் பழவேற்காடு ஏரி அமைந்துள்ளது. கடல் மற்றும் ஆற்று நீர் இரண்டும் சேருமிடத்தில் கடற்கழி அமைந்துள்ளது. இங்கு படகு அலங்கார அணிவகுப்பு விழா நடத்தப்பட்டது. இத்தகைய விழிப்புணர்வினால் சுற்றுலா பயணிகள் அதிகரிக்க தொடங்கியுள்ளனர்.

### 64ஆவது ஸ்கால் மாநாடு

2003 அக்டோபர் மாதத்தில் 19 முதல் 24 வரை நடைபெற்ற ஸ்கால் மாநாடு இந்தியாவிற்கு அதிலும் குறிப்பாக சென்னையில் நடந்த ஸ்கால் மாநாட்டில், பல்வேறு நாடுகளிலிருந்து எழுநூறு முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர். இம்மாநாட்டில் பல வகையான கருத்துக்கள் பரிமாறப்பட்டன. நமது நாட்டின் கலை, பண்பாடு, கலாச்சாரம், கைவினைப் பொருட்கள், சுற்றுலாத் தலங்கள் போன்றவைகள் வெளி நாட்டவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டன. இம்மாநாடு ஐந்து நாட்கள் மிகவும் சிறப்பான முறையில் நடத்தப்பட்டது. இம்மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பங்கேற்று சுற்றுலா வளர்ச்சியினைப் பற்றி சிறப்புரையாற்றி பெருமை சேர்த்தார்கள். கடந்த ஆண்டு இந்தியாவில் நடத்தப்பெற்ற சிறப்பான மாநாடு என்று மத்திய அரசு இந்த நிகழ்வை தேர்வு செய்து விருது

வழங்கிப் பாராட்டியுள்ளது என்பது மற்றுமொரு சிறப்பாகும்.

சூர்ஜ் குன்து மேளா

அரியானா மாநிலத்தில் இக்கைவினைப் பொருட்கள் கண்காட்சி நடைபெற்றது. தமிழ்நாட்டிலிருந்து பலதரப்பட்ட கைவினைப் பொருட்காட்சிகள் அமைக்கப்பட்டன. தமிழ்நாட்டிலிருந்து ஏற்பாடு செய்யப்பட்ட நாதங்களும், கடம், ஆடை அலங்கார அணி வகுப்பு, உணவு போன்றவைகள் அனைவரையும் கவர்ந்தன. கலாரத்னா என்ற விருதும் பரம்பராகாட் என்ற விருதும் வழங்கப்பட்டது.

30ஆவது அகில இந்திய சுற்றுலாப் பொருட்காட்சியில் (2003) வருமானமும், இலாபமும் முன்னெப்போதும் இல்லாத வகையில் முறையே ரூ.195.80 இலட்சமும் மற்றும் ரூ.82.09 இலட்சமும் ஈன்றது ஒரு சிறப்பு அம்சமாகும்.

செட்டி நாடு - கிராமிய சுற்றுலா
வளர்ச்சிப் பணிகள்


செட்டிநாடு புராதன நகரம் காரைக்குடியிலிருந்து வடக்கே 12 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. செட்டி நாடு நகரத்தின் சிறப்பை உணர்ந்து இங்கு அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க மைய அரசு 2003–2004ஆம் ஆண்டில் ரூ.50 இலட்சத்தை வழங்கியுள்ளது.

ஆகஸ்டு 2002 முதல் புதியதாக இரண்டு சுற்றுலா அலுவலகங்கள் ஆக்ரா மற்றும் ஜெய்பூரில் துவங்கப்பட்டு தற்பொழுது மிகவும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

கோயம்புத்தூர் விமான நிலையத்தில் ஒரு சுற்றுலா தகவல் மையமும் சென்னை கோயம்பேடு புறநகர் பேரூந்து நிலையத்தில் சுற்றுலா தகவல் மையமும் தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

புதியதாக சுற்றுலா தகவல் மையம்

கடந்த ஆண்டு ஐந்து சுற்றுலா தகவல் மையங்கள் அகமதாபாத், புவனேஸ்வர், சண்டிகர், கவ்ஹாத்தி, வாரணாசி போன்ற இடங்களில் திறக்கப்பட்டு செவ்வனே செயல்பட்டு வருகிறது.



சுற்றுலா வழிகாட்டிப் பயிற்சி

சுற்றுலா வழிகாட்டிப் பயிற்சிக்காக அளிக்கப்பட்ட ரூ.5 இலட்சம் நிதியில் வேலையில்லாப் பட்டதாரிகளை முறையாக தேர்வு செய்து மொத்தம் 90 பேருக்கு சென்னை, மதுரை, ஊட்டி போன்ற மையங்களில் சுற்றுலா வழிகாட்டி பயிற்சி கடந்த ஆண்டில் அளிக்கப்பட்டது. அவ்வாறு பயிற்சிப் பெற்ற சிலர் தற்போது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தில் தற்காலிக பணி செய்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழகத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகை

2001இல் – 2,45,85,116 ஆகவும்,

2002இல் – 2,54,66,395 ஆகவும்,

2003இல் – 2,79,60,506 ஆகவும் இருந்தன.

இரயில் சுற்றுலா

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 2.10.2002 முதல் முதன்முறையாக கொல்கத்தாவிலிருந்து சென்னைக்கு சுற்றுலாப் பயணிகளை இரயில் மூலமும் பிறகு சென்னையிலிருந்து 10 நாட்கள் சொகுசுப் பேருந்து மூலமும் சென்னை இரயில் நிலையத்திலிருந்து தமிழ் நாடு முழுவதும் பல முக்கியக் கோவில்களுக்கும் மலை வாழிடங்களுக்கும் அழைத்துச் சென்று விட்டு பின்னர், கடைசி நாளன்று, கொல்கத்தாவிற்கு சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்திலிருந்து இரயில் மூலம் வழியனுப்பியதன் வாயிலாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், இரயில் சுற்றுலாவை சிறப்புடன் செயல்படுத்தியுள்ளது.

இதன் வெற்றி மூலம் மேலும் மும்பை, டில்லி, அகமதாபாத், லக்னோவிலிருந்து இரயில் சுற்றுலாவை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது. இதன் மூலம் கடந்த ஆண்டுகளில் 127 இலட்சம் ரூபாய் வருவாய் ஈட்டியுள்ளது.

பல்வேறு சீரிய நடவடிக்கைகளால் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இலாபம் மூன்று மடங்காக பெருகியுள்ளது. உதகமண்டலம் ஏரி, பூங்கா நுழைவுக் கட்டணம் மற்றும் உணவக பராமரிப்பு இனங்களை தனியார்மயமாக்கியதால் ரூ.16.60 இலட்சங்களை இலாபமாக ஈட்டியுள்ளது. வரும் ஆண்டுகளிலும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனியார் மயமாக்குதலை தொடர்ந்து செயலாற்றும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 2003–2004 ஆண்டில் ரூ.245 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது. இது கடந்த ஆண்டு 2002–2003இல் ஈட்டிய இலாபம் ரூ.50.73 இலட்சத்தைக் காட்டிலும் மிக அதிகமாக 384 சதவிகிதம் இலாபம் ஈட்டி இருப்பது முன் எப்போதுமில்லாத சாதனையாகும்.

★ ★ ★




கிராமப்புற ஏழை, எளிய மக்களின் சமூக நீதி மற்றும் பொருளாதார மேம்பாட்டு வளர்ச்சியில் ஊரக வளர்ச்சித்துறை பெரும்பங்கு ஆற்றிவருகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் 15 அம்ச வளர்ச்சித்திட்ட நோக்கங்களையும், குறிக்கோள்களையும் நிறைவேற்றுகின்ற வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையில் இதற்கு முன்னர் நிகழ்ந்திராத சாதனையாக, ஊரக வளர்ச்சித் துறையால் கடந்த மூன்றாண்டுக் காலத்தில் 14,67,474 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

★ ஊரக வளர்ச்சித் துறையின் மிகச் சிறப்பான செயல்பாட்டின் காரணமாக சம்பூரண கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், மத்திய அரசிடமிருந்து ரூ. 108.24 கோடி கூடுதல் நிதி பெறப்பட்டுள்ளது. இது வழக்கமான ஒதுக்கீட்டினைவிட 20.28 சதவிகிதம் கூடுதலாகும்.

★ ஊரக வளர்ச்சித் துறையின் பயனுள்ள நடவடிக்கைகள் மத்திய அரசை ஊரக வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் (இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்) ரூ. 12.61 கோடியை கூடுதல் நிதியாக அளித்திட வழிவகுத்தது.

பொன் விழா கிராம சுய வேலை வாய்ப்புத்திட்டத்தின் கீழ் பாராட்டத்தக்க செயல்பாடுகள் காரணமாக, திட்டம் துவக்கப்பட்ட காலத்திலிருந்து முதன் முறையாக, தமிழ்நாடு அரசுக்கு, மத்திய அரசு ரூ.5.92 கோடி கூடுதல் நிதி அளித்துள்ளது. இது வழக்கமான ஒதுக்கீட்டினைவிட 16 சதவீதம் கூடுதலாகும்.

பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டத்தின் கீழ் ரூ.84.78 கோடியை, கூடுதல் ஒதுக்கீடாக மாநில அரசால்பெறப்பட்டுள்ளது. இது வழக்கமான ஒதுக்கீட்டினை விட 106 சதவிகிதம் கூடுதலாகும்.

ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பிலிருக்கும், 5,850 கி.மீ. சாலைகளுக்கு ரூ. 300 கோடி ஒதுக்கீட்டில் மேம்படுத்த ஆணையிடப் பட்டு முதல் பகுதியாக ரூ.150 கோடியில், 3,437.10 கி. மீ. சாலைபராமரிப்புப் பணிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

முழுச் சுகாதாரத் திட்டத்தின் கீழ் தற்போது 21 மாவட்டங்களில் திட்ட செயலாக்கத்திற்கு மத்திய அரசின் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி நாட்டிலேயே அதிக மாவட்டங்களில் திட்ட செயலாக்கத்திற்கான அனுமதி பெற்று திட்ட செயலாக்கத்தினை விரிவு படுத்திய முதல் மாநிலமாக தமிழகம் திகழ்கிறது.

மழைநீர் சேகரிப்பில் நாட்டிற்கே வழிகாட்டிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ஊரகப் பகுதிகளில் 66,61,965 கட்டடங்களிலும் மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது தவிர 1,36,026 திறந்தவெளி மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் செயலாக்கத்தினை மதிப்பீடு செய்ய, மத்திய அரசால் நியமிக்கப்பட்ட திருவனந்தபுரத்தைச் சேர்ந்த வளர்ச்சி ஆய்வு மையம், தன் ஆய்வறிக்கையில் பொன் விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தினை நடைமுறைப் படுத்தப்பட்டு தமிழ்நாட்டை முதல் மாநிலமாக மதிப்பீடு செய்துள்ளது.

13 மாவட்டங்களில் வறுமையின் கோரப்பிடியில் சிக்குண்டு தவித்த சுமார் 25,000 நெசவாளர் குடும்பங்களின் துயர் துடைக்க ரூ.25 கோடி ஒதுக்கீட்டில் சிறப்பு திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது.

உடல் மற்றும் மன வளர்ச்சி குன்றியோர் நலனை பாதுகாக்கும் பொருட்டு அவர்களுக்கு சுய தொழில் வழங்க முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. இராம நாதபுரம், கோயம்புத்தூர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் சிறப்புத் திட்டங்கள் ரூ.8.11 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படுகின்றன.

93,656 மகளிருக்கு ரூ.65.56 இலட்சம் செலவில் தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

8,923 படித்த இளைஞர்களுக்கு ரூ6.25 இலட்சம் செலவில் தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான தகவல் மையங்களை கிராமப்புறங்களில் ஏற்படுத்தும் நோக்கம் நிறைவேற, இதுவரை 23 மாவட்டங்களில் 533 மையங்கள் அமைக்கப்பட்டு, 533 சுய உதவிக் குழு உறுப்பினர் களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது.

சுய உதவிக் குழு உற்பத்தி செய்யும் பொருட்களின் விற்பனையை தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் விரிவுபடுத்துவதற்கென தனிப்பட்ட இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இதுவரை ரூ.21, 26,408/–க்கு விற்பனை நடைபெற்றுள்ளது. இது தவிர பிற மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் பெரிய



அளவில் கொள்முதல் செய்வோரின் கோரிக்கைகள் பரிசீலனையில் உள்ளன. மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கங்களின் பணியை மேம்படுத்துதல், இணைய தளம் பராமரித்தல் மற்றும் ஊரக பொருள்களின் விற்பனையை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்காக டான்ஸ்டியா (tanstia) நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

## பிளாஸ்டிக் தார்ச்சாலைகள்

சுற்றுச்சூழல் பாதுகாத்தல், சுகாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் மரபு சாரா எரிசக்தியை செவ்வனே பயன்படுத்துதல் ஆகிய நோக்கத்துடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 16.7.03 அன்று அறிவிக்கப்பட்ட 1,000 கி.மீ. பிளாஸ்டிக் கழிவுடன் கூடிய தார்ச் சாலை அமைத்தல், 1,000 சூரிய ஒளியால் இயங்கும் தெரு விளக்குகள் அமைத்தல், 1,000 தனி நபர் கழிப்பிடங்களை சாண எரிவாயுக் கலங்களுடன் இணைத்தல் மற்றும் தூய கிராம இயக்கம் ஆகியவை சிறப்பாக செயல்படுத்தப்பட்டன. இத்திட்டங்கள் உள்ளாட்சி மன்றங்கள் உட்பட அனைத்து தரப்பினரிடமும் சிறப்பான வரவேற்பு பெற்றதுடன் நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை விட அதிக அளவில் 1,200 கி.மீ.க்கும் அதிகமாக பிளாஸ்டிக் கழிவுடன் கூடிய தார்சாலை அமைக்கப்பட்டதுடன் 3,072 சூரிய ஒளியால் இயங்கும் தெரு விளக்குகள் அமைக்கப்பட்டன. மேலும் 1,219 தனிநபர் கழிப்பிடங்கள் சாண எரிவாயுக் கலங்களுடன் இணைக்கப்பட்டது. 35 கிராம ஊராட்சிகள் தூய கிராம இயக்கம் சிறப்பாக செயல்படுத்தியதற்கான விருதினை பெற தகுதி பெற்றுள்ளன.

சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தில் பல்வேறு வகையிலான 2,87,960 பணிகள் ரூ.1,153.10 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, 12.76 கோடி மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

சம்பூர்ண கிராம வேலைவாய்ப்பு சிறப்புக்கூறுத் திட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிகளில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு கூலியாக வழங்கிட 5 இலட்சம் மெ. டன் அரிசியும், ரூ. 85.48 கோடி ரொக்கமும் வழங்கப்பட்டன. மொத்தம் 38,987 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இதன் மூலம் தமிழ்நாடு எதிர் கொண்ட அசாதாரண வறட்சியை சமாளித்ததுடன் ஏழை மக்கள் கிராமப்புறங்களை விட்டு வேலை வாய்ப்பிற்காக பிற இடங்களுக்கு செல்வது பெருமளவில் தவிர்க்கப்பட்டது.

ஊராட்சிக்கு ஒன்று வீதம் கதிர் அடிக்கும் களங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டு, மூன்றாண்டுகளில் 13,928 கதிரடிக்கும் களங்கள் அமைக்க ரூ.83.57 கோடி செலவிடப்பட்டுளள்து.

ஊராட்சிக்கு ஒன்று வீதம் சுய உதவிக் குழுக்களுக்கான கட்டடங்கள் கட்ட திட்டமிடப்பட்டு, மூன்றாண்டுகளில் ரூ.128.72 கோடியில், 12,872 சுய உதவிக்குழுக்களுக்கான கட்டடங்கள் கட்டப் பட்டுள்ளது.

## ஊரகக் குடியிருப்புத் திட்டம்

கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.329.89 கோடி செலவில் 1,12,162 புதிய வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

இதே போல கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ. 54.86 கோடி செலவில் 55,936 கச்சா வீடுகள் மேம்பாடு செய்யப்பட்டுள்ளன.

பிரதம மந்திரி கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.72.12 கோடி செலவில் 20,810 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், 5,11,860 குடும்பங்கள் பயன்பெறும் அளவில் 34,124 சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய். 3,475.270 இலட்சம் சுழல் நிதியாக வழங்கப்பட்டுள்ளது. 1,59,165 குடும்பங்கள் பயன்பெறும் அளவில் 10,611 சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.19,840.809 இலட்சம் மானியத்துடன் கூடிய பொருளாதார உதவியாக அளிக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் 75,264 தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த பயனாளிகளும், 1,65,693 மகளிரும் பயனடைந்துள்ளனர்.

பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டத்தின் கீழ், 2,728 ஊரகக் குடியிருப்புக்கள் பயன் பெறும் வகையில், 3,395.64 கி.மீ. நீளத்திற்கான 1,818 சாலைப்பணிகள்

ரூ. 434.11 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர்களின் உள்ளூர் அபிவிருத்தித் திட்டத்தில் 2001–02இல் ரூ.9,500 இலட்சம் மதிப்பீட்டிலும், 2002–03இல் ரூ.11,200 இலட்சம் மதிப்பீட்டிலும், 2003–04இல் ரூ.10,580 இலட்சம் மதிப்பீட்டிலும், 40,206 பணிகள் மேற்கொள்ளப்பட்டு 38,712 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

## ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள்

ஊராட்சிக்கு ஒன்று வீதம் மகளிருக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் கட்ட திட்டமிடப்பட்டன. 12,618 வளாகங்கள் தலா ரூ. 2.25 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, 8,709 வளாகங்கள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள ஊராட்சிகளிலும் சுகாதார வளாகங்கள் ஊராட்சிக்கு ஒன்று கட்டப்பட்டு திட்டம் நிறைவு செய்யப்படும். இவ்வளாகங்களை பயன்படுத்துவோர் குழு நன்றாகப் பராமரிக்கும் பொருட்டு ஒரு வளாகத்திற்கு மாதம் ரூ.1,000 அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

2000–01 வரை ஒவ்வொரு சட்ட மன்ற தொகுதிக்கும் ஆண்டிற்கு ரூ. 77 இலட்சம் என்ற அளவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்தது. 2001–2002 லிருந்து ரூ.82 இலட்சமாக மேற்படி மானியம் உயர்த்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ்கடந்த மூன்று ஆண்டுகளில் 23,533 வேலைகள் ரூ.385.40 கோடி செலவில் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

கிராம நிர்வாக அலுவலகக் கட்டடம் கட்டும் திட்டம் 2001–2002இல் தொடங்கப்பட்டது, இதற்கான அனைத்து மானியமும் மாநில அரசால் வழங்கப்பட்து. இதற்கான கட்டுமான பரப்பளவு 180 ச.அடி ஆகும். கட்டுமானத் தொகை ரூ.60,000/– வீதம் அனுமதி வழங்கப்பட்டு பின்னர் 2002–2003இல் ரூ. 70,000/– ஆக உயர்த்தப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் 12,422 ஊராட்சி நிர்வாக அலுவலர்களின் அலுவலகக் கட்டடம் கட்டுமானப் பணி மேற்கொள்ளப்பட்டு 31.3.2004இல் இந்தத் திட்டம் முடிக்கப்பட்டுள்ளது.

தன்னிறைவுத் திட்டம் 2001–2002ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் நோக்கம் ஊரகப் பகுதிகளில் மக்கள் பங்கேற்புடன் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுதல் ஆகும். இந்தத் திட்டத்தில் மேற்கொள்ளப்படும் வேலைகளுக்கு அரசு மானியம் 75 சதவிகிதம், மக்களின் பங்குத் தொகை ரொக்கம் (அ) உழைப்பு 25 சதவிகிதம் ஆகும்.

2001–2002 முதல் 2003–2004 வரை இத்திட்டத்தின் கீழ் 4,523 வேலைகள் 50.69கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ ★ ★

# மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை

## மதுவிலக்கு கொள்கை

★ இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபான சில்லறை உரிமதாரர்கள் கூட்டு சேர்ந்து விதிகளுக்குப் புறம்பாகச் செயல்படுவதைத் தவிர்க்கவும், கள்ளத்தனமான, போலியான மற்றும் தீர்வை செலுத்தப்படாத மதுபானங்கள் விற்பனை செய்யப்படுவதனைத் தடுக்கவும், மேலும், இதன் விற்பனை மூலம் பெறப்படும் வருவாய், அரசுக்கு முறையாக வருவதை உறுதி செய்வதற்காகவும், மதுபான சில்லறை விற்பனையின் முழு உரிமையினை மாநில அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு மாநில வாணிபக்கழகத்திடம் ஒப்படைக்க அரசு முடிவெடுத்து, இம்மாநிலம் முழுவதும் தமிழ்நாடு மாநில வாணிபக்கழகம் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபான சில்லறை விற்பனைக் கடைகளை அமைத்தது. இதனால் 35,000–க்கும் மேற்பட்ட வேலையில்லா பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. தமிழ்நாடு மாநில வாணிபக்கழகம் 7,500க்கும் மேலான சில்லறை விற்பனை கடைகளை வெற்றிகரமாக நடத்தி வருகின்றது. 29.11.2003 முதல் 31.3.2004 வரையிலான நான்கு மாத கால அளவில் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளின் விற்பனை அளவு 54.67 இலட்சம் பெட்டிகளாக உயர்ந்துள்ளது. (13.35 சதவிகிதம்). இதன்மூலம் அரசின் வருவாய் 32.64 சதவிகிதம் உயர்ந்துள்ளது.

★ ஏப்ரல் 2001 முதல் மார்ச் 2004 வரையிலான காலத்தில் 8,54,421 மதுவிலக்கு குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 7,82,210 நபர்கள் கைது செய்யப்பட்டு, 14,637 வாகனங்கள் கைப்பற்றப்பட்டன. மேலும், 3,323 கள்ளச்சாராயக் காரர்கள் தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வகை நடவடிக்கையில் ஈடுபட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக ஆண்டொன்றுக்கு ரூ.2.50 கோடி அனுமதி அளித்து மதுவிலக்கு குற்றம் புரிந்து திருந்தியுள்ளோர்க்கான மறுவாழ்வு அளிக்கும் திட்டத்தை அரசு அறிவித்துள்ளது. 2003–2004ஆம் ஆண்டில் ரூ.1.78 கோடி புனர்வாழ்வு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

★ ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்ட ஆட்சியர் தலைமையின்கீழ் மறுவாழ்வுக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து, திருந்திய மதுவிலக்கு குற்றவாளிகளுக்கு, கறவை மாடுகள், ஆடுகள், சிறுதொழில் உபகரணங்கள் ஆகியவற்றை வாங்கவும், சிறு பலசரக்குக் கடைகள் நடத்தவும் கடனுதவி செய்யப்பட்டு மறுவாழ்வு அளிக்கப் பட்டுள்ளது.

• • •

# நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை




நகர்ப்புற பகுதிகளில் வாழும் மக்களுக்குத் தேவையான அடிப்படையான குடிமைப் பணிகளை நிறைவேற்றுதல், குடிநீர் வழங்குதல் ஆகியவை நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் பணியாகும். இந்த நோக்கத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை இத்துறை செயல்படுத்தி வருகிறது.

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

### ஊரகக் குடிநீர் திட்டம்

20,003 ஊரகக் குடியிருப்புகளுக்கு தனி மின் விசைத் திட்டங்கள் மற்றும் கூட்டுக் குடிநீர் திட்டங்கள் மூலமாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டது.

குடிப்பதற்கு உகந்த குடிநீர் ஆதாரமில்லாத 2,500 ஊரகக் குடியிருப்புகளுக்கு கைப்பம்புகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டது.

கையிறைப்பான்கள் மூலம் நீர் இறைப்பதில் கிராமப்புற மகளிருக்கு ஏற்படும் இடர்ப்பாடுகளை நீக்கும் பொருட்டு சிறு மின் இறைப்பான் திட்டம் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 2001–2002ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.** இதனடிப்படையில், 24,796 கையிறைப்பான்களை மாற்றி தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய சிறு மின்னிறைப்பான் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இதில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளில் நிறைவேற்றப் பட்ட 8,026 சிறு மின்னிறைப்பான் திட்டங்களும் அடங்கும்.

ஊரகப் பகுதிகளிலுள்ள 1,226 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு குடிநீர் வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

53 இடங்களில் குறைந்த செலவில் தளத்திலேயே சுத்திகரிப்பு செய்யும் கலன்கள் அமைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

### நகரகக் குடிநீர்த் திட்டம்

1 மாநகராட்சி, 26 நகராட்சிகள் மற்றும் 168 பேரூராட்சிகளுக்குமாக மொத்தம் 195 நகரங்களுக்கு 50.74 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் ரூ.517.71 கோடி மொத்த மதிப்பீட்டில் பாதுக்காப்பட்ட குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

ஊரகக் குடிநீர்த் திட்டங்களுக்காக ரூ. 1,479.52 கோடி மற்றும் நகரகக் குடிநீர்த் திட்டங்களுக்காக ரூ. 471.99 கோடி செலவிடப்பட்டுள்ளது.

1 மாநகராட்சி, 14 நகராட்சிகள், 60 நகரப் பேரூராட்சிகள், 50 ஊரகப் பேரூராட்சிகள் மற்றும் 7,333 குடியிருப்புகளில் உள்ள 65.79 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் ரூ.857.98 கோடி மதிப்பீட்டில் 152 குடிநீர்த் திட்டங்களுக்கு நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகர மக்களுக்கு ஈரோட்டிலிருந்து 95.93 மி.லி., மேட்டூரிலிருந்து 239.92 மி.லி., நெய்வேலியிலிருந்து 607.78 மி.லி., பூந்தமல்லியிலிருந்து 240.45 மி.லி., மாமண்டூரிலிருந்து 243.92 மி.லி., கரகம்பாக்கத்திலிருந்து 207.34 மி.லி., கொள வாயிலிருந்து 233.28 மி.லி. குடிநீர் கொண்டு வரப்பட்டு வழங்கப்பட்டது. வறட்சி காலத்திலும்கூட சென்னை மாநகர மக்களுக்கு குடிநீர் வசதி தாராளமாக செய்து தரப்பட்டது.

கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் அருகில் உள்ள 12 நகரப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டது. பம்மல், மீனம்பாக்கம், அனகாபுத்தூர், கௌல் பஜார் மற்றும் பொழிச்சலூர், புழுதிவாக்கம் மற்றும் உள்ளகரம், ராமாபுரம், வளசரவாக்கம், மதுரவாயில், போரூர் மற்றும் ஆலந்தூர் ஆகிய பகுதிகளில் ரூ.26.54 கோடி செலவில் டி.என்.யு.டி.எப். நிதியின் கீழ் செயல்படுத்தப்பட்டு பணிகள் முடிவுற்றன.

### சென்னைக் குடிநீர் வழங்கல் பெருக்கத்திட்டம்

வீராணம் ஏரியிலிருந்து குழாய் மூலம் நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் நீர் எடுத்து சுத்திகரித்து சென்னை நகருக்குக் கொண்டு சென்று விநியோகம் செய்வதற்காக 9.8.2001 அன்று ரூபாய் 720 கோடி மதிப்பீட்டில் பணிகள் தொடங்கப்பட்டு முடிவுறும் நிலையில் உள்ளது.

ஆந்திரப் பிரதேசத்தில் இருந்து பெறப்படும் கிருஷ்ணா குடிநீரை இரண்டு வெவ்வேறு இடங்களில் சுத்திகரிப்பதற்காக தினசரி 300 மில்லியன் லிட்டர் கொள்ளளவு திறன் கொண்ட சுத்திகரிப்பு நிலையம் ஒன்று செங்குன்றத்தில் கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது. கிருஷ்ணா நீரின் இரண்டாவது கட்ட சுத்திகரிப்பிற்கு

செம்பரம்பாக்கத்தில் தினசரி 530 மில்லியன் லிட்டர் கொள்ளளவு திறன் கொண்ட சுத்திகரிப்பு நிலையம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின் படி, வறுமைக்கோட்டிற்குக் கீழ்வாழும் மக்களுக்கு கழிவுநீர் இணைப்பு வழக்கமான கட்டணமாகிய ரூ.3,395/– பதிலாக ரூ.100/–க்கு வழங்கப்படுகிறது.**

தற்போதுள்ள இருமுறை சுத்திகரித்த கழிவுநீரைக் கொண்டு கொடுங்கையூரில் தினசரி 50 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட மும்முறை சுத்திகரிப்பு, மறுசவ்வூடு பரவல் நிலையம் ஒன்றை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நீர், மணலி பகுதியில் உள்ள தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும். இத்திட்ட மதிப்பீடு ரூபாய் 160.50 கோடியாகும்.

## மழைநீர் சேகரிப்பு

மழைநீர் சேகரிப்பு ஏற்பாடுகளை அனைத்து புதுக் கட்டடங்கள் கட்டும் போதும் மற்றும் இருக்கின்ற கட்டடங்களும் ஓர் ஆண்டு காலத்திற்குள் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் நிறுவ ஆணையிடப்பட்டு, சென்னை மாநகரில் 70,000 மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் 31,000 கட்டடங்களில் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி வெள்ளத்தைத் தடுக்கும் திட்டமாக சென்னை நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கழிவுநீர் மேம்படுத்தும் பணிகள், இடைமறித்தல், மடைமாற்றி அமைத்தல், கழிவுநீரேற்று நிலையங்களின் திறனை மேம்படுத்துதல் ஆகியவை இந்த வருடத்தில் வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன் முடிக்கப்படவுள்ளது.

நகரின் நீர் வழிகளில் விடப்படும் கழிவு நீரை தடுத்தல் திட்டத்தின் முக்கிய நோக்கம், மழைநீர் கால்வாய், ஆற்று வழிகள் மற்றும் நீர் நிலைகளில் கழிவுநீர் புகாமல் தடுப்பதாகும். கழிவு நீர் நகர நீர் வழிகளில் புகுவதைத் தடுக்க மேற்கொள்ள வேண்டிய பணிகள் மாற்றுப்பாதையில் அமைத்தல், மடைமாற்றி அமைத்தல், கழிவு நீர் குழாயை வேறு இடத்தில் அமைத்தல், கழிவு நீர் குழாய், உந்துக் குழாய் அமைத்தல், சாலை ஒர கழிவு நீரேற்று நிலையம் கட்டுதல் மற்றும் வீட்டுக் கழிவு நீர் இணைப்புகள் அமைத்தல் ஆகியவை ஆகும். இதுவரை 90 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதற்கான செலவு ரூ. 415.38 இலட்சம் ஆகும்.

பேரூராட்சிகளில் , பிறப்பு இறப்பு பதிவு, சொத்து வரி, கட்டிட வரைவு ஒப்புதல், உணவு கலப்பட தடுப்புச்சட்டம் ஆகியவற்றிற்கு உரிமம் வழங்குதல் ஆகியவை கணினியில் பதிவு செய்யப்பட்டு சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பேரூராட்சிக்கென புதியாதாக இணைய தளம் (Web Site) தொடங்கப்பட்டு, அனைத்து விவரங்கள் மற்றும் மக்களுக்குத் தேவையான தகவல்கள் தரப்பட்டுள்ளன.

**தமிழ்நாட்டிலுள்ள 611 பேரூராட்சிகளுக்குட்பட்ட அனைத்து கட்டடங்களுக்கும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு 100 சதவிகிதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.**

## ஒருங்கிணைந்த பொது சுகாதார வளாகம்

நகர்ப்புறத்தில் ஏழைகள் வசிக்கும் பகுதிகளில் குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகள் பயன்பெறும் வகையில் ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் அமைக்க ரூ.18.72 கோடி செலவில் 720 எண்ணிக்கை மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான பொது சுகாதார வளாகம் கட்டி முடிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல் என்பது மக்களின் அடிப்படைத் தேவைகளின் ஒரு முக்கியமான தேவையாகும். மொத்தமுள்ள 611 பேரூராட்சிகளில் 355 பேரூராட்சிகளில் விரிவான குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளன.

மக்களின் அவசர தேவைகளை பூர்த்தி செய்திட, பேரூராட்சிகளில் இதுவரை 29,421 கைப்பம்புகள் மற்றும் 6,813 விசைப்பம்புகள் பேரூராட்சி உதவி செயற்பொறியாளர்களின் தொழில்நுட்ப உதவியுடன் நிறுவப்பட்டு இயங்கி வருகின்றன. 2003–2004ஆம் ஆண்டு வறட்சி நிவாரண திட்டத்தின்கீழ் ரூ.2,514.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு குடிநீர் திட்டப் பராமரிப்பு பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

## திடக்கழிவு மேலாண்மை

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் 4 பேரூராட்சிகளுக்கு ரூ.11.27 இலட்சம் மதிப்பீட்டில் கடன் அனுமதிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு



*சிறுமின் இறைப்பான் திட்டம்*

வருகிறது. மேலும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு உட்பட்ட பேரூராட்சிகளுக்கு ரூ.3 கோடி அரசு மானியம் வழங்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது.

பேரூராட்சிகளுக்கு 2003–04ஆம் ஆண்டிற்கு 11ஆவது நிதிக்குழு மானியமாக ரூ.1,349.40 இலட்சம் பராமரிப்பு பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 2003–2004ஆம் ஆண்டிற்கு ரூ.20 கோடி மார்ச் 2004இல் ஒதுக்கீடு பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

பேரூராட்சிகளில் புதிய 10,000 தெரு மின் குழல் விளக்குகள் அமைக்கும்பொருட்டு ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது.

தூய்மை இயக்க விழிப்புணர்வு முகாம் பேரூராட்சிகளில் நடத்தும் பொருட்டு 611 பேரூராட்சிகளுக்கு தலா ரூ.4,000/– வீதம் மொத்தம் ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பழுதடைந்த சாலைகளை மேம்படுத்தும் பொருட்டு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு உட்பட்ட பேரூராட்சிகளில் 190 பணிகள் ரூ.920.62 இலட்சம் மதிப்பீட்டுத் தொகையில் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது. இதில் 87 பணிகள் முடிக்கப்பட்டு ரூ.245.91 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

மழைநீர் வடிகால் கட்டும் பணிகளுக்காக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு உட்பட்ட 21 பேரூராட்சிகளில் 60 பணிகள் எடுக்கப்பட்டு 45 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. ரூ.1,003.77 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு இதற்காக ரூ.5 கோடி அரசு மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது. ரூ.549.76 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

சுவர்ண ஜெயந்தி திட்டத்தில் கடந்த மூன்றாண்டு காலமாக பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.•



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்

**'மே' தின வாழ்த்து**

*"உலகத் தொழிலாளர்கள் அனைவரும் உவகையோடு கொண்டாடும் 'மே' தின நன்னாளில், உழைக்கும் மக்கள் அனைவருக்கும் எனது உளமார்ந்த 'மே' தின நல்வாழ்த்துகளை உரித்தாக்கிக் கொள்கிறேன், உழைக்கும் மக்களின் உரிமைத் திருநாள் 'மே' தினம்.*

*பொட்டுப் பூச்சிகளாய், புன்மைத் தேரைகளாய், அடங்கி ஒடுங்கிக் கிடந்த தொழிலாளர்கள் ஆர்த்தெழுந்து போராடி, உரிமையைப் பெற்ற நாள் 'மே' தினம்.*

*'மே' தினம் உழைப்பின் மேன்மையை, உழைப்பவரின் உரிமையை உணர்த்துகின்ற திருநாள் என்பதால் இது நாடுகளின் எல்லைகளைக் கடந்து உலகத் தொழிலாளர்கள் அனைவருக்கும் உரிய நாளாய் விளங்குகிறது.*

*இத்தகைய மேன்மை மிக்க 'மே' தினத் திருநாளில் தமிழகத்தைத் தங்கள் உழைப்பால் உயர்த்தி வரும் எனதருமை தொழிலாளர் பெருமக்கள் அனைவருக்கும் எனது இதயங்கனிந்த 'மே' தின வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.*

## திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை


**2002–2003ஆம் ஆண்டிற்கான ரூ.5,750 கோடி என நிர்ணயிக்கப்பட்ட திட்ட இலக்கு முழுமையாக எய்தப்பட்டது. 2001–2002ஆம் ஆண்டில் ரூ.5,200 கோடியாக இருந்த ஆண்டு வளர்ச்சித் திட்ட ஒதுக்கீட்டை 2003–2004–ஆம் ஆண்டில் ரூ.7,000 கோடியாக உயர்த்திப் பெற்றது. இது அரசின் வியத்தகு சாதனையாகும்.**


2003–2004ஆம் ஆண்டிற்கான ரூ.7,000 கோடி என்ற திட்ட இலக்கு முழுவதுமாக எய்தப்பட்டது. 2004–2005ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ.8,001 கோடி என்ற உயரளவு வளர்ச்சித் திட்டத்தை மத்திய திட்டக் குழுவின் ஒப்புதலுடன் செயல்படுத்த இவ்வரசு உத்தேசித்துள்ளது.

மாநில அரசு மத்திய திட்டக் குழுவினுடைய புதிய முயற்சியான "ராஷ்டிரிய சம் விகாஸ் யோஜனா" திட்டத்தின் கீழ் 2002–2003ஆம் ஆண்டிற்காக திருவண்ணாமலை மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டு 2003–2004ஆம் ஆண்டில் மத்திய அரசு ரூ.15 கோடி அளித்துள்ளது. 2003–2004ஆம் ஆண்டிற்காக திண்டுக்கல் மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டு மத்திய திட்டக் குழு ஒப்புதல் அளித்து, முதல் தவணையாக ரூ.7.5 கோடி அளித்துள்ளது. 2004–2005ஆம் ஆண்டிற்காக மத்திய திட்டக் குழுவால் கடலூர், நாகப்பட்டினம் மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கு (2002–2007) ரூ.40,000 கோடி ஒதுக்கீட்டில் வளர்ச்சித் திட்டம் ஒன்றை மேற்கொள்ளுவதற்கு மத்திய திட்டக் குழுவின் அனுமதியை தமிழ்நாடு பெற்றுள்ளது. •

சென்னைக்கு குடிநீர் வழங்க
ரூ.720 கோடியில் புதிய வீராணம் திட்டம்




தமிழ்நாட்டின் முதல் மகளிர்
சிறப்புக் காவல் அணி தொடக்கம் (30–1–2004)



தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம்
தொடக்கம் (11–2–2004)



கும்பகோணத்தில் மகாமகத்தையொட்டி
அமைக்கப்பட்டுள்ள புதிய கலையரங்கம்



புதிய கிருஷ்ணகிரி மாவட்டம்
உருவாக்கம் (9-2-2004)




ஊட்டியில் தேயிலைக்கான
மின்னணு ஏல மையம் தொடக்கம் (13-9-2003)



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
புரட்சிகரமான '**விரிவான தரிசுநிலத் திட்டம்**'
செயலாக்கம்


# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2035
சித்திரை - வைகாசி
மலர் : 35 இதழ் : 11
மே 2004
விலை ரூ.10

*ஆசிரியரும் வெளியிடுபவரும்* : **வ. கனகராஜ்,** இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை-தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25368926
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com

உங்களின்
நீண்ட நாள்
கனவை
நனவாக்கும்
புதிய திட்டம்

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

மொத சந்தா செலுத்துவீர்!

# 10வது மாத சந்தா இலவசம்

மேலும்

## அரசு தள்ளுபடி 20% பெற்றிடுவீர்!

ரூ. 12,500/- மதிப்புள்ள
பட்டுப்புடவையை ரூ. 9,000/- க்கு பெறலாம்.
அதுவும் தவணை முறையில்.
இன்றே சேர்ந்து உங்கள் கனவை நனவாக்கிடுவீர்.
**தவறவிடாதீர் இந்த அ்ரியவாய்ப்பை!**

| மாதச் சந்தா ரூ. 1 | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்த தொகை ரூ. 2 | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா ரூ. 3 | கூடுதல் தொகை .(2+3) ரூ. 4 | அரசு தள்ளுபடி ரூ. 5 | அங்கத்தினர் களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு ரூ. 6 |
|---|---|---|---|---|---|
| 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |

இந்த வசதி அனைத்து கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| 01. | தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, | எழும்பூர் | ✆ : 28260775 |
| 02. | வானவில், | தேனாம்பேட்டை | ✆ : 24336346 |
| 03. | அங்கயற்கன்னி, | மதுரை | ✆ : 2621754 |
| 04. | தங்கம் பட்டு மாளிகை, | சேலம் | ✆ : 2260651 |
| 05. | அமுத சுரபி, | திருச்சி | ✆ : 2705034 |
| 06. | இராஜ ராஜன் வணிகமையம், | தஞ்சாவூர் | ✆ : 231929 |
| 07. | காந்திமதி, | திருநெல்வேலி | ✆ : 2334360 |
| 08. | மங்கை, | கடலூர் | ✆ : 234474 |
| 09. | தீபம், | வேலூர் | ✆ : 2220730 |
| 10. | மருதம், | கோயம்புத்தூர் | ✆ : 2380591 |

வாடிக்கையாளர்கள் கோ-ஆப்டெக்ஸ் தலைமை அலுவலகத்தில் உள்ள டிசைன் சென்டருக்கு வருகை தந்து தங்களுக்கு பிடித்த வடிவத்தில் பட்டுச் சேலையை வடிவமைத்துக் கொள்ளலாம்.



Visit us at: www.cooptex.com    Visit us at: www.tn.gov.com

**பாரம்பரியத்தின் பெருமை காலத்திற்கேற்ற ரசனை**

தமிழரசு
R.N.I.No.21446/70
RGN No.TN/PMG (CCR)/836/03-05, WPP-518











